TESTS OF LANGUAGE PROFICIENCY TAMIL

CENTRAL INSTITUTE OF INDIAN LANGUAGES
Mysore, India

TESTS OF
LANGUAGE PROFICIENCY
TAMIL

TESTS OF LANGUAGE PROFICIENCY

TAMIL

CENTRAL INSTITUTE OF INDIAN LANGUAGES
Mysore, India

Central Institute of Indian Languages
Publication No.490
Subject : Evaluation & Testing

Series Editing

Pon Subbiah

Assistance

M. Balakumar

Prepared in workshops by

Sp. Annamalai
P. Ratnasabapathy
S. Rajaram
G. Subbaiah
Pon Subbiah
N. Nadaraja Pillai

Revised & finalised by

S. Rajaram
P. Ratnasabapathy
M. Balakumar

Advice & Consultancy

D.P. Pattanayak
A.K. Srivastava
E. Annamalai

Foreword

In partial fulfillment of the Institute's objectives, the Evaluation Unit has undertaken a series of programmes to identify the requirements of specialized areas and also to develop tools of assessment in various Indian languages. The materials so developed belong to the following three broad categories viz., Special Purpose Assessment Tools through its three sub-series viz., *Proficiency Test Series, Programme Evaluation Questionnaire Series*, and *General Ability Test Series*. Item resources developed for the construction of proficiency tests at the level of standard X are included in the 'Proficiency Test Series'. The tools meant for the assessment of various inhouse-programmes such as Refresher Courses, National Integration Camps, Contact-cum-Correspondence Courses, L_2 teaching, and also of the Language Primers, and Text Books are included under the 'Programme Evaluation Questionnaire Series'. They are prepared in English. The 'General Ability Test Series' consists of item samples developed for the construction of graded tests of general ability in language & literature applicable to each of the seven educational levels viz., primary, upper primary, secondary, higher secondary, graduate, post-graduate, and research. To start with, these tests are developed in one Indian language, Tamil.

The volumes being brought out at present are the constituents of the *Proficiency Test Series*. The original suggestions to create a series of studies as are being presented now came from the Ministry at the instance of the then Minister of HRD (1989). The work initiated accordingly, continued for several years to give a coverage in all the fourteen major Indian Languages viz., *Assamese, Bengali, Gujarati, Hindi, Kannada, Kashmiri, Malayalam, Marathi, Oriya, Punjabi, Sindhi, Tamil, Telugu* and *Urdu*.

There was difficulty in arriving at a consensus as the concept of proficiency continued to be a controversial issue. There are varying perceptions about *Language proficiency*. It is expected to (i) highlight how a mastery is acquired when a well founded course of study involving language competence, cultural insight, and literary acquaintances is completed - based on which testing is to be developed. It is also viewed as the (ii) reflection of whether a candidate has mastered specific skills and content deemed pre-requisites for a particular job. Further, it is visualised as (iii) a tool used for predicting how well an individual, after certain number of years of normal education, can communicate in a content-free and context-free manner across a wide variety of situations. Such a measure would test the knowledge of language in use abstracted from content-based instruction. For the purpose of clarity, it is also contrasted with *achievement* which refers to the extent of learning of the material presented in a particular course or programme of instruction. The learning achievement is usually reported either with reference to the other students of the class (norm referenced) or with reference to a particular learning material (criterion referenced). *Aptitude*, on the other hand refers to the predication of potentiality or readiness or likely success of the examinee in a

Tests of Language Proficiency: Tamil

First Published: *May 2003* / *Vaisakha 1925*

© Central Institute of Indian Languages, Mysore, 2003.

This material may not be reproduced or transmitted, either in part or in full, in any form or by any means, electronic, or mechanical, including photocopy, recording, or any information storage and retrieval system, without permission in writing from:

Prof. Udaya Narayana Singh
Director
Central Institute of Indian Languages
Manasagangotri, Mysore – 570 006, INDIA

Phone: 0091/ 0821–515820 (Director)
Telex: 0846-268 CIIL IN
E-mail: udaya@ciil.stpmy.soft.net (Director)
bhasha@sancharnet.in
Pabx: 0091/ 0821–515558
Grams: BHARATI
Fax: 0091/0821-515032
Website: http://www.ciil.org

To contact Head, Publications: Dr. K. Srinivasacharya
E-mail: scharya@ciil.stpmy.soft.net

ISBN-81-7342-052-1

Price: Rs.250-00 (US $.25.00)

Published by Prof. Udaya Narayana Singh, Director
Central Institute of Indian Languages, Mysore
Printed by Mr. S.B. Biswas, Manager
CIIL Printing Press, Manasagangotri, Mysore-570 006, India
Cover Design: H. Manohar
DTP: R. shakuntala

Acknowledgement

Late Dr. A.K. Srivastava, the then Professor-cum-Deputy Director was instrumental for initiating action towards this series of work. His involvement and contributions are gratefully remembered. Dr. D.P. Pattanayak, the founder Director, Dr. E. Annamalai and Dr. M.S. Thirumalai, the then Professor-cum-Deputy Directors too, have given a lot of encouragements which cannot be forgotten. Dr. N. Ramaswami and Dr. O.N. Koul Directors i/c were kind enough to give their consent for taking up the finalisation of this work on priority. Dr. A.K. Basu extended his help in providing computer facilities. Dr. M. Balakumar, my colleague in the Evaluation Unit, has been of great help in following-up of the finalisation process. Mrs. Syamala Kumari and Dr. K. Srinivasacharya have extended their consultancy in completing the pre-publication formalities. The materials were fed and pages made in computer by Ms. R. Shakunthala of Kuvempunagar. Sri. H. Manohar designed the wrapper. As usual, Sri. S.B. Biswas, Press Manager and his staff have extended their cooperation in getting the materials neatly printed and made available in the bound forms. The help and cooperation extended by all of them are gratefully acknowledged. Last, but not the least, I must thank all the contributors and participants of the workshops who have been as interested in this work as we in the Research Group on Evaluation are. I am particularly grateful to the present Director, Prof. Udaya Narayana Singh who has been very encouraging in all our endeavours.

Pon Subbiah
Series Editor

particular area of learning, employment, etc. Not withstanding all these perceptions, the item samples included in these volumes were prepared on the basis of the consensus arrived at. They can be used for different purposes with necessary modifications. A flexible approach has been adopted here with a suggestion that the test constructor is free to fix up the objectives on the basis of his own perception and priority. Accordingly, the suggested models may be used for exploring the terrain of language proficiency by various organizations that require testing the proficiency of language for the purposes of *education* and *employment*.

The important point is that this series employs a *common frame*. The common points such as main idea, sequence, cause and effect, or inferences are quite innovatively cultivated. Divided into seven parts, the tests here focus on the areas such as reading comprehension, lexical skill, structure of language, writing and composition, listening comprehension, and two optional topics such as speaking and general language related information. It goes without saying that advanced users of these books will find their own ways of creating more such test items specifically suited to their contexts-based on what they find in these item resources. Such explorations and additions will only enrich the field. Much of what we see here has resulted from a series of workshops and meetings and as a consequence of burning midnight oil for a long period.

I would like to appreciate the efforts of the Series Editor and all those individual experts who have contributed the item models with so much of care and imagination. A number of senior scholars have been involved in this project. This includes former Directors and Deputy Directors of the Institute.

I am sure the students, teachers, and language evaluators in this part of the world will find this series of books very useful.

Udaya Narayana Singh
Director

Introduction

General *proficiency* in the context of education is defined as the degree of ability already acquired; ability of acceptable degree, generally of a high degree, for a kind of task or for a vocation; *skill* in a comprehensive sense, including not only motor or manual activities but also *activities* such as *competence* in language, book keeping, economics, mathematics, etc. (Good, Carter V, 1973). However, when this definition is applied specifically to language, the proficiency as a concept has not yet found a completely satisfactory expression. Different interpretations have been aptly summarized by Stern (1983). *One set* of options relates to the *level* of proficiency - the different degrees of actual or required mastery of the language. This is what rating scales postulate, and inter language studies (or error analysis) investigate. The *second set* of options lies in the categories being defined as the *essential characteristics* (or components) of proficiency. They can be seen as expressed in relatively general or abstract terms, or itemized in increasingly concrete ways.

Oller (1976) had opted for a *single concept* - expression of proficiency as *expectancy grammar*, Cummins (1979) recognized a *two-fold* division between a more *academic* (linguistic) and a more *communicative* component. Canale and Swain (1980) division of proficiency is *three-fold* with *linguistic* (grammatical), *socio-linguistic*, and *strategic* competence. A *four-fold* interpretation, implicitly incorporating the *formal* mastery (form), *semantic* mastery (meaning), *communication* capacity and *creativity* into the traditional divisions of proficiency viz., *listening, speaking, reading* and *writing* (L, S, R, W) is advocated by Stern (1983). The Council of Europe Inventories represent a multiple interpretation of proficiency combining *roles, settings, topics, functions* and *notions* while Carroll's (1968) analysis relates the proficiency to a concept involving aspects of *four behavioural* (L, S, R, W) *to three or more linguistic* categories. Thus, in the literature on language evaluation, a number of attempts had been made to explore the dimensions of proficiency but none of them appeared to have had universal acceptance.

In view of all these interpretations, it was felt as possible that language proficiency measures could be constructed and used for predicting *how well an individual*, after certain number of years of normal education, could *communicate in a content free and context-free manner across a wide variety of situations*. It was also presumed that such a measure would test the *knowledge of language in use* abstracted from content-based instruction.

It was in this background, a workshop was organised at the Eastern Regional Language Centre, Bhubaneshwar during Nov. 25 - 29, 1985. In the course of proceedings, a review of the existing tests was made in the light of the

syllabi of language studies being followed in standard X. After a series of deliberations among the experts who represented six Indian languages viz., Bengali, Marathi, Punjabi, Tamil, Telugu, and Urdu, it was decided to develop a *common frame* that could serve as a guideline for the preparation of tests of language proficiency. The idea behind this was to identify the broad dimensions of the concept of language proficiency which could accommodate samples of raw items drawn from the text books of standard X and also from other reading materials of the comparable standard. On identification of those dimensions, a few model items were also prepared to represent them.

The common frame so developed with *seven components* is composed of a number of *dimensions* and each of them has been identified through a series of item types. Accordingly, question items dealing with *main idea, direct information, sequence, cause and effect, inference, and vocabulary* - have been suggested to test READING COMPREHENSION, the first component. Items dealing with *lexical meaning, contextual meaning, synonyms,* and *antonyms*- are suggested for LEXICAL SKILLS (vocabulary), the second component. For the third component viz., STRUCTURE, items dealing with *sequence completion, error detection, sentence comprehension, transformation and formal grammar* have been suggested. Similarly for the next one WRITING AND COMPOSITION, those of *spelling, idioms & proverbs, precise writing, text organization, letter writing and composition* are suggested. In view of the practical difficulties, specific types have not been suggested for the fifth, sixth, and seventh components, viz., LISTENING COMPREHENSION, SPEAKING, and GENERAL LANGUAGE RELATED INFORMATION. For these components, the choice of identifying the item types has been left to the discretion of the item-writers themselves so that they can decide the same depending on the context in which they are needed. All these suggestions have also been accompanied by appropriate *model items* as guidelines. The assumption is that the responses obtained on these above suggested questions can be treated as *indicative* of the existence of language proficiency in the examinee. The responses so obtained could then be *consolidated* and *measured* by using the *scales* of respective dimensions to give numerical values to them.

Based on these models, subject experts in the respective languages were, at a later stage, requested to prepare a large number of question items in *equivalent forms* from their own respective places (so that they could give maximum attention to create appropriate context to each of the question items developed). Subsequently, all those items prepared in the *decentralized workshops* held during 1986-88 were pooled together, reviewed, and finalized in a *centralized workshop* held at the CIIL Head Quarters, Mysore. The finalised question items were then incorporated under each of the identified

components of proficiency, in the same sequential order. However, this sequence has not been followed in some languages included in this series.

It is suggested that by keeping these materials as a base, a number of optimized tests of required length and time, may be constructed and made use of by any agency which seek to assess language proficiency of a large number of individuals for such purposes as *admissions* into higher education, *job selection, training*, and also for evaluation of various language instructional programmes in the country. The item resources provided here are therefore meant primarily for *assessment*, and not for *diagnostic* purposes. However, they may be also used for screening purposes which may then be followed up by more elaborate forms of diagnostic tools. Further, it seeks to evaluate individual's proficiency in relation to group norm and as such, does permit norm-referenced interpretations.

Pon Subbiah
Series Editor

References :

Canale, M. and **Swain, M.** 1980. 'Theoretical bases of communicative approaches to second language teaching and testing.' *Applied Linguistics* 1 : 1-47.

Carroll, J.B. 1968. 'Language testing' in Davies 1968 : 46-49

Cummins, J. 1979. 'Cognitive / academic language proficiency, linguistic interdependence, the optimal age question and some other matters.' *Working papers on Bilingualism* 19 : 197-205.

Good, Carter V., ed., 1973. 'Dictionary of Education' New York: McGraw-Hill Book Company.

Oller, J.W. Jr. 1976. 'Evidence for a general proficiency factor : an expectancy grammar.' *Die Neueren Sprachen* 2 : 165-74.

Srivastava, A.K. *et al.*, 1985. 'Preparation of Tests of Language Proficiency : Recommended Guidelines' - booklet by CIIL (based on the deliberations of the 1984 Workshop).

Stern, H.H., 1983. 'Fundamental Concepts of Language Teaching' Oxford : Oxford University Press.

Contents

Foreword v
Acknowledgement vii
Introduction ix

TEXT

Tests of Language Proficiency - TAMIL

1. Reading Comprehension 1
2. Lexical Skill 39
3. Structure of Language 79
4. Writing & Composition 139
5. Listening Comprehension 199
6. Speaking (Optional) 236
7. General Language-related information (Optional) 236

Answer Keys 237
Appendix - I : Recommended Guidelines 253
Appendix - II : Addresses of Contributors / Resource Persons 266

Reading Comprehension 1
படித்துணர்தல்

கீழேயுள்ள பகுதியைக் கவனமாகப் படித்துக் கொடுக்கப்பட்டுள்ள கேள்விகளுக்குப் பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுத்து, அதை விடைத்தாளில் எழுதுக.

I. ஜெர்மனியில் மக்கள் தொகை பெருகிக்கொண்டே போயிற்று. மக்கள் வாழ இடம் போதவில்லை. ஆப்பிரிக்காவில் இடம் பிடிக்க ஜெர்மனி முயன்றது. ஆனால் பிரிட்டனும் பிரான்ஸும் ஜெர்மனிக்கு இடங்கொடுக்க மறுத்தன. இதனால் ஆத்திரமடைந்த ஜெர்மனி, பிரிட்டனையும் பிரான்ஸையும் ஒடுக்கத் திட்டமிட்டது. தன் பொருளாதார வலிமையும், படைபலத்தையும் பெருக்குவதில் தீவிரமாக முனைந்தது. ஜெர்மனியின் வளர்ச்சியைக் கண்டு அஞ்சிய பிரான்ஸ், ரஷ்யாவுடன் உறவு பூண்டது. இந்த இரு நாடுகளும் தம் படைபலத்தைப் பெருக்கத் தொடங்கின.

ஜெர்மனியின் அண்டை நாடு ஆஸ்திரியா. இதற்குக் கடற்கரை இல்லை. அதனால் துறைமுகமும் இல்லை. அது கிழக்கே சென்று ஈஜீயன் கடலில் துறைமுகம் ஒன்றைப் பிடிக்க விரும்பிற்று. அந்த எண்ணம் கைகூடாதபடி இதன் அண்டை நாடுகளான சர்பியா, மான்டெனீக்ரோ என்ற இரு நாடுகளும் குறுக்கே நின்றன. அதனால் ஆஸ்திரியாவுக்கும் சர்பியாவுக்கும் இடையே பகைமை மூண்டுக்கொண்டிருந்தது.

இந்த நிலையில் ஆஸ்திரியாவின் பட்டத்து இளவரசனையும், அவன் மனைவியையும் சர்பியாவைச் சேர்ந்த ஒருவன் 1914 ஜூன் 28-ல் சுட்டுக் கொன்றுவிட்டான். சர்பியா அரசு அவனைத் தூண்டிவிட்டதாக ஆஸ்திரியா குற்றம் சாட்டியது. இதைத் தொடர்ந்து சர்பியா மீது படையெடுத்தது ஆஸ்திரியா. ரஷ்யாவின் துணையைச் சர்பியா நாடியது. ஆஸ்திரியாவுக்கு உதவியாக ஜெர்மனி வந்தது.

இத்தருணத்தைப் பயன்படுத்தி, பிரான்ஸைத் தாக்க ஜெர்மனி முயன்றது. பெல்ஜியத்தின் வழியாக ஜெர்மனி தன் படையைச் செலுத்தியது. பெல்ஜியத்துக்கு உதவப் பிரிட்டன் விரைந்தது. அது ஜெர்மனியின் மேல் போர் தொடுத்தது. பிரிட்டனுடன் பிரான்ஸ், ரஷ்யா, இத்தாலி, சர்பியா, ஜப்பான், சீனா, அமெரிக்கா ஆகிய நாடுகளும் அணிசேர்ந்தன. அப்போது இந்தியா பிரிட்டனின் ஆட்சிக்கு உட்பட்டிருந்ததால் அது பிரிட்டனுக்குப் பொன்னும், படையாட்களும் கொடுத்து உதவிற்று. இந்த அணியைச் சேர்ந்த நாடுகளுக்கு நேச நாடுகள் என்று பெயர். ஜெர்மனியுடன் ஆஸ்திரியா, உறங்கேரி, துருக்கி, பல்கேரியா ஆகிய நாடுகள் சேர்ந்தன. இவற்றுக்கு மத்திய அரசுகள் என்று பெயர்.

நேச நாடுகளுக்கும், மத்திய அரசுகளுக்குமிடையே தரையிலும் கடலிலும் பல பெரிய போர்கள் நடந்தன. ஜெர்மனியர் நீர்மூழ்கிக் கப்பல்களையும், ஆகாய விமானங்களையும் கொண்டு நேச நாடுகளுக்குப் பெருஞ்சேதம் விளைவித்தனர். நேச

நாடுகள் முதன்முதல் டாங்கிகளைப் பயன்படுத்தின. இறுதியில் ஜெர்மனி தோற்றது. யுத்தம் 1918 நவம்பர் 11-ல் முடிவுற்றது.

இந்தக் கொடிய யுத்தத்தில் இரண்டு கோடிப் பேர் உயிரிழந்தனர். யுத்தம் ஓய்ந்தவுடன் உலகம் முழுவதிலும் பரவிய விஷக் காய்ச்சலில் இரண்டு கோடி மக்கள் மாண்டனர். யுத்தத்தில் பங்குகொண்ட எல்லா நாடுகளுக்கும் கணக்கற்ற பொருள் நட்டம் ஏற்பட்டது. வெர்சேல்ஸ் என்ற ஊரில் 1919 ஜூன் 28-ல், போரில் ஈடுபட்ட நாடுகளுக்கிடையே உடன்படிக்கை ஒன்று ஏற்பட்டது. அதன்கீழ் ஜெர்மனி படை திரட்டும் உரிமையை இழந்தது. போரில் கலந்து கொண்ட நேச நாடுகளுக்கு அது நஷ்ட ஈடு கொடுக்கவேண்டியதாயிற்று. ஜெர்மனியைச் சேர்ந்த சில வளமான இடங்களைப் பிரான்ஸ் பறித்துக் கொண்டது.

உலகில் மீண்டும் யுத்தமே நேரிடாமல் பார்த்துக் கொள்ளவும், ஒரு நாடு மற்றொரு நாட்டின் மேல் காரணமின்றிப் படையெடுப்பதைத் தடுக்கவும் வேண்டியதன் அவசியத்தை உலக நாடுகள் உணர்ந்தன. இதற்கெனச் சர்வதேச சங்கம் ஒன்று நிறுவப்பட்டது. உலக நாடுகள் பல இச்சங்கத்தில் சேர்ந்தன. ஆனால் இதற்குப் பெரும் முயற்சி எடுத்துக்கொண்ட அமெரிக்கா இதில் சேரவே இல்லை.

1. பிரான்சைத் தாக்க ஜெர்மனி முயன்றது, ஏனெனில்

   a. ஜெர்மனி மக்களுக்கு ஆப்ரிக்காவில் இடம் கொடுக்க பிரிட்டனும் பிரான்சும் மறுத்தன.

   b. ஆஸ்திரியா ஜெர்மனி மீது படையெடுத்தது.

   c. ஆஸ்திரியா ஈஜியன் கடலில் துறைமுகம் ஒன்று பிடிக்க விரும்பிற்று.

   d. ஆஸ்திரியாவின் பட்டத்து இளவரசனையும் அவன் மனைவியையும் ஒருவன் சுட்டுக் கொன்று விட்டான்.

2. நேசநாடுகள் எனப்படுபன :

   a. பிரிட்டன், ஆஸ்திரியா, துருக்கி, சீனா, ஜப்பான்.
   b. பிரிட்டன், ஜெர்மனி, துருக்கி, பல்கேரியா, உறங்கேரி.
   c. பிரிட்டன், பிரான்ஸ், அமெரிக்கா, ரஷ்யா, ஜப்பான்.
   d. பிரிட்டன், பிரான்ஸ், ஜெர்மனி, ஆஸ்திரியா.

3. 'மத்திய அரசுகள்' எனப் பெயர் பெற்றவை:

   a. அமெரிக்கா, துருக்கி, ஜெர்மனி, பல்கேரியா.

   b. இத்தாலி, ஜெர்மனி, சீனா, உறங்கேரி, துருக்கி.

   c. ஜப்பான், ஜெர்மனி, அமெரிக்கா, உறங்கேரி.

   d. ஜெர்மனி, ஆஸ்திரியா, உறங்கேரி, துருக்கி, பல்கேரியா.

4. பிரான்ஸ் ரஷ்யாவுடன் உறவு பூண்டது. ஏனெனில்.
   a. ஜெர்மனி படைதிரட்டும் உரிமையை இழந்தது.
   b. பிரான்ஸ் பிரிட்டனுடன் அணி சேர்ந்தது.
   c. பிரான்ஸ் ஜெர்மனியின் வளர்ச்சியைக் கண்டு அஞ்சியது.
   d. ஆஸ்திரியா ஈஜியன் கடலில் துறைமுகம் ஒன்று பிடிக்க விரும்பிற்று.

5. ஆஸ்திரியா சர்பியா மீது படையெடுத்த பின்னர் நடந்த நிகழ்ச்சி யாது ?
   a. ஜெர்மனி ஆஸ்திரியாவுக்கு உதவியாக வந்தது.
   b. சர்பியா ரஷ்யாவின் துணையை நாடியது.
   c. ஆஸ்திரியாவின் பட்டத்து இளவரசனும் அவன் மனைவியும் கொல்லப்பட்டனர்.
   d. ஜெர்மனி தன் படையைப் பெல்ஜியத்தின் வழியாகச் செலுத்தியது.

6. சர்வதேச சங்கம் ஒன்று நிறுவப்பட்டதன் அவசியம்:
   a. யுத்தத்தில் இரண்டு கோடிப் பேர் உயிரிழந்தமை.
   b. யுத்தத்தில் பங்கு கொண்ட எல்லா நாடுகளுக்கும் கணக்கற்ற பொருள் நஷ்டம் ஏற்பட்டமை.
   c. படை திரட்டும் உரிமையை ஜெர்மனி இழந்தமை.
   d. உலக நாடுகளிடையே யுத்தமே வராமல் பார்த்துக் கொள்ளவும் காரணமில்லாத படையெடுப்பைத் தடுக்கவும் எண்ணியமை.

7. இந்தியா பிரிட்டனுக்குப் பொன்னும் படையும் கொடுத்து உதவியது. ஏனென்றால்
   a. இந்தியா அப்போது பிரிட்டனின் ஆட்சிக்கு உட்பட்டிருந்தது.
   b. இந்தியா நேச நாடுகளுள் ஒன்று.
   c. பிரிட்டன் யுத்தத்தில் பெல்ஜியத்துக்கு உதவ விரைந்தது.
   d. பிரிட்டன் ஜெர்மனியின் மேல் போர் தொடுத்தது.

8. வெர்சேல்ஸ் என்ற ஊரில் ஏற்பட்ட உடன்படிக்கையின்படி நிகழ்ந்தது யாது ?
   a. உலகில் யுத்தமே நேரிடாமல் பார்த்துக் கொள்ளப்பட்டது.
   b. காரணமில்லாத படையெடுப்பு தடுக்கப்பட்டது.
   c. ஜெர்மனி படை திரட்டும் உரிமையை இழந்தது.
   d. உலக நாடுகள் சர்வதேச சங்கத்தில் சேர்ந்தன.

9. இப்பகுதியிலுள்ள அணிசேர் என்பதன் பொருள்:

   a. நாடுகளுடன் உறவு கொள்ளல்.

   b. ஒன்று சேர்தல்.

   c. வரிசையில் நிற்றல்.

   d. மற்றவரோடு சேர்தல்.

10. இப்பகுதியிலிருந்து பெறப்படும் திரண்ட கருத்து :

   a. போரால் உயிரிழப்பும் கணக்கற்ற பொருள் நட்டமும் ஏற்படுமே தவிர வேறெந்த பலனும் விளையாது.

   b. ஒருமுறை போர் மூண்டால் மீண்டும் போர் நடக்கும்.

   c. மக்கள் வாழ இடம் இல்லாவிட்டால் பிற நாடுகளில் இடம் பிடிப்பதன் பொருட்டுப் போர் ஏற்படுகிறது.

   d. ஒரு நாட்டில் பட்டத்து இளவரசன் கொல்லப்படுவானேயானால் உலக நாடுகளிடையே நிச்சயமாகப் போர் மூளும்.

II. தென்மேற்கு ஆசியாவில் விளங்கும் தற்போதைய இராக் என்னும் நாடு பண்டைக் காலத்தில் மெசபொடேமியா என்று வழங்கப்பட்டது. இப்பிரதேசம் மிகுந்த வெப்பமும் சொற்ப மழையும் உள்ள வறண்ட நிலப்பகுதியாகும். இருந்தாலும் இது வடக்கிலிருந்து தெற்கே பாயும் யூப்ரடிஸ், டைக்ரிஸ் என்னும் இரு பேராறுகளால் செழித்த சமவெளியாகும். எகிப்திய நாகரிகத்தைப் போன்றே இப்பிரதேசத்திலும் சுமார் கி.மு. 4000 இல் பண்பட்ட நாகரிகம் ஒன்று தோன்றி விளங்கியது. இங்குள்ள மிகச் செழித்த பாகம் அதன் தென் கோடியில் 150 மைல் நீளமுள்ள சினார் சமவெளி ஆகும். இதுவே பண்டைக் காலத்தில் சுமேர் நாடு அல்லது சுமேரியா என்று பெயர் பெற்று இருந்தது. ஏறக்குறைய கி.மு. 4000 இல் மெசபொடேமியாவின் வடகிழக்கினின்றும் ஒரு வகை இனத்தினர் படையெடுத்து வந்து சுமேரியாவில் வாழலாயினர். இம்மக்களே சுமேரியர் என்று வழங்கப்பட்டனர். விரைவில் இவர்கள் சிறந்த நாகரிகம் ஒன்றை உருவாக்கினர்.

சுமேரியர்கள் முதலில் கூட்டத்தினராகக் கிராமங்களை அமைத்துக்கொண்டு வாழ்ந்தனர். பின்னர் அவர்கள் பல அழகிய நகரங்களை அமைத்தனர். இவற்றுள் முக்கியமானவை யூப்ரடிஸ் நதிக்கரையில் உள்ள நீபூர், ஊர் என்பனவாகும். ஒவ்வொரு நகரமும் அதன் தெய்வத்திற்காக ஒரு கோயிலைப் பெற்றிருந்தது. கோயில் குருவே நகராட்சியாளர் ஆவார். இத்தகைய நகரக் குடியரசுகள் ஒன்றோடொன்று போர் புரிந்து நாளடைவில் பெரிய இராச்சியங்கள் ஆயின. அப்போது அரசர்கள் தோன்றினர்.

விவசாயமே மக்களது முக்கிய தொழிலாகும். அணைகள் பல கட்டியும் கால்வாய்கள் பல வெட்டியும் அவர்கள் நீர் பாசனத்தைப் பெருக்கினர். கோதுமை முக்கியப் பயிராகும். பல்வகைத் தானியங்களையும், பேரீச்சை, அத்தி, திராட்சை முதலிய பழம் தரும்

மரங்களையும் பயிர் செய்தனர். விளைபொருள்களும் ஆடுமாடுகளுமே அவர்களது முக்கியச் செல்வம். அவ்ர்கள் அழகிய மட்பாண்டங்கள் செய்தல், ஆடை நெய்தல், உலோக வேலை, அணி புனைதல், தந்த வேலை முதலியவற்றில் தேர்ச்சி பெற்று விளங்கினர்.

கம்பளி ஆடைகளைத் தயார் செய்தல் அவர்களின் முக்கிய கைத்தொழில் ஆகும். பண்டமாற்று முறையில் அவர்கள் எகிப்து, இந்தியா முதலிய அயல் நாடுகளுடன் வர்த்தகம் செய்து வந்தனர். சுமேரியர்கள் செம்பினை மிகுதியாகப் பயன்படுத்தினர். சுமேரியாவில் களிமண் மிகுதியாய் இருந்ததே ஒழிய, கல்லும் மரமும் இல்லை. எனவே அவர்களின் வீடுகள் யாவும் முதலில் வெயிலில் உலர்த்தப்பட்ட செங்கற்களால் கட்டப்பட்டன. நாளடைவில் சூளையில் சுடப்பட்ட கற்களால் வீடுகளைக் கட்டலாயினர். சுமேரியர் சமூகம் நான்கு முக்கியப் பிரிவுகளை உடையதாக விளங்கியது. அரசனும் பிரபுக்களும் முதல் வகுப்பினர் ஆவர். குருமார்களும் உத்தியோகஸ்தர்களும் இரண்டாம் வகுப்பினர் ஆவர். அவர்கட்குக் கீழ் வியாபாரிகளும், நிலச்சொந்தக்காரர்களும் தொழில் திறமை பெற்றவரும் விளங்கினர். அடிமைகள் இறுதி வகுப்பினர் ஆவர்.

பண்பாட்டில் மேலோங்கி சுமேரியர் விளங்கினர். கல்வியில் அவர்கள் மிக்கத் தேர்ச்சி பெற்றிருந்தனர். அவர்கள் உலகப் பண்பாட்டுக்கு அளித்த செல்வம் யாதெனில் எழுதும் கலைத்திறனே ஆகும். அவர்களும் எகிப்தியரைப் போல் ஒருவகைச் சித்திர எழுத்துக்களைப் பயன்படுத்தினர். சுமேரியர் 350 அடையாள எழுத்துக்களை உருவாக்கினர். எழுதுவதற்குக் களிமண் பலகைகள் பயன்படுத்தப்பட்டன. இவ்வெழுத்துக்கள் ஆப்பு உருவம் உடையவை. எனவே இவ்வாறு எழுதும் முறை ஆப்பு உருவ எழுத்தியல் எனப்பட்டது. இவ்வெழுத்துக்களைக் கொண்ட களிமண் பலகைகள் வெயிலில் உலர்த்தப்பட்டன அல்லது சுடப்பட்டன.

சுமேரியர் சிறந்த தெய்வ பக்தி உடையவராவர். அவர்கள் பலவகைத் தெய்வங்களையும் வணங்கி வந்தனர். அவர்கள் வணங்கிய மிகப் பெரிய தெய்வம் என்லில் எனப்படும் வாயுக் கடவுளாவர். அவரது கோயில்கள் சிக்குராட் எனப்படும். அவை அழகிய கோபுரங்களால் அலங்கரிக்கப்பட்டன. குருமார்கள் மிகுந்த செல்வாக்குப் பெற்று விளங்கினர். இறந்தவர்கள் வீடுகளிலேயே புதைக்கப்பட்டனர். அழகிய சமாதிகளில் அரசர்கள் பணியாட்களுடன் ஆடம்பரமாகப் புதைக்கப்பட்டனர்.

1. இப்பகுதியின் திரண்ட கருத்தைக் கீழ்வருமாறு கூறலாம்.

   a. சுமேரிய நாகரிகம் சிறந்த நாகரிகம். நகர நாகரிகத்திலும் கைத்தொழிலிலும் சுமேரியர்கள் சிறந்தவர்கள். இவர்கள் பண்பாட்டில் மேலோங்கியவர்களாக விளங்கியதோடு சிறந்த தெய்வ பக்தி உடையவர்களாகவும் இருந்தனர். சுமேரியர் உலகப் பண்பாட்டுக்கு அளித்த செல்வம் எழுத்துக்கலையாகும்.

   b. எகிப்திய நாகரிகம் போன்று சுமேரிய நாகரிகமும் சிறந்தது. சுமேரியர்கள் யூப்ரடீஸ் நதிக்கரையில் நீபூர், ஊர் என்னும் நகரங்களை அமைத்தனர். விவசாயம் இவர்களது முக்கிய தொழிலாக இருந்தது. சிறந்து தெய்வ பக்தி உடைய இவர்கள் பல தெய்வங்களை வணங்கி வந்தனர்.

c. கி.மு. 4000 இல் மெசபொடேமியாவின் வடகிழக்கினின்றும் வந்த சுமேரியா சிறந்த நாகரிகம் ஒன்றை உருவாக்கினர். யூப்ரடீஸ் நதிக்கரையில் நிபூர், ஊர் என்னும் அழகிய நகரங்களை அமைத்தனர். தெய்வ வழிபாட்டில் சிறந்தவர்கள்.

d. சினார் சமவெளியில் கி.மு.4000 இல் குடியேறிய சுமேரியர்களது நாகரிகம் எகிப்திய நாகரிகத்தைப்போல் பழமையானது. நகர நாகரிகத்திலும் கைத்தொழிலிலும் சுமேரியர்கள் சிறந்தவர்களாக இருந்தனர். இவர்கள் பண்பாட்டில் மேலோங்கியவர்களாக விளங்கியதோடு தெய்வ பக்தி உடையவர்களாகவும் விளங்கினர். சுமேரியர் உலகப் பண்பாட்டுக்கு அளித்த செல்வம் எழுத்துக்கலையாகும்.

2. சுமேரிய நாகரிகம் சிறந்த நாகரிகம் ஆகும். ஏனெனில்

a. எகிப்திய நாகரிகத்தைப் போல சுமேரிய நாகரிகமும் விளங்கியது.

b. நகர அமைப்பிலும், விவசாயத்திலும், தெய்வவழிபாட்டிலும், அரசு முறையிலும், எழுதும் கலையிலும் சுமேரிய நாகரிகம் சிறந்து விளங்கியது.

c. சுமேரியர்கள் கிராமங்களில் தொடங்கி நகர நாகரிகத்தில் சிறந்து விளங்கியதோடு வர்த்தகம், விவசாயம் போன்றவற்றிலும் சிறந்து விளங்கினர்.

d. யூப்ரடீஸ், டைகரிஸ் ஆற்றங்கரைகளில் கி.மு. 4000 இல் வளர்ந்த நாகரிகம் சுமேரிய நாகரிகமாகும்.

3. சுமேரியர்கள் உலகப் பண்பாட்டுக்கு அளித்தது

a. எழுதும் கலைத்திறன்

b. களிமண் பலகைகள்

c. ஆப்பு உருவ எழுத்தியல்

d. பண்டமாற்று முறை

4. மெசபொடேமியா மிகுந்த வெப்பமும் சொற்ப மழையும் உள்ள வறண்ட நிலப்பகுதியாகும். இருந்தாலும் அதன் சிறப்பு யாது ?

a. இதுவே பண்டைக்காலத்தில் சுமேர் நாடு என்று பெயர் பெற்றிருந்தது.

b. சுமேரியர்கள் கிராமங்களை அமைத்துக் கொண்டு வாழ்ந்தனர்.

c. வடக்கிலிருந்து தெற்கே பாயும் யூப்ரடீஸ், டைக்ரிஸ் என்னும் இரு பேராறுகளால் செழித்த பகுதியாகும்.

d. அணைகள் பல கட்டியும் கால்வாய்கள் பல வெட்டியும் அவர்கள் நீர்ப்பாசனத்தைப் பெருக்கினர்.

5. சுமேரியர் சிறந்த தெய்வபக்தி உடையவராவர். அவர்கள்

a. வணங்கிய மிகப்பெரிய தெய்வம் என்லில் எனப்படும்.

b. பலவகைத் தெய்வங்களை வணங்கி வந்தனர்.
c. கோயில்கள் சீராகுட் எனப்படும்.
d. அழகிய கோபுரங்களைக் கட்டினர்.

6. சுமேரியர்கள் கல்வியில் மிகவும் தேர்ச்சி பெற்றிருந்தனர். எவ்வாறெனில்

a. இவர்கள் எழுத்து முறையை உருவாக்கிச் சித்திர எழுத்துக்களைப் பயன்படுத்தினர்.
b. இவர்கள் ஆப்பு எழுத்தியல் முறையைக் கையாண்டனர்.
c. இவர்கள் களிமண் பலகைகளில் எழுதி வந்தனர்.
d. இவர்கள் 350 அடையாள எழுத்துக்களை உருவாக்கினர்.

7. பண்டமாற்று என்பதன் பொருள் :

a. ஒரு பொருளை மாற்றுவது
b. ஒரு பொருளை ஒருவருக்குக் கொடுப்பது
c. ஒரு பொருளைக் கொடுத்து இன்னொரு பொருளை வாங்குவது
d. ஒரு பொருளுக்காக இன்னொரு பொருளை வாங்குவது

8. குருமார் என்பவர்

a. கோவிலின் தலைவர்
b. தெய்வ பக்தியுடைய சுமேரியர்
c. உத்தியோகஸ்தர்
d. நகராட்சியாளர்

9. சுமேரியாவில் அரசர்கள் தோன்றியது எப்போதெனில்

a. சுமேரியர்கள் பல அழகிய நகரங்களை அமைத்தபோது
b. நகரக் குடியரசுகள் ஒன்றோடொன்று போர்புரிந்து பெரிய இராச்சியங்கள் ஆனபோது
c. கோயில் குருவே நகராட்சியாளர் ஆனபோது
d. ஒவ்வொரு நகரமும் ஒரு கோயிலைப் பெற்றபோது

10. சுமேரியர்களின் முக்கியச் செல்வம் :

a. விளைபொருள்களும் ஆடுமாடுகளும்
b. தானியங்களும் பழவகைகளும்
c. கோதுமையும் பேரீச்சை, அத்தி முதலிய பழம் தரும் மரங்களும்
d. கோதுமையும் பிற தானிய வகைகளும்

III. தண்ணீர் ஓடும் ஆறுகளைத்தான் நாம் பார்த்திருக்கிறோம். உறைபனி அதாவது பனிக்கட்டிகள் ஆறாக ஓடுவது உண்டு. இவ்விதமான ஆறுகளை நம் நாட்டில் இமய மலையின் பல பகுதிகளில் காணலாம். ஆண்டு முழுவதும் பனி உறைந்து கிடக்கும் ஆல்பஸ், ஆண்டீஸ்ராக்கி போன்ற மலைப் பகுதிகளிலும், தூந்தரப் பகுதிகளிலும் இவ்விதமான பல ஆறுகள் உண்டு. வட இந்தியர் இந்த ஆறுகளை 'உறிம்நத்' எனக் கூறுவார்கள். ஆங்கிலத்தில் "கிளேசியர்" என்பது இதற்குப் பெயர்.

1834-க்கு முன்பு பனி ஆறு என ஒன்றிருப்பதாகவே மக்களுக்குத் தெரியாது. அந்த ஆண்டில்தான் சுவிட்சர்லாந்தைச் சேர்ந்த புகழ் பெற்ற புவி விஞ்ஞானி லூயி அகாசிஸ் முதன்முதலாகப் பனி ஆறுகள் உண்டு என்பதைக் கண்டுபிடித்தார். தனது நாட்டில் ஆல்ப்ஸ் மலையில் பனிப் பகுதிகளில் பனி ஆறு எனத் தான் ஐயங்கொண்ட பகுதிகளில் வரிசையாக முளைக்குச்சிகளை அடித்து வைத்தார். பலவிதமாக அக்குச்சிகள் நகர்ந்து செல்லுவதை அவர் கண்டறிந்தார். இந்த ஆராய்ச்சியை அவர் தொடர்ந்து நடத்தியதில் இந்தப் பனி ஆறுகளின் ஓரங்களிலுள்ள பனிக்கட்டிகளை விட நடுவில் உள்ள பனிக்கட்டிகள் மிக விரைவாக நகர்கின்றன என்பதும் கீழ்மட்டத்தில் உள்ள பனிக்கட்டிகளைவிட மேல் மட்டத்தில் உள்ள பனிக்கட்டிகள் விரைவாக நகர்கின்றன என்பதும் தெரியவந்தது.

இவற்றின் விரைவு மலையில் சரிவு (Slope) எவ்வளவுக்கெவ்வளவு அதிகமாக உள்ளதோ அவ்வளவுக்கவ்வளவு மிகுகிறது. மேல் மட்டத்தில் பனிக்கட்டி எவ்வளவுக்கெவ்வளவு மிகுதியாகச் சேருகிறதோ அதற்கு ஏற்பவும் விரைவு மிகுகின்றது என்பது பிறகு தெரிய வந்தது. இது மட்டுமல்ல ; அப்பகுதியில் நிலவும் வெப்ப நிலையைப் பொருத்தும் விரைவு கூடுகிறது ; குறைகிறது. பனி எல்லைக்கோட்டை நெருங்க நெருங்க வெப்ப அளவு கூடுவதால் விரைதலுங் கூடுகிறது. இரவைவிடப் பகலில் வெப்பம் கூடுவதால், இரவைவிடப் பகலில் விரைவு கூடுகிறது. குளிர் காலத்தைவிடக் கோடையில் வெப்பங் கூடியிருக்கும். இதனால் குளிர்காலத்தைவிடக் கோடையில் அவை விரைவாக நகர்கின்றன. நிலப்பரப்பு சரிவாக இருந்தால்தான் இவை நகரும் என்பதில்லை. கிரீன்லாந்து அண்டார்டிக் பகுதிகளில் சமதரைப் பகுதியிலும் இவை இயல்பான ஆற்றைப்போல் நகர்ந்து செல்லுகின்றன. தட்பவெப்ப மாற்றங்களால் இவை உந்தப்பட்டு இவ்விதம் நகருகின்றன எனவும் தெரிய வந்தது.

பனி ஆறுகளின் விரைவு நத்தையின் வேகத்தைவிடக் குறைவு. மிகுதியாகப் போனால் ஒரு பகல் ஒரு இரவில் 20 மீட்டர் தூரந்தான் நகர்கின்றன. இந்த விரைவு துருவப் பகுதிகளில் உள்ள பனி ஆறுகளில் மட்டுந்தான். மற்ற இடங்களில் உள்ள பனி ஆறுகள் ஒரு நாளில் மீட்டர் கணக்கில் அல்ல; சென்டிமீட்டர் கணக்கில்தான் நகர்கின்றன. சுவிட்சர்லாந்தில் ஆல்ப்ஸ் மலையில் உள்ள புகழ் பெற்ற பனி ஆறுகளான மேயர் தி கிளாஸ், ரோங்புக் ஆகியவை ஒரு நாளைக்குச் சில சென்டிமீட்டர் தொலைவே நகருகின்றன. நம் இமயத்தில் உள்ள பிண்டாரி போன்ற பனி ஆற்றின் விரைவும் இப்படித்தான். சிக்கிமில் உள்ள ஜிம் பனி ஆற்றின் விரைவு ஆண்டிற்கு 75 மீட்டர்தான்.

பொதுவாகப் பனி ஆறுகள் மிக நீளமானவை அல்ல. அலாஸ்காவிலும், கிரீன்லாந்திலும்தான் மிக நீளமான பனி ஆறுகள் உள்ளன. அவற்றின் மிகுதியான நீளம்

123 கிலோமீட்டர். அகலம் 40 கிலோமீட்டர். உலகிலேயே மிகப் பெரிய பனி ஆறு அண்டார்டிகாவில் உள்ள பிராட்மோர் ஆகும். இதன் அகலம் 160 கிலோமீட்டர். இமயத்தில் புகழ்பெற்ற கங்கோத்திரி என்ற பனி ஆற்றின் அகலம் 40 கிலோமீட்டர். மற்றொரு புகழ்பெற்ற இமயப் பனியாறான மீஜூவின் அகலம் 25 கிலோமீட்டர். ஆல்ப்ஸ் மலைகளில் உள்ள பனி ஆறுகளின் நீளம் 8 கிலோமீட்டரிலிருந்து 16 கிலோமீட்டர் வரைதான் உண்டு.

1. இப்பகுதியின் திரண்ட கருத்தைக் கீழ்வருமாறு கூறலாம்

   a. தண்ணீர் ஓடும் ஆறுகளைப் போல பனிக்கட்டி ஓடும் ஆறுகளும் உண்டு. இவற்றைக் கண்டுப் பிடித்தவர் லூயி அகாசிஸ் என்பவர். இவ்வாறுகளின் விரைவு வெப்ப அளவைப் பொறுத்ததாகும்.

   b. இமயமலை, ஆல்ப்ஸ், ஆண்டீஸ்ராக்கி போன்ற மலைப்பகுதிகளில் பனி ஆறுகள் காணப்படுகின்றன. பனி ஆற்றைக் கண்டுபிடித்தவர் லூயி அகாசிஸ். பனி ஆறு எனத்தான் ஐயங் கொண்ட பகுதிகளில் முளைக் குச்சிகளை அடித்து வைத்துக் கண்டுபிடித்தார்.

   c. பனி ஆறுகளை லூயி அகாசிஸ் என்பவர் கண்டுபிடித்தார். பனிக்கட்டிகள் நகர்வதிலிருந்து இதனைக் கண்டுபிடித்தார். பனி ஆற்றின் விரைவுக்குப் பல காரணங்கள் உள.

   d. லூயி அகாசிஸ் என்பவர் பனி ஆறு எனத்தான் ஐயங்கொண்ட பகுதிகளில் முளைக்குச்சிகளை அடித்து வைத்துப் பின்னர் அவை நகர்வதிலிருந்து பனி ஆற்றைக் கண்டுபிடித்தார். இதன் விரைவு மலைச்சரிவு, மேல் மட்டத்தில் சேரும் பனியின் அளவு , வெப்ப அளவு ஆகியவற்றைப் பொறுத்ததாகும்.

2. நம் நாட்டில் பனி ஆறுகள் காணப்படும் பகுதி:

   a. ஆண்டீஸ்ராக்கி மலைப்பகுதி

   b. இமயமலைப் பகுதி

   c. ஆல்ப்ஸ் மலைப் பகுதி

   d. தூந்தரப் பகுதி

3. பனி ஆற்றின் விரைவு குளிர்காலத்தைவிடக் கோடைக்காலத்தில் அதிகமாக இருக்கும். ஏனெனில்

   a. வெப்ப நிலையைப் பொருத்து விரைவு கூடுகிறது.

   b. இரவை விடப் பகலில் வெப்பம் கூடுவதால் விரைவு அதிகமாகிறது.

   c. கோடைக்காலத்தில் வெப்பம் அதிகமாவதால் விரைவும் அதிகமாகிறது.

   d. பனி எல்லைக்கோட்டை நெருங்க நெருங்க வெப்ப அளவு கூடுவதால் விரைவும் கூடுகிறது.

4. 'உறிம்நத்' என்பதன் பொருள்

   a. உறைபனி

   b. பனி ஆறு

   c. மலைப்பகுதி

   d. தூந்தரப்பகுதி

5. ஆண்டிற்கு 75 மீட்டர் விரைவுடைய பனி ஆறு

   a. ரோங்புக்

   b. மேயர் தி கிளாஸ்

   c. பிண்டாரி

   d. ஜீம்

6. கூடுதலான விரைவு உடைய பனி ஆறுகள் உள்ள பகுதி எது ?

   a. சுவிட்சர்லாந்து

   b. சிக்கிம்

   c. துருவப் பகுதி

   d. இமயமலைப் பகுதி

7. சமதரைப் பகுதியிலும் இயல்பான ஆற்றைப் போல் பனி ஆறு நகர்ந்து செல்வதன் காரணம்:

   a. மேல் மட்டத்தில் பனிக்கட்டி மிகுதியாகச் சேருவதால்.

   b. இரவை விடப் பகலில் வெப்பம் கூடுவதால்.

   c. தட்பவெப்ப மாற்றங்களால் உந்தப்படுவதால்.

   d. நிலப்பரப்புச் சரிவாக இருப்பதால்.

8. லூயி அகாசிஸ் பனி ஆறுகளைக் கண்டுப் பிடித்தது எவ்வாறெனில்

   a. பனி ஆறு எனத் தான் ஐயங்கொண்ட பகுதிகளில் வரிசையாக முளைக் குச்சிகளை அடித்து வைத்துக் கண்டுபிடித்தார்.

   b. பனி ஆறுஎனத் தான் ஐயங்கொண்ட பகுதிகளில் அடித்து வைத்த முளைக் குச்சிகள் நகர்வதிலிருந்து கண்டுபிடித்தார்.

   c. ஓரங்களிலுள்ள பனிக்கட்டிகளைவிட நடுவில் உள்ள பனிக்கட்டிகள் விரைவாக நகர்வதைக் கொண்டு கண்டுபிடித்தார்.

   d. பனிப்பகுதிகளில் பனிக்கட்டிகள் நகர்வதிலிருந்து கண்டுபிடித்தார்.

9. பனி ஆறுகளின் கூடுதலான விரைவு எதைப் பொறுத்தது ?

   a. மலையின் சரிவு மற்றும் மேல் மட்டத்தில் பனிக்கட்டி சேரும் அளவு

   b. பனி ஆறுகளின் ஓரங்களிலுள்ள பனிக்கட்டிகள்.

   c. கீழ் மட்டத்திலுள்ள பனிக்கட்டிகள்

   d. இரவு நேரம்

10. உலகிலேயே மிகப் பெரிய பனி ஆறு

   a. கங்கோத்திரி

   b. மீஜூ

   c. மேயர் தி கிளாஸ்

   d. பிராட்மோர்

IV. நாளைக் காலையில் இதைச் செய்யவேண்டும், இவ்விதம் செய்யவேண்டும், என்று பேசிவிட்டுப் படுத்தனர் உழைத்திடும் இந்த உத்தமர்கள். அந்தோ ! அந்தோ ! அவர்கள் காலையில் கண்டது கதிரவனை அல்ல - அவர்களைக் காலைவரை கூட விட்டுவைக்க-வில்லை சாவு. பற்றி இழுத்துக்கொண்டு சென்று சின்னாபின்னமாக்கிவிட்டது. கடலிலே கொந்தளிப்பு ! பேய்க்காற்று வீசுகிறது. பெருமரங்கள் சாய்கின்றன வேரற்று ; தோப்புகள் சிதறுகின்றன ! பெருமழை பெய்கிறது. இருள் கப்பிக் கொள்கிறது. வயலெல்லாம் ஏரிகளாகி ஏரிகளெல்லாம் கடலாகி , வாய்க்கால்களெல்லாம் ஆறுகளாகி , ஆறுகளெல்லாம் அழிவு தருவனவாகி உயிர் காத்துக் கொள்ள முயலும் முன்பு உருத்தெரியாதபடி வெள்ளம் மக்களைக் கொள்ளை கொள்கிறது. அதன் வேகம் திடுக்கிடவைப்பதாக இருக்கிறது. எனவேதான் இத்தனை அளவு உயிரிழப்புகள் - பொருட்சேதம் - அழிவு.

கடல்நீர் ஊருக்குள் படை எடுத்தால் கதிகலங்கிப் போகாமல் என்ன செய்ய இயலும். எட்டடி, பத்தடி உயரத்துக்கு எழும்பிப் பேரிரைச்சலுடன் அலைகள் ஊருக்குள் படையெடுத்தபோது, பீதி போலும் கோழைகளுக்கு. நமது உடன் பிறந்தோர் வீரமாகப் போரிட்டுப் பார்த்திருக்கிறார்கள். ஒன்றைச் சமாளிப்பதற்குள் மற்றொன்று. என்செய்வர். கடல் அலைக்குத் தப்பி ஒதுக்கிடம் தேடிச் செல்வோமென்றாலோ பாதைகள் அழிந்துபட்டுப் போய் எங்கும் வெள்ளம். பெருமழை தாக்கியவண்ணம் இருக்கிறது, பேய்க்காற்று வீசியபடி ! இந்த நிலையில், வீசி எறியப்பட்டவர்கள், மூச்சுத் திணறிப் போனவர்கள், மோதி நசுக்குண்டவர்கள், அம்மாவோ ! எண்ணும்போதே செவிகளில் பேய்க்காற்றின் கூச்சலையும் மீறிக்கொண்டு கிளம்பும் கதறல் கேட்கிறது. அந்தோ என்ன எண்ணிக்கொண்டனரோ! விபரீதம் விளைவித்த அந்த விநாடியின்போது, குழந்தைகள் மந்திகரம் பட்ட மலராகிவிட்டனர்! பேய்க்காற்றினால் முறிந்து போயினர். தஞ்சையும் இராமநாதபுரமும் இந்த அழிவுக்கு இலக்காகி நொந்துகிடக்கின்றன. நமது நெஞ்சம் வெடித்திடும் நிலையில் இருக்கிறது. இதை எங்ஙனம் தாங்கிக்கொள்ள முடியும்!

எரிமலை, நெருப்புக் குழம்பினைக் கக்கும்; பொறி நூறு மைல்களுக்கு அப்பாலும் தெறிக்கும். தீயிலே நகரங்கள் கருகும், சூழ இருந்த சுந்தரபுரிகள் யாவும் சுடுகாடுகளாகும்!- என்று இன்னுமோர் திங்களுக்குப் பிறகு எவரேனும் வெனிசுவில் எரிமலை குறித்தோ, ஜப்பான் நிலை பற்றியோ கூறினால், ஆமாம் அந்த அழிவு பயங்கரமானதுதான். அத்தகைய ஆபத்திலே சிக்கிக் கொள்வதென்றால் கொடுமைதான் என்று கூறிட முடியும். மக்கள் சமுதாயம் இதுபோன்ற அழிவுகளை ஓரோர் சமயம் சமாளித்துத்தான் தீரவேண்டியிருக்கிறது. என்ன செய்வது ! கடல் கொந்தளிப்புக்கும், கடும் புயலுக்கும், நில நடுக்கத்துக்கும், எரிமலைக்கும், ஆபத்து கக்கிடும் எண்ணற்ற பல நிலைமைகளுக்கும் இடையிலேயேதான் மனித சமுதாயம் நிற்க வேண்டியிருக்கிறது - என்று பேசிடக் கூட இயலும். ஆனால் இன்று ? மனம் வேலை செய்ய மறுக்கிறது ! ஏடுகள் பலவற்றிலே நாடுகள் சிலவற்றிலே நேரிட்ட அழிவுகள் பற்றிப் படித்த நினைவுகூட நசித்துப் போகிறது. நெஞ்சம் வேதனை ஒன்றைத் தவிர வேறொன்றையும் ஏற்றுக்கொள்ள மறுக்கிறது.

மூன்றாண்டுகளுக்கு முன்னர் வீசியது புயலல்ல. சிறிதளவு வேகமாக வீசிய தென்றல் என்று கூறத் தோன்றுகிறது, இப்போது நேர்ந்திருக்கும் அவதியைக் காணும்போது. தென்னையும் வாழையும் அழிந்தது அப்போது. உயிர்ச்சேதம் அதிகம் இல்லை. இப்போது உயிர்ச்சேதம் , கேட்போர் உள்ளத்தை உடைத்திடும் அளவில் கிராமம் கிராமமாக அழிந்து கிடக்கின்றன பிணமலை! வளம் கொஞ்சும் தஞ்சை, வாளை துள்ளும் வாவிகளும் கொண்டை புரளும் ஆறுகளும், கமலம் முகம் காட்டும் கழனிகளும் கொண்டதென்று நாவலரும் பாவலரும் பன்னெடுங்காலமாகவே பாட்டு மொழியால் பாராட்டியுள்ளனர். அங்கு இப்போது பிணமலை.

1. இழப்புகள் ஏற்படக் காரணமாயிருந்தது எது ?
   a. நெருப்புக் குழம்பு
   b. கதிரவன் தோற்றம்
   c. நில நடுக்கம்
   d. கடும்புயல்
2. ஏரிகளெல்லாம் கடலாகக் காரணம் யாது ?
   a. கதிரவன் வராமை
   b. கடல் நீர் கலந்தமை
   c. பெருமழை பெய்தமை
   d. அணை உடைந்தமை
3. அழிவு ஏற்பட்ட இடம் எது ?
   a. வாய்க்கால் பகுதிகள்
   b. தஞ்சை மாவட்டப் பகுதிகள்
   c. ஜப்பான் போன்ற இடங்கள்
   d. சுந்தரபுரிகள்

4. உயிர்ச் சேதம் எப்போது ஏற்பட்டது ?
   a. காலையில்
   b. விடிவதற்கு முன்னர்
   c. மாலையில்
   d. எப்போது என்று அறிவதற்கான குறிப்பு இல்லை

5. மக்கள் ஏன் தப்பிச் செல்ல முடியவில்லை ?
   a. கடல் நீர் ஊருக்குள் படையெடுத்ததால்
   b. கதிகலங்கிப் போனதால்
   c. கோழைகளாக இருந்ததால்
   d. பாதைகள் அழிந்து போனதால்

6. உண்மைச் செல்வங்களாகக் குறிக்கப்படுவன எவை ?
   a. ஏரிகள்
   b. சாலைகள்
   c. சிறார்கள்
   d. கிராமங்கள்

7. இவ்வுரைப் பகுதியில் எடுத்தாளப்பட்டுள்ள ‘அந்தோ’ எனும் சொல்லுக்கு இணையான பிறிதொரு சொல் எது ?
   a. கொந்தளிப்பு
   b. பொருட்சேதம்
   c. விபரீதம்
   d. அம்மாவோ

8. ஆசிரியர் ‘உத்தமர்கள்’ என யாரைக் குறிப்பிடுகிறார் ?
   a. இறந்த மக்கள்
   b. மூச்சுத் திணறிப் போனவர்கள்
   c. உழைப்பவர்கள்
   d. சிறார்கள்

9. ‘கதிரவன்’ என்ற சொல்லுக்கு இணையான இன்னொரு சொல் எது ?
   a. கதிர் அறுப்பவன்
   b. சந்திரன்

c. கதிர் வீசுபவன்

d. ஞாயிறு

10. 'சின்னா பின்னமாகிவிட்டது' என்ற தொடரின் பொருள் என்ன ?

a. சிதைந்து விட்டது

b. மறைந்து விட்டது

c. புதைந்து விட்டது

d. விதைத்துவிட்டது

11. 'மந்திகரம் பட்ட மலராகிவிட்டன' என்ற தொடர் உணர்த்தும் பொருள் யாது ?

a. குரங்கு மாலையைப் பிய்த்தெறிந்தது

b. மக்களுக்கு மாலைகள் கிடைக்கவில்லை

c. குழந்தைகள் என்ன செய்வதென்று தெரியாமல் விழித்தார்கள்

d. உருத்தெரியாமல் சிதைந்தன.

12. வெள்ளக்கொடுமையிலிருந்து மக்கள் தங்களைக் காத்துக்கொள்ள முடியாதது ஏன் ?

a. இடி முழங்கியதால்

b. தூங்கும்போதே வெள்ளம் வந்ததால்

c. எவ்வித முயற்சியும் மேற்கொள்ளாததால்

d. உதவிக்கு யாரும் வராததால்

13. இவ்வுரைப்பகுதியில் வெள்ளக் கொடுமையின் மிகுதியைக் குறிக்கும் சொல் எது ?

a. பேரிடி

b. விபரீதம்

c. எரிமலை

d. பிணமலை

14. இவ்வுரைப்பகுதியில் 'கொஞ்சும்' என்னும் சொல் எப்பொருளில் எடுத்தாளப்பட்டுள்ளது ?

a. துள்ளும்

b. மிகுந்த

c. இல்லாத

d. பாராட்டு

V. வேறு நாடுகளிலே விடுதலைப் போர் தொடுத்தவர்கள், இரகசியமாகவோ பகிரங்கமாகவோ சொந்தத்திலேயோ வேறு நாட்டின் துணைகொண்டோ ராணுவத்தைத் திரட்டுவது, போர்ப் பொருளைக் குவிப்பது, மறைந்திருந்து தாக்குவது, சதிசெய்வது போன்ற பல முறைகளைக் கையாண்டார்கள். தாய் நாட்டின் விடுதலைக்காக இவையாவும். எனவே, சரியா தவறா என்ற கேள்விக்கு இடம் இல்லை என்றனர்.

உலக வரலாற்றிலேயே முதன் முறையாக இந்தத் திட்டம் வேண்டாம் என்று ஒதுக்கிவிட்டுப் புதியதோர் அருந் தத்துவத்துவத்தைக் கொண்ட திட்டத்தை, ஆயுதமின்றி, இரகசியமின்றி, வெளிப்படையாக, தூய்மையுடன், விடுதலைப்போர் நடத்தலானார். அதிலே வெற்றி கண்டார் ஒருவர். அந்த வெற்றி வீரனுக்கு வெறியன் தந்த பரிசு மூன்று குண்டுகள், அடிமைகளின் விடுதலையைப் பெற்றுத் தந்த ஆபிரகாம் லிங்கன் மீது ஆங்கோர் வெறியன் குண்டு வீசியது போல.

இவ்வளவு பெரிய துணைக் கண்டத்துக்கு விடுதலையை வாங்கித் தந்தவர் நாட்டு மக்களின் ஏழ்மைக் கோலத்தைக் கண்டார். கருத்திலே அக்காட்சி கலந்தது. அவர்களில் ஒருவராகவே வாழ்ந்தார். எல்லாம் மாயம் ; உலகமே இந்திர ஜாலம் என்று உபதேசிக்கும் குருமார்கள் தங்கப் பாதகக் குறடும் வைரம் இழைத்த குண்டலங்களும் அணிந்து கொண்டிருக்கக் கண்ட மக்கள் முன்பு, எவ்வளவு சுகமும் வசதியும் - நினைத்தால் பெறுவதற்கு உரிமையும் வாய்ப்பும் பெற்றிருந்தும் ஏழை வாழ்வை நடத்திய உத்தமர்.

மக்களின் மனம் என்னென்ன எண்ணியிருக்கும். குண்டலம் அணிந்த குருமார்களையும் குறுந்தடி பிடித்து உலவிய உத்தமரையும் ஏக காலத்தில் கண்டபோது கண்டறியாதன கண்டோம் என்று களித்தனர். காதகனுக்கு கண்ணிலேயும் கருத்திலேயும் கடுவிஷம். அவன் காணச் சகிக்கவில்லை இந்தக் காட்சியை. கொன்றான் உத்தமரை. அருள் ஒழுகும் கண்ணுடையவர் என்று மக்கள் கூறக்கேட்டும் ஏசுவைச் சிலுவையில் அறைந்த வஞ்சகர் போல.

அவரைக் கொன்றானே கொடியன் ! அப்போது அவர் மனதிலே இருந்து வந்த எண்ணங்கள் யாவை என்பதை எண்ணும்போதுதான் நாம் எவ்வளவு பெரிய இழப்புக்கு ஆளாக்கப்பட்டிருக்கிறோம் என்பது விளங்குகிறது. கல்லும் கட்டையும் காகிதக் குப்பையும் ஏற்றிக்கொண்டு சென்ற கலம் கவிழ்ந்தால் நஷ்டம் என்ன ? முத்தும் பவழமும் முழுமதிபோன்ற துகிலும் பிறவும் கொண்டு செல்லும் கப்பல் கடலிலே மூழ்கிவிட்டால் இழப்பும் மனவேதனையும் நெஞ்சை வெந்திடச் செய்யுமல்லவா ? அது போல, காந்தியாரைக் கயவன் கொன்றபோது அவருடைய அருமையான மனதிலே அருமையான திட்டங்கள் நாட்டுக்கு நலன் தரும் புதிய முறைகள் ஊசலாடிக் கொண்டிருந்தன. அதை எண்ணும்போதுதான் எவ்வளவு பெரிய இழப்பு இந்தச் சம்பவம் என்று விளங்குகிறது.

விடுதலை பெற்றுத் தந்ததோடு வேலை முடிந்தது என்று அவர் முடிவு கட்டவில்லை. நாட்டை மீட்கவேண்டும், நல்லாட்சி அமைக்கவேண்டும் - மக்களை நல்லவர்களாக்க வேண்டும் என்று விரும்பினார். மக்கள் நல்லவர்கள் ஆகவேண்டும் என்பதே அவருடைய இறுதி லட்சியம். நல்ல மனிதர்களால்தான் நல்லாட்சி நடத்தமுடியும். நாட்டுக்கு விடுதலையும் கிடைத்து மக்கள் நல்லவர்களாகாமல், கொலை பாதகர்கள்,

கொள்ளைக்காரர்கள், ஆதிக்கவெறியர்கள், ஆள்விழுங்கிகள் ஆகியோரின் ஆதிக்கம் அழியாதிருந்தால் விடுதலையால் என்ன பலன் ? வேடனிடமிருந்து மீண்டுவந்த புள்ளிமானை வேங்கையின் முன்பு துள்ளி விளையாட விடுவதா ?

இதை எண்ணித்தான், நாடு விடுதலை பெற்றதும் நல்லாட்சி அமைக்கும் வழிகள்கூறி, அந்தப் பொறுப்பை, உடனிருந்தோரிடம் தந்தார் காந்தியடிகள். மக்களை நல்லவர்களாக்கும் நற்பணி புரியலானார்.

1. இரகசியமான முறைகள் எதற்காகக் கையாளப்பட்டன ?
   a. வேறுநாடுகளைப் பிடிப்பதற்கு
   b. பொருளைக் குவிப்பதற்கு
   c. நாடு விடுதலை பெற
   d. மறைவிலிருந்து தாக்க

2. துணைக்கண்டம் விடுதலை பெற எம்முறை மேற்கொள்ளப்பட்டது ?
   a. பிறநாட்டார் பின்பற்றிய முறை
   b. பிற நாட்டினர் பின்பற்றாத முறை
   c. இரகசியத் திட்டங்கள்
   d. இராணுவ நடவடிக்கை

3. அடிமைகளின் விடுதலைக்கு உழைத்தவர் யார் ?
   a. இயேசு
   b. வெற்றிவீரர் ஒருவர்
   c. ஆபிரகாம் லிங்கன்
   d. புதியதோர் தத்துவத்தைக் கொண்டவர்

4. ‘அருள் ஒழுகும் கண்ணுடையவர்’ என மக்கள் யாரைக் குறிப்பிட்டார்கள்?
   a. மத குருமார்களை
   b. இயேசுவை
   c. வெற்றி வீரர்களை
   d. ஆபிரகாம் லிங்கனை

5. துணைக்கண்டத்திற்கு விடுதலை வாங்கித் தந்தவர் எத்தகைய வாழ்க்கையை மேற்கொண்டிருந்தார் ?
   a. உலகமே மாயம் என்று உபதேசிக்கும் குருமார்கள் நடத்தும் வாழ்க்கை

b. அருள் ஒழுகும் வாழ்க்கை

c. அருமையான திட்டங்களைச் செயல்படுத்திய வாழ்க்கை

d. மக்களின் நிலைக்கேற்ப ஏற்படுத்திக்கொண்ட வாழ்க்கை

6. மக்கள் எதனை அறிந்து 'கண்டறியாதன கண்டோம்' என்றார்கள் ?

a. காதகனுக்குக் கண்ணிலேயும் கருத்திலேயும் நயவஞ்சகம் இருப்பதை

b. உத்தமரைக் கொன்றதை

c. உத்தமரின் வாழ்க்கை முறைகளை

d. பெரிய இழப்பு ஏற்பட்டதை

7. 'ஆதிக்க வெறியர்கள்' எனக் குறிக்கப்படுபவர் யார் ?

a. விடுதலையின் பயனுக்கு எதிரானவர்கள்

b. கொள்ளைக்காரர்கள்

c. வீரம், விவேகம், திறம் ஆகியன இல்லாதவர்கள்

d. மக்களுக்குப் பணிபுரியாதவர்கள்

8. 'துகில்' என்னும் சொல்லின் பொருள் யாது ?

a. முழுமதி

b. முத்து

c. அகில்

d. ஆடை

9. இவ்வுரைப் பகுதியில் 'வெற்றி வீரன்' எனக் குறிக்கப்படுபவர் யார் ?

a. மூன்று குண்டுகளைப் பரிசாகத் தந்தவர்

b. அருள் ஒழுகும் கண்ணுடையார்

c. இயேசு

d. ஆபிரகாம் லிங்கன்

10. இவ்வுரைப் பகுதியில் காணப்படும் 'நெஞ்சை வெந்திடச்செய்யும்' என்பதன் கருத்து என்ன ?

a. மனதை வேகவைக்கிறது

b. மிகுந்த துன்பத்தைத் தருகிறது

c. கயவனை நினைவுபடுத்துகிறது

d. எரிக்கிறது

11. 'புள்ளி மானை வேங்கையின் முன் விளையாட விடுவதா ?' எனும் தொடரில் 'புள்ளிமான்' எதை அல்லது யாரைக் குறிக்கிறது ?

a. மக்களை நல்லவர்களாக்க நற்பணி புரிந்தவர்களை
b. விடுதலை பெற்ற நாட்டை
c. வீரம், திறம், விவேகம் ஆகியவற்றை விரும்பியவர்களை
d. வேங்கையின் முன் விளையாடிக் கொண்டிருப்பவர்களை

12. இவ்வுரைப் பகுதியில் உணர்த்தப்படும் இழப்பு யாது ?

a. ஆபிரகாம் லிங்கனின் இறப்பு
b. கடலில் கப்பல் மூழ்கியது
c. இயேசுநாதர் சிலுவையில் மாண்டது
d. விடுதலைக்கு உழைத்த சான்றோர் ஒருவரின் இறப்பு

VI. "கையைத் தூக்கவே முடியல்ல. ஒரே குத்தல், குடைச்சல், நானும் எப்படி எப்படியோ சமாளித்துப் பார்க்கிறேன், முடியல்லே. . . பிராணனை வாட்டுது."

"பாரடி அம்மா, உங்க அப்பன், சுளுக்குக்கு இந்தக் கூச்சல்போடறத! கை சுளுக்கிக்கிட்டுதாம், அதுக்கு உசிரு போகுது, தாளமுடியல்லேணு ஒரே அமர்க்களம் பண்ணுற கூத்தப் பாரு"

"பெரிய கிராதகிடி, நீ, நான் என்ன துடியாத் துடிக்கிறேன். மூணு நாளா பல்லக் கடிச்சிக்கிட்டு, நோவப் பொறுத்துக்கிட்டு இருந்தேன். என்னாலேயும் வலி தாள முடியாததாலே கூச்சல் போடறனே தவிர, வேணும்னு வேஷமா போடறேன்"

"இருக்கும்மா! அப்பா எப்பவும் எப்படிப்பட்ட வலியையும் பொறுத்துக்கிட்டு இருப்பவராச்சே. பாவம்! என்னமா வலிக்குதோ என்னமோ..."

"அவ மனம் துளியாவது பதறுதாண்ணு பாரேன் பொண்ணு. இவளுக்கு மண்டக் குத்தல் வந்துட்டா போடற கூச்சலிலே ஊரே திரண்டு வந்திடும்.... "

"சும்மா இருங்க... எந்தக்கை வலிக்குது ... சோத்துக்கையா ? எந்த இடத்திலே .. ? தோள்பட்டையண்டையா ? முதுகுப் பக்கமாக்கூட வலிக்குதா.. ? சுளுக்குத்தான் வேற ஒண்ணும் இல்ல ... "

"எலும்பு கிலும்பு முறிஞ்சி போயிருக்குமா. இம்மாம் வலி வலிக்குதே!....."

"ஏம்ப்பா! பச்சிலை வைத்தியரண்ட போய்க் காட்னா நல்லதாச்சே..."

“அடி ஏண்டி பச்சிலையும் உலந்த இலையும்.... நீ போயி நம்ம கொல்ல மேட்டுக் குளத்தங்கரையில, களிமண்ணு இருக்கு பாரு களிமண்ணு, அத நாலு கை கொண்டா . . களிமண்ணு சஞ்சீவியாச்சே ! சுளுக்குப் பிடிப்பு, வீக்கம் இதுகளெல்லாம் . . களிமண்ணைக் குழைச்சி வலிக்கிற இடத்திலே தடவினா, அது உலர உலர வலி இருக்கிற இடந்தெரியாமல்ப் போயிடும். . ”

“ஏம் புள்ளே! நெசமாத்தாஞ் சொல்றியா ? இல்ல என்னச் சும்மா அலங்கோலம் பண்ணனும்ணு எண்ணமா ?”

“அம்மா, வெளையாட்டுத்தனமா எதாச்சும் செய்துட்டு வலி அதிகமாயிடப் போவுது..”

“ஆமா எனக்கு வயசு அஞ்சு, நான் விளையாடறேன் . . அடி ஏண்டி அந்த ஆகாவழியோட கூடிக்கிட்டு கதை பேசற. போய் களிமண்ணச் சுருக்காக் கொண்டுவா . . வர வழியில எருக்கம் செடி இருக்கும், பத்து எலையும் கிள்ளிக்கிட்டுவா . . ”

“எருக்கம் பால் தடவினா புண்ணாயிரும்னு சொல்லுவாங்களே.. ”

“கொளந்தப் புள்ளைக்குக் கூடத் தடவலாம். புண்ணு ஏன் ஆவுது ? போடி ! இருட்டிட்டா அந்தப் பக்கம் கன்னியம்மா கோயில் சர்ப்பம் உலாத்தும்...”

“ஆமா பொண்ணு பாத்துப் போ.”

“அது என்ன பண்ணும் ? கன்னிம்மா, கன்னிம்மா, கன்னிம்மாண்ணு மூணுவாட்டி சொன்னா மாயமா மறைஞ்சிடும்...”

“எதுக்கும் ஜாக்கிரத வேணும், போயிட்டுச் சுருக்கா வாம்மா. என்ன எளவெடுத்த சுளுக்கோ தெரியல்ல, உசிர வாட்டுது...”

- அந்தி நேரத்திலே அடுப்பங்கரையில் இப்படி ஓர் உரையாடல். அடுப்பங்கரை மட்டுமல்ல எல்லாமே அங்கேதான்.

1. மேலே கொடுக்கப்பட்ட உரையாடல் யார் யாரிடையே நடைபெறுகிறது?
   a. தாய், தந்தை, மகள் ஆகிய மூவருக்கும் இடையே
   b. தாய், மகன், மகள் ஆகிய மூவருக்கும் இடையே
   c. கணவனுக்கும் மனைவிக்கும் இடையே
   d. தாயுக்கும் மகளுக்கும் இடையே
2. இவ்வுரையாடல் எவ்விடத்தில் நடைபெறுகிறது ?
   a. கன்னியம்மா கோயிலில்
   b. உரையாடுபவர்களின் வீட்டில்

c. தெருவில்

d. எங்கே என அறியத்தக்க குறிப்பு இல்லை

3. சுளுக்கு வலியால் தொல்லைப்படுபவர் யார் ?

a. தந்தை

b. தாய்

c. மகள்

d. மகன்

4. பெரிய கிராதகிடி, என்று யார் யாரைக் குறிப்பிடுகிறார் ?

a. தந்தை மகளை

b. கணவன் மனைவியை

c. தாய் மகளை

d. மகள் தாயை

5. யாருக்கு மண்டைக்குத்து வந்தால் 'ஊரே திரண்டு வந்துவிடும்' என மேலே கண்ட உரையாடலில் குறிப்பிடப்படுகிறது ?

a. வலி பொறுக்காமல் துன்பப்படுபவரின் தாய்க்கு

b. வலி பொறுக்காமல் துன்பப்படுபவருக்கு

c. வலி பொறுக்காமல் துன்பப்படுவோரின் மகளுக்கு

d. வலி பொறுக்காமல் துன்பப்படுவோரின் மனைவிக்கு

6. வைத்தியரிடம் போக வேண்டும் எனக் கூறுவது யார் ?

a. சுளுக்கு வலியால் துன்பப்படுபவர்

b. சுளுக்கு வலியால் துன்பப்படுபவரின் தாய்

c. சுளுக்கு வலியால் துன்பப்படுபவரின் மகள்

d. சுளுக்கு வலியால் துன்பப்படுபவரின் மனைவி

7. "வெறும் களிமண்ணா ?" எனக் கேட்பதன் காரணம் யாது ?

a. பல வகையான களிமண் பற்றி அறிந்திருந்ததால்

b. களிமண் சுளுக்கு வலியைப் போக்காது என்று எண்ணியதால்

c. களிமண்ணோடு எருக்கம் பாலும் சேர்க்கவேண்டும் என்று எண்ணியது

d. காரணம் எதுவுமில்லை

8. “ஆகாவழியோட கூடிக்கிட்டு கதை பேசற” என்று சொல்வதன் பொருள் என்ன ?

a. தெரியாத வழியில் போவோருடன் போதல்.
b. தேவையற்றவற்றைப் பேசிக்கொண்டிருப்பவரோடு வீணாகப் பேசிக் கொண்டிருத்தல்.
c. நீண்ட நேரம் கதை கூறுபவரோடு சேர்ந்துகொண்டு பேசிக்கொண்டிருத்தல்
d. கற்பனையாக எதையாவது பேசிக்கொண்டிருப்பது.

9. “ஆமாம் எனக்கு வயசு அஞ்சு ஆச்சு” எனக் கூறக் காரணம் என்ன ?

a. கூறுபவருக்கு வயது ஐந்து ஆவதால்
b. கூறுபவர் விளையாட விரும்புவதால்
c. கூறுபவர் தாம் விபரம் தெரிந்தவர் என்று குறிப்பதற்கு
d. கூறுபவருக்கு ஐந்த வயது கடந்து வெகுநாட்கள் ஆகிவிட்டன என்பதைக் குறிப்பதற்கு

10. மேலே கொடுக்கப்பட்ட உரையாடல் பகுதியில் ‘வேகமாக’ என்னும் பொருளில் எடுத்தாளப்பட்ட சொல் எது ?

a. குடைச்சல்
b. திரண்டு
c. அதிகம்
d. சுருக்கா

11. ‘தாள முடியலை’ என்பதன் பொருள் என்ன ?

a. அமர்க்களம்
b. உயிர் போகிறது
c. தாங்கமுடியவில்லை
d. பார்க்க முடியவில்லை

12. உரையாடலில் காணப்படும் ‘கதை பேசற’ என்பதன் பொருள் என்ன ?

a. கதை சொல்லுதல்
b. கூடி விளையாடுதல்
c. தேவையில்லாமல் பேசுதல்
d. விளக்கமாகப் பேசுதல்

13. பாம்பு வரும் என எச்சரிப்பவர் யார் ?

a. தாய்

b. தந்தை

c. தாயும் தந்தையும்

d. தந்தையும் மகளும்

14. ‘சஞ்சீவி’ என்னும் சொல் எப்பொருளில் பயன்படுத்தப்படுகிறது ?

a. சஞ்சீவி மலை

b. நாட்டு மருந்து

c. சிறந்த மருந்து

d. மலையில் கிடைப்பது போன்ற மருந்து

VII. சர் ஐசக் நியூட்டன் இங்கிலாந்து நாட்டில் லிங்கன்ஷயர் என்னுமிடத்தில் கி.பி.1642 ஆம் ஆண்டில் பிறந்தார். அவருக்கு மூன்று வயது நிரம்பும் முன்னரே அவர் தந்தையார் இயற்கை எய்தினார். நியூட்டன் தம் பாட்டியாரிடம் வளர்ந்து வந்தார். நியூட்டன் பள்ளிப் படிப்பில் அவ்வளவாகத் திறமை பெற்றவராக இல்லை. ஆனால், கணக்குப் பாடத்தில் மட்டும் வகுப்பில் முதல்வராக இருந்தார். கைத்தொழிலிலும் திறமை மிக்கவராக விளங்கினார். விளையும் பயிர் முளையிலே தெரியும் என்னும் பொன்மொழிக் கிணங்க கருவிகளைக் கொண்டு ஏதேனும் ஒன்றைச் செய்த வண்ணம் இருப்பார். ஆழ்ந்த சிந்தனையும் வினைத்திட்பமும் இளமையிலேயே அவரிடம் குடி கொண்டிருந்தன.

நியூட்டன் மெழுகினால் விளக்குகள் செய்து தம் நண்பர்களுக்குக் கொடுத்து இன்புறுவார். காற்றாடி செய்து அவற்றின் கால்களில் விளக்குக் கூண்டுகளைக் கட்டிப் பறக்கவிடுவார். இரவில் அவை ‘பளிச் பளிச்’ சென்று மின்னுவதைக் கண்ட மக்கள் அவற்றை வால் மீன்கள் என நம்பி அவற்றால் தீங்கு ஏதேனும் நேருமோ என அஞ்சினர். தண்ணீர்த் துளிகளைச் சொட்ட வைத்து மணி அறியும் கடிகாரத்தையும், நிழலைக் கொண்டு நேரம் அறியும் கடிகாரத்தையும் செய்து காட்டிய நியூட்டனைப் பலரும் பாராட்டினர்.

ஒரு நாள் அவர் ஆப்பிள் மரத்தின் கீழே அமர்ந்திருந்தார். மரத்திலிருந்து ஆப்பிள் பழமொன்று கீழே விழுந்தது. எதனையும் கூர்ந்து அறியும் நுண்ணறிவு மிக்க நியூட்டன் “இந்தப் பழம் ஏன் நிலத்தில் வந்து விழவேண்டும்; ஏன் வானத்தை நோக்கிச் செல்லக் கூடாது” என்று சிந்திக்கத் தொடங்கினார். அச்சிந்தனையின் பயனாகப் பூமிக்குப் பொருள்களைத் தன்பால் ஈர்க்கும் ஆற்றல் உண்டு என்பதைக் கண்டறிந்தார்.

நியூட்டன் காற்றின் வேகத்தையும் கணக்கிட்டு அளந்து கூறினார். அவர் தமது வீட்டுக்கு அண்மையில் இருந்த காற்றாடி இயந்திரம் ஒன்றைக் கண்டு அது இயங்கும் விதத்தை ஆராய்ந்தார். சில நாட்களில் அதுபோலவே ஓர் இயந்திரத்தைச் செய்து முடித்தார். அவரது பேராற்றலைக் கண்ட நண்பர்களும் ஊர்மக்களும் அவரைப் பலவாறு பாராட்டினார்கள்.

புதுமை காண்பதில் புத்துணர்ச்சி கொண்டு நியூட்டன் தம் அன்னையார் விழைந்த வண்ணம் சிறிது காலம் வேளாண்மைத் தொழிலில் ஈடுபட்டார். அத்தொழிலில் அவருக்கு ஆர்வமும் அக்கறையும் இல்லாமையால் மீண்டும் கல்வி பயில விரும்பினார். கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகத்தில் கணிதமும் வானியற்கலையும் பயின்றார். வானியல் ஆராய்ச்சியில் அவரே முதன்மை பெற்று விளங்கினார். ஓர் இருட்டறையில் முப்பட்டைக் கண்ணாடி ஒன்றை வைத்து அதன் ஊடே கதிரவன் ஒளியைச் செலுத்தினார். ஊடுருவிச் சென்ற ஒளி வானவில் போன்று பலவண்ணங்களுடன் எதிரே இருந்த சுவரில் பட்டது. இதனால் கதிரவனின் ஒளி வெண்மையாகக் காணப்பட்டாலும் அதில் பல நிறங்கள் அடங்கியுள்ளன என்னும் உண்மை புலப்பட்டது. நிறவொளிக் கதிர்களின் தன்மைகளும் ஆற்றல்களும் ஒன்றுக்கொன்று மாறுபட்டவை என்பதையும் விளக்கிக் காட்டினார். இவ்வொளி நிரல் ஒளி ஆராய்ச்சிக்கே அடிப்படையாக விளங்குகிறது.

1668 ஆம் ஆண்டில் நியூட்டன் எம்.ஏ பட்டம் பெற்றார். கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழக உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப் பெற்றார். அடுத்த ஆண்டில் அப்பல்கலைக்கழகத்தின் கணிதப் பேராசிரியராக நியமிக்கப்பட்டார். 1672 ஆம் ஆண்டில் அரசர் கழகத்தின் உறுப்பினராகவும் தேர்ந்தெடுக்கப் பெற்றார்.

நியூட்டன் பொருள்களை ஆராயும்போது தம்மையே மறந்த நிலையில் இருப்பார். ஒருநாள் அவர் குதிரையின் கடிவாளத்தைப் பற்றிக்கொண்டு சென்றபோது குதிரை நழுவிச் சென்றுவிட்டது. ஆனால், கையில் கடிவாளத்தை மட்டும் பிடித்துக் கொண்டே சென்றார். மற்றொரு நாள் முட்டை சமைக்க முற்பட்டபோது உலையில் முட்டைக்குப் பதிலாகத் தம் கைக் கடிகாரத்தையே போட்டுவிட்டார். இங்ஙனம் அவர் இரவா பகலா, வெயிலா மழையா என்று பாராமல் ஆராய்ச்சியிலேயே ஈடுபட்டார்.

நியூட்டன் தாம் கண்டுபிடித்த உண்மைகளையெல்லாம் திரட்டி எழுதி ஒரு நூலாக வெளியிட எண்ணினார். ஒருநாள் அவர் வீட்டில் இல்லாத சமயத்தே ‘டைமண்டு’ என்னும் அவரது நாய் எரியும் மெழுகுவர்த்தியை அவர் எழுதிய தாள்களின் மீது சாய்த்து விட்டது. தாள்கள் யாவும் தணசலுக்கு இரையாயின. நியூட்டன் வீடு திரும்பியதும் நடந்த நிகழ்ச்சியைக் கண்டு ஆறாத் துயரடைந்தார். ஆயினும், தம் ஊமை நண்பனுக்கு ஒரு தீங்கும் செய்யாமல் பொறுத்துக் கொண்டார். பன்னிரண்டு ஆண்டுகள் மீண்டும் தம் ஆய்வுகளைச் செய்து பார்த்து அந்நூலை அச்சாக்கி வெளியிட்டார். இங்ஙனம் அல்லும் பகலும் அயராது பாடுபட்ட அவர்தம் உடல்நலம் குன்றத் தொடங்கியது.

நியூட்டன் மிகச் சிறந்த அறிவியலறிஞராக விளங்கினாலும் கற்றது கைம்மண்ணளவே என்னும் தன்னடக்கத்துடன் இருந்தார். அவர் என்றும் இறையன்பில் திளைப்பவர். உலகில் தோன்றும் விந்தைகள் அனைத்தும் இறைவனின் திருவிளையாட்டே என நம்பினார். அன்பும் அடக்கமும் அவரிடம் பிறவிக் குணங்களாகவே மிளிர்ந்தன. மெய் வருத்தப் பாராமல் பசி நோக்காமல் கருமமே கண்ணாக இருந்தார். முதுமைப் பருவத்திலும் அவர் அரசர் கழகத்துக்குச் சென்று ஆராய்ச்சியில் ஈடுபட்டார். 1727 ஆம் ஆண்டு நியூட்டன் தம் எண்பத்தைந்தாம் அகவையில் பொன்னுடல் நீத்துப் புகழுடம்பு எய்தினார்.

1. சர் ஐஸக் நியூட்டன் அடிகோலியது
   a. தொழில் நுட்ப வளர்ச்சிக்கு
   b. அறிவியல் வளர்ச்சிக்கு
   c. கலை வளர்ச்சிக்கு
   d. மொழி வளர்ச்சிக்கு

2. நியூட்டனின் குழந்தைப் பருவத்தில் இறந்தது யார் ?
   a. இருவரும்
   b. அப்பா
   c. அம்மா
   d. பாட்டி

3. நியூட்டன் முதல் மாணவராக விளங்கியது எப்பாடத்தில் ?
   a. கணக்கு
   b. கைத்தொழில்
   c. ஆங்கிலம்
   d. அறிவியல்

4. ஒளி ஆராய்ச்சிக்கு அடிப்படையாக நியூட்டன் எதைப் பயன்படுத்தினார்
   a. காற்றாடி
   b. இருட்டறை
   c. காற்று
   d. முப்பட்டைக் கண்ணாடி

5. கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் நியூட்டன் ஏற்ற பதவி
   a. விஞ்ஞானி
   b. கணிதப் பேராசிரியர்
   c. ஆராய்ச்சியாளர்
   d. அறிவியலாசிரியர்

6. நியூட்டன் எப்போது புவிஈர்ப்பு விசையைக் கண்டுபிடித்தார் ?
   a. எம்.ஏ. பட்டம் பெற்றவுடன்
   b. பள்ளியில் படிக்கும்போது
   c. பள்ளிப்படிப்பிற்கும் கல்லூரிப்படிப்பிற்கும் இடையில்
   d. கணிதப் பேராசிரியராகப் பணியாற்றும்போது

7. நியூட்டனின் முப்பட்டைக் கண்ணாடி ஆராய்ச்சி
   a. வானவில்லின் நீளத்தை அளக்க உதவியது
   b. வானவில்லின் நிறத்தை அறிய உதவியது
   c. வானவில்லின் வேகத்தை அறிய உதவியது
   d. வானவில்லின் கனபரிமாணத்தை அறிய உதவியது

8. இவ்வுரைப் பகுதியில் ‘டைமண்டு’ என்பது எதைக் குறிக்கிறது ?
   a. நாயின் பெயர்
   b. குதிரையின் பெயர்
   c. கடிகாரத்தின் பெயர்
   d. இயந்திரத்தின் பெயர்

9. ‘ஊமை நண்பன்’ எனக் குறிக்கப்படுவது எது ?
   a. நாய்
   b. குதிரை
   c. வால்மீன்கள்
   d. கடிகாரம்

10. நியூட்டன் தன் ஆராய்ச்சிகளை மீண்டும் எத்தனை ஆண்டுகள் செய்தார் ?
   a. பதினைந்து
   b. பத்து
   c. பன்னிரெண்டு
   d. மூன்று

VIII. சுப்பிரமணிய சிவா வீரம் செறியும் பேச்சாளர். எடுத்ததை இனிதே முடிக்கும் செயல் வீரர். அவரது தீரச் செயல்கள் அன்னிய ஆட்சியாளரைக் கதிகலங்கி அடித்தன. அவரது வீரம் மராட்டிய மாவீரன் சிவாஜியை நினைவுப்படுத்தும். அவரது சமய மறுமலர்ச்சிப் பணி சுவாமி விவேகானந்தரை நினைக்கத் தூண்டும். அவரது நாட்டுப் பற்று திலகர் பெருமானுக்கு இணையானவர் அவர் என்பதை எடுத்துக் காட்டும். 1908 - ஆம் ஆண்டிலேயே இந்திய நாடு முழுஉரிமை பெறவேண்டும் என்பதே எனது லட்சியம் என்று முழங்கியவர் அவர். அவரது துறவிக்கோலமும் துடிதுடிப்புப் பேச்சும், சமயக் கருத்துக்களைத் தேசிய வீரக்கனலாக்கிய அதிசயத் திறனும் துணிவும் தமிழ்நாட்டில் தேசிய உணர்ச்சி வெள்ளத்தைத் தோற்றுவித்தன.

மதுரை மாவட்டத்தில் வத்தலக்குண்டு என்ற ஊரில் 1884 - ஆம் ஆண்டு அக்டோபர்த் திங்கள் 14- ஆம் நாளன்று சிவா பிறந்தார். மதுரை நகரில் சேதுபதி உயர்நிலைப்பள்ளியில் படித்தார். குடும்பத்தினர் வறுமை மிகுந்து திருவனந்தபுரம் சென்றார்கள். அங்கு அவர் தொடர்ந்து படித்தார். பள்ளியில் படித்த காலத்தில் இலக்கிய அறிவைத் திறம்பட வளர்த்துக் கொண்டார். பள்ளியில் மன்றங்கள் அமைத்துச் செயலாளராகப் பணியாற்றினார். நல்ல உடற்கட்டு வாய்ந்து துணிவு மிக்கவராகவும் விளங்கினார். பாரதியாரைப் போல அவர் மீசை வைத்துக் கொண்டார்.

1906-ஆம் ஆண்டில் வங்காளப் பிரிவினையை எதிர்த்து நாடு முழுவதும் கிளர்ச்சி நடந்தது. திலகர் கடுங்காவல் தண்டனை பெற்றார். லாலா லஜபதிராய் நாடு கடத்தப்பட்டார். விபின் சந்திரபாலர் சிறை புகுந்தார். வடக்கே வீசிய தேசிய அலைகள் தெற்கே வந்து மோதின. சுப்பிரமணிய சிவா தேசிய இயக்கத்தில் இரண்டறக் கலந்து விட்டார்.

திருவனந்தபுரத்தில் "தர்ம பரிபாலன சமாஜம்" என்ற அமைப்பை ஏற்படுத்தி அதன் சார்பில் அரசியல் கூட்டங்களை நடத்தினார். உடைகளில் "வந்தே மாதரம்" என்று நூலால் இழையோடச் செய்தார். கால்நடையாகவே கிராமம் கிராமமாகச் சென்று கூட்டங்களில் பேசினார். ஒரு வேட்டி, சட்டை, தலைப்பாகை, கைத்தடி இவையே அவரது உடைமைகள். திருநெல்வேலி மாவட்டம் முழுவதும் சிவாவின் சிம்மக்குரல் முழங்கியது. தூத்துக்குடியில் வ.உ. சிதம்பரனாரும் சிவாவும் சந்தித்தார்கள். நெருப்பும் காற்றும் போல அவர்கள் இருவரும் இணைந்தார்கள். அதே சமயம் பாரதியாரும் சென்னையிலிருந்து தூத்துக்குடி வந்திருந்தார். சிவாவும் பாரதியாரும் சந்தித்தார்கள். சிவாவின் வீரத்தைக் கண்டு பாரதியார் சிவாவை 'சிவாஜி' என்று பட்டம் சூட்டிப் பாராட்டினார்.

சுதேசி இயக்கத்தின் வியப்புக்குரிய வளர்ச்சியைக் கண்ட அன்னிய ஆட்சியாளர் வ.உ. சிதம்பரனார், சுப்பிரமணிய சிவா ஆகிய இருவர் மீதும் வழக்குத் தொடர்ந்தார்கள். இருவர் மீதும் இராஜதுரோக வழக்குத் தொடரப்பட்டது.

சிவா, திருச்சிச் சிறையில் அடைக்கப்பட்டார். அங்கு கம்பளிமயிர் வெட்டும் மிகக் கடுமையான வேலை சிவாவுக்குத் தரப்பட்டது. கம்பளிமயிரைச் சுண்ணாம்பில் ஊறப்போட்டுக் காயவைத்து வெட்ட வேண்டும். வெட்டும்போது சுண்ணாம்புத் தூசு சிதறி உடல்மீது படியும். பயில்வான் போல இருந்த சிவாவின் உடல் இந்தக் கடின வேலையால் மெலிந்தது. சிவா சிறையை விட்டு வெளியேறிய பின்னரும் சிறைவாசத்தின் வெளி அடையாளமாகக் கடும் தொழுநோயைப் பரிசாகப் பெற்று வாழ்நாள் முழுவதும் வருந்தினார்.

சுப்பிரமணிய சிவா, திலகர் பெருமானிடம் மிகுந்த ஈடுபாடு கொண்டவர். ஒவ்வோர் ஆண்டும் திலகரின் பிறந்த நாளைச் சிறப்பாகக் கொண்டாடுவார். திருவல்லிக்கேணிக் கடற்கரைக்கு "திலகர் கட்டம்" என்றும் பெயரிட்டுக் கூட்டம் நடத்தியவர் அவரே. சிவா, தொழிலாளர் இயக்கங்களிலும் பங்கு கொண்டார். 1920 -ஆம் ஆண்டின் 'டிராம்' வண்டித் தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தின்போதும், மதுரை 'ஹார்வி' பஞ்சாலைத் தொழிலாளர் வேலை நிறுத்தத்தின்போதும் சிவா அரிய பணியாற்றினார்.

இவ்வாறு அல்லும் பகலும் தாய்த்திரு நாட்டின் விடுதலைக்காக அயராது அரும்பாடுபட்ட தியாகச் செம்மல் சிவா 1925-ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 28- ஆம் நாளன்று தமது நாற்பத்தோராம் வயதில் அமரரானார்.

மாணவர்களே ! சற்று சிந்தியுங்கள். ஒரு பக்கம் கடும்பிணி; மற்றொரு பக்கம் வறுமை; அன்னியராட்சியின் அடக்குமுறைக் கொடூரம்; இவ்வளவையும் சகித்துக் கொண்டு சிவா அயராமல் உழைத்தார். நாடு விடுதலை பெற வேண்டும் என்று முழக்கமிட்டார். இளைஞர்களிடையே நாட்டுப்பற்றை வளர்த்தார். அவரைப் போன்ற தேசியத் தொண்டர்களின் அடிச்சுவட்டில் ஒவ்வொருவரும் தேசியப் பற்றுடன் தொண்டு புரிந்தால் நமது நாடு உலக அரங்கில் சிறந்து விளங்குதல் திண்ணம்.

1. சுப்பிரமணிய சிவா ஒவ்வொருவரும் நினைந்து போற்றிப் பின்பற்ற வேண்டிய ஒரு தேசியத் தொண்டர் : ஏனென்றால்,

   a. அவர் பாரதியாரைப் போல மீசை வைத்துக் கொண்டார்.

   b. பள்ளியில் படித்த காலத்தில் இலக்கிய அறிவைத் திறம்பட வளர்த்துக் கொண்டார்.

   c. மதுரை நகரில் சேதுபதி உயர்நிலைப் பள்ளியில் படித்தார்.

   d. அல்லும் பகலும் தாய்த் திருநாட்டின் விடுதலைக்காக அயராது பாடுபட்டார்.

2. சிவா திருச்சிச் சிறையில் அடைக்கப்பட்டார் ; அங்கு கம்பளி மயிர் வெட்டும் மிகக் கடுமையான வேலை அவருக்குத் தரப்பட்டதன் காரணம்.

   a. சிவா, திலகர் பெருமானிடம் மிகுந்த ஈடுபாடு கொண்டமை.

   b. சிவாவின் வீரத்தைக் கண்டு பாரதியார் ‘சிவாஜி’ என்று பட்டம் சூட்டிப் பாராட்டியமை.

   c. சுதேசி இயக்கத்தில் சிவா இரண்டறக் கலந்ததால், அன்னிய ஆட்சியாளர் இராஜத்துரோக வழக்குத் தொடர்ந்தமை.

   d. சிவா டிராம் வண்டித் தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தின் போது அரிய பணியாற்றியமை.

3. சிவாவின் லட்சியம் -

   a. மதுரை ‘ஹார்வி’ பஞ்சாலைத் தொழிலாளர் வேலை நிறுத்தம்.

   b. அன்னியராட்சியின் அடக்குமுறைக் கொடூரத்தை சகித்துக் கொள்ளுதல்.

   c. இந்திய நாடு முழு உரிமை பெறவேண்டும்.

   d. தர்ம பரிபாலன சமாஜத்தின் சார்பில் அரசியல் கூட்டங்களை நடத்துவது.

4. வ.உ. சிதம்பரனாரும், சிவாவும் சந்தித்து நெருப்பும் காற்றும் போல இணைந்த இடம்-
   a. வத்தலக்குண்டு
   b. தூத்துக்குடி
   c. சென்னை
   d. மதுரை

5. சிறையை விட்டு வெளியேறிய பின்னரும் சிறைவாசத்தின் வெளி அடையாளமாகச் சிவாவுக்குக் கிடைத்தது யாது ?
   a. கடும் தொழுநோய்.
   b. தொழிலாளர் இயக்கங்களில் பங்கு.
   c. அரிய பரிசு.
   d. கூட்டங்களில் புகழ்சசி.

6. அன்னிய ஆட்சியாளர் வ.உ. சிதம்பரனார், சுப்பிரமணிய சிவா ஆகிய இருவர் மீதும் இராஜத்துரோக வழக்குத் தொடர்ந்தனர். ஏனெனில்,
   a. திருவனந்தபுரத்தில் 'தர்ம பரிபாலன சமாஜம்' என்ற அமைப்பை ஏற்படுத்தி அதன் சார்பில் அரசியல் கூட்டங்களை நடத்தினார்.
   b. வ.உ. சிதம்பரனாரும் சிவாவும் நெருப்பும் காற்றும் போல இணைந்தார்கள்.
   c. சுதேசி இயக்கத்தின் வியப்புக்குரிய வளர்ச்சிக்கு வ.உ.சி.யும், சிவாவும் காரணமாக இருந்தனர்.
   d. வ.உ.சி.யும், சிவாவும் திலகர் பெருமானிடம் பேரன்பு கொண்டவர்கள்.

7. 1906- ஆம் ஆண்டு வங்காளப் பிரிவினையை எதிர்த்து நாடு முழுவதும் கிளர்ச்சி நடந்தபோது நிகழ்ந்தது யாது ?
   a. திருநெல்வேலி மாவட்டம் முழுவதும் சிவாவின் சிம்மக்குரல் முழங்கியது.
   b. சிவாவின் குடும்பத்தினர் வறுமை மிகுந்து திருவனந்தபுரம் சென்றார்கள்.
   c. சிவா பள்ளியில் மன்றங்கள் அமைத்துச் செயலாளராகப் பணியாற்றினார்.
   d. திலகர் கடுங்காவல் தண்டனை பெற்றார்; லாலா லஜபதி ராய் நாடு கடத்தப்பட்டார் ; விபின் சந்திர பாலர் சிறை புகுந்தார்.

8. ஒரு வேட்டி, ஒரு சட்டை, தலைப்பாகை, கைத்தடி - இவையே சிவாவின் உடைமைகள். ஏனெனில்,
   a. அவர் ஏழை.
   b. அவர் சிறையில் அடைக்கப்பட்டார்.

c. அவர் ஆடம்பரங்களைத் தேடிக் கொள்ளாத உண்மையான தேசியத் தொண்டராயிருந்தார்.

d. சமய மறுமலர்ச்சிப் பணியில் விவேகானந்தரைப் போல இருந்தார்.

9. கடும்பிணி, வறுமை, அன்னியராட்சியின் அடக்குமுறை கொடூரம் - இவ்வளவையும் சகித்துக் கொண்டு சிவா அயராமல் உழைத்தார். காரணம்,

a. அரசியல் ஆதாயம் தேடியமை

b. செல்வந்தர் ஆகவேண்டும் என்னும் ஆசை

c. விடுதலைப் போராட்ட வீரர் என்ற சிறப்புப் பெயர் பெறும் விருப்பம்

d. நாடு முழு விடுதலை பெறவேண்டும் என்ற இலட்சியம் கொண்டிருந்தமை

10. வ.உ.சி.யும், சிவாவும் ‘நெருப்பும் காற்றும் போல’ இணைந்தார்கள் என்பதன் பெருள்-

a. நெருப்பும் காற்றும் போல அழித்தார்கள்.

b. நெருப்பும் காற்றும் போல பெரும் சக்தியாக மாறிச் சுதேசி இயக்கத்தை வளர்த்தார்கள்.

c. காற்று வீசியதும் அணைந்த நெருப்பைப் போல அமைதியானார்கள்.

d. காற்றினால் அலைக்கழிக்கப்படும் நெருப்புப் போல தாறுமாறாய்க் கொள்கையில்லாமல் அலைந்தார்கள்.

11. வடக்கே வீசிய ‘தேசிய அலைகள்’ என்பதன் பொருள்.

a. சமய மறுமலர்ச்சிச் சிந்தனைகள்

b. இலக்கியச் சிந்தனைகள்

c. நாட்டு விடுதலைப போராட்டச் சிந்தனைகள்

d. பிரிவினைச் சிந்தனைகள்.

IX. முன்னொரு காலத்தில் கொங்கு நாட்டில் உள்ள ஒரு சிற்றூரில் ஓர் ஏழைக் குடியானவர் வாழ்ந்து வந்தார். அவருக்குக் கொஞ்சம் நிலம் சொந்தமாக இருந்தது. அவருக்கு இரு மகன்கள் இருந்தனர். அக்குடியானவர் கடினமாக உழைத்துத் தன் குடும்பத்தைக் காப்பாற்றி வந்தார். தன் கடினமான உழைப்பால் ஓரளவு சொத்தும் சேர்த்தார். அவருக்கு அதிக வயதானதால், முன்னைப் போல் வேலை செய்ய முடியவில்லை. அதனால் தன் சொத்துக்களை தன் மகன்களுக்குப் பிரித்துக் கொடுக்க எண்ணினார். ஒருநாள் தன் இருமகன்களையும் தன் அருகில் அழைத்து, ‘நீங்களிருவரும் எப்படி வாழ எண்ணியுள்ளீர்கள்’ என்று கேட்டார்.

மூத்த மகன் ‘நான் வெளியில் ஏதேனும் வேலை வாங்கி அதில் கிடைக்கும் ஊதியத்தை வைத்துக் கொண்டு வாழலாம்’ என எண்ணியுள்ளதாகக் கூறினான். ஆனால்

இளையமகனோ தான் கற்ற கல்வியைக் கொண்டு கிராமத்திலுள்ள மக்களுக்குக் கல்வி புகட்டுவதோடு, நம் வயலையும் நன்கு கவனித்து வாழலாம் எனக் கருதுவதாகச் சொன்னான். இருமகன்களின் பதிலைக் கேட்ட தந்தை பெரு மகிழ்ச்சி அடைந்தார். சொத்து மீது ஆசை கொள்ளாமல் தங்கள் உழைப்பால் வாழ விரும்புவதை எண்ணிப் பெருமிதம் கொண்டான்.

தந்தை "சரி, நீங்களிருவரும் நாளை என்னை வந்து பாருங்கள்" என்று அவர்களிடம் கூறினார். மறுநாள் பெரியவர், தன் மூத்த மகனை அழைத்து அவனுக்குத் தன்னிடமிருந்த பணத்தைக் கொடுத்து, "நீ உன் விருப்பம் போல் வாழ்ந்து கொள். கஷ்டப்பட்டுச் சேர்த்த பணம் மிகக் கவனமாக இரு" எனக் கூறினார். பின்னர் தன் இளையமகனுக்குத் தன்னுடைய நிலத்தைக் கொடுத்து, "நீ நன்கு வேளாண்மை செய்து எல்லாருக்கும் உதவுவாயாக" எனச் சொன்னார்.

1. குடியானவனுக்கு சொந்தமாக இருந்தது எது?
   a. சிற்றூர்
   b. மக்கள்
   c. ஏழ்மை
   d. நிலம்

2. யார் வெளியே வேலை பார்க்க விரும்பினார்கள் ?
   a. மூத்த மகன்
   b. இளைய மகன்
   c. குடியானவன்
   d. மக்கள்

3. மூத்த மகனுக்குத் தந்தை எதைக் கொடுத்தார்.
   a. நிலம்
   b. ஊர்
   c. பணம்
   d. கல்வி

4. தந்தை இளையமகனுக்கு நிலத்தைக் கொடுக்கக் காரணம்-
   a. இளையமகன் வயதான காலத்தில் தன்னைப் பாதுகாப்பான் என்று எண்ணியமை
   b. மூத்த மகனுடன் வாழ விரும்பாமை

c. தன்னைப் போல் இளைய மகன் வேளாண்மை செய்ய விரும்புதல்

d. மூத்த மகன் வெளியூருக்குச் சென்றமை

5. இளையமகன் விவசாயம் செய்ய எண்ணிய காரணம் ?

a. பிறருக்கு அடிமையாக வாழ எண்ணாமை

b. சோம்பேறியாக வாழ எண்ணாமை

c. யாருக்கும் அடிமையாக வாழாமல் எல்லோருக்கும் பயன்படும் வழியில் வாழ விரும்பியமை

d. நன்கு ஓய்வு கிடைக்கும் என நினைத்தமை.

6. இளைய மகன் கிராம மக்களுக்குக் கல்வி புகட்ட விரும்பியதின் காரணம் யாது ?

a. அரசன் அறிவாளியாக இருந்தமை.

b. மக்கள் அறிவில்லாமல் கஷ்டப்பட்டுக் கொண்டிருத்தல்

c. தன் அண்ணன் கல்வி கற்க விரும்புதல்

d. தான் கற்க விரும்பாமை.

7. எது அழியாத செல்வம் ?

a. பணம்

b. கல்வி

c. நிலம்

d. உயிர்

8. "வேளாண்மை" என்பது

a. வயலில் உழுது பயிர் செய்வது

b. வயலை விற்பதும் வாங்குவதும்

c. அரசனிடம் வேலைபார்ப்பது

d. பிறருக்காக வாழ்வது

9. குடியானவன் = _______________

a. விவசாயி

b. தொழிலாளி

c. குடியுள்ளவன்

d. கல்வியாளன்

10. மூத்த X ___________

a. பெரிய

b. வயதான

c. இளைய

d. வயதில்லாத

X. நாம் வாழும் பூமி என்பது ஒரு கோள். அஃது உருண்டை வடிவமானது; நிலம், நீர், வாயு என்னும் திடப்பொருள், திரவப்பொருள், வாயுப்பொருள் என்பவைகளால் அமைந்தது. அது சூரியனது குடும்பத்தைச் சேர்ந்தது. சூரியனைச் சுற்றிச் சுழன்று வருகிறது. அதைப் போலவே, சூரியக் குடும்பத்தைச் சார்ந்த கோள்கள் பிறவும் சூரியனைச் சுற்றி வருகின்றன. சூரியன் என்பது ஒரு விண்மீன்; அது பூமியை விட மிகமிகப் பெரியது; அதைவிடப் பெரியனவும் அதை ஒத்தனவும், அதைவிடச் சற்றே சிறியனவுமான கோடிக்கணக்கான விண்மீன்கள், 'அண்டம்' என்னும் நமது பிரபஞ்சத்தில் அடங்கியுள்ளன. நமது அண்டத்தைப் போன்ற கோடிக்கணக்கான வேறு பல அண்டங்களும் பேரண்டம் என்று சொல்லத்தகும் 'அகில பிரபஞ்ச'த்தில் அடங்கியுள்ளன. கோடானு கோடிக்கணக்கான அத்தனை பிரபஞ்சங்களும் அவற்றின் உள்ளே அடங்கிய மற்றவை அனைத்தும் நமது மனத்தைத் திகைக்கச் செய்யும் மாபெரும் விரிவை உடையதும், எல்லையற்றதாகத் தோன்றுவதுமான விண்வெளியில் இயற்கை ஆற்றல்களின் ஆட்சிக்கு உட்பட்டு, அந்த ஆற்றல்களுக்கு உரிய தனி முறைகளின்படி இயங்கி வருகின்றன.

1. பூமி ஒரு

a. திடப்பொருள்

b. கோள்

c. வடிவம்

d. குடும்பம்

2. திடப்பொருள், திரவப்பொருள், வாயுப்பொருள் என்பவை

a. விண்மீன், சூரியன், சந்திரன்.

b. அண்டம், பிரபஞ்சம், பேரண்டம்.

c. தண்ணீர், வெந்நீர், குளிர்ந்த நீர்காற்று.

d. நிலம், நீர், வாயு.

3. நிலம், நீர், வாயு என்னும் பொருள்கள்

a. பூமியைச் சேர்ந்தவை.

b. விண்வெளியில் நிறைந்துள்ளவை.

c. நமது அண்டங்கள் எங்கும் நிறைந்துள்ளவை.

d. ஒவ்வொருவரது வாழ்விற்கும் தேவையானவை.

4. சூரியக் குடும்பம் என்னும் பெயர்வரக் காரணம்

a. திடப்பொருளாக இருப்பதால்

b. சூரியனைச் சுற்றி வருவதால்

c. சூரியன் பூமியை விடப் பெரிதாக இருப்பதால்

d. வாயுப் பொருளாக இருப்பதால்

5. சூரியன் என்பது

a. அண்டம்

b. குடும்பம்

c. விண்மீன்

d. பிரபஞ்சம்

6. ஆற்றல் X ___________

a. அதிகாரம்

b. உழைப்பு

c. வீரம்

d. சக்தி

7. விண்வெளியில் நிறைந்திருப்பது எது ?

a. பல கோள்கள்

b. இயற்கை ஆற்றல்களின் ஆட்சி

c. சூரியனைச் சுற்றியுள்ள விண்மீன்கள்

d. சூரியன்

8. அகிலப் பிரபஞ்சம் என்பது

a. சூரியக் குடும்பம்

b. பூமியும் சூரியனும்

c. பலகோள்கள்

d. கோடிக்கணக்கான அண்டங்கள்

XI. சைவமும் வைணவமும் தமிழகத்தின் பழம் பெரும் சமயங்கள். சங்ககால இறுதியில் வேற்றரசர்களின் ஆட்சியால் இவ்விரண்டும் தமிழகத்தில் செல்வாக்கிழந்தன. பௌத்தமும் சமணமும் செல்வாக்குப் பெற்றன. இந்நிலையில் தமிழகத்தின் அருமறைச் சமயங்கள் தழைத்தோங்கச் சைவ நாயன்மார்கள் நால்வரும் வைணவ ஆழ்வார்கள் பன்னிரண்டுபேரும் தோன்றிச் சைவத்தையும் வைணவத்தையும் நாடெங்கும் பரப்பினர். அவர்களது பண்சுமந்த பாடல்கள் தமிழகத்தின் மூலை முடுக்கெல்லாம் பரவியது. சைவ வைணவ சமய உணர்வு புதுப்பிக்கப்பட்டது.

சைவத் திருவருள் திறத்தினை நினைந்து வியந்து திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர் ஆகிய மூவரும் பாடிய பதிகப்பாமாலைகளைத் ‘தேவாரம்’ என்று போற்றுவர். இறைவனிடம் தம் குறை தீர்க்க வேண்டி முறையிட்டுப் பாடிய பாடல்களாதலின் தேவாரம் முதலிய சைவ இலக்கியங்களைத் ‘திருமுறைகள்’ என்பது வழக்கு. மூவர் தேவாரமும் சைவத் திருமுறைகளுள் முதல் ஏழு திருமுறைகளாக வகுக்கப்பட்டுள்ளன. மாணிக்கவாசகரின் திருவாசகமும், திருக்கோவையாரும் எட்டாம் திருமுறையாகும். ‘திருவாசகத்திற்கு உருகார் ஒரு வாசகத்திற்கும் உருகார்’ என்னும் பழமொழி இந்நூற் பாடல்களின் உருக்கத்தைப் புலப்படுத்தும்.

ஒன்பதாம் திருமுறையான திருவிசைப்பாவும், திருப்பல்லாண்டும் தோத்திரப் பதிகங்களே. திருமூலர் வழங்கிய திருமந்திரம் பத்தாம் திருமுறையாகும். பதினோராம் திருமுறையில் ‘திருவாலவாயுடையார் திருமுகப்பாசுரம் முதலாக நாற்பது பிரபந்தங்கள் உள்ளன. இது பற்றியே இதற்குப் ‘பிரபந்தமாலை’ என்று ஒரு பெயரும் உண்டு. இந்தப் பதினொரு திருமுறைகளையும் தொகுத்து அளித்தவர் நம்பியாண்டார் நம்பி என்பவராவார். சேக்கிழார் பாடிய ‘பெரியபுராணம்’ என வழங்கும் ‘திருத்தொண்டர்புராணம்’ அறுபத்துமூன்று நாயன்மார்களின் வரலாற்றைச் சிறப்பாக எடுத்துக் கூறுகிறது. சிவனடியார் பக்தித்திறம் உரைக்கும் இப்பெருநூல் பின்னால் பன்னிரண்டாம் திருமுறையாகப் போற்றப்பட்டது.

1. தமிழகத்தின் பழம்பெரும் சமயங்கள்
   a. சைவமும் பௌத்தமும்
   b. வைணவமும் சமணமும்
   c. சைவமும் வைணவமும்
   d. சமணமும் பௌத்தமும்

2. சைவத்திற்குப் புத்தொளி தந்தவர்கள்
   a. சிவபெருமான்
   b. ஆழ்வார்கள்
   c. வேற்றரசர்கள்
   d. நாயன்மார்கள்

3. சைவத் திருமுறைகள் எவ்வாறு வெளிப்படுத்தப்பட்டன ?

   a. நம்பியாண்டார் நம்பியால் தொகுக்கப்பட்டன
   b. சைவசமயத்தைப் பற்றிய கதைகளாகக் கூறப்பட்டன
   c. திருமுறைகள் என்னும் தோத்திரப் பாடல்களாகப் பாடப்பெற்றன.
   d. சேக்கிழாரால் வெளிப்படுத்தப்பட்டன.

4. பதிகப் பாமாலைகளின் பெயர் யாது ?

   a. பிரபந்தம்
   b. தேவாரம்
   c. திருக்கோவையார்
   d. திருவிசைப்பா

5. தேவாரம் முதலிய சைவ இலக்கியங்கள் திருமுறைகள் எனக் குறிக்கப்படுவது

   a. தெய்வத் தன்மை உடைய முறைகள் என்பதால்
   b. இறைவனிடம் தம் குறைதீர்க்க வேண்டி முறையிட்டுப் பாடியதால்
   c. பாடல்களின் உருக்கத்தைப் புலப்படுத்துவதால்
   d. முறையாகத் தொகுக்கப்பட்டமையால்

6. சிவனடியார் பக்தித்திறம் உரைக்கும் நூல்

   a. திருப்பல்லாண்டு
   b. திருமுகப்பாசுரம்.
   c. திருத்தொண்டர்புராணம்.
   d. திருமந்திரம்.

7. திருமுறைகள் என்பதன் பொருள்

   a. சைவஇலக்கியப் பாடல்களின் தொகுப்பு
   b. தோத்திரப் பதிகங்களின் தொகுப்பு
   c. தேவாரப் பாடல்களின் தொகுப்பு
   d. கதைப் பாடல்களின் தொகுப்பு

8. சைவமும் வைணவமும் தழைத் தோங்கியது

   a. நாயன்மார்களால்
   b. தமிழக அரசர்களால்
   c. ஆழ்வார்களால்
   d. நாயன்மார் ஆழ்வார்கள் முயற்சியால்

XII. எந்தப் பணி எனக்கு எழுச்சியும் இனிப்பும் தந்து வந்ததோ, எந்தப் பணியிலே நான் ஆண்டு பலவாக மிக்க மகிழ்ச்சியுடன் ஈடுபட்டு வந்திருந்தேனோ, எந்தப்பணி மூலம் என்னை உன் அண்ணனாக நீ உள்ளன்புடன் ஏற்றுக்கொண்டு பெருமிதத்துடன் உலகுக்கு அறிவித்து வந்தனையோ, எந்தப் பணி வாயிலாக என் கருத்துகளின் வெற்றிகரமான வழிகளைக் காணமுடிந்ததோ, எந்தப் பணி மூலம் தமிழகரவும் தமிழ்ப் பண்பை நுகரவும் வழி கிடைத்து வந்ததோ, எந்தப் பணி மூலம் எப்போதும் உன் இதயத்தில் எனக்கு ஓர் இடம் கிடைத்து, அது குறித்து நான் அளவற்ற அகமகிழ்ச்சி பெற முடிந்ததோ அந்தப் பணியினை முன்புபோல செய்ய முடியாதவனாக்கப்பட்டுச் 'சூழ்நிலையின் கைதி'யாக்கப்பட்டுக் கிடக்கிறேன் என்பதனை அறிவாய். 'சூழ்நிலையின் கைதி' என்ற தொடருக்குத்தான் முதலமைச்சர் என்று பெயரிட்டிருக்கிறார்கள்.

இப்போதெல்லாம் பல பிரச்சினைகள் பற்றிய கருத்துகளை அறிக்கைகள், சொற்பொழிவுகள், சட்டமன்ற உரைகள் மூலம் நாட்டுக்குத் தந்துவிடமுடிகிறது. தனிமையாக உன்னிடம் உரையாடி மகிழ்ந்திட என்று நான் வகுத்துக் கொண்ட 'கிழமைக் கடிதம்' எழுதிட இயலவில்லை. இன்று எப்படியும் எழுதுவது - ஆண்டுக்கு ஒரு நாள் - அருமைமிகு நாள் - பொங்கற் புதுநாள் - அதற்காக வெளிவரும் மலரில் எப்படியும் எழுதவேண்டும் என்று எண்ணிக்கொண்டு ஏடெடுத்தேன் எழுத.

உலக நாடுகள் பலவற்றின் தலைநகரங்களை ஒரு முறைக்கு மும்முறை கண்டுவந்தேன். அங்கு எங்கும் விழாக்கள் நடத்தப்படினும் தமிழகத்தில் நடப்பது போன்றதொரு விழா இல்லை, நிச்சயமாக இல்லை. கோலாகல விழாக்கள் உள்ளன; பரபரப்பூட்டும் விழாக்கள் நடத்தப்படுகின்றன. கேளிக்கைகள் - மதுபான வகைகள் மிகுதியாக. எனினும் ஆர்ப்பரிப்பின்றி, ஆனால் அகமகிழ்ச்சியுடன் போலிப் பூச்சின்றி, ஆனால் புதியதொரு பொலிவுடன் வீட்டில் உள்ள அனைவரும் கலந்துரையாடி மகிழ்ந்திருக்கும் நமது பொங்கல் புதுநாளுக்கு ஒப்பான விழா அங்கு எங்கும் இல்லை.

நாட்டியக் கூடங்களில் அமளி ! பாதைகளிலே புதுவேகம்!! மோதல்! உயிர்ச்சேதம்! அங்காடிகளிலே ஆரவாரம்! இவையெல்லாம் ஏராளமான அளவு. ஆனால் இங்கு வீடுதோறும் எழுகிறதே ? முதியவரும் மூதாட்டியரும் இளைஞரும் இள நங்கையரும் சிறாரும் சிறுமியரும் கலந்து எழுப்பும் 'பொங்கலோ! பொங்கல்!!' எனும் இசை அங்கு எங்கும் இல்லை ; இருந்திடத்தக்க விதமான சமூக அமைப்பே இல்லை.

1. ஆசிரியருக்கு இனிப்பும் எழுச்சியும் தந்த பணி எது ?
   a. அறிக்கை வெளியிடுதல்
   b. பத்திரிகையில் எழுதுதல்
   c. பொங்கல் விழாக் கொண்டாடுதல்
   d. உலக நாடுகளில் விழாக் காணல்

2. ஆசிரியர் தம்மைச் ‘சூழ்நிலையின் கைதி’ எனக் குறிப்பிட மிகப் பொருத்தமான காரணம் எது ?

   a. முதலமைச்சராக இருப்பது
   b. கிழமைக்கடிதம் எழுத இயலாமை
   c. தாம் வகிக்கும் பொறுப்பால் பல பணிகளைச் செய்ய வேண்டிய நிலை
   d. தாம் நினைத்ததைச் செய்ய இயலவில்லையே என்ற ஏக்கம்.

3. மேற்காட்டிய உரைநடைப் பகுதியில் எடுத்தாளப்பட்ட கீழ்க்கண்ட சொல் அல்லது சொற்றொடர் இணைகளில் எது ஒரே பொருளைத் தருகிறது ?

   a. அங்கு , எங்கு
   b. அறிக்கை, சொற்பொழிவு
   c. நிலம், இல்லம்
   d. முதலமைச்சர், சூழ்நிலையின் கைதி

4. மேற்காட்டிய உரைநடைப் பகுதியில் ஆசிரியரால் எது சிறப்பித்துக் கூறப்படுகிறது ?

   a. ஒரு பணியின் சிறப்பு
   b. ஆசிரியர் பணியில் உள்ள தொல்லைகள்
   c. பொங்கல் புதுநாள்
   d. கோலாகல விழாக்கள்

5. ஆசிரியர் தமிழகத்தை விரும்பக் காரணம் யாது ?

   a. கிழமைக் கடிதம் எழுத வாய்ப்பு இருத்தல்
   b. தமிழகத்தில் விழாக்கள் நடைபெறுதல்
   c. தமிழகத்தில் விழாக்கள் கோலாகலமாக நடைபெறுதல்
   d. தமிழகத்தில் அனைவரும் கலந்து மகிழும் நிகழ்ச்சியாக விழாக்களை அமைத்தல்

6. ஆசிரியர் அளவற்ற அக மகிழ்ச்சி பெறக் காரணம்.

   a. கிழமைக் கடிதம் எழுதுதல்
   b. அவர் தமிழ்ப் பண்பை நுகர்ந்து அனுபவித்தல்
   c. உலக நாடுகளில் சுற்றுப் பயணம் செய்தல்
   d. அவர் முதலமைச்சராக இருத்தல்

7. வெளிநாட்டில் விழாக் காலங்களில் மிகுதியாகக் காணப்படுவது.

   a. கலந்துரையாடுதல்

   b. ஆரவாரம்

   c. மலர் வெளியீடு

   d. பெரும் மகிழ்ச்சி

8. தமிழ்நாட்டில் நடப்பது போன்றதொரு விழாச்சிறப்பு வெளிநாட்டில் இல்லை என்பதன் காரணம்.

   a. பொது மக்கள்

   b. சிறார் சிறுமியர்

   c. சமூக அமைப்பு

   d. கோலாகலம்

Lexical Skill 2
சொல் திறன்

A. Word Meaning
சொற்பொருள்

கொடுக்கப்பட்டுள்ள ஒவ்வொரு அடிக்கோடிட்ட சொற்களின் பொருள் a b c d *என நான்கு தெரிவுகளில் கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றிலிருந்து சரியான விடையைத் தேர்ந்தெடுத்து அதை விடைத்தாளில் எழுதுக / வட்டமிட்டுக் காட்டுக.*

1. கருவூலம் என்பதன் பொருள்
    a. பொருள் சேர்த்து வைக்கும் வங்கி
    b. அறிவு வளர்க்கும் கல்வி நிலையம்
    c. நூல்கள் சேர்த்து வைக்கும் நூலகம்
    d. பணம் சேர்த்து வைக்கும் இடம்

2. திரவியம் என்பதன் பொருள்
    a. நிலம்
    b. செல்வம்
    c. வாசனைப் பொருள்
    d. நகை

3. கழனி என்பதன் பொருள்
    a. தோட்டம்
    b. கிராமம்
    c. ஊர்
    d. வயல்

4. பீடு என்பதன் பொருள்
    a. மகிழ்ச்சி
    b. பெருமை
    c. ஆனந்தம்
    d. ஆசை

5. <u>உன்னதம்</u> என்பதன் பொருள்
   a. மேன்மை
   b. சீர்மை
   c. வன்மை
   d. எளிமை

6. <u>ஈரம்</u> என்பதன் பொருள்
   a. கருணை
   b. பாசம்
   c. அன்பு
   d. காதல்

7. <u>சால</u> என்பதன் பொருள்
   a. பல
   b. மிகவும்
   c. மிகுதி
   d. கூடுதல்

8. <u>தாள்</u> என்பதன் பொருள்
   a. திருமுகம்
   b. திருவடி
   c. திருக்கை
   d. திருமுடி

9. <u>விளி</u> என்பதன் பொருள்
   a. அழை
   b. அடையாளம்
   c. சொல்
   d. அறி

10. <u>ஒழுகு</u> என்பதன் பொருள்
    a. உருகு
    b. இளகு

c. விலகு

d. கசி

11. <u>கேளிர்</u> என்பதன் பொருள்

a. பெற்றோர்

b. ஊரார்

c. உறவினர்

d. நண்பர்

12. <u>கூசு</u> என்பதன் பொருள்

a. நாணு

b. அஞ்சு

c. நடுங்கு

d. அடங்கு

13. <u>பாணர்</u> என்பதன் பொருள்

a. இசைவாணர்

b. புலவர்

c. நாடோடி

d. அறிவிலர்

14. <u>கனன்று கொண்டிரு</u> என்பதன் பொருள்

a. பொங்கிக் கொண்டிரு

b. சுழன்று கொண்டிரு

c. சூடாகிக் கொண்டிரு

d. எரிந்து கொண்டிரு

15. <u>மணவாளன்</u> என்பதன் பொருள்

a. அழகன்

b. பணக்காரன்

c. மணமகன்

d. கணவன்

16. <u>வாரி வழங்குதல்</u> என்பதன் பொருள்

a. வேண்டியதைக் கொடுத்தல்

b. ஏழைக்குக் கொடுத்தல்

c. மிகுதியாகக் கொடுத்தல்

d. கையால் எடுத்துக் கொடுத்தல்

17. சொற்பொழிவு என்பதன் பொருள்

a. சொற்களின் குவியல்

b. சிறப்பாகப் பொருள் தருவது

c. மேடையில் பேசும் பேச்சு

d. ஒருவரோடு ஒருவர் பேசிக் கொள்வது

18. சான்று என்பதன் பொருள்

a. ஏதேனும் ஒன்றைச் சரியானது என்று எடுத்துச் சொல்லப் பயன்படுவது

b. மிகவும் நன்றாகக் காணப்படுவது

c. மற்றொன்று

d. எங்கும் காண முடியாத ஒன்று

19. ஐம்புலன் என்பதன் பொருள்

a. வாழ்வதற்குரிய ஐந்து வகைப்பட்ட தேவைகள்

b. வாழ்வை உயர்த்தும் ஐந்து வழிகள்

c. உடலைப் பாதுகாக்கும் ஐந்து வழிகள்

d. உடலிலுள்ள ஐந்து உறுப்புகள்

20. மன்றம் என்பதன் பொருள்

a. சாவடி

b. பலர் சேர்ந்த ஓர் அமைப்பு

c. மலர்கள் நிறைந்த இடம்

d. விளையாடும் இடம்

21. பகுத்தறிவு என்பதன் பொருள்

a. பலவற்றை அறியும் திறமை

b. எதையும் வெறுக்காத மனநிலை

c. வேறுபடுத்தி அறியும் திறமை

d. வேண்டாதவற்றை நீக்கும் மனப்பான்மை

22. <u>கொற்றம்</u> என்பதன் பொருள்
    a. வெற்றி
    b. கொல்லுப்பட்டறை
    c. போர்க்களம்
    d. வேல்

23. <u>மரபு</u> என்பதன் பொருள்
    a. முறைமை
    b. மரத்தின் தன்மை
    c. மறக்கப்பட்ட செய்தி
    d. இலக்கணம்

24. <u>பழுது</u> என்பதன் பொருள்
    a. பழமையானது
    b. பழுத்த பழம்
    c. பயன் இன்மை
    d. பழுக்கக் காய்ந்த இரும்பு

25. <u>தாழ்த்துதல்</u> என்ப்தன் பொருள்
    a. ஒரு நிலையிலிருந்து இறக்குதல்
    b. தாழ இறங்குதல்
    c. தவழுதல்
    d. தணித்தல்

26. <u>அஞ்சரப்</u> பெட்டி என்பதன் பொருள்
    a. அடுப்பங்கரையில் உள்ள பாத்திரங்களில் ஒன்று
    b. அடுப்பங்கரையின் ஒரு பகுதி
    c. அடுப்பங்கரையில் சமையல் பொருள்கள் வைக்கப் பயன்படும் பெட்டி
    d. ஐந்து அரைகள் உள்ள ஒரு பெரிய பேழை

27. <u>அடிதண்டா</u> என்பதன் பொருள்
    a. சண்டைக்குச் செல்லுதல்
    b. சண்டையிட்டால் கொடுக்கப்படும் தண்டனை

c. கதவில் பாதுகாப்பாக இருக்கும் ஒரு ஆணி

d. கதவைத் திறக்க முடியாமல் இரும்புப் பட்டையால் போடப்படும் அடைப்பு

28. <u>தலப்பை</u> என்பதன் பொருள்

a. ஒன்றையொன்று மோதிக்கொண்டிருக்கும் பொருள்கள்

b. பல பொருள்களின் கலவை

c. உழுவதற்குப் பயன்படும் கருவி

d. உழுவதால் ஏற்படும் மாற்றம்

29. <u>வக்கணை</u> என்பதன் பொருள்

a. வாய்க்கு வந்தபடி பேசுதல்

b. கேலியாகவும் தரக்குறைவாகவும் பேசுதல்

c. தேவையில்லாதவற்றைச் சொல்லுதல்

d. அஞ்சாமல் பேசுதல்.

30. <u>அவலம்</u> என்பதன் பொருள்

a. துன்பம்

b. அழுகை

c. கவலை

d. ஏக்கம்

31. <u>வரவு</u> என்பதன் பொருள்

a. வருகை

b. வருமானம்

c. வருதல்

d. வரவேற்றல்

32. <u>இலங்கு</u> என்பதன் பொருள்

a. விளங்கு

b. பெறு

c. தோன்று

d. கொடு

33. <u>அணி</u> என்பதன் பொருள்

a. உடுத்து

b. அலங்கரி
c. வரிசைப்படுத்து
d. முறைப்படுத்து

34. புலப்படுதல் என்பதன் பொருள்

a. புதிதாகத் தெரிதல்
b. தெளிவாகக் காணப்படுதல்
c. மேலாகத் தோன்றுதல்
d. விரும்பியும் கிடைக்காமலிருத்தல்

35. குருதி என்பதன் பொருள்

a. சிவப்பு
b. இரத்தம்
c. வியர்வை
d. கொழுப்பு

36. இன்னாமை என்பதன் பொருள்

a. தீமை
b. துன்பம்
c. கவலை
d. விருத்தம்

37. துறத்தல் என்பதன் பொருள்

a. பற்று நீக்குதல்
b. விரட்டுதல்
c. ஓடுதல்
d. நீக்குதல்

38. பணயம் என்பதன் பொருள்

a. பணத்தால் வாங்கும் பொருள்
b. ஈடாக வைத்த பொருள்
c. மாற்றாக வாங்கும் பொருள்
d. பந்தயமாகக் கட்டும் பொருள்

39. <u>தரிசு</u> என்பதன் பொருள்
    a. விளை நிலம்
    b. நிலத்தின் ஒரு பகுதி
    c. பயனில்லாத நிலம்
    d. பயன்படுத்தாத நிலம்

40. <u>அங்கை</u> என்பதன் பொருள்
    a. புறங்கை
    b. முழங்கை
    c. உள்ளங்கை
    d. முன்கை

41. <u>பேதை</u> என்பதன் பொருள்
    a. மூர்க்கன்
    b. அறிவாளி
    c. அறிவிலி
    d. கள்ளுண்பவன்

42. <u>களைய</u> என்பதன் பொருள்
    a. நீக்க
    b. காக்க
    c. தடுக்க
    d. களைபிடுங்க

43. <u>அல்லல்</u> என்பதன் பொருள்
    a. இருள்
    b. இன்பம்
    c. துன்பம்
    d. கோபம்

44. <u>சலவைக்கல்</u> என்பதன் பொருள்
    a. பளிங்குக்கல்
    b. கண்ணாடிக்கல்

c. சரளைக்கல்
d. சுண்ணாம்புக்கல்

45. இணை என்பதன் பொருள்
 a. எடு
 b. கூடு
 c. சேர்
 d. பிரி

46. திங்கள் என்பதன் பொருள்
 a. சூரியன்
 b. கோள்
 c. விண்மீன்
 d. சந்திரன்

47. எழில் என்பதன் பொருள்
 a. எழுச்சி
 b. அழகு
 c. இன்பம்
 d. இனிமை

48. அருள் என்பதன் பொருள்
 a. கருணை
 b. பெருமிதம்
 c. அன்பு
 d. அச்சம்

49. வாரியம் என்பதன் பொருள்
 a. அரசுப் பணியை ஏற்று நடத்தும் அமைப்பு
 b. வணிக அமைப்பு
 c. பொதுப் பணித்துறை
 d. சமூகப்பணி செய்யும் அமைப்பு

50. ஒன்றியம் என்பதன் பொருள்
 a. கழகம்

b. கூட்டமைப்பு

c. ஆட்சித்துறை

d. செயற்குழு

51. வளாகம் என்பதன் பொருள்

a. வயலைச் சூழ்ந்த நிலப்பகுதி

b. கடலை அடுத்த நிலப்பகுதி

c. கட்டடத்தைச் சூழ்ந்த நிலப்பகுதி

d. மலையைச் சார்ந்த நிலப்பகுதி

52. ஆயுள் காப்பீடு என்பதன் பொருள்

a. ஆயுர்வேத மருத்துவம்

b. வாழ்க்கைக் காப்புறுதித் தொகை

c. முதுமைக்கால வைப்பு நிதி

d. ஆயுள் உறுப்பினர் கட்டணம்

53. ஆணையர் என்பதன் பொருள்

a. மாவட்ட ஆட்சித் தலைவர்

b. முதலமைச்சர்

c. அரசுத் தலைவர்

d. நிர்வாக அமைப்பின் தலைவர்

54. ஆவணக்காப்பகம் என்பதன் பொருள்

a. பழம் பொருள் நிலையம்

b. அரசுச் சான்றுப் பத்திரங்களைப் பாதுகாக்கும் இடம்

c. பொருளைக் காக்கும் இடம்

d. ஓவியக்காட்சி சாலை

55. உள்ளாட்சி என்பதன் பொருள்

a. நிலையான ஆட்சி அமைப்பு

b. நிலையான நிர்வாக அமைப்பு

c. நாட்டுப் பகுதிக்கென அமையும் நிர்வாக அமைப்பு

d. தனியார் நிர்வாகம்

56. <u>சட்ட மன்றம்</u> என்பதன் பெருள்

a. வழக்குரைஞர்களின் விடுதி

b. சட்டம் பயிலும் இடம்

c. நீதி மன்றம்

d. மக்கள் பிரதிநிதிகள் அடங்கிய ஆட்சி மன்றம்

57. <u>தலைமைச் செயலகம்</u> என்பதன் பெருள்

a. அரசின் தலைமை அலுவலகம்

b. சிறப்பான செயல்கள் மேற்கொள்ளப்படும் இடம்

c. செயலாளர்களின் மன்றம்

d. பணியாளர்கள் கூடும் இடம்

58. <u>மின் கலம்</u> என்பதன் பொருள்

a. மின்சார ஓட்டம்

b. மின்சக்தி கொண்டிருக்கும் பொருள்

c. மின் விசையில் ஓடும் படகு

d. மின்னொளி

59. <u>ஏவுகணை</u> என்பதன் பொருள்

a. விண்ணில் தெரிகின்ற வால் நட்சத்திரம்

b. பறக்கும் தட்டு

c. விண்கோளைச் செலுத்தப் பயன்படும் கருவி

d. மிக விரைவாக ஏவப்படும் அம்பு

60. <u>ஒளிபரப்பு</u> என்பதன் பொருள்

a. தொலைக்காட்சியில் ஒரு நிகழ்ச்சியைக் காட்டுதல்

b. ஒளியைப் பரவச் செய்தல்

c. ஒளி பரவும் இடம்

d. ஒளியின் மறைவு

61. <u>நுண்ணலை</u> என்பதன் பொருள்

a. நுண்மையான உயிர்கள்

b. நுட்பமான பொருள்

c. சிறிய அலை
d. மிகச் சிறிய மின்னலை

62. கோட்டாட்சி அலுவலர் என்பதன் பொருள்
a. கோவிலின் நிர்வாக அதிகாரி
b. நீதிமன்றச் செயலாளர்
c. வட்டார நிர்வாக அதிகாரி
d. நகராட்சி அலுவலர்

63. அருங்காட்சியகம் என்பதன் பொருள்
a. திரைக்காட்சிச் சாலை
b. பழம் பொருட்கள் வைக்கப்பட்ட இடம்
c. நாடக சாலை
d. இயற்கைக் காட்சி நிறைந்த இடம்

64. ஒளிச்சேர்க்கை என்பதன் பொருள்
a. இரண்டு இடங்களில் ஒளி சேர்தல்
b. ஒளியில் நடத்தப்படும் ஆய்வு
c. ஒளியை மிகுதிப்படுத்துதல்
d. தாவரங்கள் உணவை உண்பிக்கும் முறை

65. மின்கடத்தி என்பதன் பொருள்
a. மின்சாரத்தைச் செலுத்தும் ஊடு பொருள்
b. மின்சாரத்தைக் கொடுக்கும் பொருள்
c. மின் உற்பத்தி சாதனம்
d. மின்சாரத்தால் இயங்கும் பொருள்

66. உரிமம் என்பதன் பொருள்
a. சொத்துரிமைப் பத்திரம்
b. அரசு வழங்கும் உரிமைப் பத்திரம்
c. கிரையப் பத்திரம்
d. நில அடமானப் பத்திரம்

B. Contextual Meaning
சூழற் பொருள்

கொடுக்கப்பட்டுள்ள ஒவ்வொரு அடிக்கோடிட்ட சொற்களின் சூழல் பொருள் a, b, c, d என நான்கு தெரிவுகளில் கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றிலிருந்து சரியான விடையைத் தேர்ந்தெடுத்து அதை விடைத்தாளில் எழுதுக / வட்டமிட்டுக் காட்டுக.

1. இது கவிஞரின் கன்னிக் கவிதை.
   a. சிறிய
   b. முதல்
   c. புதிய
   d. புதுமையான

2. அவன் கையை எதிர்பார்க்க வேண்டாம்.
   a. உதவியை
   b. கைப்பொருளை
   c. பரிவை
   d. இரக்கத்தை

3. என்ன சொன்னாலும் அவன் தலைக்குள் நுழையாது.
   a. கற்பனைக்குள்
   b. நினைவுக்குள்
   c. பார்வைக்குள்
   d. அறிவுக்குள்

4. குடும்ப பாரத்தைத் தந்தை ஏற்றுக் கொண்டார்.
   a. மானத்தை
   b. வருமானத்தை
   c. பொறுப்பை
   d. கௌரவத்தை

5. காலம் கனிந்ததும் அவர் வருவார்.
   a. முடிந்ததும்
   b. போனதும்

c. வந்ததும்
d. சென்றதும்

6. பசியால் அவள் முகம் வாடிப் போயிருந்தது.
a. சோர்ந்திருந்தது
b. சுருங்கியிருந்தது
c. வெளுத்திருந்தது
d. மறைந்திருந்தது

7. தூற்றல் கணைகள் எதிரிகளால் ஏவப்படும்போது நான் துவளுவதில்லை.
a. கல்வீச்சு
b. திட்டும் சொற்கள்
c. வருத்தம்
d. தொல்லை

8. பாரதியார் பாடல்கள் அடக்குமுறைக்கு எதிரான தீப்பொறிகள் .
a. வலிமையான கருவி
b. எதிர்ப்பு
c. சார்புடைய செய்தி
d. விளக்கம்

9. ந திமன்றம் வந்து உண்மை பேசுவதாக ஒப்புக் கொள்ளும் சிலர் நெருக்கடியான கட்டம் வரும்போது நெளிந்து விடுகிறார்கள்.
a. அசைந்து விடுகிறார்கள்
b. உடம்பை வளைக்கிறார்கள்
c. உண்மை பேசுகிறார்கள்
d. சொன்னவாறு நடக்கத் தவறுகிறார்கள்

10. இளமைக்காலத்தை எண்ணும்போது இன்ப அலைகள் நெஞ்சில் கிளம்புகின்றன.
a. கனவுகள்
b. ஆசைகள்
c. நினைவுகள்
d. மயக்கம்

11. ஏற்றுக் கொண்ட பணியோ மிகப் பெரிது. முயன்றான்; <u>வாகை சூடினான்.</u>

    a. வாகைப் பூவைச் சூடினான்
    b. வெற்றி பெற்றான்
    c. தொல்லைக்குள்ளானான்
    d. புரிந்து கொண்டான்

12. என் அன்புக்குரிய உன்னையா நான் <u>சுடுமொழியால்</u> தாக்குவேன்.

    a. வெப்பத்தைத் தருகின்ற சொற்களால்
    b. துன்பத்தைத் தரும் பேச்சால்
    c. பழமொழிகளால்
    d. ஆத்திரப் பேச்சால்

13. தந்தை இட்ட பணியைத் தனையன் <u>அகமலர்ந்து</u> மேற்கொண்டான்.

    a. விருப்பத்தோடு
    b. அறிவோடு
    c. சிறப்பாக
    d. விரைந்து

14. மூங்கில் இலைமேலே <u>தூங்கும்</u> பனி நீரே !

    a. உறங்கும்
    b. விழும்
    c. படியும்
    d. தோன்றும்

15. உலகத்தோடு ஒட்ட <u>ஒழுகல்.</u>

    a. பேசுதல்
    b. வடிதல்
    c. நடந்து கொள்ளுதல்
    d. ஓடுதல்

16. மற்றவர்களும் பயன் அடைய அறிவு <u>கொளுத்துங்கள்.</u>

    a. கூறுங்கள்
    b. எழுதுங்கள்

c. உண்டாக்குங்கள்

d. அழியுங்கள்

17. அவையில் எடுத்துவைத்த கருத்து

a. நீக்கிய

b. முதலில் கூறிய

c. கூறிய

d. ஏற்றுக் கொண்ட

18. அவர் பேச்சு நெஞ்சைத் தொட்டது.

a. துளைத்தது

b. உருக்கியது

c. பாய்ந்தது

d. தூண்டியது

19. உனக்கு வாழ உரிமை உண்டு.

a. விடுதலை

b. தகுதி

c. செல்வம்

d. தன் விருப்பப்படி நடத்தல்

20. அவர் பேச்சு கலங்கரை விளக்கம்.

a. விரிவுரை

b. செய்தி நிறைந்தது

c. சந்தேகம் தீர்ப்பது

d. புரியாதது

21. பகைவர் தமது வெற்றியால் நமக்கு பாடம் கற்பித்தனர்.

a. அறிவுரை கூறினர்

b. புரிய வைத்தனர்

c. நூல்களை அளித்தனர்

d. பள்ளி நடத்தினர்

22. பூத்தது பொன்னாள்.

a. வளம் பெற்றது

b. தோன்றியது
c. சிறப்புப் பெற்றது
d. மகிழ்ச்சி தந்தது

23. உள்ளத்தைக் கொள்ளை கொண்டாள்.
a. துன்புறுத்தினாள்
b. குழப்பினாள்
c. கவர்ந்தாள்
d. மறக்கச் செய்தாள்

24. தன் தவற்றை மறைக்க நாடகம் ஆடுகிறான்.
a. நடிகனாக வாழ்கிறான்
b. பொய் கூறுகிறான்
c. நல்லவன்போல் நடந்து கொள்கிறான்
d. வாதம் செய்கிறான்

25. போர்க்களத்தில் பகைவரைப் பந்தாடினான்.
a. பந்தால் அடித்தான்
b. ஓட ஓட விரட்டினான்
c. கொன்றான்
d. எதிர்த்து நின்றான்

26. இராவணனின் தோல்வியைக் கண்டு தேவர்கள் சிரித்தனர்.
a. மகிழ்ந்தனர்
b. ஏளனம் செய்தனர்
c. புன்னகை செய்தனர்
d. இகழ்ந்து பேசினர்

27. விடுதலைப்போரின்போது பகத்சிங் போன்றோர் இந் நாட்டில் வதைக்கப்பட்டவர்கள் அல்லர் ; விதைக்கப்பட்டவர்கள்.
a. விடுதலை உணர்வு எழக்காரணமாக அமைந்தவர்கள்.
b. துண்டம் துண்டமாக வெட்டிச் சிதைக்கப்பட்டவர்கள்.
c. நாட்டு மக்களால் போற்றப்பட்டவர்கள்.
d. எதையும் சாதிக்க முடியாமல் இறந்தவர்கள்.

28. கரையிலாக் காதல் கொண்டான்.

   a. குற்றமற்ற
   b. அளவில்லாத
   c. காரணம் இல்லாத
   d. பொருந்தாத

29. அவள் முகம் மலர்ந்தது.

   a. மகிழ்ச்சியைக் காட்டிற்று
   b. சிவந்தது
   c. காந்தத்தைக் காட்டிற்று
   d. ஒளி பெற்றது

30. ஆட்சி மன்றங்கள் அமளியற்ற கருத்தரங்கங்களாக விளங்க வேண்டும். அந்தக் கருத்தரங்கு ஒளிதரவேண்டும் ; வீணான வெப்பத்தை அன்று.

   a. நன்மை தரவேண்டும்
   b. குளிர்ச்சி அடைய வேண்டும்
   c. தேவையானதைத் தர வேண்டும்
   d. பயன் தர வேண்டும்

31. தூய உள்ளம் நமக்குரியது. அற்ப ஆசைக்கு இடமில்லை. அவை சுட்டெரிக்கப்பட்டு நெடுநாட்களாயின. மாசற்றவர்களாயினோம். - இப்பகுதியில் நீக்கு என்ற பொருளில் எடுத்தாளப்பட்ட சொற்றொடர் எது?

   a. தூய உள்ளம்
   b. அற்ப ஆசை
   c. சுட்டெரி
   d. மாசு

32. தேர்வு நெருங்கியது. கடுமையாக உழைத்தான். நான்கே நாட்களில் நம்பிக்கை வளர்ந்து கனியாகியது. இப்பகுதியில் முழுமை என்னும் பொருளில் எடுத்தாளப்பட்டுள்ள சொல் எது ?

   a. நெருங்கு
   b. கடுமை
   c. வளர்ந்து
   d. கனி

கொடுமைகள் ஒழிய வேண்டும். உலகம் ஒளிர வேண்டும்! தீமைகளை எதிர்க்கும் எண்ணம் ஒவ்வொருவர் உள்ளத்திலும் கொழுந்துவிட்டு எரியட்டும். இப்பகுதியில் வலிமை பெற வேண்டும் ? எனும் பொருளில் அமைந்த சொற்றொடர் எது ?

a. ஒழிய வேண்டும்
b. ஒளிர வேண்டும்
c. எதிர்க்கும் எண்ணம்
d. கொழுந்து விட்டு எரியட்டும்

34. என் விருப்பத்திற்கு உரியவர்கள் அவர்கள். எள்ளளவும் அதில் ஐயமில்லை. அவர்களின் நடையழகு கண்டு இன்புற்றேன் அல்லாது அவர்கள் தந்த புகழுரை எனக்கு என்றுமே போதை தந்ததில்லை. இப்பகுதியில் கவர்ச்சியான பேச்சு என்ற பொருளில் எடுத்தாளப்பட்டுள்ள சொற்றொடர் எது ?

a. விருப்பம்
b. நடையழகு
c. புகழுரை
d. போதை

35. வியர்வை பணமாகிறது. பணம் வரியாகக் குவிகிறது. திட்டங்கள் மலர்கின்றன. மக்கள் வாழ்வில் ஒளி வீசுகிறது - இப்பகுதியில் கடும் உழைப்பு என்னும் பொருளில் எடுத்தாளப்பட்டுள்ள சொல் எது ?

a. வியர்வை
b. வரி
c. குவி
d. ஒளி

36. தொழிலாளர்களது வாழ்வானது பாழ்நிலமாக இல்லாமல் பசுமையோடு பூங்காற்று வீசும் தோட்டமாக இருக்க வேண்டும். இப்பகுதியில் வறுமை எனும் பொருளில் எடுத்தாளப்பட்டுள்ள சொற்றொடர் எது ?

a. பாழ் நிலம்
b. இல்லாமல்
c. வீசும்
d. பசுமை

37. நாட்டுக்கு வலிவும் வனப்பும் தேடித் தரும் கருத்துக்கள் மலரும் சோலைதான் நூலகம். இப்பகுதியில் சிறந்த இடம் என்னும் பொருளில் எடுத்தாளப்பட்டுள்ள சொல் எது ?

a. வலிவு

b. வனப்பு
c. மலரும்
d. சோலை

38. என்ன இருந்தாலும் உனக்கு வாய் ரொம்ப நீளம்.
a. வாய் பெரியது
b. வரம்பின்றிப் பேசுவது
c. அளவோடு பேசுதல்
d. பொய் பேசுதல்

39. எதிர்வீட்டுக்கிழவியா ! அய்யய்யோ ! சாயங்காலம் வந்தாலே ஒரே கழுத்தறுப்பு.
a. இரைச்சல்
b. தொந்தரவு
c. அமைதி
d. ஆத்திரம்

40. எதிர்கட்சி எழுப்பிய கேள்விகளுக்குச் சரியான பதில் தெரியாத பட்டிமன்றப் பாவலர் மூக்குடைபட்டுத் திரும்பினார்.
a. கோபப்பட்டு
b. ஆசைப்பட்டு
c. அவமானப்பட்டு
d. ஆத்திரப்பட்டு

41. அவன் பேச்சு வேம்பாய் இருந்தது.
a. இனிப்பாக
b. வெறுக்கத்தக்கதாய்
c. நன்றாக
d. பயன் தருவதாக

42. என்னிடம் மருந்திற்கும் காசில்லை.
a. சிறிதும்
b. மருந்து வாங்க
c. தேவையான செலவுக்கு
d. தேவையற்ற செலவுக்கு

43. காரியத்தில் கண்ணாய் இருந்தான்.

a. பார்த்துக் கொண்டே

b. கருத்தாக

c. கற்பனையோடு

d. கவலையோடு

44. தந்தை பெயரை விற்று விட்டான்.

a. மாற்றினான்

b. விளம்பரப் படுத்தினான்

c. அவமானத்திற்கு உள்ளாக்கினான்

d. உயர்த்தினான்

45. இப்போது கைகொஞ்சம் இறக்கம்.

a. குறை

b. பணமில்லாமை

c. பணப்பற்றாக்குறை

d. நீளம்

46. மனம் வெளுக்க வழியில்லை.

a. துணிய

b. தெளிவடைய

c. திருந்த

d. அமைதியடைய

47. மாணவன் முகம் கறுத்தது.

a. கோபத்தைக் காட்டியது

b. ஏமாற்றத்தைக் காட்டியது

c. மகிழ்ச்சியைக் காட்டியது

d. கவலையைக் காட்டியது

48. அவள் அழகு என் மனத்தைக் கவ்வியது.

a. மகிழச் செய்தது

b. துன்புறுத்தியது

c. கவர்ந்தது

d. மாற்றியது

49. அவன் வசவு என் நெஞ்சில் தைத்தது.

a. துன்பத்தை ஏற்படுத்தியது
b. பதிந்தது
c. ஆழ்ந்தது
d. வருத்தத்தை உருவாக்கியது

50. பழைய வணிகத்திற்கே திரும்பினான்.

a. புதுப்பித்தான்
b. மீண்டும் தொடங்கினான்
c. கை விட்டான்
d. வளர்த்தான்

51. மங்கை சிந்திய புன்னகை

a. மறைந்த
b. வெளிக்காட்டிய
c. மகிழ்வித்த
d. மகிழ்ந்த

52. காவலரைக் கண்டவுடன் கள்ளன் பறந்துவிட்டான்.

a. ஓடி விட்டான்
b. ஒளிந்து கொண்டான்
c. மறைந்து விட்டான்
d. விரைந்தோடி விட்டான்

53. குழந்தையின் மழலைப் பேச்சைக் கேட்டவுடன் குளிர்ச்சியாக இருந்தது.

a. அமைதி தருவதாக
b. மகிழ்ச்சி தருவதாக
c. துன்பம் தணிப்பதாக
d. உணர்ச்சி தருவதாக

54. அவர் தொட்டதெல்லாம் பொன்னாகும்.

a. வளரும்
b. பயன் தரும்
c. நல்ல விலைக்குப் போகும்
d. மேன்மை அடையும்

55. அவன் தொடங்கிய வேலை கரியாகியது.

a. பிறர்க்கு வழிகாட்டியாக இருந்தது
b. எதிர்பார்த்த பயனைத் தரவில்லை
c. பயனில்லாமல் போயிற்று
d. முடியாமல் நின்றது

56. இளமை நினைவுகள் பசுமையாக இருந்தன.

a. மறக்கப்படாமல்
b. புதுமையாக
c. அரைகுறையாக
d. போற்றத்தக்கனவாக

57. இருட்டறையில் உள்ளதடா உலகம்.

a. இருள் நிறைந்த வீடு
b. குழப்பம்
c. மயக்கம்
d. அறியாமை

58. நல்ல மனைவியை அடைய கொடுத்துவைத்து இருக்கிறான்.

a. சீதனம் கொடுத்தான்
b. புண்ணியம் செய்து இருக்கிறான்
c. சத்தியம் செய்து இருக்கிறான்
d. வாக்குக் கொடுத்து இருக்கிறான்

59. அவனைப்பற்றிய பேச்சு ஊரெல்லாம் நாறுகிறது.

a. பெருமையுடன் பேசப்படுகிறது
b. அதிகமாகப் பேசப்படுகிறது
c. வெளிப்படையாகப் பேசப்படுகிறது
d. இழிவாகப் பேசப்படுகிறது

60. அவள் முகத்தில் வியர்வை அரும்பியது.

a. தோன்றியது
b. பெருகியது
c. மறைந்தது
d. உலர்ந்தது

C. Synonym
ஒரு பொருட் பன்மொழி

கொடுக்கப்பட்டுள்ள ஒவ்வொரு அடிக்கோடிட்ட சொல்லின் பொருளைத் தருகின்ற மற்றொரு சொல் a, b, c, d என நான்கு தெரிவுகளாகக் கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றிலிருந்து சரியான விடையைத் தேர்ந்தெடுத்து அதை விடைத்தாளில் எழுதுக / வட்டமிட்டுக் காட்டுக.

1. ஆச்சரியம்
   - a. அதிசயம்
   - b. துணிவு
   - c. வியப்பு
   - d. அதிர்ச்சி
2. ஆயுதம்
   - a. கருவி
   - b. எழுத்து
   - c. சாமான்
   - d. பொருள்
3. இசைவு
   - a. இசையறிவு
   - b. அன்பளிப்பு
   - c. வெகுமதி
   - d. அனுமதி
4. இழப்பு
   - a. இழவு
   - b. நஷ்டம்
   - c. துன்பம்
   - d. இறப்பு
5. அழிவு
   - a. இடிபாடு
   - b. துன்பம்
   - c. நாசம்
   - d. இடர்ப்பாடு

6. <u>இயந்திரம்</u>

   a. உபகரணம்
   b. கருவி
   c. சாதனம்
   d. பொறி

7. <u>பேணு</u>

   a. காப்பாற்று
   b. வாழச்செய்
   c. வளர்
   d. மகிழச்செய்

8. <u>நுழை</u>

   a. வா
   b. செல்
   c. புகு
   d. போ

9. <u>அக்கறை</u>

   a. மதிப்பு
   b. ஆர்வம்
   c. கருத்து
   d. கருத்துரை

10. <u>ஈண்டு</u>

   a. அங்கு
   b. இங்கு
   c. எங்கு
   d. ஏன்

11. <u>மாசு</u> அற்ற மாணிக்கம்

   a. மயக்கம்
   b. குற்றம்
   c. மாசித் திங்கள்
   d. மங்கலான

12. <u>முளரி</u>

   a. தாமரை
   b. குவளை

c. அல்லி
d. ஆம்பல்

13. <u>பொருப்பு</u>

a. மூலை
b. மலை
c. பொழில்
d. கடமை

14. <u>அருவி</u>

a. நீர்வீழ்ச்சி
b. நீர்
c. அகழி
d. நீர்த்தடாகம்

15. <u>கிணறு</u>

a. குட்டை
b. ஊற்று
c. கேணி
d. பள்ளம்

16. <u>வையம்</u>

a. வைதல்
b. வாழ்த்தல்
c. பூமி
d. இருட்டு

17. <u>குட்டி</u>

a. மறி
b. குட்டை
c. கலயம்
d. குடம்

18. <u>சுணங்கன்</u>

a. நரி
b. சிங்கம்
c. நாய்
d. சிறுத்தை

19. <u>சிங்கம்</u>
    a. சுணங்கன்
    b. அரி
    c. கடுவன்
    d. மறி
20. <u>இடர்</u>
    a. இடம்
    b. இல்லம்
    c. இன்னல்
    d. இறப்பு
21. <u>வைதல்</u>
    a. புகழ்தல்
    b. ஏசுதல்
    c. இருத்து
    d. பொருத்து
22. <u>வழி</u>
    a. நெறி
    b. வாழி
    c. ஆணை
    d. முயற்சி
23. <u>பழமை</u>
    a. கேடு
    b. தொன்மை
    c. வளமை
    d. மரபு
24. <u>ஆசை</u>
    a. விழைவு
    b. விளைவு
    c. குழைவு
    d. குளைவு
25. <u>கொடை</u>
    a. ஈகை
    b. மறை

c. குடை
d. விருப்பம்

26. <u>எழில்</u>
   a. இளமை
   b. வசீகரம்
   c. அழகு
   d. கவர்ச்சி

27. <u>வழங்கு</u>
   a. கொடு
   b. எடு
   c. பெறு
   d. பாடு

28. <u>பகர்</u>
   a. கருது
   b. கூறு
   c. எழுது
   d. பருகு

29. <u>வறுமை</u>
   a. பெருமை
   b. புகழ்
   c. ஏழ்மை
   d. கஷ்டம்

30. <u>ஆற்றல்</u>
   a. திறமை
   b. கூர்மை
   c. கடினம்
   d. ஆறுதல்

31. <u>உதறல்</u>
   a. பயம்
   b. நடுக்கம்
   c. வீரம்
   d. கோபம்

32. <u>பயில்</u>
    a. கல்
    b. எழுது
    c. தொடங்கு
    d. வரை

33. <u>தளர்வு</u>
    a. தள்ளாடு
    b. சோர்வு
    c. சோம்பல்
    d. சலிப்பு

34. <u>அழல்</u>
    a. சூழல்
    b. நெருப்பு
    c. கவலை
    d. துன்பம்

35. <u>நெரிசல்</u>
    a. கூட்டம்
    b. நெருக்கம்
    c. விரிசல்
    d. மிகுதி

36. <u>கோட்பாடு</u>
    a. விளக்கம்
    b. செயல்
    c. கொள்கை
    d. திறன்

37. <u>புரவி</u>
    a. கழுதை
    b. புலி
    c. நரி
    d. குதிரை

38. <u>வெகுளி</u>
    a. அறியாமை

b. கோபம்
c. பதற்றம்
d. வீரம்

39. அல்லல்

a. இடுக்கண்
b. அவலம்
c. இழிவு
d. கவலை

40. அரண்

a. மதில்
b. கூடம்
c. மண்டபம்
d. முன்றில்

41. மாண்பு

a. கீர்த்தி
b. விழுப்பம்
c. செம்மை
d. மேன்மை

42. ஞாயிறு

a. கதிரவன்
b. மதி
c. அக்கினி
d. தரணி

43. மாற்றார்

a. பகைவர்
b. பணியாளர்
c. உயர்ந்தோர்
d. தாழ்ந்தோர்

44. அடிசில்
   a. பாதம்
   b. உணவு
   c. ஆடை
   d. நகை

45. குடில்
   a. சிறுமனை
   b. வயிறு
   c. வீடு
   d. மாளிகை

46. களிறு
   a. யானை
   b. குரங்கு
   c. கரடி
   d. காளை

47. நாட்டம்
   a. வெறுப்பு
   b. விருப்பு
   c. இழப்பு
   d. துன்பம்

48. அகழ்ந்த
   a. வெட்டிய
   b. கட்டிய
   c. பறித்த
   d. தோண்டிய

49. தோற்றுவாய்
   a. முடிவுரை
   b. முன்னுரை
   c. பொருளுரை
   d. கருத்துரை

50. <u>வேட்கை</u>

a. துன்பம்
b. வேட்டை
c. விருப்பம்
d. பொறாமை

51. <u>ஊதியம்</u>

a. செலவு
b. வரவு
c. சம்பளம்
d. வருமானம்

52. <u>அவா</u>

a. பேராசை
b. பாதுகாப்பு
c. விருப்பம்
d. உணர்வு

53. <u>கவின்</u>

a. சிறப்பு
b. நேர்த்தி
c. அழகு
d. உண்மை

54. <u>வையகம்</u>

a. ஊர்
b. நாடு
c. பூமி
d. உலகம்

55. <u>பண்</u>

a. இசை
b. பாடல்
c. கவிதை
d. மெட்டு

56. <u>நாவாய்</u>

a. வண்டி
b. வாகனம்
c. கப்பல்
d. ஊர்தி

57. <u>புனல்</u>

a. தீ
b. நீர்
c. காற்று
d. தென்றல்

58. <u>மகவு</u>

a. குட்டி
b. குழந்தை
c. குஞ்சு
d. கன்று

59. <u>ஈட்டுதல்</u>

a. சேர்த்தல்
b. சம்பாதித்தல்
c. எடுத்தல்
d. கூறுதல்

60. <u>விழைவு</u>

a. விருப்பம்
b. பயன்
c. வளர்ச்சி
d. வாழ்வு

D. Antonym
எதிர்ச் சொல்

ஒவ்வொரு கூற்றின் முதன்மைப் பகுதியிலும் (stem) ஒரு சொல் அடிக்கோடிட்டுக் காட்டப்பட்டுள்ளது. அச்சொல்லுக்கு எதிர்ச்சொல் அமையத்தக்க இடத்தில் கோடிட்டும் காட்டப்பட்டுள்ளது. கோடிட்ட இடத்திற்குப் பொருத்தமான விடையை a, b, c, d எனக் கொடுக்கப்பட்டுள்ள நான்கு தெரிவுகளிலிருந்து தேர்ந்தெடுத்து நிரப்புக.

1. அவர் நல்ல மனிதரன்று; மிகவும் ___________ மனிதர்.
   a. தாழ்ந்த
   b. உயர்ந்த
   c. கெட்ட
   d. வீழ்ந்த

2. இன்பம் வரும்போது மகிழ வேண்டும் ; ______________ வரும்போது தாங்கிக் கொள்ள வேண்டும்.
   a. நஷ்டம்
   b. துன்பம்
   c. ஆபத்து
   d. இழப்பு

3. புகழ்ச்சிக்கு மயங்காதே; ______________க்குத் துவளாதே.
   a. இகழ்ச்சி
   b. மகிழ்ச்சி
   c. அயர்ச்சி
   d. உயர்ச்சி

4. வாழ்க்கையில் ஏற்றம் இருக்கும் ; ___________ இருக்கும்.
   a. தாழ்ச்சி
   b. இறக்கம்
   c. சரிவு
   d. சாய்வு

5. வாழ்க்கையில் எல்லோரும் வெற்றி பெறுவதில்லை. சிலர் ______________ அடைகின்றனர்.
   a. வெறுப்பு

b. சலிப்பு

c. தோல்வி

d. கசப்பு

6. <u>நட்பு</u> நல்லது ; ____________ தீயது.

a. பகை

b. வெறுப்பு

c. துரோகம்

d. நயவஞ்சகம்

7. <u>அறிஞர்</u> பெருமக்கள் கூடிய அவையின் பெருமையை __________ அறியார்.

a. வறிஞர்

b. வசைஞர்

c. அயலர்

d. அசடர்

8. <u>அடக்கம்</u> உடையவரை அனைவரும் விரும்புவர் ;__________ உடையார் யாவராலும் வெறுக்கப்படுவர்.

a. ஆக்கம்

b. மந்தம்

c. செருக்கு

d. செறிவு

9. மூட்டை <u>இறுக்கமாகக்</u> கட்டப்படாததால் __________ .

a. மறைந்தது

b. குறைந்தது

c. நெகிழ்ந்தது

d. நிறைந்தது

10. அக்பர் காலத்தில் <u>நிலைபெற்ற</u> முகமதியப் பேரரசுக்குப் பிற்காலத்தில் ________ ஏற்பட்டது.

a. அழிவு

b. பழி

c. நிறைவு

d. திறமை

11. தந்தை களஞ்சியத்தில் இட்டுப் பாதுகாத்த தானியத்தை மகன் __________ செலவு செய்தான்.

a. கெடுத்து

b. எடுத்து

c. கெடுத்து

d. தடுத்து

12. நெடுங்காலம் ஏழ்மையில் இருந்த அவன் கடும் உழைப்பால் ________ பெற்றான்.

a. தாழ்மை

b. வளமை

c. உடைமை

d. வறுமை

13. தெளிவு ஏற்பட________ நீக்கிக் கற்க வேண்டும்.

a. ஐயம்

b. மாற்றம்

c. மந்தம்

d. மயக்கம்

14. உயர்ந்து வளர்ந்த மரத்தின் கிளைகள் ____________கிடந்தன.

a. வீழ்ந்து

b. தாழ்ந்து

c. பரந்து

d. விரிந்து

15. இப்பாடத்தின் செய்திகள் கடுமையானவை; ஆகவே அவற்றை __________ யாக விளக்குவதற்கு மிகுந்த சிரமம் ஏற்பட்டது.

a. கொடுமை

b. எளிமை

c. ஞாய

d. நேர்மை

16. வேலையில் <u>சுணக்கம்</u> ஏற்பட்டதால் ________ முடியவில்லை.
   a. விரைவாக
   b. இணக்கமாக
   c. விளக்கமாக
   d. ஊக்கமாக

17. <u>ஆண்டானின்</u> ஏவல் கேட்டு வாழ்வோர் ____________.
   a. அடிமைகள்
   b. பணியாளர்
   c. ஒற்றர்
   d. வீரர்

18. நம் நாட்டில் <u>சிற்றூர்கள்</u> மிகுதி; ஆனால், குறைவாக உள்ளவை ____________.
   a. நகரங்கள்
   b. பேரூர்கள்
   c. பேராறுகள்
   d. பெரு மலைகள்

19. <u>தன்னல மனப்பான்மை</u> இழிவானது, ஆனால் உயர்வானது ____________.
   a. தன் முயற்சி
   b. பொதுநல மனப்பான்மை
   c. பிறரிடம் அன்பு காட்டுதல்
   d. கடமை செய்தல்

20. பலரும் <u>பாராட்டும்படி</u> செயலாற்ற வேண்டும். ஆனால் ____________ செயலாற்றக் கூடாது.
   a. சிரிக்கும்படி
   b. இகழும்படி
   c. மறக்கும்படி
   d. வருந்தும்படி

21. நல்லவரிடம் <u>இணக்கம்</u> கொள்வது நன்று ; ஆனால் ________ தீது.
   a. கோபம்
   b. பிணக்கம்

c. செருக்கு

d. வெறுப்பு

22. சில மனிதர்கள் அகம் வேறு __________ வேறாக வாழ்கிறார்கள்.

a. புறம்

b. முகம்

c. கண்

d. செல்

23. காற்று நுண்பொருள். ஆனால் நிலம் நீர் முதலியவை __________

a. காண் பொருள்

b. பருப்பொருள்

c. உள்பொருள்

d. நிலைப் பொருள்

24. இகழ்ச்சியை யாரும் விரும்பார். ஆனால் __________ எல்லோரும் விரும்புவர்.

a. புகழ்ச்சியை

b. மருட்சியை

c. எழுச்சியை

d. தாழ்ச்சியை

25. வசந்தகாலம் என்பது இளவேனில். __________ அன்று.

a. கார்காலம்

b. மழைக்காலம்

c. முது வேனில்

d. வேனில் காலம்

26. அருமையான பொருளை யாவரும் பாதுகாப்பர். ஆனால் __________பொருளைப் பாதுகாக்க மாட்டார்.

a. பொதுமையான

b. பெருமையான

c. எளிமையான

d. சிறுமையான

27. பள்ளி வீட்டிற்கு அண்மையில் இருந்தால் சிறுவர் மகிழ்வர். ________ இருந்தால் வருந்துவர்.

a. சேய்மையில்

b. அருகில்

c. விரைவில்

d. பக்கத்தில்

28. அறம் செய்தால் இம்மை வாழ்விற்கு மட்டுமின்றி ________ வாழ்விற்கும் நன்மை தரும்.

a. சேய்மை

b. மறுமை

c. உண்மை

d. செம்மை

29. கல்வி கற்பதால் உயர்வு வரும்; கற்கவில்லையேல் ________ வரும்.

a. தாழ்வு

b. வாழ்வு

c. காழ்ப்பு

d. மறுப்பு

30. வரவு பெருகினால் நன்மை. ஆனால் ________ பெருகினால் தீமை.

a. துறவு

b. உறவு

c. களவு

d. செலவு

31. பிறப்பு இருந்தால் ________ உண்டு.

a. மறைவு

b. இறப்பு

c. குறைவு

d. நிறைவு

32. ஊர் நள்ளிரவில் அமைதியாக இருக்கும் . ஆனால் பகலிலோ ______ இருக்கும்.

a. கூட்டமாக

b. ஆரவாரமாக

c. நெருக்கடியாக

d. சுறுசுறுப்பாக

33. சொல்லுவது எல்லார்க்கும் எளிது. ஆனால் சொன்னது போல் நடப்பது ________ .

a. பெரிது

b. விரைவு

c. அரிது

d. நல்லது

34. ஒற்றுமை கொண்ட பாளையக்காரர்கள் ஆங்கிலேயர் சூழ்ச்சியால் __________ ஆனார்கள்.

a. வேறுவேறாய்

b. தனியாய்

c. பிரிவு

d. வேற்றுமை

35. செல்வ மிகுதியால் அன்று வெளிச்சமாய் இருந்த அவர்கள் வாழ்க்கை இன்று ________ போனது.

a. வெளிச்சமற்றுப்

b. இருட்டாய்ப்

c. மங்கலாய்ப்

d. கெட்டதாய்ப்

36. ‘எனது இளமைக் கனவு இன்றுதான் ____________ ஆனது ! என்று வேலை கிடைத்த மணி மகிழ்ச்சியில் பூரித்தான்.

a. நனவு

b. நிறைவு

c. புதிது

d. பகல் கனா

Structure of Language
மொழி அமைப்பு 3

A. Sentence Completion
வாக்கிய நிறைவாக்கம்

ஒவ்வொரு கூற்றின் கீழ் a, b, c, d என நான்கு தெரிவுகள் கொடுக்கப்பட்டுள்ளன. கோடிட்ட இடத்திற்குப் பொருத்தமான ஒன்றைத் தேர்ந்தெடுத்து அதை விடைத்தாளில் எழுதுக / வட்டமிட்டுக் காட்டுக.

1. குரு சென்ற இடமெலாம் சீடனும் உடன் ―――――― .
   - a. செல்கிறான்
   - b. செல்வான்
   - c. செல்கின்றான்
   - d. சென்றான்

2. இப்போட்டியில் இவர் ―――――― வெற்றி பெறுவார்.
   - a. தானாகவே
   - b. தாமாகவே
   - c. தானே
   - d. தானேயாக

3. ஒவ்வொரு நிகழ்ச்சியும் முதல்வருக்குத் ―――――― .
   - a. தெரிவிக்கப்படுகிறது
   - b. தெரிவிக்கப்படுகின்றன
   - c. தெரிவிக்கப்பட்டன
   - d. தெரிவிக்கப்படுகிறார்

4. போர்கள் நாட்டைப் ―――――― .
   - a. பாழாக்குகிறது
   - b. பாழாக்கியது
   - c. பாழாக்குகின்றன
   - d. பாழாக்குகின்றது

5. ஒவ்வொரு வீட்டிலும் ஒன்று அல்லது இரண்டு மாடிகள் —————— .
   a. உண்டு
   b. உள்ளன
   c. இருக்கிறது
   d. இல்லை

6. முதலமைச்சருக்குப் பொன்னாடை —————— .
   a. போட்டனர்
   b. போர்த்தினர்
   c. உடுத்தினர்
   d. கொடுத்தனர்

7. தாய் குழந்தைக்குப் பால் —————— .
   a. தந்தாள்
   b. கொடுத்தாள்
   c. அளித்தாள்
   d. ஊட்டினாள்

8. அவன் மாத்திரைகளை —————— .
   a. தின்றான்
   b. சுவைத்தான்
   c. விழுங்கினான்
   d. சாப்பிட்டான்

9. இரவில் ஆந்தை —————— .
   a. அலறும்
   b. அகவும்
   c. கூவும்
   d. சப்திக்கும்

10. வீட்டிற்குப் பனை ஓலையால் கூரை —————— .
   a. போட்டான்
   b. இட்டான்

c. வேய்ந்தான்
d. பின்னினான்

11. இந்த அழகிய ஓவியத்தை —————— யார் ?

a. எழுதியவர்
b. இயற்றியவர்
c. தீட்டியவர்
d. உருவாக்கியவர்

12. மாலதி —————— சிரித்தாள்.

a. கலகலவென
b. சடசடவென
c. பொலபொலவென
d. தடதடவென

13. நான் கூறிய நூல் —————— .

a. இதுவல்ல
b. இதுவன்று
c. இது தாம்
d. இவை தாம்

14. கோழி —————— .

a. கொத்தித் திரியும்
b. எத்தித் திருடும்
c. திரிந்து பறந்துவரும்
d. அண்டிப் பிழைக்கும்

15. எறும்பு —————— போகும்.

a. ஒன்றாகப்
b. கூட்டமாகப்
c. மந்தை மந்தையாகப்
d. சாரை சாரையாகப்

16. சேவல் ——————

a. அகவும்

b. கூவும்
c. பேசும்
d. குழறும்

17. நீர் ஊருக்குச் ——————

a. சென்றாரா ?
b. சென்றீரா ?
c. சென்றாயா ?
d. சென்றார்களா ?

18. தாங்கள் உணவு —————— .

a. உண்டீர்களா ?
b. உண்டீரா ?
c. உண்டனரா ?
d. உண்டார்களா ?

19. பூக்கள் மாலையில்—————— .

a. பூத்தது
b. பூக்கிறது
c. பூத்தன
d. பூக்கின்றது

20. உன்னுடைய கருத்தை நான் ஏற்றுக்கொள்ளமாட்டேன்; எனினும் —————— .

a. உன்னைப் பேசவிடமாட்டேன்.
b. நீ உன் கருத்துகளைச் சொல்லலாம்.
c. என்னை நீ பேசவிடு.
d. நீ ஆத்திரம் கொள்.

21. படிப்பகங்கள், பள்ளிக்கூடங்கள், விடுதிகள் —————— .

a. கட்டுவதற்கும் நன்கொடை வழங்கினான்.
b. மருத்துவமனையும் ஏற்படுத்தினான்.
c. ஆகியன இவன் முயற்சியால் ஏற்பட்டதாகும்.
d. மற்றும் மருத்துவமனையும் இவனால் கட்டப்பட்டன.

22. அன்று வேம்பாக இருந்த கருத்து இன்று ———— .

   a. கரும்பானது
   b. மறைந்தது
   c. நடந்தது
   d. விளைந்தது

23. அறிஞர் அண்ணா தமிழ் வளர்ச்சிக்குத் தூண்டு கோலாயும் ———— .

   a. ஊன்று கோலாய் இருந்தார்.
   b. ஊக்கத்தையும் அளித்தார்.
   c. ஊக்கம் பெற்றார்.
   d. ஊன்று கோலாயும் திகழ்ந்தார்.

24. வெயில் கடுமையாகவே இருந்தது ———— நாங்கள் வெளியே சென்றோம்.

   a. ஆகவே
   b. ஆயினும்
   c. எனவே
   d. ஆதலால்

25. காமராசரின் நல்ல தொண்டை ———— , நானும் மறவேன்.

   a. நாடு மறந்தது
   b. நீ மறந்தால்
   c. நாடும் மறந்தது
   d. நாடும் மறவாது

26. ———— நல்ல உடற் பயிற்சியாகும்.

   a. நடந்தால்
   b. நடத்தல்
   c. நடக்க
   d. நடந்ததால்

27. எத்தனை நண்பர்களை எதிர்பார்த்தேனோ ———— .

   a. அந்த நண்பர்களைக் கண்டேன்.
   b. அத்தனை நண்பர்களும் வந்தார்கள்.

c. அப்படியே அனைவரும் வந்தார்கள்.

d. அவ்வாறே அனைவரும் வந்தார்கள்.

28. ——————— இப்படி நடந்து கொண்டார்கள் ?

a. நண்பர்களா

b. அப்படிச் சொன்னவர்கள்

c. எனக்கா

d. எப்படிச் சொன்னவர்களா

29. ——————— அதை ஆளக் கற்றவர் அவர்.

a. எப்படி விரும்பினாரோ

b. யாரை ஆள நினைத்தாரோ

c. எதை எதையோ

d. எதை ஆளும் உரிமை வேண்டுமென்றாரோ

30. மனிதன் நாகரீகத்தின் முதற்படியில் என்று கால்வைக்கக் கற்றுக் கொண்டானோ ——————— .

a. இரண்டாம் படியில் ஏறுவதற்கும் முயன்றான்.

b. நற்பண்புகளின் தேவையை அறிய மறந்துவிட்டான்.

c. அன்றே அவனுக்கு ஆடை தேவையாயிருந்தது.

d. மனித சமுதாயம் முன்னேற்றம் அடையத் தொடங்கியது.

31. கண்ணினைக் காக்கும் இமைபோல ——————— விளைவிப்பவன் உழவன்.

a. கடுமையாக உழைத்து

b. அனைவரின் நன்மைக்கு

c. உழைப்பு உழைப்பு என்று

d. பயிரினைக் காத்து

32. தமிழர் எவரேனும் அயல் மொழியில் ——————— அவரைத் திருத்தும் பொறுப்பை பொதுமக்கள் ஏற்கவேண்டும்.

a. பேசினால்

b. நினைத்தால்

c. பேசிய

d. செயலாற்றிய

33. வெளிநாட்டு வியாபாரிகளிடம் உள்ள பொருட்களை எல்லாம் சதுரங்க ஆட்டத்தில் வென்று ———— ஆக்கிவிடுவார்.

a. அவர்களை பணக்காரர்களாக

b. அவர்களை விடுதலை

c. அவர்களை அரசர்களாக

d. அவர்களை அடிமைகளாக

34. பகத்சிங்கும் அவரது நண்பர்களும் போலீசார் வந்து ———— வரை கோஷமிட்டுக் கொண்டிருந்தனர்.

a. தங்களைப் பிடிக்கும்

b. தாங்கள் செல்லும்

c. போலீசாரை பிடிக்கும்

d. தாங்கள் பிடிக்கும்

35. மக்கள் திரையரங்கத்திற்குப் ———— இவர்களால் என்ன செய்ய முடியும் ?

a. போகாமலிருந்தால்

b. போய்

c. நடந்தால்

d. நடக்காமலிருந்தால்

36. பாரதிப்பெருமகன் காணும் தேசிய ஒருமைப்பாடு ———— நாட்டின் பல மாநிலங்களில் வாழும் மக்கள் எல்லோரும் ஒன்று படுதல் ஆகும்.

a. என்ற

b. என்பது

c. என

d. என்னும்

37. நாட்டுப்புற மக்கள் ———— பாடிவரும் பாடல்கள் நாட்டு பாடல்கள் ஆகும்.

a. பழமையாகப்

b. இன்றும் நாளையும்

c. தொன்று தொட்டுப்

d. நேற்றும் நாளையும்

38. வீரர்களைப் பகற்பொழுதிற்குள் —————— ஒன்று திரட்ட முடியும் என்று சிந்திக்கிறேன்.

a. எப்படி
b. ஏன்
c. ஏனென்றால்
d. அவ்வப்போது

39. இந்நாளில் உயர்வடைவதற்குப் பேச்சொழுக்கம் பெரிதும் தேவைப்படுகின்றது —————— பிறர் மதிக்கவேண்டும் என்ற ஆசை இல்லாதவன் உண்டா ?

a. உன்னைப்
b. தன்னைப்
c. என்னைப்
d. நம்மைப்

40. உயிர்கள் அனைத்தும் —————— படைப்பு என்பது பல்வேறு மதங்களின் நம்பிக்கை.

a. கடவுளின்
b. மனிதனின்
c. இயந்திரத்தின்
d. செயற்கையான

41. ஒருவன் —————— பயிற்சி செய்கிறானோ அவ்வளவுக்கு அவ்வளவு உடல் நலத்துடன் இருப்பான்.

a. எப்படி
b. எவ்வளவுக்கு எவ்வளவு
c. எந்த அளவு
d. எவ்வாறு

42. நாற்பது மாணவர்களையும் நான்கு அறைகளில், ஒவ்வோர் அறையிலும் —————— பேராக இருக்கச் செய்தனர்.

a. பத்துப்
b. பத்து வீதம்
c. பத்து பத்துப்
d. பத்து என்ற

43. மக்களிடம் ஆதரவு குறைவாக இருப்பதால், இந்தக் கட்சித் தலைகீழாக ——— தேர்தலில் வெற்றிபெற முடியாது.

a. நின்றால்
b. நின்றாலும்
c. நின்றால்தான்
d. நின்றவுடன்

44. கண்ணன் தந்தையோடு ——— .

a. சென்றான்
b. சென்றனர்
c. சென்றாள்
d. சென்றார்கள்

45. மாணவ மாணவியருள் யார் உரிய மதிப்பெண் வாங்கவில்லையோ ——— தேர்ச்சிபெற இயலாது.

a. அவன்
b. அவர்கள்
c. அவள்
d. அவர்

46. வேகமாக ——— பந்தயத்தில் வெற்றிபெறுவான்.

a. ஓடினால்
b. ஓடிய
c. ஓடி
d. ஓட

47. தொலைக்காட்சியில் ஒவ்வொரு ஞாயிறு ——— திரைப்படம் உண்டு.

a. தோறும்
b. வரை
c. வரைக்கும்
d. வரையில்

48. இளமையில் கண்ணாம்பூச்சி ——— எங்களால் மறக்க இயலாது.

a. ஆடியதை
b. ஆடுவதை
c. ஆடியபோது
d. பாடியதை

49. இன்றுடன் மூன்றாவது நாளாக மழை தொடர்ந்து ———————— .

a. பெய்கிறது.

b. பெய்து கொண்டிருக்கிறது.

c. பெய்தது.

d. பெய்யும்.

50. கைவிரல் ———————— காயம் ஏற்பட்டது.

a. பத்தில்

b. பத்திலும்

c. பத்தும்

d. பத்துக்கு

51. காட்டுக்கு மேயச் ———————— பசுக்கள் வீட்டுக்கு வந்த பசுக்களைவிட குறைவு.

a. சென்ற

b. செல்ல

c. சென்றால்

d. செல்லும் போது

52. வீட்டுத் தோட்டத்தில் உள்ள செடிகொடிகளைக் கொஞ்சம் ———————— அறியாதவன் தாவரவியல் படிக்க விரும்புவது வியப்பு அன்றோ!

a. கூட

b. மட்டும்

c. தான்

d. விட

53. வயிறு ———————— உடல் நலம் குறைந்து கொண்டே வரும்.

a. பருத்தால்

b. பருக்கிற

c. பருத்த

d. பருக்கும்

54. தாயார் எனக்கு ———————— விடத் தம்பிக்குக் கொடுத்த பணம் அதிகம்.

a. கொடுத்ததை

b. சம்பாதித்ததை

c. வாங்கியதை

d. கெடுத்ததை

55. பொன்னன் கண்ணனைச் சாப்பிட அழைத்தான். கண்ணனோ அதற்கு முன்பே ________

a. சாப்பிடுவான்.
b. சாப்பிட்டிருந்தான்.
c. சாப்பிட்டான்.
d. சாப்பிடுகிறான்.

56. இரவில் மின்சாரம் இராது. ———————— மாலையிலே சாப்பிட்டுவிடு.

a. ஆயினும்
b. ஆனால்
c. ஆகவே
d. ஆனாலும்

57. மின்னனு சக்தி என்பது ———————— வேறுபட்டது.

a. மின்சார சக்தியைவிட
b. மின்சார சக்தியிலிருந்து
c. மின்சார சக்தியால்
d. மின்சார சக்திக்கு

58. சமுதாயக் குற்றங்களான ஏமாற்றுதல் , திருடுதல், பேராசைப்படுதல், இன்னா செய்தல் முதலியவற்றை அவர் ———————— கண்டித்தார்.

a. வன்மையாகக்
b. வன்மையான
c. வன்மையால்
d. வன்மையும்

59. தீண்டாமை என்னும் கொடுமை மனிதனின் அவமானச் சின்னமாகவும், சமூகக் களங்கமாகவும் ________ கண்டு அவர் மனம் கொதித்தார்.

a. இல்லாததைக்
b. கடைபிடிப்பதை
c. அசிங்கமாகவும்
d. இருந்து வருவதைக்

60. உலகம் உய்யத் தோன்றிய பல உயர்ந்த மக்களை ஈன்றெடுத்த பெருமைக்கு ———————— பாரத அன்னை.

a. உரியவர்கள்

b. உரியவள்

c. உரியவன்

d. உரியது

61. வங்கநாடு, பாரதநாட்டை உலகறியச் செய்த பல பெரியார்களை———————— மாண்புடையது.

a. ஈன்றெடுத்த

b. ஈன்றெடுத்து

c. ஈன்றெடு

d. ஈன்றெடுத்தால்

62. அரவிந்தர் பேராசிரியராகவும், ———————— , இலக்கியத் திறனாய்வாளராகவும் திகழ்ந்தவர்.

a. தத்துவ ஞானி

b. தத்துவ ஞானியாக

c. தத்துவ ஞானியான

d. தத்துவ ஞானியாகவும்

63. அல்லற்படும் ஏழைகளிடம் இரங்கித் தம் சொந்தக் குடும்பத் தேவைகளையும், நலன்களையும் கூடச் ——————— கருதாது வள்ளலைப் போல் தம் வருவாயை வழங்கி வந்தார்.

a. சிறிய

b. சிறிது

c. சிறிதும்

d. சிறிதாக

64. அரவிந்தரின் அறிவுக் கூர்மையைக் ————— அனைவரும் வியந்தனர்.

a. கண்டு

b. காண

c. கண்டால்

d. கண்டிட

65. கீழ்நாட்டுப் பண்பாடுகளின் தொடர்பே ——————— மேலைநாட்டுக் கல்வியைப் பயில வேண்டுமென ஏற்பாடு செய்தனர்.

a. நிறைந்த

b. சிறிதும் இல்லாத
c. பெரிதும் நிறைந்த
d. சிறிதாக உடைய

66. அக்கல்லூரியின் முதல்வர் அரவிந்தருக்கு இலத்தீன் மொழியிலும் , இதர பாடங்களிலும் இருந்த ———————— க் கண்டு பெரிதும் மகிழ்ந்தார்.

a. தேர்ச்சி
b. தேர்ச்சியிலிருந்து
c. தேர்ச்சியை
d. தேர்ச்சிக்கு

67. அவனால்———————— கயிறாகத் திரிக்க முடியாது.

a. மணலுக்குக்
b. மணலால்
c. மணலைக்
d. மணலிலிருந்து

68. மலைக்கு வரும் ———————— உள்ள ஓடையின் மணலில் நடந்து மாலைப் பொழுதைப் போக்குவது வழக்கம்.

a. வழி
b. வழியே
c. வழிக்கு
d. வழியில்

69. 1957 - ல் தமிழக அரசு இயல் தமிழுக்கு மு.வ. வைத் ———————— பரிசு வழங்கிச் சிறப்பித்தது.

a. தேர்ந்தெடுக்கப்
b. தேர்ந்தெடுக்கிற
c. தேர்ந்தெடுத்துப்
d. தேர்ந்தெடுப்பதற்காகப்

70. அவர் ———————— ஆண்டிலிருந்து இறுதி வரை பெங்களூரில் தங்கி எழுதி வந்தார்.

a. 1957

b. 1957 - இல்

c. 1957 - ஆம்

d. 1957 - இன்

71. சிதம்பரனாரின் தியாகத்தைப் —————— அக்காலத்தில் அவருக்குப் பொருள் உதவி செய்து ஆதரிப்பார் எவருமில்லை.

a. பாராட்ட

b. பாராட்டி

c. பாராட்டிய

d. பாராட்டும்

72. " அவரா சொன்னார் !" என்று எல்லோரும் —————————— .

a. வியந்தனர்

b. வியந்தார்

c. வியப்பர்

d. வியந்தாள்

73. " காந்தியடிகள் ———— போனார் ?" என்று கேட்டார்.

a. தென்னாப்பிரிக்காவிற்குப்

b. தென்னாப்பிரிக்காவில்

c. தென்னாப்பிரிக்காவிற்காகப்

d. தென்னாப்பிரிக்காவிற்காப்

74. "அவருடன் அவர் மனைவியும் போனார் ——————— !"

a. அல்லவா

b. அப்படியா

c. இல்லை

d. ஆமாம்

75. அறிஞர்கள் தங்கள் காலநிலைக்கு ஏற்பத் தமிழை —————— வளம்பெறச் செய்தனர்.

a. வளர்ந்து

b. வளர்த்த

c. வளர்த்து

d. வளர்த்தால்

76. பகைவர்களிடமும் அன்பு செலுத்தி உரையாடி ———— நல்வழிப் படுத்தினர்.

a. அறிவுரை கூற
b. அறிவுரை கூறி
c. அறிவுரை கூறிய
d. அறிவுரை கூறும்

77. சங்கரனுக்குச் சுவரில் முட்டிக் கொள்ளலாம் ———— கன்னாபின்னாவென்று கோபம்.

a. அப்போது
b. போலக்
c. விடக்
d. என்று

78. இறைவழிபாட்டிற்கு உரிய பொருளாகவும் நெல் பயன்பட்டு வந்துள்ளது என்பதைச் ————.

a. சிலப்பதிகாரம் கூறுகிறது.
b. சிலப்பதிகாரச் செய்தி.
c. சிலப்பதிகாரத்தில் உள்ளது.
d. சிலப்பதிகாரத்தால் தெரிகிறது.

79. ஆன்மா வயப்படும் இடம் எதுவோ ———— ஆலயம் என்பது திருமூலர் வாக்கு.

a. அதுவே
b. இதுவோ
c. அதே
d. அதோ

80. நாட்டின் மானம் காத்த பேரரசர்களின் புகழைச் சங்ககாலப் பாடல்கள் ____ உலகிற்கு எடுத்து இயம்பி வருகின்றன.

a. அன்றும்
b. இன்றே
c. இன்றும்
d. நன்றும்

B. Error detection
பிழை கண்டறிதல்

கொடுக்கப்பட்டுள்ள தொடர்களின் கோடிட்ட ஒரு பகுதியில் பிழையுள்ளது - அது a, b, c, d என நான்கு தெரிவுகளாகக் கொடுக்கப்பட்டுள்ளது. அதைத் தேர்ந்தெடுத்து விடைத்தாளில் எழுதுக / வட்டமிட்டுக் காட்டுக.

1. கடுமையாக இடையறாது உழைப்பவனது செயல்கள் தானாகவே வெற்றிபெறும்.
   - a. கடுமையாக
   - b. இடையறாது
   - c. தானாகவே
   - d. வெற்றிபெறு

2. நீங்கள் இந்தமாத இறுதியிலாவது அல்லது அடுத்த மாதத் தொடக்கத்திலாவது வாருங்கள்.
   - a. இந்தமாத
   - b. இறுதியிலாவது
   - c. அல்லது
   - d. அடுத்தமாதத் தொடக்கத்திலாவது

3. ஒருவர் எப்படிப்பேசுகிறாரோ அப்படிப் போலவே வாழ்ந்தும் காட்ட வேண்டும்.
   - a. ஒருவர்
   - b. எப்படி பேசுகிறாரோ
   - c. அப்படிப் போலவே
   - d. வாழ்ந்தும் காட்டவேண்டும்

4. இங்கு நடைபெறும் ஒவ்வொரு நிகழ்ச்சிகளும் அரசுக்குத் தெரிவிக்கப் படுகிறது.
   - a. இங்கு நடைபெறும்
   - b. நிகழ்ச்சிகளும்
   - c. அரசுக்குத்
   - d. தெரிவிக்கப்படுகிறது

5. நெடுநேரம் வேலை செய்ததால் அவன் தாகமாய் மட்டுமன்று பசியாயிருந்தான்.
   - a. நெடுநேரம்
   - b. வேலைசெய்ததால்

c. மட்டுமன்று

d. பசியாயிருந்தான்

6. எங்கள் ஊர்க்கோடியில் ஒரு மாமரமொன்று உயரமாக வளர்ந்துள்ளது.

a. ஊர்க்கோடியில்

b. ஒரு மாமரமொன்று

c. உயரமாக

d. வளர்ந்துள்ளது

7. இப்பெருநகரில் உள்ள எந்தக் கடையிலும் நல்ல நூல்கள் கிடையாது.

a. இப்பெருநகரில்

b. எந்தக் கடையிலும்

c. நல்ல நூல்கள்

d. கிடையாது

8. வெகுநேரம் அலைந்து திரிந்த போதிலும் இவ்வூரில் இளநீர் கிடைக்கமாட்டேன் என்கிறது.

a. வெகுநேரம்

b. அலைந்து திரிந்த போதிலும்

c. இவ்வூரில் இளநீர்

d. கிடைக்கமாட்டேன் என்கிறது

9. சங்ககால மன்னர் மிகச்சிறந்த அறிவும் ஆற்றலும் உடையவராய் விளங்கினார்கள்.

a. சங்ககால மன்னர்

b. மிகச்சிறந்த அறிவும்

c. ஆற்றலும்

d. உடையவராய்

10. அறிவு ஒழுக்கத்திற்கும் அல்லது நற்குணத்திற்கும் கருவியாக அமைய வேண்டுமேயன்றி அடக்கியாள்வதற்குத் துணைசெய்வதாக இருத்தலாகாது.

a. ஒழுக்கத்திற்கும்

b. அல்லது

c. கருவியாக

d. அடக்கியாள்வதற்குத் துணைசெய்வதாக

11. நாடகத்தில் தோன்றும் பாத்திரங்கள் எல்லாம் உலகமக்களின் மாதிரிகளாக அமைகின்றனர்

a. நாடகத்தில் தோன்றும்

b. எல்லாம்

c. உலகமக்களின்

d. அமைகின்றனர்

12. ஒருவரின் வயது ஏறஏற வயதுடன் அறிவும் பண்பும் வளரச் செய்து வாழ்க்கையில் முன்னேற வேண்டும்.

a. ஏறஏற

b. பண்பும் வளரச் செய்து

c. வாழ்க்கையில்

d. முன்னேற வேண்டும்

13. கதிகலங்கிப் போன இராமன் என்ன செய்வதென்று புரியாமல் குழம்பிப் போயிருக்கும்போது கரடியின் உறுமலைக் கேட்டான்.

a. போன

b. புரியாமல்

c. போயிருக்கும்போது

d. கேட்டான்

14. இதை மறுத்து ஏதோ கூறவந்த படைவீரர்களை ஒன்றும் பேசவேண்டாம் என்றால் தடுத்து நிறுத்தி விரட்டியடித்தார்கள்.

a. மறுத்து

b. படைவீரர்களை

c. என்றால்

d. விரட்டியடித்தார்கள்

15. பணமும் அன்பும் ஓரிடத்தில் சேர்ந்து இருந்த முடியுமா என்று அவள் எப்போழுதும் எண்ணியதுண்டு.

a. ஓரிடத்தில்

b. இருந்த முடியுமா

c. அவள்

d. எண்ணியதுண்டு

16. யாரும் வந்தாலும், இன்றைக்கு எப்படியாவது பாடத்தை முடித்து, வகுப்பை விட்டு விடவேண்டும்.

a. யாரும்

b. எப்படியாவது

c. வகுப்பை

d. விடவேண்டும்

17. புத்தர் இரண்டு கைகளையும் நீட்டிக் கிழவியிடமிருந்து மாதுளம்பழத்தை வாங்கினான்.

a. இரண்டுகைகளையும்

b. நீட்டி

c. மாதுளம்பழத்தை

d. வாங்கினான்

18. தமிழ்நாட்டைப் பெருமை தேடித்தரும் பொய்க்கால் குதிரை ஆட்டம், கரக ஆட்டம், முதலியன, கிராமியக் கலைகள் ஆகும்.

a. தமிழ்நாட்டை

b. தேடித்தரும்

c. முதலியன

d. கலைகள்

19. திருமணத்திற்கு தாங்கள் குடும்பத்தில் வந்து மணமக்களை வாழ்த்த வேண்டும் என்று கூறினார்.

a. திருமணத்திற்கு

b. குடும்பத்தில்

c. மணமக்களை

d. கூறினார்

20. மோகனும் கண்ணனும் நேற்று மாலையில் கடைவீதியில் கோபாலுக்குச் சண்டை போட்டார்கள்.

a. மோகனும் கண்ணனும்

b. கடைவீதியில்

c. கோபாலுக்கு

d. போட்டார்கள்

21. ஆயுதம் செய்தல், ஆலைகள் வைத்தல், சாலைகள் அமைத்தல் முதலியது நாட்டின் முன்னேற்றத்திற்குரிய தொண்டுகளாகும்.

a. ஆலைகள் வைத்தல்

b. சாலைகள் அமைத்தல்

c. முதலியது

d. முன்னேற்றத்திற்குரிய

22. ரா.பி. சேதுப்பிள்ளை அவர்கள் நாவன்மை காரணமாகச் சொல்லின் செல்வர் என்று பதக்கமளிக்கப்பட்டுப் பாராட்டப்பட்டார்.

a. ரா. பி. சேதுப்பிள்ளை

b. நாவன்மை

c. பதக்கமளிக்கப்பட்டு

d. பாராட்டப்பட்டார்

23. "அரம் செய விரும்பு " என்னும் ஆத்திச்சூடிப் பாடலை என்தங்கை உரக்கப் படித்தாள்.

a. அரம் செய விரும்பு

b. ஆத்திச்சூடிப்

c. என்தங்கை

d. உரக்கப் படித்தாள்

24. என்னுடைய பெரிய அண்ணா நேற்றுத்தான் ஊரிலிருந்து வந்தது.

a. என்னுடைய

b. பெரிய அண்ணா

c. நேற்றுத்தான்

d. வந்தது

25. கதிரவன் கிழக்கே உதித்தால், மேற்கே உதித்தாலும் அவர்களுக்குக் கவலையில்லை.

a. கதிரவன்

b. கிழக்கே உதித்தால்

c. மேற்கே உதித்தாலும்

d. கவலையில்லை

26. நீ வந்தாய் என எதிர்பார்த்து நான் நெடுநேரம் அங்கேயே காத்திருந்தேன்.

a. வந்தாய்

b. எதிர்பார்த்து

c. நெடுநேரம்

d. அங்கேயே காத்திருந்தேன்

27. ஷாஜஹான் கட்டப்பட்ட தாஜ்மகால் பளிங்குக்கற்களைக் கொண்டு கட்டப்பட்டது.

a. ஷாஜஹான்

b. தாஜ்மகால்

c. பளிங்குக் கற்களைக்

d. கட்டப்பட்டது

28. மரத்தின்கீழ் ஏறிய குரங்கு நிறைய பழங்களைப் பறித்துப் போட்டது.

a. மரத்தின் கீழ்

b. ஏறிய குரங்கு

c. நிறைய பழங்களைப்

d. பறித்துப் போட்டது

29. இளங்கோவும், நம்பியும் நெடுந்தூரம் நடந்து காடுமலைகளையெல்லாம் கடந்து கடைசியில் ஒரு பாழும் மண்டபத்தை அடைந்தார்கள்.

a. நெடுந்தூரம் நடந்து

b. காடு மலைகளையெல்லாம்

c. பாழும் மண்டபத்தை

d. அடைந்தார்கள்

30. முயல் வேட்டைக்குப் போனவர்கள் காட்டைக் கலைப்பதுபோல் இறுதி முயற்சியாகக் கோயிலே அதிரும்படி கூச்சல் போட்டுக் கொண்டு ஊர்க்காவல்படை , கோயில் சந்துபொந்துகள் அலச ஆரம்பித்தது.

a. முயல் வேட்டைக்குப்

b. இறுதி முயற்சியாகக்

c. அதிரும்படி

d. சந்துபொந்துகள்

31. தொழிலாளர்களின் நியாயமான போராட்டத்திற்குப் பொதுமக்களின் ஆதரவிருந்தன.

a. தொழிலாளர்களின்

b. போராட்டத்திற்குப்

c. பொதுமக்களின்

d. ஆதரவிருந்தன

32. கண்ணனும் தந்தையும் ஊரிலிருந்து இங்கு வந்தால் எங்கே தங்குவான்?

a. ஊரிலிருந்து

b. வந்தால்

c. எங்கே

d. தங்குவான்

33. சோழ மன்னர் கட்டப்பட்ட கோயில்களில் சிற்பங்களுக்குக் குறைவு இல்லை.

a. சோழமன்னர்

b. கோயில்களில்

c. சிற்பங்களுக்குக்

d. இல்லை

34. வரிச் சோதனையாளர் ஊரில் உள்ள ஒவ்வொரு வீட்டைச் சோதனையிட்டனர்.

a. வரிச்சோதனையாளர்

b. ஊரில் உள்ள

c. ஒவ்வொரு வீட்டைச்

d. சோதனையிட்டனர்

35. ஊருக்குச் சென்ற மகன் உடனே திரும்பியதைப் பார்த்தத் தாய்க்கு எண்ணங்கள் பலவும் எழுந்தது.

a. சென்ற

b. திரும்பியதைப்

c. பார்த்த

d. எழுந்தது

36. இந்தச் சுவரில் எழுதுபவர்கள் காவல் துறையில் ஒப்படைக்கப் படுவார்கள்.

a. சுவரில்

b. எழுதுபவர்கள்

c. காவல் துறையில்

d. ஒப்படைக்க

37. தமிழ்த் திருமணமுறையை ஆதரித்தும் மற்ற முறைகளை எதிர்த்துப் பேசினார்.

 a. தமிழ்த் திருமணமுறையை

 b. ஆதரித்தும்

 c. எதிர்த்துப்

 d. பேசினார்

38. வேலன் தேர்விற்காக இரவுபகலில் படித்தும் தேர்ச்சி அடையவில்லை.

 a. தேர்விற்காக

 b. இரவுபகலில்

 c. தேர்ச்சி

 d. அடையவில்லை

39. என் நண்பன் தலைகீழாக நின்றால் தேர்தலில் வெல்ல மாட்டான்.

 a. என் நண்பன்

 b. தலைகீழாக

 c. நின்றால்

 d. வெல்லமாட்டான்

40. அவன் பணக்காரனே தவிரப் பாராட்டும் பண்பு நலம் கொண்டவன் அல்ல.

 a. பணக்காரனே

 b. தவிர

 c. பண்புநலம்

 d. அல்ல

41. நாட்டியக்காரியுடன் குழல் வாசிப்பவன் ஒருவனும் வீணை வாசிப்பவன் ஒருவனும் மிருதங்கம் வாசிப்பவன் ஒருவனும் இருந்தான்.

 a. நாட்டியக்காரியுடன்

 b. குழல் வாசிப்பவன்

 c. ஒருவனும்

 d. இருந்தான்

42. எண்ணும் எண்ணம் சரியாக இருந்தால் சொல்லும் சரியாக இருந்தது.

 a. எண்ணும் எண்ணம்

 b. சரியாக

c. இருந்தால்

d. இருந்தது

43. சேரநாடு இயற்க்கை அன்னை வீற்றிருக்கும் திருநாடு.

a. சேரநாடு

b. இயற்க்கை

c. வீற்றிருக்கும்

d. திருநாடு

44. தந்தை தன் மகனுக்கு அறிவுரையாக எடுத்துக் கூறியவை யாது ?

a. மகனுக்கு

b. அறிவுரையாக

c. எடுத்துக் கூறியவை

d. யாது

கீழே கொடுக்கப்பட்டுள்ள வாக்கியங்களில் சரியான வாக்கியத்தை இனங்கண்டு அதை விடைத்தாளில் எழுதுக / வட்டமிட்டுக் காட்டுக.

45. a. இறச்சி உண்பது நல்லது.

b. இறைச்சி உண்பது நல்லது.

c. இரச்சி உண்பது நல்லது.

d. இரைச்சி உண்பது நல்லது.

46. a. ஒருவள் நேற்று வந்தாள்.

b. ஒறுவள் நேற்று வந்தாள்.

c. ஒறுத்தி நேற்று வந்தாள்.

d. ஒருத்தி நேற்று வந்தாள்.

47. a. இது சிவப்புப் பேனா.

b. இது செவப்புப் பேனா.

c. இது சிவப்புப் பேணா.

d. இது செகப்பு பேனா.

48. a. இது நஞ்சைப் பயிர்.

b. இது நன்சைப் பயிர்.

c. இது நன்செய் பயிர்.
d. இது நஞ்செய் பயிர்

49. a. சந்தனம் மணக்கும்
b. சந்தணம் மணக்கும்
c. சந்தநம் மணக்கும்
d. சந்தணம் மனக்கும்.

50. a. புழியம்பழம் புளிக்கும்.
b. புளியம்பளம் புழிக்கும்
c. புலியம்பழம் புலிக்கும்
d. புளியம்பழம் புளிக்கும்.

51. a. மாணவர் பலர் வருகின்றார்கள்.
b. மாணவர் பலர் வருகின்றனர்.
c. மாணவர்கள் பலர் வருகின்றனர்.
d. மாணவர் பலர் வருகிறார்கள்.

52. a. அவை நல்ல பாடல்கள் அல்ல.
b. அவைகள் நல்ல பாடல்கள் அன்று.
c. அவை நல்ல பாடல்கள் அன்று.
d. அவைகள் நல்ல பாடல்கள் அன்று.

53. a. எல்லாப் பழங்களும் அழுகிப் போயிற்று.
b. எல்லாப் பழங்களும் அழுகிப் போகின்றது.
c. எல்லாப் பழங்களும் அழுகிப் போனது.
d. எல்லாப் பழங்களும் அழுகிப் போயின.

54. a. நான் கல்லூரி மாணவன் அன்று.
b. நான் கல்லூரி மாணவன் அல்ல.
c. நான் கல்லூரி மாணவன் அல்லன்
d. நான் கல்லூரி மாணவன் அல்லள்.

55. a. ஒவ்வொருவரும் தம் வீடு சேர்ந்தனர்.
b. ஒவ்வொரும் தம் வீடு சேர்ந்தார்.
c. ஒவ்வொருவரும் தம்தம் வீடு சேர்ந்தார்.
d. ஒவ்வொருவரும் தம்தம் வீடு சேர்ந்தனர்.

56. a. ஒவ்வொன்றும் தம்தம் இடத்தை அடைந்தன.
    b. ஒவ்வொன்றும் தன் இடத்தை அடைந்தது.
    c. ஒவ்வொன்றும் தன்தன் இடத்தை அடைந்தது.
    d. ஒவ்வொன்றும் தன்தன் இடத்தை அடைந்தன.

57. a. ஒவ்வொருவரும் சிலப்பதிகாரம் படிக்கின்றார்கள்.
    b. ஒவ்வொருவரும் சிலப்பதிகாரம் படிக்கின்றனர்.
    c. ஒவ்வொருவரும் சிலப்பதிகாரம் படிக்கிறார்.
    d. ஒவ்வொருவரும் சிலப்பதிகாரம் படித்தார்.

58. a. நாளை அவனாவது இவனாவது வருவான்.
    b. நாளை அவனாவது இல்லை இவனாவது வருவான்.
    c. நாளை அவனாவது அல்லது இவனாவது வருவான்.
    d. நாளை அவனாவது இவனாவது வருவர்.

59. a. கடையில் பலவிதமான நூல் கிடைக்கின்றது.
    b. கடையில் பலவிதமான நூல்கள் கிடைக்கின்றது.
    c. கடையில் பலவிதமான நூல்கள் கிடைக்கின்றன.
    d. கடையில் பலவிதமான நூல் கிடைக்கின்றன.

60. a. குளம் குட்டைகள் துப்புரவுபடுத்தப்படுகின்றன.
    b. குளம் குட்டைகள் துப்புரவுபடுத்தப்படுகிறது.
    c. குளங்கள் குட்டை துப்புரவுபடுத்தப்படுகின்றன.
    d. குளம் குட்டை துப்புரவுபடுத்தப்படுகின்றது.

61. a. இதனால் நாம் ஊருக்குப் போக உதவுகிறது.
    b. இதனால் நாம் ஊருக்குப் போக உதவுகின்றன.
    c. இது நாம் ஊருக்குப் போக உதவுகிறது.
    d. இவை நாம் ஊருக்கு போக உதவுகிறது.

62. a. ஞாயிற்றுக்கிழமைகள்தோறும் விடுமுறை உண்டு.
    b. ஞாயிற்றுக்கிழமைகள்தோறும் விடுமுறை உள.
    c. ஞாயிற்றுக்கிழமைதோறும்விடுமுறை உண்டு.
    d. ஞாயிற்றுக்கிழமைதோறும்விடுமுறைகள் உள.

C. Sentence Comprehension
வாக்கியத் தன்மை உணர்தல்

ஒவ்வொரு வாக்கியத்தின் கீழேயும், அதே பொருள் உணர்த்தும் வாக்கியம் a, b, c,d எனத் தெரிவுகளில் கொடுக்கப்பட்டுள்ளது. அதைத் தேர்ந்தெடுத்து விடைத்தாளில் எழுதுக/ வட்டமிட்டுக் காட்டுக.

1. தமிழர் எவரேனும் அயல் மொழியில் பேசினால், அவரைத் திருத்தும் பொறுப்பைப் பொதுமக்கள் ஏற்றல் வேண்டும்.
   - a. ஒவ்வொரு தமிழனும் அயல்மொழியின் மீது பற்றுக் கொள்ளல் வேண்டும்
   - b. ஒவ்வொரு தமிழனும் பொதுமக்களுக்கு அயல்மொழியில் பேச வழிசெய்ய வேண்டும்.
   - c. ஒவ்வொரு தமிழனும் தன் தாய்மொழியான தமிழில்தான் பேசவும், நினைக்கவும் வேண்டும்.
   - d. ஒவ்வொரு தமிழனும் பொதுமக்களும் தத்தம் அயல்மொழிகளில் பேச வேண்டும்.

2. அக்காலத்தில் நாட்டியமாட விழையும் மகளிர் சிறுமியாக இருக்கும்பொழுது பயிற்சியைத் தொடங்குவர்.
   - a. நாட்டியம் கற்றுக்கொள்ள வளர்ந்த பருவமே ஏற்றது.
   - b. பெரியவரானால் நாட்டியம் கற்றுக் கொள்வது எளிது.
   - c. பெரியவரானால் நாட்டியம் கற்றுக் கொள்வது கடினமாகும்.
   - d. நாட்டியம் கற்றுக்கொள்ள ஏற்ற வயது சிறுகுழந்தைப் பருவமேயாகும்.

3. மாமாவுக்கு ரசகுல்லா என்றால் மிகவும் பிடிக்குமே என்றான் பாபு.
   - a. தனக்கு ரசகுல்லா பிடிக்கும் என்றான்.
   - b. மாமாவுக்கு ரசகுல்லா வாங்கிக் கொடுக்க வேண்டும் என்றான்.
   - c. தனக்கு ரசகுல்லா அவ்வளவாக பிடிக்காது என்றான்.
   - d. மாமாவுக்குப் பிடிக்காத இனிப்பு ரசகுல்லா என்றான்.

4. செய்ய வேண்டியதைக் காலத்தில் செய்யாவிட்டாலும் தீங்கு நேரும்.
   - a. எந்த ஒரு செயலையும் உரியகாலத்தில் செய்தால் தீமை வரும்.
   - b. எந்த ஒரு செயலையும் உரிய காலத்தில் செய்தால் எத்தீமையும் வராது.
   - c. எந்த ஒரு செயலையும் உரியகாலத்தில் செய்துவிட்டாலும் தீமை வரும்.
   - d. எந்த ஒரு செயலையும் உரிய காலத்தில் செய்யாமல் இருந்தால் தீமை வராது.

b. எவரெஸ்ட்டைத் தவிர உயரமான சிகரம் உலகத்தில் இல்லை.

c. மற்ற சிகரங்களில் எவரெஸ்ட் அதிக உயரமுடையது.

d. மற்ற சிகரங்கள் சிறியவை; ஆனால் எவரெஸ்ட் உயரமானது.

11. இந்திய நகரங்களில் மிகப்பெரிய நகரம் பம்பாய்.

a. பம்பாய் இந்திய நகரங்களில் மிகப்பெரியது.

b. பம்பாயை விட இந்திய நகரங்களில் மிகப்பெரியது வேறு கிடையாது.

c. நகரங்களில் மிகப்பெரியது பம்பாய்.

d. இந்தியாவில் உள்ள பெரிய நகரங்களுள் ஒன்று பம்பாய்.

12. இராமன் நல்ல மாணவன். அதனால் தலைவனாகத் தேர்ந்தெடுக்கப்பட்டான்.

a. இராமன் நல்ல மாணவர் தலைவனாகத் தேர்ந்தெடுக்கப்பட்டான்.

b. இராமன் நல்ல மாணவன் ஆனால் தலைவனாகத் தேர்ந்தெடுக்கப்பட்டான்.

c. இராமன் நல்ல மாணவன் என்பதாலேயே தலைவனாகத் தேர்ந்தெடுக்கப்பட்டான்.

d. இராமன் தேர்ந்தெடுக்கப்பட்டதற்கு அவன் நல்ல மாணவன்.

13. பணக்காரனாக இருந்தும் அவனிடம் மகிழ்ச்சி இல்லை.

a. பணக்காரனாக இருப்பதால் அவனிடம் மகிழ்ச்சி இல்லை.

b. பணக்காரன் ஆகையால் அவனிடம் மகிழ்ச்சி இல்லை.

c. பணம் இருந்தும் அவனிடம் மகிழ்ச்சி இல்லை,.

d. பணம் இருக்கும் காரணத்தால் அவனிடம் மகிழ்ச்சி இல்லை.

14. நான் அவனாக இருந்தால் அப்படிச் செய்திருக்கமாட்டேன்.

a. நான் அவனானால் அப்படிச் செய்திருக்கமாட்டேன்.

b. நான் அவன் நிலையில் இருந்தால் அப்படிச் செய்திருக்க மாட்டேன்.

c. நான் அவனில்லை என்பதால் அப்படிச் செய்திருக்கமாட்டேன்.

d. நான் அவனாக மாறமுடியாது என்பதால் அப்படிச் செய்யமாட்டேன்.

15. கவனக்குறைவினால் விபத்துகள் நடைபெறுகின்றன.

a. கவனக்குறைவே விபத்திற்குக் காரணம்.

b. கவனம் இருப்பதால் விபத்துகள் நடைபெறுகின்றன.

c. கவனக்குறைவும் விபத்திற்குக் காரணம்.

d. கவனக்குறைவு காரணமாக விபத்துகள் நடைபெறுகின்றன.

16. வீணை வாசிக்கும் பெண்ணே என் சகோதரி.

a. வீணை வாசிக்கும் பெண் யாரோ அவளே என் சகோதரி.
b. வீணை வாசிக்கும் பெண்தான் என் சகோதரி.
c. வீணை வாசிப்பதால் அவள் என் சகோதரி.
d. வீணை வாசிப்பவள் என் சகோதரிதான்.

17. உனக்கு எது பிடித்ததோ அதுவே எனக்கும் பிடித்தது.

a. உனக்குப் பிடித்தது எனக்கும் பிடித்தது.
b. உனக்குப் பிடிக்கும் என்பதால் எனக்குப் பிடித்தது.
c. உனக்குப் பிடித்ததால் அது எனக்கும் பிடிக்கும்.
d. உனக்குப் பிடித்த பொருளை நானும் விரும்புவேன்.

18. கானகத்தின் கவினைக் கானகத்திலன்றி வேறெங்கும் காண இயலாது.

a. கானகத்தின் அழகை வேறெங்கும் காண முடியாது.
b. கானகத்தின் அழகைக் கானகத்தில்தான் காண முடியும்.
c. கானகத்தின் அழகைக் கானகத்தில் காண முடியாது.
d. கானகத்தில் காண்பதே தனி அழகு.

19. சாதிகள் இல்லையடி பாப்பா - குலத் தாழ்ச்சி உயர்ச்சி சொல்லல் பாவம்.

a. சாதிப் பிரிவுகள் நம்மிடம் இல்லை.
b. உயர்ந்த சாதி, தாழ்ந்த சாதி என்றால் பாவம்.
c. சாதிப் பற்று குழந்தைகளிடத்தில் வளரக் கூடாது.
d. சாதிப் பற்றுக் கொண்டால் குழந்தைகள் தாழ்வர்.

20. முற்றிய நெற்கதிர்கள் கற்றறிந்த அறிஞர்களைப் போலச் சாய்ந்து கிடந்தன.

a. கற்றறிந்த அறிஞர்கள் தலை குனிந்து இருப்பார்கள்.
b. கற்றறிந்த அறிஞர்கள் வெட்கப்படுவார்கள்.
c. கற்றறிந்த அறிஞர்கள் சாய்ந்து கிடப்பார்கள்.
d. கற்றறிந்த அறிஞர்கள் அடக்கத்துடன் இருப்பார்கள்.

21. உங்களுக்கும் உங்கள் குடும்பத்தினருக்கும் வாழ வழிவகைகளைக் காண முயலும்போது, சமூகத்திற்குரிய உங்கள் கடமையினையும் நீங்கள் ஆற்ற வேண்டியுள்ளீர்கள்.

a. சமூகத்திற்காக நீங்கள் பாடுபடவேண்டிய நிலையில் உள்ளீர்கள்.
b. குடும்பத்தினருக்காக வாழ வேண்டும்.

c. உங்களுக்கு வாழ வழிவகைகளைக் காண வேண்டும் . சமூகத்தையும் உங்கள் உதவிக்கு உரியதாக்கி கொள்ள வேண்டும் .

d. ஒவ்வொருவரும் தங்களுக்காகவும் , குடும்பத்திற்காகவும் மட்டுமல்லாமல் சமூகத்திற்காகவும் வாழ வேண்டும்.

22. தமிழ் மணம் வீசும் எந்த இடத்திலும் அவர் பாட்டு இசைக்கப்படாமல் இருப்பதில்லை.

a. அவர் பாட்டு எங்கெங்கோ பாடப்படுகிறது.

b. அவர் பாட்டில் தமிழ் மணம் வீசுகிறது.

c. அவர் பாட்டு மணக்கிறது.

d. அவர் பாட்டு எல்லா இடங்களிலும் பாடப்படுகிறது.

23. "முட்டாளைத் தவிர வேறு எந்த ஒரு மனிதனும் பணத்தைத் தவிர வேறு ஒன்றிற்காகவும் எழுதுவது இல்லை" என்றார் ஆங்கில இலக்கிய மன்னன் ஜான்சன்.

a. "முட்டாள் பணத்திற்காக மட்டுமே எழுதுகிறான்" என்றார் ஜான்சன்.

b. "முட்டாள் பணத்திற்காக எழுத மாட்டான்" என்றார் ஜான்சன்.

c. " அறிஞர் பணத்திற்காக எழுத மாட்டார்" என்றார் ஜான்சன்.

d. "அறிஞர் பணத்திற்காக மட்டுமே எழுதுவர்" என்கிறார் ஜான்சன்.

24. ஓடை , ஆறு, குளம், கடல், அருவி, மலை முதலியவற்றைக் காண்பதில் அவருக்கு விருப்பம் மிகுதி.

a. நீர் நிலைகளைக் காண்பது மட்டும் அவருக்குப் பிடிக்கும்.

b. ஓடை, ஆறு போன்றவை அவருக்குப் பிடிக்கும்.

c. இயற்கைக் காட்சிகளைக் காண்பது அவருக்குப் பிடிக்கும்.

d. கடலில், அருவியில் குளிப்பது அவருக்குப் பிடிக்கும்.

25. திருமணத்தின்போது ஆடை வாங்குவதற்காக மாமனார் கொடுத்த ஐம்பது ரூபாயில் முப்பது ரூபாய்க்குக் கதராடை வாங்கிக் கொண்டு, மீதி இருபது ரூபாயை அவரிடமே திருப்பிக் கொடுத்துவிட்டார்.

a. பிழைக்கத் தெரியாதவர்.

b. செலவு செய்யத் தெரியாதவர்.

c. உடை முதலியவற்றில் எளிமையைப் போற்றினார்.

d. மிகுந்த கஞ்சத்தனமாக இருந்தார்.

26. கலாவுக்கும் மாலாவுக்கும் அவர்கள் அண்ணா நல்ல புத்தகங்கள் வாங்கிக் கொடுத்தார்.

a. கலாவுக்கு அண்ணா நல்ல புத்தகங்கள் வாங்கிக் கொடுத்தார்.

b. அண்ணா மாலாவுக்கு நல்ல புத்தகங்கள் வாங்கிக் கொடுத்தார்.
c. நல்ல புத்தகங்கள் அண்ணனால் மாலாவுக்கும் கலாவுக்கும் வாங்கிக் கொடுக்கப்பட்டன.
d. நல்ல புத்தகங்கள் மாலாவால் அண்ணனுக்கு வாங்கிக் கொடுக்கப்பட்டன.

27. சங்க காலத்தில் வாணிகத்தில் அறநெறியைக் கடைப்பிடித்தனர்.

a. அறநெறி சங்ககாலத்தில் இருந்தது.
b. சங்ககாலத்தில் வாணிகம் சிறப்பாக நடந்தது.
c. சங்ககாலத்தில் அறநெறியும் வாணிகமும் கடைப்பிடித்தனர்.
d. அறநெறி சங்ககால வாணிகத்தில் கடைப்பிடிக்கப்பட்டது.

28. கதிர்வேல் பள்ளிக்கு வந்தான். முருகன் பள்ளிக்கு வந்தான்.

a. கதிர்வேலும் முருகனும் பள்ளிக்கு வந்தனர்.
b. கதிர்வேல் வந்தபின் முருகன் பள்ளிக்கு வந்தான்.
c. கதிர்வேல் வந்ததால் முருகன் பள்ளிக்கு வந்தான்.
d. கதிர்வேல் முருகன் வருவதற்கு முன் பள்ளிக்கு வந்தான்.

29. மேகம் கறுத்தது, மயில் கண்டது, அதனால் மகிழ்ந்து தோகையை விரித்து ஆடியது.

a. மேகம் கறுத்ததை மயில் கண்டதனால் மகிழ்ந்து தோகையை விரித்து ஆடியது.
b. மயிலைக் கண்ட மேகம் கறுத்ததால் மகிழ்ந்து தோகையை விரித்து ஆடியது
c. மயில் மகிழ்ந்து தோகையை விரித்து ஆடியதால் மேகம் கறுத்தது.
d. மேகம் கறுத்ததும், மயில் கண்டதும், தோகையை மகிழ்ந்தும், விரித்தும் ஆடியது.

30. மாணிக்கவாசகரின் திருவாசகம், போப் என்ற ஆங்கிலேயரால் ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கப்பட்டது.

a. போப் என்ற ஆங்கிலேயரால் எழுதப்பட்ட திருவாசகம் மாணிக்கவாசகரால் தமிழில் மொழி பெயர்க்கப்பட்டது.
b. மாணிக்கவாசகர் ஆங்கிலத்தில் எழுதிய திருவாசகம் போப் என்ற ஆங்கிலேயரால் மொழிபெயர்க்கப்பட்டது.
c. போப் எழுதிய திருவாசகத்தை மாணிக்கவாசகர் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தார்.
d. மாணிக்கவாசகர் பாடிய திருவாசகத்தை, போப் என்ற ஆங்கிலேயர் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தார்.

D. Transformation
மாற்றம்

கொடுக்கப்பட்டுள்ள வாக்கியங்கள் ஒவ்வொன்றும் அடைப்புக்குள் தரப்பட்டுள்ள வாக்கிய வகைகளாக மாற்றி a, b, c, d என்ற தெரிவுகளில் கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றுள் பொருத்தமானதைத் தேர்ந்தெடுத்து அதை விடைத்தாளில் எழுதுக / வட்டமிட்டுக் காட்டுக.

1. மோகன் கல்லூரிப் பேராசிரியர். (*சமன்பாட்டு வாக்கியத்தை விரிவாக்குக*)
   - a. மோகன் கல்லூரியில் பேராசிரியராக இருக்கிறார்.
   - b. மோகன் கல்லூரியில் பேராசிரியர்.
   - c. மோகன் பேராசிரியராக இருக்கிறார்.
   - d. மோகன் கல்லூரியில் இருக்கிறார்.

2. ஆமாம். அவர் இன்று ஊருக்குப் போகவில்லை (*வினா வாக்கியம்*)
   - a. அவர் இன்று ஊருக்குப் போனாரா ?
   - b. அவர் எங்கே போகவில்லை ?
   - c. அவர் இன்று ஊருக்குப் போகவில்லையா ?
   - d. ஆமா, அவர் ஊருக்குப் போனாரா ?

3. நான் நாளை திரைப்படத்திற்குப் போவேன். (*எதிர்மறை வாக்கியம்*)
   - a. நான் நாளை திரைப்படத்திற்குப் போகவில்லை.
   - b. நான் நாளை திரைப்படத்திற்குப் போக மாட்டேன்.
   - c. நான் நாளை திரைப்படத்திற்குப் போவேன் இல்லை.
   - d. நான் நாளை திரைப்படத்திற்கு போகாது.

4. திருவள்ளுவர் திருக்குறளை எழுதினார். (*செயப்பாட்டுவினை வாக்கியம்*)
   - a. திருக்குறளைத் திருவள்ளுவரால் எழுதப்பட்டது.
   - b. திருக்குறள் திருவள்ளுவரால் எழுதப்பட்டது.
   - c. திருவள்ளுவர் திருக்குறளை எழுதுவித்தார்.
   - d. திருக்குறள் திருவள்ளுவரால் எழுதுவிக்கப்பட்டது.

5. அரசன் புலவரை வரவேற்று வணங்கினான். (*செயப்பாட்டுவினை வாக்கியம்*)
   - a. அரசனால் புலவரை வரவேற்று வணங்கப்பட்டான்.

b. புலவர் அரசனால் வரவேற்று வணங்கப்பட்டார்.

c. புலவர் அரசனால் வரவேற்கப்பட்டு வணங்கப்பட்டார்.

d. புலவரால் அரசன் வரவேற்கப்பட்டு வணங்கப்பட்டார்.

6. ‘பொன்னியின் செல்வன்’ என்னும் புதினம் கல்கியால் எழுதப்பட்டது. (*செய்வினை வாக்கியம்*)

a. ‘பொன்னியின் செல்வன்’ என்னும் புதினம் கல்கி எழுதினார்.

b. ‘பொன்னியின் செல்வன்’ என்னும் புதினத்தைக் கல்கி எழுதினார்.

c. கல்கியால் ‘பொன்னியின் செல்வன்’ என்னும் புதினம் எழுதினார்.

d. ‘பொன்னியின் செல்வன்’ என்னும் புதினத்தைக் கல்கியால் எழுதினார்.

7. வாசுகி பெரியவரால் அழைக்கப்பட்டு அறிவுறுத்தப்பட்டாள். (*செய்வினை வாக்கியம்*)

a. வாசுகி பெரியவரால் அழைத்து அறிவுறுத்தப்பட்டாள்.

b. பெரியவர் வாசுகி அழைத்து அறிவுறுத்தினார்.

c. வாசுகி பெரியவரை அழைத்து அறிவுறுத்தினாள்.

d. பெரியவர் வாசுகியை அழைத்து அறிவுறுத்தினார்.

8. ஆசிரியர் தமது இல்லத்துக்கு வந்தால் இலக்கணத்தை நன்முறையில் கற்றுக் கொடுப்பதாக மாணவனிடம் கூறினார். (*நேர்கூற்று*)

a. ஆசிரியர், ‘என் இல்லத்துக்கு வந்தால் இலக்கணத்தை நன்முறையில் கற்றுக்கொடுப்பேன்’ என்று மாணவனிடம் கூறினார்.

b. ஆசிரியர், ‘இல்லத்துக்கு வந்தால் இலக்கணத்தை நன்முறையில் கற்றுக்கொடுப்பேன்’ என்று மாணவனிடம் கூறினார்.

c. ஆசிரியர், ‘தமது இல்லத்துக்கு வந்தால் இலக்கணத்தை நன்முறையில் கற்றுக்கொடுப்பேன்’ என்று மாணவனிடம் கூறினார்.

d. எனது இல்லத்துக்கு வந்தால் இலக்கணத்தை நன்முறையில் கற்றுக்கொடுப்பதாக ஆசிரியர் மாணவனிடம் கூறினார்.

9. அம்மா எனக்குப் பத்துரூபாய் தருவதாக என்னிடம் கூறினார். (*நேர் கூற்று*)

a. அம்மா ‘எனக்குப் பத்து ரூபாய் தருகிறேன்’ என்று என்னிடம் கூறினார்.

b. அம்மா ‘உனக்குப் பத்து ரூபாய் தருகிறேன்‘ என்று உன்னிடம் கூறினார்.

c. அம்மா, ‘உனக்குப் பத்து ரூபாய் தருகிறேன்’ என்று என்னிடம் கூறினார்.

d. அம்மா, ‘உன்னிடம் பத்து ரூபாய் தருகிறேன்’ என்று என்னிடம் கூறினார்.

10. 'தம்பி, பாடத்தைப் படி' என்று ஆசிரியர் கூறினார் (*அயற்கூற்று*)

    a. ஆசிரியர் தம்பி பாடத்தைப் படி என்று கூறினார்.

    b. ஆசிரியர் பாடத்தைப் படி தம்பி என்று கூறினார்.

    c. ஆசிரியர் பாடத்தைப் படி என்று தம்பிக்குக் கூறினார்.

    d. ஆசிரியர் பாடத்தைப் படிக்குமாறு தம்பிக்குக் கூறினார்.

11. 'கடைக்கு வந்தால் பழம் வாங்கித் தருகிறேன்' என்று மகனிடம் அம்மா கூறினார். (*அயற்கூற்று*)

    a. அம்மா மகனிடம் கடைக்கு வந்தால் பழம் வாங்கித் தருவதாகக் கூறினார்.

    b. கடைக்கு வந்தால் பழம் வாங்கித் தருகிறேன் என்று மகனிடம் அம்மா கூறினார்.

    c. அம்மா மகன் கடைக்கு வந்தால் பழம் வாங்கித் தருகிறேன் என்று கூறினார்.

    d. அம்மா கடைக்கு வந்தால் பழம் வாங்கித் தருகிறேன் என்று மகன் கூறினார்.

12. அரசர், 'என் சொற்படி நடந்தால் நீர் விரும்பும் பொருளைத் தருகிறேன்' என்று அமைச்சரிடம் கூறினார் (*அயற்கூற்று*)

    a. அரசர் என் சொற்படி நடந்தால் நீர் விரும்பும் பொருளைத் தருகிறேன் என்று அமைச்சரிடம் கூறினார்.

    b. அரசர் தன் சொற்படி நடந்தால் அவர் விரும்பும் பொருளைத் தருவதாக அமைச்சரிடம் கூறினார்.

    c. அரசர் தன் சொற்படி நடந்தால் அவர் விரும்பும் பொருளைத் தருகிறேன் என்று அமைச்சரிடம் கூறினார்.

    d. அரசர் அமைச்சரிடம் என் சொற்படி நடந்தால் நீர் விரும்பும் பொருளைத் தருகிறேன் என்று கூறினார்.

13. தமிழ்ச்செல்வி கடுமையாக உழைத்திலள். (*உடன்பாட்டு வாக்கியம்*)

    a. தமிழ்ச்செல்வி கடுமையாக உழைத்தாள்.

    b. தமிழ்ச்செல்வி கடுமையாக உழைக்கின்றாள்.

    c. தமிழ்ச்செல்வி கடுமையாக உழைப்பாள்.

    d. தமிழ்ச்செல்வு கடுமையாக உழைக்கிறாள்.

14. அவன் கெட்ட பழக்க வழக்கங்களை விரும்பான். (*உடன்பாட்டு வாக்கியம்*)

    a. அவன் கெட்ட பழக்க வழக்கங்களை விரும்புகின்றான்.

    b. அவன் கெட்ட பழக்க வழக்கங்களை விரும்புகிறான்.

c. அவன் கெட்ட பழக்க வழக்கங்களை விரும்புவான்.

d. அவன் கெட்ட பழக்க வழக்கங்களை விரும்பினான்.

15. தந்தையார் நாளை வருவார். (*எதிர்மறை வாக்கியம்*)

a. தந்தையார் நாளை வரவில்லை.

b. தந்தையார் நாளை வருகின்றிலர்.

c. தந்தையார் நாளை வந்திலர்.

d. தந்தையார் நாளை வாரார்.

16. செல்வன் காலையில் எழுந்து காலைக்கடன்களை முடித்துக் கடவுளைத் தொழுது பள்ளிக்குச் சென்றான். (*தொடர்வாக்கியம்*)

a. செல்வன் காலையில் எழுந்தான் ; காலைக்கடன்களை முடித்தான்; கடவுளைத் தொழுதான்; பள்ளிக்குச் சென்றான்.

b. செல்வன் காலையில் எழுந்து காலைக் கடன்களை முடித்தான். கடவுளைத் தொழுது பள்ளிக்குச் சென்றான்.

c. செல்வன் காலையில் எழுந்தான் ; காலைக் கடன்களை முடித்துக் கடவுளைத் தொழுது பள்ளிக்குச் சென்றான்.

d. செல்வன் காலையில் எழுந்து காலைக்கடன்களை முடித்துக் கடவுளைத் தொழுதான்; பள்ளிக்குச் சென்றான்.

17. அசோகர் திறமையாகப் போரிட்டார் ; அதனால் வெற்றி பெற்றார். (*கலவை வாக்கியம்*)

a. அசோகர் திறமையாகப் போரிட்டு வெற்றி பெற்றார்.

b. அசோகர் திறமையாகப் போரிட வெற்றி பெற்றார்.

c. அசோகர் திறமையாகப் போரிட்டதனால் வெற்றி பெற்றார்.

d. அசோகர் திறமையாகப் போரிடுவதனால் வெற்றி பெற்றார்.

18. நல்ல நூல்களைக் கற்க வேண்டும். (*பிறவினை வாக்கியம்*)

a. நல்ல நூல்களால் கற்கப்பட வேண்டும்.

b. நல்ல நூல்களைக் கற்பிக்க வேண்டும்.

c. நல்ல நூல்களைக் கற்றல் வேண்டும்.

d. நல்ல நூல்களால் கற்றல் வேண்டும்.

19. அதிகாலையில் எழுதல் வேண்டும். (*கட்டளை வாக்கியம்*)

a. அதிகாலையில் எழுவது வேண்டும்.

b. அதிகாலையில் எழற்க.

c. அதிகாலையில் எழவேண்டும்

d. அதிகாலையில் எழு.

20. நான் அமைச்சரானால் நன்றாக இருக்கும். (*உணர்ச்சி வாக்கியம்*)

a. ஆகா ! நான் அமைச்சரானால் நன்றாக இருக்கும்!

b. ஐயோ ! நான் அமைச்சரானால் எப்படி நன்றாக இருக்கும் !

c. ஆகா ! நான் மட்டும் அமைச்சரானால் எப்படி இருக்கும் !

d. ஐயோ ! நான் அமைச்சரானால் நன்றாக இருக்குமே !

21. மாணவர்கள் வீட்டுப்பாடத்தை ஆசிரியரிடம் கொடுத்தனர். (*செயப்பாட்டு வினை*)

a. வீட்டுப்பாடம் ஆசிரியரிடம் மாணவர்களால் கொடுக்கப்பட்டது.

b. ஆசிரியரை வீட்டுப்பாடத்திடம் மாணவர்கள் கொடுத்தனர்.

c. ஆசிரியர் மாணவர்களால் வீட்டுப் பாடத்திடம் கொடுக்கப்பட்டார்.

d. மாணவர்களை வீட்டுப்பாடம் ஆசிரியரிடம் கொடுத்தது.

22. மாணவர்கள் எல்லோரும் ஊருக்குச் செல்ல ஆயத்தமானார்கள். (*மாற்று வடிவம்*)

a. எல்லா மாணவர்கள் ஊருக்குச் செல்லத் தயாரானார்கள்.

b. எல்லா மாணவர்களும் ஊருக்குச் செல்லத் தயாரானார்கள்.

c. எல்லா ஊர்களுக்கும் மாணவர் செல்லத் தயாராயினர்.

d. மாணவர் எல்லோரும் ஊர்கள் செல்லத் தயாராயினர்.

23. ‘நிலத்துக்கு அணியென்ப நெல்லும் கரும்பும்’ என்பது ஆன்றோர் வாக்கு. (*மாற்று வடிவம்*)

a. நிலம் நெல்லாலும் கரும்பாலும் அழகு பெறவில்லை என்பது ஆன்றோர் வாக்கு.

b. நெல்லும் கரும்பும் நிலத்தால் அழகு பெறுகிறது என்பது ஆன்றோர் வாக்கு.

c. நெல்லாலும் கரும்பாலும் நிலம் அழகு பெறுகிறது என்பது ஆன்றோர் வாக்கு

d. நிலத்தாலும் நெல்லாலும் கரும்புக்கு அழகு என்பது ஆன்றோர் வாக்கு.

24. கல்லணை கரிகால்சோழனால் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் கட்டப்பட்டது. (*செய்வினை*)

a. கரிகாலன் கல்லணையை இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் கட்டினான்.

b. கரிகாலன் கல்லணையை இரண்டாயிரம் ஆண்டுகளாகக் கட்டினான்.

c. கரிகாலன் கல்லணையால் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் கட்டினான்.

d. கரிகாலன் கல்லணையை இரண்டாயிரம் ஆண்டுகளால் முன்னால் கட்டினான்.

25. கோழி மிதித்துக் குஞ்சு சாகும் ? (*எதிர்மறை வடிவம்*)

a. கோழி மிதித்துக் குஞ்சு சாகுமோ ?

b. கோழி மிதித்துக் குஞ்சு சாகவில்லை ?

c. கோழி மிதித்துக் குஞ்சு சாகாது ?

d. கோழி மிதித்துக் குஞ்சு சாகமாட்டாது ?

26. அயராது உழைத்த முத்து தேர்வில் முதன்மையிடம் பெற்றான். (*தொடர் வாக்கியம்*)

a. முத்து அயராது உழைத்ததால் தேர்வில் முதன்மையிடம் பெற்றான்.

b. முத்து அயராது உழைத்தான் ; தேர்வில் முதன்மையிடம் பெற்றான்.

c. முதன்மையிடம் பெற்ற முத்து தெர்வில் அயராது உழைத்தான்.

d. அயராது உழைத்தான் முத்து ; முதன்மையிடம் அவனுக்குக் கிடைத்தது.

27. நாம் நமது கடமையைச் செய்யவேண்டும் ; நாட்டை முன்னேற்ற வேண்டும். (*கலவை வாக்கியம்*)

a. நாடு முன்னேற வேண்டுமானால் நாம் நமது கடமையைச் செய்ய வேண்டும்.

b. நமது கடமையைச் செய்து நாம் நாட்டை முன்னேற்ற வேண்டும்.

c. நாடு முன்னேற்றம் பெற நாம் நமது கடமையைச் செய்ய வேண்டும்.

d. நாட்டை நாம் முன்னேற்ற வேண்டும் ; ஆதலால், நம் கடமையைச் செய்யவேண்டும்.

28. நாம் கல்வி பயில்வது வேலை பெறுவதற்கு மட்டுமன்று. (*வினா வடிவம்*)

a. நாம் ஏன் கல்வி பயில்கிறோம் ?

b. நாம் வேலை பெறுவதற்கு மட்டுமா கல்வி பயில்கிறோம் ?

c. நாம் எதற்காகக் கல்வி பயில்கிறோம் ?

d. நாம் கல்வி பயிலவா வேலை பெறுகிறோம் ?

29. தீமை செய்கிறவனைத் தண்டிப்பதற்கு, அவனுக்கு நன்மை செய்வதே சிறந்த வழி. (*வினா வடிவம்*)

a. தீமை செய்கிறவனைத் தண்டிக்க என்ன வழி செய்வதன்றோ சிறந்த வழி ?

b. தீமை செய்கிறவனைத் தண்டிக்க அவனுக்கு நன்மை செய்வது சிறந்த வழியா?

c. தீமை செய்கிறவனை நன்மை செய்து தண்டிப்பதா சிறந்த வழி ?

d. நன்மை செய்து தீமை செய்கிறவனை சிறந்த வழியில் எவ்வாறு தண்டிக்கமுடியும் ?

30. தனித்திரு ; விழித்திரு ; பசித்திரு. (*செய்தி வடிவ வாக்கியம்*)

a. தனித்தோ விழித்தோ பசித்தோ இருக்க வேண்டும்.

b. தனித்து , விழித்து அல்லது பசித்து இருக்க வேண்டும்.

c. தனித்தும் விழித்தும் பசித்தும் இருக்க வேண்டும்.

d. தனித்தும் விழித்தும் பசித்தும் இருக்கலாம்.

31. ஒன்று செய்தாலும் நன்று செய்ய வேண்டும். (*கட்டளை வடிவம்*)

a. ஒன்றே செய்தாலும் நன்றே செய்ய வேண்டும்.

b. ஒன்றே செய்க; அதுவும் நன்றே செய்க.

c. ஒன்றை நன்றாகச் செய்க.

d. நன்றாகவே எதையும் செய்ய வேண்டும்.

32. என்று தணியும் எங்கள் விடுதலைத் தாகம் ! - (*செய்தி வடிவம்*)

a. எங்கள் விடுதலைத் தாகம் விரைவில் தணியும்

b. எங்கள் விடுதலைத் தாகம் என்றும் தணியும்.

c. எங்கள் விடுதலைத் தாகம் என்றுமே தணியாது.

d. எங்கள் விடுதலைத் தாகம் விரைவில் தணியாது.

33. பற்று உள்ளத்தில் எழுந்திடும் உணர்ச்சி மட்டுமன்று. (*உணர்ச்சி வடிவம்*)

a. பற்று மட்டுமா உள்ளத்தில் எழுந்திடும் உணர்ச்சி !

b. என்னே ! உள்ளத்தில் எழுந்திடும் உணர்ச்சி மட்டுமோ பற்று !

c. என்னே ! பற்று உள்ளத்தில் மட்டுமோ எழுந்திடும் !

d. ஐயகோ ! பற்று மட்டுமா உள்ளத்தில் எழுந்திடும் உணர்ச்சி !

34. "இன்று போய்ப் போருக்கு நாளை வா." என்று இராமன் இராவணனுக்கு உரைத்தான். (*அயற்கூற்று வடிவம்*)

a. இன்று போய் மறுநாள் போருக்கு வருமாறு இராமன் இராவணனுக்குக் கூறினான்.

b. இன்று போய்ப் போருக்கு மறுநாள் வரும்படி இராமன் இராவணனுக்கு உரைத்தான்.

c. இன்று போய்ப் போருக்கு நாளை வா என இராமன் இராவணனுக்கு உரைத்தான்.

d. இன்று போய்ப் போருக்கு நாளை வரவேண்டுமாய் இராமன் இராவணனுக்கு உரைத்தான்.

35. தான் பாவியானதாய்க் கூறி கண்ணகி அலறினாள் - (*நேர்கூற்று வடிவம்*)

a. கண்ணகி "கண்ணகியாகிய நான் பாவி" என்று அலறினாள்.

b. கண்ணகி, "நான் பாவியானேன்" என்று அலறினாள்.

c. "நான் ஒரு பாவி " என்பதாய்க் கண்ணகி அலறினாள்.

d. "நான் பாவி" என்று கண்ணகி கூறினாள்.

36. நீ உழைத்தால்தான் எந்தச் செயலிலும் வெற்றி பெற இயலும். (*எதிர்மறை வடிவம்*)

a. நீ உழைக்காமல் எந்தச் செயலிலும் வெற்றி பெறாமலிருக்கலாம்.

b. நீ உழைத்து எந்தச் செயலிலும் வெற்றி பெறாமல் இருக்கமுடியாது.

c. நீ உழைக்காமல் எந்தச் செயலிலும் வெற்றி பெறுதல் அரிது.

d. நீ உழைக்காமல் எந்தச் செயலிலும் வெற்றி பெற இயலாது.

37. நாலடியார் திருக்குறளுக்கு முற்பட்டதன்று. (*உடன்பாட்டு வடிவம்*)

a. நாலடியார் திருக்குறளுக்கு முற்பட்டது.

b. நாலடியார் திருக்குறளுக்குப் பிற்பட்டது.

c. திருக்குறளன்று நாலடியாருக்குப் பிற்பட்டது.

d. நாலடியாரன்று திருக்குறளுக்கு முற்பட்டது.

38. மகன் தகப்பனுக்கு அடங்கினான். (*பிறவினை வடிவம்*)

a. தகப்பனால் மகன் அடக்கப்பட்டான்.

b. தகப்பனிடம் மகன் அடங்கினான்.

c. மகனைத் தகப்பன் அடக்கினான்.

d. தகப்பன் அடக்க மகன் அடங்கினான்.

39. அரசால் கட்டப்பட்ட அணைகளால் வேளாண்மை வளர்க்கப்பட்டது. - (*செய்வினை வாக்கிய வடிவம்*)

a. அரசால் கட்டப்பட்ட அணைகளால் வேளாண்மை வளர்க்கப்படுகிறது.

b. அரசு கட்டிய அணைகளால் வேளாண்மை வளர்க்கப்படுகிறது.

c. அரசு கட்டிய அணைகள் வேளாண்மையை வளர்க்கிறது.

d. வேளாண்மை வளர அரசு கட்டிய அணைகள் உள்ளன.

40. நக்கீரர் திருமுருகாற்றுப்படை இயற்றினார். (*செயப்பாட்டு வினை*)

a. திருமுருகாற்றுப்படை நக்கீரரால் இயற்றப்பட்டது.

b. திருமுருகாற்றுப்படையை இயற்றியது நக்கீரர்.

c. நக்கீரர் இயற்றியது திருமுருகாற்றுப்படை.

d. நக்கீரரைத் திருமுருகாற்றுப்படை இயற்றியது.

41. நம் வீதியிலுள்ள மணிக்குக் கன்னடம் நன்றாகப் புரியும். (*வினா வாக்கியம்*)

a. நம் வீதியில் யாருக்குக் கன்னடம் நன்றாகப் புரியும்?

b. நம் வீதியில் மணிக்குக் கன்னடம் நன்றாகப் புரியுமா ?

c. நம் வீதியில் யாருக்குப் புரியும் ?

d. நம் வீதியில் மணிக்கா கன்னடம் புரியும் ?.

42. நீங்கள் வீட்டுக்குள் வாருங்கள். (*எதிர்மறை*)

a. நீங்கள் வீட்டுக்குள் வராதீர்கள்.

b. நீங்கள் வீட்டுக்குள் வர வேண்டாம்.

c. நீங்கள் வீட்டுக்குள் வரவில்லை ?

d. நீங்கள் வரக் கூடாது.

43. விடுமுறையில் நீங்கள் கொடைக்கானல் போகாதீர்கள் (*உடன்பாடு*)

a. விடுமுறையில் நீங்கள் கொடைக்கானல் போங்கள்.

b. விடுமுறையில் நீங்கள் கொடைக்கானல் போகலாம்.

c. விடுமுறையில் நீங்கள் கொடைக்கானல் போகீறீர்கள்.

d. விடுமுறையில் நீங்கள் கொடைக்கானல் போக வேண்டும்.

44. தோட்டத்தில் ரோஜாப்பூ மிக அழகாக இருக்கிறது (*உணர்ச்சி வாக்கியம்*)

a. தோட்டத்தில் ரோஜா அழகு !

b. தோட்டத்தில் அழகு ரோஜா இருக்கிறது .

c. தோட்டத்தில் ரோஜாப்பூ எவ்வளவு அழகாக இருக்கிறது!

d. தோட்டத்தில் ரோஜாப்பூ இருக்கிறது!

45. சேரசோழபாண்டியர் என்னும் முடியுடை மூவேந்தர் தமிழகத்தை முன் ஆண்டார்கள். (*செயப்பாட்டு வினை*)

   a. தமிழகம் சேரசோழ பாண்டியர் என்னும் முடியுடை மூவேந்தரால் முன் ஆளப்பட்டது.

   b. சேரசோழ பாண்டியர் என்னும் முடியுடை மூவேந்தர் தமிழகத்தை முன் ஆண்டனர்.

   c. சேரசோழ பாண்டியர் என்னும் முடியுடை மூவேந்தரும் தமிழகத்தை முன் ஆண்டனர்.

   d. சேர சோழபாண்டியர் என்னும் முடியுடை மூவேந்தருக்குத் தமிழகம் ஆண்டனர்.

46. பழந்தமிழர் வாழ்க்கைச் சட்டம் வள்ளுவரால் வரையறுக்கப்பட்டது. (*செய்வினை*)

   a. பழந்தமிழர் வாழ்க்கைச் சட்டத்தை வள்ளுவர் வரையறுத்தார்.

   b. பழந்தமிழர் வாழ்க்கைச் சட்டத்தை வரையறுத்துத் தந்தார் வள்ளுவர்.

   c. பழந்தமிழர் வாழ்க்கைச் சட்டத்தை வரையறுத்த வள்ளுவர்.

   d. பழந்தமிழர் வாழ்க்கைச் சட்டம் வள்ளுவரால் வரையறை செய்யப்பட்டது.

47. சேக்கிழாருக்குத் "தொண்டர் சீர் பரவுவார் " என்னும் பட்டம் சோழனால் தரப்பட்டது. (*எதிர்கால வினை முற்று*)

   a. சேக்கிழாருக்குச் "தொண்டர் சீர் பரவுவார்" என்னும் பட்டம் சோழனால் தரப்படும்.

   b. சேக்கிழாருக்குத் தொண்டர் சீர் பரவுவார் என்னும் பட்டம் தரும் சோழன்.

   c. சோழனால் தொண்டர் சீர் பரவுவார் என்னும் பட்டத்தால் அழைக்கப்பட்டவர் சேக்கிழார்.

   d. சேக்கிழாருக்கு தொண்டர் சீர் பரவுவார் என்ற பட்டம் தரப்படாது.

48. பெரியார் அறிவுப் புரட்சியை ஏற்படுத்தினார். (*செயப்பாட்டு வினை*)

   a. அறிவுப் புரட்சியைப் பெரியாரால் ஏற்படுத்தப்பட்டது.

   b. அறிவுப் புரட்சியைப் பெரியார் ஏற்படுத்தினார்.

   c. பெரியரால் அறிவுப் புரட்சி ஏற்படுத்தப்பட்டது.

   d. அறிவுப் புரட்சி பெரியாரால் ஏற்படுத்தப்பட்டது.

49. புலவர் பொன்முடியார் வீரனுடைய கடமையைப் பாடினார் (*எதிர்மறை*).

   a. வீரனுடைய கடமையை பொன்முடியார் என்னும் புலவர் பாடினாரில்லை.

b. புலவர் பொன்முடியார் வீரனுடைய கடமையைப் பாடவில்லை.

c. வீரனுடைய கடமையைப் பாடியவர் பொன்முடியார் அல்ல.

d. பொன்முடியார் என்னும் புலவரால் பாடிய வீரனுடைய கடமை எதுவும் இல்லை.

50. பாரதியின் தேசியப் பாடல்களை மக்கள் படித்தனர். (*செயப்பாட்டு வினை*)

a. பாரதியின் தேசியப் பாடல்களை மக்களால் படிக்கப்பட்டன.

b. மக்களால் பாரதியின் தேசியப் பாடல்கள் படிக்கப்படுகிறது.

c. பாரதியின் தேசியப் பாடல்களைப் படித்த மக்கள்.

d. பாரதியின் தேசீயப் பாடல்கள் மக்களால் படிக்கப்படும்.

51. 'ஆன்மா வயப்படும் இடம் ஆலயம்' - திருமூலர் கூறினார். (*அயற்கூற்று*)

a. ஆலயம் ஆன்மா வயப்படும் இடம் என்பது ஒரு கூற்றாகும்.

b. ஆன்மா வயப்படும் இடம் ஆலயம் என்று திருமூலர் கூறினார்..

c. திருமூலர் ஆலயம் ஆன்மா வயப்படும் இடம் எனக் கூறினார்.

d. ஆன்மாவயப்படும் இடம் ஆலயம் என்று கூறியவர் திருமூலரா எனத் தெரியாது.

52. விழாக்காலங்களில் பாணர்கள் யாழ் வாசிப்பார்கள். (*எதிர்மறை*)

a. விழாக்காலங்களில் பாணர்கள் யாழ் வாசித்தார்கள்.

b. விழாக்காலங்களில் பாணர்களால் யாழ் வாசிக்கப்பட்டது.

c. விழாக்காலங்களில் பாணர்கள் யாழ் வாசிக்க மாட்டார்கள்.

d. விழாக்காலங்களில் யாழ் வாசிக்காதவர் பாணர்கள்.

53. மனோன்மணியத்தைச் சுந்தரம்பிள்ளை இயற்றினார். (*செயப்பாட்டு வினை*)

a. மனோன்மணியம் சுந்தரம்பிள்ளையால் இயற்றப்பட்டது.

b. மனோன்மணியத்தை இயற்றியவர் சுந்தரம்பிள்ளை.

c. சுந்தரம்பிள்ளை இயற்றிய மனோன்மணியம்.

d. மனோன்மணியம் இயற்றிய சுந்தரம்பிள்ளை ஒரு புலவர்.

54. சிலப்பதிகாரம் ஒரு நாடகக் காப்பியமாக திகழ்கிறது எனலாம். (*சமநிலை - பெயர் பயனிலை வாக்கியம்*)

a. சிலப்பதிகாரம் ஒரு நாடகக் காப்பியம்.

b. சிலப்பதிகாரத்தை நாடகக் காப்பியம் என்று கூறினார்.

c. சிலப்பதிகாரம் நாடகக் காப்பியம் என்று கூறப்பட்டது.

d. சிலப்பதிகாரம் நாடகக் காப்பியம் ஆகும்.

55. வள்ளலார் சன்மார்க்க நெறியையும் பெரியார் பகுத்தறிவு வாதத்தையும் பரப்பினார்கள். (*இரு தனி வாக்கியங்கள்*)

a. வள்ளலார் சன்மார்க்க நெறியைப் பரப்பினார்.

b. வள்ளலார் சன்மார்க்க நெறியைப் பரப்பினார். பெரியார் பகுத்தறிவு வாதத்தைப் பரப்பினார்.

c. வள்ளலார் சன்மார்க்க நெறியைப் பரப்ப பெரியார் பகுத்தறிவு வாதத்தைப் பரப்பினார்.

d. வள்ளலாரும் பெரியாரும் சன்மார்க்க நெறி , பகுத்தறிவு வாதம் பரப்பினார்கள்.

56. மணிவாசகர் இறைவனைச் சோதி வடிவில் கண்டார். (*செயப்பாட்டு வினை*)

a. இறைவனைச் சோதி வடிவில் மணிவாசகரால் காணப்பட்டது.

b. மணிவாசகரால் இறைவனைச் சோதி வடிவில் காணப்பட்டது.

c. இறைவனைச் சோதிவடிவில் மணிவாசகர் கண்டார்.

d. இறைவன் சோதிவடிவில் மணிவாசகரால் காணப்பட்டார்.

57. கண்ணன் இராமனிடம், “நீ என்னை நாளை சந்திக்க வேண்டும்” என்று கூறினான். (*அயற் கூற்று*)

a. கண்ணன் இராமனிடம் அவன் தன்னை நாளை சந்திக்க வேண்டும் என்று கூறினான்.

b. கண்ணன் இராமனை மறுநாள் சந்திக்கும்படி கூறினான்.

c. நாளை சந்திக்கும்படி கண்ணன் இராமனிடம் கூறினான்.

d. கண்ணன் இராமனிடம் தன்னை அவன் மறுநாள் சந்திக்க வேண்டும் என்று கூறினான்.

58. வேலன் கல்லூரியில் படித்து, பட்டம் பெற்று, உயர்ந்த வேலையில் அமர்ந்தான். (*தொடர் வாக்கியம்*)

a. வேலன் கல்லூரியில் படித்தான்; பட்டம் பெற்றதும் உயர்ந்த வேலையில் அமர்ந்தான்.

b. வேலன் கல்லூரியில் படித்தான் ; பட்டம் பெற்றான்; உயர்ந்த வேலையில் அமர்ந்தான்.

c. கல்லூரியில் படித்துப் பட்டம் பெற்ற வேலன் உயர்ந்த வேலையில் அமர்ந்தான்.

d. வேலன் கல்லூரியில் படித்ததால் பட்டம் பெற்றதால் உயர்ந்த வேலையில் அமர்ந்தான்.

59. மழை பெய்தது, உழவர் வயல்களுக்குச் சென்றனர், அவற்றை உழுதனர். (*கூட்டு வாக்கியம்*)

a. மழை பெய்தவுடன் வயல்களுக்குச் சென்ற உழவர் அவற்றை உழுதனர்.

b. மழை பெய்ததும் உழவர்கள் வயல்களுக்குச் சென்று அவற்றை உழுதனர்.

c. மழை பெய்ததால் வயல்களுக்குச் சென்ற உழவர்கள் அவற்றை உழுதனர்.

d. மழை பெய்தபோது உழவர்கள் வயல்களுக்குச் சென்று அவற்றை உழுதனர்.

60. அவன் ஏழைகளுக்கு இரங்குவான். (*எதிர்மறை வாக்கியம்*)

a. அவன் ஏழைகளுக்கு இரங்க முடியாது.

b. அவன் ஏழைகளுக்கு இரங்க மாட்டான்.

c. அவன் ஏழைகளுக்கு இரங்கக் கூடாது.

d. அவன் ஏழைகளுக்கு இரங்கவில்லை.

E. Grammar
இலக்கணம்

ஒவ்வொரு கேள்வியின் கீழேயும் a, b, c, d என நான்கு தெரிவுகள் கொடுக்கப்பட்டுள்ளன அவற்றுள் கோடிட்ட இடத்தை நிரப்பப் பொருத்தமானதைத் தேர்ந்தெடுத்து அதைக் விடைத்தாளில் எழுதுக / வட்டமிட்டுக் காட்டுக.

1. இது ______________ குதிரை.
   a. கருப்பானக்*
   b. கருத்தக்
   c. கருப்புக்
   d. கறுப்பானக்

2. நீ ______________ கொடு.
   a. இதுவைக்
   b. இதை
   c. இதைக்
   d. இதனை

3. இது மிகவும் ______________ கடைவீதி.
   a. பெரியக்
   b. பெரிய
   c. பெரிதானக்
   d. பெரும்

4. இது ______________பைங்கிளி.
   a. பாடாத
   b. பாடாதப்
   c. பாடியப்
   d. பாடா

5. அப்பா ______________ பேனா கொடுத்தார்.
   a. மகனின்
   b. மகனுக்கு
   c. மகனிடமிருந்து
   d. மகனுக்குப்

6. மலர் ____________ போயிற்று.

   a. வாட
   b. வாடி
   c. வாடப்
   d. வாடிப்

7. நீ நேற்று ____________ போனாய் ?

   a. எங்கேப்
   b. எங்குப்
   c. எப்படி
   d. எங்கு

8. இளங்கோவை நாளைக்கு ____________ கூறு.

   a. வர
   b. வருமாறுக்
   c. வரும்படிக்
   d. வரும்படி

கொடுக்கப்பட்டுள்ள ஒவ்வொரு கேள்வியின் கீழேயும் ஒரு சொல்லின் உறுப்புக்களின் கூறுகள் a, b, c, d என நான்கு தெரிவுகளில் கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றுள் பொருத்தமானதைத் தேர்ந்தெடுத்து, அதை விடைத்தாளில் எழுதுக / வட்டமிடுக.

9. <u>செய்தனன்</u>

   a. செய் + த + அன் + அன்
   b. செய் + த் + அன் + அன்
   c. செ + ய் +த் + அன் + ன்
   d. செ + ய் + த் +அன் + அன்

10. <u>பொன்னன்</u>

   a. பொ + ன் + ன் + அன்
   b. பொன் + ன் + ன்
   c. பொன் + அன்
   d. பொன் + ன் + அன்

11. <u>செய்யன்</u>
    a. செய் + அன்
    b. செய் + ய் + ய் + அன்
    c. செம்மை + அன்
    d. செம்மை + ய் +ய் + அன்

12. <u>போன்றான்</u>
    a. போல் + ற் + ஆன்
    b. போன் + ற் + ஆன்
    c. போ + ன் + ற் + ஆன்
    d. போன்று + ஆன்

ஒவ்வொரு கேள்வியின் கீழேயும் அதற்குரிய விடையாக நான்கு தெரிவுகள் a, b, c,d எனக் கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றுள் பொருத்தமானதைத் தேர்ந்தெடுத்து அதை விடைத்தாளில் எழுதுக / வட்டமிடுக.

13. <u>செய்தல்</u>
    a. வினையாலணையும் பெயர்
    b. தொழிற்பெயர்
    c. ஆகுபெயர்
    d. தொழிலாகுபெயர்

14. <u>கந்தா ! வா</u>
    a. விளித்தொடர்
    b. பெயர்த்தொடர்
    c. எழுவாய்த் தொடர்
    d. பெயரெச்சத் தொடர்

15. <u>சொல்</u>
    a. பொதுமொழி
    b. தொடர்மொழி
    c. தனிமொழி
    d. ஒருபொருட் பன்மொழி

16. <u>வாழைப்பழம்</u>

    a. பண்புப்பெயர்ப் புணர்ச்சி
    b. திசைப்பெயர்ப் புணர்ச்சி
    c. இயல்புப் புணர்ச்சி
    d. விகாரப்புணர்ச்சி

17. திருக்குறளை இயற்றியவர் யார் ?

    a. கொடை வினா
    b. அறிவினா
    c. ஏவல் வினா
    d. ஐய வினா

18. <u>சுடுசோறு</u>

    a. அன்மொழித்தொகை
    b. உவமைத்தொகை
    c. பண்புத்தொகை
    d. வினைத்தொகை

ஒவ்வொரு கேள்வியின் கீழேயும் அதற்குரிய புணர்ச்சிப் பிரிப்பு a, b, c, d என நான்கு தெரிவுகளாகக் கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றுள் பொருத்தமானதைத் தேர்ந்தெடுத்து அதை விடைத்தாளில் எழுதுக / வட்டமிடுக.

19. <u>மூதூர்</u>

    a. மூ + தூர்
    b. முதிய + ஊர்
    c. முதுமை + ஊர்
    d. முது + யூர்

20. <u>அவற்றுக்கு</u>

    a. அ + வற்று + கு
    b. அவ் + ற்று + கு
    c. அ + அற்று + கு
    d. அவ் + அற்று + கு

21. பனங்காய்

a. பனை + காய்

b. பசுமை + காய்

c. பனைக் + காய்

d. பனங் + காய்

ஒவ்வொரு கேள்வியின் கீழேயும் அதன் விடையாக a, b, c, d என நான்கு தெரிவுகள் கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றுள் பொருத்தமான ஒன்றைத் தேர்ந்தெடுத்து அதை விடைத்தாளில் எழுதுக / வட்டமிடுக.

22. கற்றனன் மகிழ்ந்தான் என்று கூறினான். - இவ்வாக்கியத்தில் வரும் முற்றெச்சம்

a. கற்றனன்

b. என்று

c. கூறினான்

d. மகிழ்ந்தான்

23. நீலவானம் கறுத்து மழைபெய்ய ஆரம்பித்தது. -இவ்வாக்கியத்தில் வரும் பண்புத்தொகை

a. பெய்ய

b. நீலவானம்

c. கறுத்துமழை

d. வானம்

24. வேலா ! நீ இங்கே வந்து நில். - இவ்வாக்கியத்தில் வரும் ஏவல் வினைமுற்று

a. வந்து

b. நீ

c. இங்கே

d. நில்

25. 'விலக்கு' என்பதன் தன்வினை எது ?

a. விலக்கி

b. விலகி

c. விலகு

d. சேர்த்து

26. 'இரு' என்பதன் பிறவினை எது ?
    a. இருத்து
    b. இருந்து
    c. இருத்தி
    d. இருந்த

27. 'யாழ்' என்னும் சொல் கீழ்க்கண்டவற்றுள் எத்தொடரில் ஆகுபெயராக உள்ளது ?
    a. இந்த யாழ் மிகவும் நன்றாகச் செய்யப்பட்டுள்ளது.
    b. யாழ் தரும் இசை இனியது.
    c. யாழும் குழலும் இன்னோசை தரும் கருவிகள்.
    d. யாழ் கேட்டு மயங்காதார் யார் ?

28. சோவியத்து நாட்டில் நடைபெற்ற விளையாட்டுப் போட்டிகளில் இந்தியா பங்கேற்றது. இதில் வினை முற்று எது ?
    a. பங்கேற்கும்
    b. பங்கேற்றன
    c. பங்கேற்றது
    d. பங்களித்தது

29. பெயராகவும் வினையாகவும் அமையும் சொல் எது ?
    a. வாடு
    b. நாடு
    c. தேடு
    d. வீடு

30. 'வருவான்' என்பது எந்த வினையின் முற்று வடிவம் ?
    a. வரு
    b. வருதல்
    c. வரல்
    d. வா

31. 'கொள்' என்பதைப் பகுதியாகக் கொண்ட வினைமுற்று எது ?
    a. கொண்டு
    b. கொண்டது

c. கொள்கலம்

d. கொள்ளை

32. கீழ்வருவனவற்றுள் பண்புப் பெயர் எது ?

a. அன்பு

b. கலவை

c. மை

d. அழுகை

33. மேடையில் பாடியவன் எல்லோருக்கும் தெரிந்தவன். - அடிக் கோடிட்ட சொல் எவ்வகையைச் சேர்ந்தது ?

a. பெயர்ச்சொல்

b. வினைச்சொல்

c. இடைச்சொல்

d. உரிச்சொல்

34. 'நடி' எனும் வினையடியாகப் (பகுதி) பிறந்தத் தொழிற்பெயர் எது ?

a. நடிகன்

b. நடத்தல்

c. நடித்தல்

d. நடித்தவன்

35. 'முயற்சி' என்னும் சொல்லின் வினையெச்ச வடிவம் எது ?

a. முயன்று

b. மூயன்

c. முயல்

d. முயலல்

36. கீழ்வருவனவற்றுள் மரபு பிறழாத வழக்கு எது ?

a. சாவிக்கொத்து

b. காக்கை அலறும்

c. கிளி கீச்சிடும்

d. அணில் குஞ்சு

37. கீழ்க்கண்டனவற்றுள் சரியானது எது ?

a. ‘வ’ என்னும் எழுத்து சொல்லுக்கு முதலில் வரும்.

b. ‘ற்’ என்னும் எழுத்தை அடுத்து எந்த மெய்யும் வராது.

c. ‘உறரி ‘ என்பதை ‘அரி ’ என எழுதுவது தவறாகும்.

d. ‘ஐ’ என்னும் எழுத்து சொல்லுக்கு இறுதியில் வராது.

38. பெரியாரை வணங்கல் நற்பண்பாம். - கோடிட்ட சொல்லின் எதிர்மறைச் சொல் எது?

a. வணங்காமை

b. வாழ்த்தாமை

c. வணங்காதவன்

d. வணங்கேன்

39. பசு + தோல் - என்பதன் ‘புணர்ச்சி ‘ வடிவம் எவ்வாறு அமையும் ?

a. பசுமைத்தோல்

b. பசுத்தோல்

c. பசுந்தோல்

d. பச்சைத் தோல்

40. ‘செங்கோல்’ என்பதை எவ்வாறு பிரித்தெழுதுவது ?

a. சிகப்பு + கோல்

b. சிவந்த + கோல்

c. சிவப்புக் + கோல்

d. செம்மை + கோல்

41. மலையின் பக்கம் அழகான மயிலைக் கண்ட வேடன் தன் வில்லை வளைத்தான். -இவ்வாக்கியத்தில் வந்துள்ள பெயரெச்சம்

a. கண்ட

b. மயிலை

c. வில்லை

d. அழகான

42. அந்தப் பக்கமும் இந்தப் பக்கமும் பார்த்துவிட்டு அத் திருடன் வேகமாக ஓடிப் போனான். - இவ்வாக்கியத்தில் வந்துள்ள சுட்டுக்கள்

a. திருடன், இந்த, போனான்

b. வேகமாக , பக்கமும் , பார்த்துவிட்டு

c. திருடன், ஓடி , அந்த

d. அந்த, இந்த , அ

43. எங்கள் செயலைக் கண்டு ஒழிக என்று திட்ட வேண்டாம். - இவ்வாக்கியத்திலுள்ள வினையெச்ச வடிவம்

a. கண்டு

b. செயலை

c. ஒழிக

d. திட்ட வேண்டாம்

44. மரத்தில் ஏறிப் பழங்களைப் பறித்து , மண்ணில் எறிந்தான் முருகன். -இவ்வாக்கியத்தில் வந்துள்ள பெயர்ச் சொற்கள்

a. மரம் , பழம் , மண் , முருகன்

b. மரம் , பழம், மண், பறி

c. ஏறி , பறித்து , எறிந்தான், முருகன்

d. பழம் , மரம் , ஏறி , மண்

45. "கண்ணா ! வீட்டிற்கு வா ; முகம் , கால் , கை கழுவு ; புத்தகத்தை எடுத்துப் படி " என்று தந்தை கூறினார். - இவ்வாக்கியத்தில் வந்துள்ள வினைச் சொற்கள்

a. கண்ணா , முகம் , கால்

b. வீட்டிற்கு , புத்தகத்தை , தந்தை

c. வா , கழுவு , படி

d. முகம் , கால், கை

46. குயில் பாடியது ; மயில் ஆடியது ; மேகம் முழங்கியது ; இவ்வாறு அங்கே ஓர் நாட்டியம் நடந்தது. - இதில் வந்துள்ள வினைமுற்றுகள்

a. குயில், மயில், மேகம், நாட்டியம்

b. பாடியது , ஆடியது , முழங்கியது , நடந்தது

c. இவ்வாறு , அங்கே , ஓர் , நடந்தது

d. குயில் , மேகம் , அங்கே , இவ்வாறு

47. நாம் , நீ, நாங்கள் , உங்கள் , அவன் , அவள் , நான் , நீங்கள் , அவர் ஆகியவை மூவிடப்பெயர்கள். - இதில் வந்துள்ள தன்மை இடப் பெயர்கள்

a. நீ , உங்கள் , அவள்

b. நீங்கள் , அவர் , அவன்

c. நாம் , நாங்கள் , நான்

d. அவன் , அவள் , அவர்

48. நாம், நீ, நாங்கள், அவன், அவள், நான், நீங்கள், நீர், அவர் , ஆகியவை மூவிடப் பெயர்கள். - இதில் வந்துள்ள முன்னிலைப் பெயர்கள்

a. நீ , நீங்கள் , நீர்

b. நாம் , நாங்கள் , நான்

c. அவன் , அவள் , அவர்

d. நாங்கள் , நீர் , அவர்

49. அவர் , அவன் , அது , நீ , நீங்கள், நாம், நான் ஆகியவை மூவிடப் பெயர்கள். -இதில் வந்துள்ள படர்க்கை இடப் பெயர்கள்

a. அவர் , நீ , நாம்

b. அவன் , நீங்கள் , நான்

c. அவர் , அவன், அது

d. நீ , நாம், நீங்கள்

50. இராமன், கலா , மாலா, மூவரும் கடற்கரைக்குச் சென்று மணலில் விளையாடி விட்டு, வீட்டுக்கு வந்தார்கள். -இவ் வாக்கியத்தில் வந்துள்ள அஃறிணைப் பெயர்கள்

a. இராமன், கலா , மாலா

b. மூவர் , விளையாடி , சென்று

c. கடற்கரை , மணல், வீடு

d. சென்று , விளையாடி, வந்தார்கள்

51. கோவிந்தனும் கோபாலனும் மாதவியுடன் கடைக்குப் போய் மீன் வாங்கிக் கொண்டு வீட்டுக்கு வந்தார்கள். - இவ்வாக்கியத்தில் வந்துள்ள உயர்திணைப் பெயர்கள்

a. கோவிந்தன் , கோபாலன் , மாதவி

b. கடை , மீன் , வீடு

c. கோவிந்தன் , மீன், வீடு

d. வீடு , மாதவி , மீன்

52. மாணவர்களும், ஆசிரியர்களும் கலந்து கொண்ட அந்த விழாவிற்குப் பெற்றோர்களும் வந்திருந்தது , பொன்னும் , மணியும் , வைரமும் கலந்திருந்தது போல் காட்சியளித்தது. - இவ் வாக்கியத்தில் வந்துள்ள பலர்பால் பெயர்கள்

a. பெற்றோர் ,மணி, வைரம்

b. மாணவர்கள் , ஆசிரியர்கள் , பெற்றோர்கள்
c. மாணவர்கள் , பொன் , வைரம்
d. பொன் , மணி , வைரம்

53. இராமன் பேருந்தில் ஏறி ஊருக்குப் போய்ச் சேர்ந்தான் - இவ்வாக்கியத்திலுள்ள வினைச் சொற்கள்

a. பேருந்து, ஏறு
b. ஊர், போ
c. ஏறு, போ, சேர்
d. ஏறு, போ, ஊர்

54. பின்வரும் இணைகளுள் போலி எழுத்து வரும் இணையைத் தேர்ந்தெடுத்து அதை விடைத் தாளில் எழுதுக / வட்டமிடுக.

a. உயில் - உயிர்
b. மயில் - மயிர்
c. பந்தல் - பந்தர்
d. பயல் - பயிர்

55. பின்வரும் தொடர்களுள் சரியானதைத் தேர்ந்தெடுத்து அதை விடைத் தாளில் எழுதுக / வட்டமிடுக.

a. பறவை என்பது இடுகுறிப்பெயர்
b. பலகை என்பது பொது மொழி
c. ஐவர் என்பது வெளிப்படையாகப் பொருள் உணர்த்தும் சொல்
d. சிவந்தது என்பது பண்புப் பெயர்

56. பின்வரும் தொடரில் பயனிலை எது என்று தேர்ந்தெடுத்து அதை விடைத்தாளில் எழுதுக / வட்டமிடுக.

கம்பர் இராமாயணத்தைச் சடையப்ப வள்ளல் வேண்டுகோளின்படி இயற்றினார்.

a. இராமாயணத்தை
b. வேண்டுகோள்
c. இயற்றினார்
d. சடையப்ப வள்ளல்

57. பின்வரும் தொடரில் செயப்படுபொருள் எது என்று தேர்ந்தெடுத்து அதை விடைத்தாளில் எழுதுக / வட்டமிடுக.

அரசு குற்றவாளியைத் தக்கவாறு விசாரித்துத் தண்டித்தது.

a. தக்கவாறு
b. தண்டித்தது
c. குற்றவாளியை
d. விசாரித்து

58. கீழ்க்கண்ட வினைச் சொல் , எவ்வாறு வினைச்சொல் என்பதைத் தேர்ந்தெடுத்து அதை விடைத்தாளில் எழுதுக / வட்டமிடுக.

கண்டிலர்

a. வினைமுற்று
b. உடன்பாட்டு வினைமுற்று
c. எதிர்மறை வினைமுற்று
d. வினையெச்சம்

59. கீழ்க்கண்ட பெயர்ச்சொல் எவ்வகைப் பெயர்ச்சொல் என்பதைத் தேர்ந்தெடுத்து அதை விடைத்தாளில் எழுதுக / வட்டமிடுக.

வருகை

a. பண்புப் பெயர்
b. தொழிற் பெயர்
c. வினையாலணையும் பெயர்
d. ஆகுபெயர்

60. கீழ்க்கண்ட பெயர்ச்சொல்லின் பகுபத உறுப்புக்களைப் பிரித்துக்காட்டி அவற்றுள் சரியானதைத் தேர்ந்தெடுத்து அதை விடைத்தாளில் எழுதுக / வட்டமிடுக.

ஓட்டுபவன்

a. ஓடு + உ + ப் + அ + அன்
b. ஓட்டு + ப் + அ + அன்
c. ஓட்டு + ப + வன்
d. ஓடு + ப் + அ + அன்

61. பின்வரும் தொடர் a, b, c, d, என்று குறிக்கப்பட்டவற்றுள் எந்த வகையைச் சார்ந்தது? அதை விடைத்தாளில் எழுதுக / வட்டமிடுக.

காக்கை உட்காரப் பனம் பழம் விழுந்தது.

a. முற்றெச்சம்

b. பெயரெச்சம்

c. வினையெச்சம்

d. காரணப்பெயர்

62. 'மீட்டு' என்னும் பகுதியடியாகப் பிறக்கும் வினைமுற்று

a. மீட்டினான்

b. மீண்டான்

c. மீட்டான்

d. மீள்கின்றான்

63. 'அழும்' என்ற பெயரெச்சத்தின் எதிர்மறை வடிவம்

a. அழத் தெரியாத

b. அழாத

c. அழ முடியாத

d. அழக்கூடாத

64. பின்வரும் தொடர்களுள் அன்மொழித்தொகை வரும் தொடரை விடைத்தாளில் எழுதுக / வட்டமிடுக.

a. அமுதா வந்தாள்.

b. கலைச்செல்வி வந்தாள்.

c. மணிமொழி வந்தாள்.

d. கற்கண்டாய்ப் பேசினாள்.

65. கீழ்க்கண்ட தொடர்களுள் தொகைநிறைத் தொடரைத் தேர்ந்தெடுத்து, அதை விடைத்தாளில் எழுதுக / வட்டமிடுக.

a. நல்ல பையன்

b. நிறையக் கொடு

c. மரப்பெட்டி

d. வந்தான் அவன்

66. பின்வரும் தொகைச் சொல் எந்த வகையைச் சார்ந்தது என்பதைத் தேர்ந்தெடுத்து அதை விடைத்தாளில் எழுதுக / வட்டமிடுக.

கண்ணாடிக் கூண்டு

a. அன்மொழித் தொகை

b. பண்புத்தொகை

c. வேற்றுமைத்தொகை

d. உவமைத்தொகை

67. '*நாயும் இந்த உணவைத் தின்னாது*' - என்ற தொடரில் வரும் உம்மையின் பொருள் யாது ?

a. எண்ணும்மை

b. இழிவு சிறப்பும்மை

c. உயர்வு சிறப்பும்மை

d. எச்சஉம்மை

68. அடிக்கோடிட்ட சொல் எந்த வகையைச் சார்ந்தது ?

கண்டனன் தொழுதான்.

a. வினையாலணையும் பெயர்

b. தொழிற்பெயர்

c. வினையெச்சம்

d. முற்றெச்சம்

69. கீழே தரப்பட்டவற்றுள் உரிச்சொல் எது என்று தேர்ந்தெடுத்து அதை விடைத்தாளில் எழுதுக / வட்டமிடுக.

உணவு , மாண்டான் , சால , மற்று , என்று , பெரிது

a. மற்று

b. என்று

c. சால

d. உணவு

70. பின்வரும் சொற்களுள் இரட்டைக் கிளவி எது ?

a. பாம்பு பாம்பு

b. சரசர

c. இலை விலை

d. சுறுசுறுப்பு

71. அவனைக் காட்டிலும் இன்னும் இளையவனாகையால் என்னால் இன்னும் வேகமாக ஓட முடிந்தது. - இத் தொடரில் உள்ள வேற்றுமை உருபினை எழுதுக.

a. உம் , அது , ஆக

b. ஐ , இல் , ஆல்

c. என் , இன் , ஒட

d. அவன் , வயது , வேகம்

72. "*நெற்றிக் கண்ணைத் திறப்பினும் குற்றம் குற்றமே*". -இத் தொடரில் உள்ள ஒரு சினைப் பெயரை எழுதுக)

a. குற்றம்

b. திற

c. உம்

d. நெற்றி

73. விதியை விரட்டும் தீர்ப்பு அளியுங்கள் ! அதை அமுலுக்குக் கொண்டு வாருங்கள்! அதற்குத் தடையாக கடவுளே வரினும் கலங்காதீர்! சிவனே வரினும் சிதறாதீர் ! மதமே வரினும் மயங்காதீர் ! கலை, கலை என்று இனக்கொலை செய்தால் கலைக் கொலை செய்யுங்கள். இத் தொடரின் எதிர்மறைச் சொற்களை எழுதுக.

a. அழியுங்கள், வாருங்கள், செய்யுங்கள்

b. கலங்காதீர் , மயங்காதீர் ; சிதறாதீர்

c. கடவுளே , சிவனே , மதமே

d. தீர்ப்பு , அமுல், இனக்கொலை

74. நாளாக நாளாகத்தான் எந்த ஒரு சீர்திருத்தத்தின் அறிகுறியும் தெரிய வரும் -இத்- தொடரின் அடுக்குத்தொடரை எழுதுக.

a. அறிகுறி

b. தெரியவரும்

c. நாளாக நாளாக

d. எந்த ஒரு

Writing and Composition
எழுதுதல் மற்றும் மொழிப் பயிற்சி 4

A. Spelling
எழுத்துக் கூட்டு

கொடுக்கப்பட்டுள்ள சொல்லின் பொருள் சார்ந்த இன்னொரு சொல்லின் சரியான எழுத்துக்கூட்டு a, b, c, d எனத் தெரிவுகளாகக் கொடுக்கப்பட்டுள்ளது. அதைத் தேர்ந்தெடுத்து விடைத்தாளில் எழுதுக / வட்டமிட்டுக் காட்டுக.

1. பறவை
   a. அந்நம்
   b. அன்னம்
   c. அண்ணம்
   d. அந்னம்

2. பெண்
   a. கன்னி
   b. கந்நி
   c. கண்ணி
   d. கந்னி

3. பொழுது
   a. காழை
   b. காளை
   c. காலை
   d. காரை

4. இடம்
   a. கடம்
   b. கழம்
   c. கலம்
   d. களம்

5. மரம்
   a. காலை
   b. துவரை
   c. வாழை
   d. களை

6. குடி
   a. குலம்
   b. குளம்
   c. குழம்
   d. குடம்

7. மாலை
   a. கண்ணி
   b. கந்நி
   c. கன்னி
   d. கணி

8. பறவை
   a. கிலி
   b. கிளி
   c. கிழி
   d. கிணி

9. கருவி
   a. அர்ரம்
   b. அற்றம்
   c. அரம்
   d. அறம்

10. நாள்
   a. அந்னாள்
   b. அன்நாள்

c. அந்நாள்
d. அண்ணாள்

11. மேல்வாய்

a. அண்ணம்
b. அந்நம்
c. அன்னம்
d. அண்னம்

12. செடி

a. தாழை
b. தாளை
c. தாலை
d. தளை

13. குணம்

a. அல்பன்
b. அற்பன்
c. அர்பன்
d. அர்ப்பன்

14. தங்குமிடம்

a. அரை
b. அறை
c. அர
d. அற

15. பக்கம்

a. அன்மை
b. அந்மை
c. அண்மை
d. அம்மை

16. நாள்

a. அந்று
b. அந்ரு
c. அன்ரு
d. அன்று

கீழே கொடுக்கப்பட்டுள்ள சொற்களில் எழுத்துப் பிழை இல்லாமல் எழுதப் பட்டுள்ள சொல்லைத் தெரிந்தெடுத்து அதை விடைத்தாளில் எழுதுக / வட்டமிட்டுக் காட்டுக.

17. a. ஏற்ரம்
b. தோற்ரம்
c. மாற்றம்
d. மார்ட்றம்

18. a. பள்ளம்
b. பல்லம்
c. பழ்ழம்
d. பல்ளம்

19. a. உண்ணான்
b. சொண்ணான்
c. திண்ணான்
d. புணைந்தான்

20. a. ஏறத்தாள
b. பளையசோறு
c. பழக்கவழக்கம்
d. மாம்பளம்

21. a. குறவர்
b. இரைச்சி
c. துரவி
d. மரவர்

22. a. அரிவாள்
b. அருவாள்
c. அரிவால்
d. அர்வால்

23. a. தலவாணி
b. தலகாணி
c. தலையாணை
d. தலையணை

24. a. புடவை
b. புடைவை
c. பொடவை
d. பொடைவை

25. a. விசரி
b. விசிறி
c. விசிரி
d. விஜிரி

26. a. உடமை
b. ஒடமை
c. உடைமை
d. ஓடமை

27. a. ஒட்டரை
b. ஒட்டறை
c. ஒட்டடை
d. ஒட்ரை

28. a. கடப்பாரை
b. கடப்பாறை
c. கடபாறை
d. கடபாரை

29. a. கிளங்கு
    b. கிழங்கு
    c. கெழங்கு
    d. கெளங்கு

30. a. சுவறில்
    b. சுவற்றில்
    c. சுவரில்
    d. சொவற்றில்

31. a. நோன்பு
    b. நோம்பு
    c. நோண்பு
    d. நோந்பு

32. a. பதட்டம்
    b. பதற்றம்
    c. பதிர்ட்டம்
    d. பதர்ட்டம்

33. a. தெனைமரம்
    b. தென்னைமரம்
    c. தெண்ணைமரம்
    d. தென்னமரம்

34. a. பூவரசு
    b. பூயரசு
    c. பூவ்வரசு
    d. பூவறசு

35. a. ரெம்ப
    b. ரொம்ப
    c. நிரம்ப
    d. நிறம்ப

36. a. விரகு
    b. வெரவு
    c. விறகு
    d. வெறகு

37. a. இசவு
    b. எசவு
    c. இசைவு
    d. எசைவு

38. a. இரும்பல்
    b. இருமல்
    c. இறுமல்
    d. இறும்மல்

39. a. இகழ்ட்சி
    b. இகழ்ச்சி
    c. இகழ்சி
    d. இகள்ச்சி

40. a. பூண்வது
    b. பூண்பது
    c. பூண்ம்பது
    d. பூணுவது

41. a. கெடிகாரம்
    b. கடிகாரம்
    c. கடியாரம்
    d. கெடியாரம்

42. a. குதவளை
    b. குறவளை
    c. குரல்வளை
    d. குரவளை

43. a. கருமை
    b. கறுமை
    c. கரும்மை
    d. கறும்மை

44. a. ஒண்டியாய்
    b. ஒன்றியாய்
    c. ஒன்றிய்யாய்
    d. ஒண்ணாய்

45. a. கோதுமை
    b. கோதும்மை
    c. கோதும்பை
    d. கோதும்ப்பை

46. a. கோடாலி
    b. கோடலி
    c. கோடரி
    d. கோடாரி

47. a. தொடப்பம்
    b. தொடைப்பம்
    c. துடைப்பம்
    d. துடப்பம்

48. a. கோறைப்பாய்
    b. கோரைப்பாய்
    c. கோரப்பாய்
    d. கோரம்பாய்

49. a. முந்தாணி
    b. முன்தானி
    c. முந்தானை
    d. முன்தானை

50. a. உசிர்
    b. உசர்
    c. உயிர்
    d. உசுரு

51. a. எடஞ்சல்
    b. இடைஞ்சல்
    c. எடைஞ்சல்
    d. இடஞ்சல்

52. a. கழட்டு
    b. களட்டு
    c. கழற்று
    d. களற்று

53. a. கத்திரிக்காய்
    b. கத்தரிக்காய்
    c. கத்ரிக்காய்
    d. கத்தறிக்காய்

54. a. சமயல்
    b. சமையல்
    c. சமியல்
    d. சம்யல்

55. a. அரைஞாண்கயிறு
    b. அண்ணாக்கயிறு
    c. அருணாக்கயிறு
    d. அருஞாண்கயிறு

56. a. சாயந்திரம்
    b. சாயுங்காலம்
    c. சாயங்காலம்
    d. சாயுந்திரம்

57. a. மருமகன்
    b. மறுமகன்
    c. மரும்மகன்
    d. மறும்மகன்

58. a. தாவாரம்
    b. தால்வாரம்
    c. தாள்வாரம்
    d. தாழ்வாரம்

59. a. பாகற்காய்
    b. பாவக்காய்
    c. பாகக்காய்
    d. பாவைக்காய்

60. a. நஞ்சை
    b. நன்செய்
    c. நந்செய்
    d. நண்செய்

61. a. ஆம்பிளை
    b. ஆண்பிள்ளை
    c. ஆம்பிள்ளை
    d. ஆம்பளை

62. a. கலியாணம்
    b. கல்யாணம்
    c. கண்ணாலம்
    d. கன்னாலம்

63. a. ஊரணி
    b. ஊருணி
    c. ஊறணி
    d. ஊரனி

64. a. சொப்பனம்
    b. சொற்பனம்
    c. சொப்பணம்
    d. சொற்பணம்

65. a. முழுங்கு
    b. விழுங்கு
    c. விளுங்கு
    d. முளுங்கு

66. a. வென்னீர்
    b. வெந்நீர்
    c. வெண்ணீர்
    d. வென்ணீர்

67. a. உலந்து
    b. உலர்ந்து
    c. உளந்து
    d. உலற்ந்து

68. a. அவுத்து
    b. அவிழ்த்து
    c. அவுழ்த்து
    d. அவில்த்து

69. a. சான்ரோர்க்கு
    b. சான்றோர்க்கு
    c. சான்றோற்கு
    d. சான்றோர்க்கு

70. a. பயிற்ச்சி
    b. பயிற்சி
    c. பயிர்சி
    d. பயிர்ச்சி

71. a. அரண்மனை
    b. அறண்மனை
    c. அரமனை
    d. அறமனை

72. a. விழுப்புன்
    b. விளுப்புண்
    c. விழுப்புண்
    d. விழுபுன்

73. a. தொழிர்ச்சாலை
    b. தொழில்ச்சாலை
    c. தொழிற்ச்சாலை
    d. தொழிற்சாலை

74. a. இரும்புபாதை
    b. இருப்புப்பாதை
    c. இரும்பாதை
    d. இறுப்புப்பாதை

75. a. வாடக்காத்து
    b. வாடைக்கார்று
    c. வாடெக்காத்து
    d. வாடைக்காற்று

76. a. நான்கு
    b. நாங்கு
    c. நாந்கு
    d. நாண்கு

77. a. தாலம்பூ
    b. தாழம்பூ
    c. தாளம்பூ
    d. தாழப்பூ

78. a. தொண்டைமண்டலம்
    b. தொண்டை மண்டளம்
    c. தொண்டை மன்டலம்
    d. தொன்டைமண்டலம்

79. a. குவலைமலர்
    b. குவளைமலர்
    c. குவழைமளர்
    d. குவலைமளர்

80. a. கண்மூடித்தணம்
    b. கன்மூடித்தனம்
    c. கண்மூடித்தனம்
    d. கண்மூடித்தனம்

81. a. இளங்கோவன்
    b. இலங்கோவன்
    c. இழங்கோவன்
    d. இழம்கோவன்

82. a. வயல்காடு
    b. வயக்காடு
    c. வயற்காடு
    d. வயல்க்காடு

B. Idioms and Proverbs
மரபுத் தொடர் மற்றும் பழமொழி

கீழே கொடுக்கப்பட்டுள்ள ஒவ்வொரு மரபுத்தொடரின் சரியான பொருளை, a, b, c,d என்ற நான்கு தெரிவுகளிலிருந்து தேர்ந்தெடுத்து விடைத்தாளில் எழுதுக / வட்டமிட்டுக் காட்டுக.

1. 'எடுப்பார் கைப்பிள்ளை' என்ற மரபுத்தொடரின் பொருள்:
   a. எவர் எடுத்தாலும் உடன் ஒட்டிக் கொள்பவர்.
   b. எவர் சொல்வதையும் கேட்டு நடப்பவர்.
   c. எல்லோருடைய வீட்டுக் கைப்பிள்ளையாக இருப்பவர்.
   d. எடுக்கிறவர் கைப்பிள்ளையாக இருப்பார்.

2. 'எச்சில் கையால் ஈ ஓட்டமாட்டான்' என்ற மரபுத்தொடரின் பொருள்:
   a. சாப்பிட்ட கையால் ஈ கூட ஓட்டாதவன்.
   b. எவர்க்கும் சாப்பாடு கொடுக்காதவன்.
   c. எவர்க்கும் ஈயாத கருமி.
   d. சாப்பிட்ட கையால் ஈ ஓட்டமாட்டான்.

3. 'மதில் மேல் பூனை' என்ற மரபுத்தொடரின் பொருள்:
   a. மதில் மேல் இருக்கும் பூனை.
   b. எதையும் தாண்டும் நிலை.
   c. எதன்மேலும் ஏறும் திறமை.
   d. உறுதியற்ற நிலை.

4. 'குன்றின் மேலிட்ட விளக்கு' என்ற மரபுத்தொடரின் பொருள் :
   a. பிரகாசமானது
   b. விளக்கமானது
   c. உயரமானது
   d. குன்றுபோல் உயரமானது

5. 'தோலிருக்கச் சுளை விழுங்கி' என்ற மரபுத்தொடரின் பொருள்:
   a. கண்டுபிடிக்க இயலாதவாறு திருடுகிறவன்.
   b. தோலிருக்கச் சுளையை விழுங்குகிறவன்.
   c. யாருக்கும் தெரியாமல் சுளையை விழுங்குகிறவன்.
   d. யாருக்கும் தெரியாமல் சுளையைத் திருடுகிறவன்.

கீழே கொடுக்கப்பட்டுள்ள ஒவ்வொரு பழமொழியின் கோடிட்ட இடத்தை நிரப்பப் பொருத்தமான சொல்லை a, b, c, d என்ற தெரிவுகளிலிருந்து தேர்ந்தெடுத்து எழுதுக / வட்டமிட்டுக் காட்டுக.

6. விதியை __________ வெல்லலாம்.
   a. குணத்தால்
   b. புத்தியால்
   c. மதியால்
   d. பணத்தால்

7. முற்பகல் செய்யின் __________ விளையும்.
   a. பிற்பகல்
   b. நடுப்பகல்
   c. நண்பகல்
   d. பின்னர்

8. பருவத்தே __________.
   a. விதை
   b. நடு
   c. விளை
   d. பயிர்செய்

9. நோயற்ற வாழ்வே __________ செல்வம்.
   a. நிறைவற்ற
   b. நிறையுடை
   c. குறைவற்ற
   d. குறையுடை

10. அகத்தின் அழகு __________ தெரியும்.
   a. கண்ணில்
   b. முகத்தில்
   c. வதனத்தில்
   d. உடம்பில்

11. “காற்று உள்ளபோதே தூற்றிக்கொள்” என்ற பழமொழியின் பொருள் :
    a. காற்று வீசும்பொழுது தூற்றவேண்டும்.
    b. தூற்றும்பொழுது காற்று வீசினால் நல்லது.
    c. உரியகாலத்தில் உரியசெயலைச் செய்து முடிக்க வேண்டும்.
    d. காற்றும் தூற்றுதலும் இணைந்து போக வேண்டும்.

12. “தனிமரம் தோப்பாகாது” என்று பழமொழியின் பொருள் :
    a. ஒருமரம் தனியாக இருந்து தோப்பாக அமையாது.
    b. தோப்பில் ஏராளமான மரங்கள் இருக்கின்றன.
    c. தனியாக எந்தச் செயலையும் செய்தால் பயன் கிடைக்காது.
    d. தனியாக நின்று எச்செயலையும் செய்ய வேண்டும்.

13. “எரிகிற கொள்ளியில் எண்ணெய் வார்த்தது போல” என்ற பழமொழியின் பொருள்:
    a. நன்கு எரிந்து கொண்டிருக்கிற நெருப்பில் எண்ணெய் விடுவதாகும்.
    b. துன்பப்படுகின்றவர்களின் மனவேதனையை மேலும் அதிகப்படுத்துதல்.
    c. எண்ணெயை ஊற்றினால் இன்னும் அதிகமாக நன்கு கொள்ளிக்கட்டை எரிவது போல.
    d. கொள்ளிக்கட்டை எரிய எண்ணெய் விடுதல் போல.

14. “சாயம் வெளுத்துப் போச்சு” என்ற மரபுத்தொடரின் பொருள் :
    a. துணியிலுள்ள நிறம் மங்கி விட்டது.
    b. துணியிலுள்ள நிறம் அதிகமாகிவிட்டது.
    c. ஒருவருடைய போலித்தன்மை / பொய்யான குணம் மற்றவர்களுக்குத் தெரிந்துவிட்டது.
    d. துணியின் நிறம் வெளுக்கச் சாயம் இடவேண்டும்.

15. “உப்பிட்டவரை உள்ளளவும் நினைக்க வேண்டும்” என்பதன் பொருள் :
    a. விருந்தளித்தவரை அந்த விருந்தின் நினைவு உள்ளவரைக்கும் நினை.
    b. ஒருவர் செய்த நன்றியை மறக்கக் கூடாது.
    c. சுவையான சமையல் செய்யக்கூடியவர்கள் எப்போதும் நினைக்கத் தக்கவர்கள்.
    d. சமையலில் உப்பை மிகுதியாக இட்டவரை எப்போதும் நினைக்க வேண்டும்.

16. ‘பட்ட காலிலே படும், கெட்ட குடியே கெடும்’ என்பதன் பொருள் :
    a. செய்கின்ற செயல்களெல்லாம் தீமையில் முடியும்போது நினைப்பது.

b. வாழ்நாளில் தொடர்ந்து தோல்வியைச் சந்திப்பவன் நினைக்கக் கூடியது.

c. ஒருவர் வாழ்வில் வறுமை தொடர்ந்து வருவது.

d. முதலில் புண் உண்டான காலில் மீண்டும் புண் உண்டாகும்.

17. 'நாய் வாலை நிமிர்த்த முடியுமா ?' என்பதன் பொருள் :

a. தொடர்ந்து ஒருவன் தவறுசெய்து கொண்டிருக்கும்போது கூறுவது.

b. ஒருவனை முழுமையாகத் திருத்த முடியாது.

c. எந்த ஒரு செயலுக்கும் எதிர்ப்புத் தெரிவிக்கும்போது வெளிப்படும் கருத்து.

d. நாய் வால் இயற்கையிலேயே வளைந்திருப்பதால் அதை நேர் செய்ய முடியாது.

18. 'அகத்தின் அழகு முகத்தில் தெரியும்' என்பதன் பொருள் :

a. ஒருவனுடைய உள்ளப்பாங்கு அவன் செய்யும் செயல்களில் தெரிவது.

b. மேற்கொள்ளும் செயல்களைக் கொண்டு தீர்மானிப்பது.

c. ஈடுபடுகின்ற செயல்களில் வெற்றியடையும்போது ஒருவனைப் பாராட்டிக் கூறுவது.

d. ஒருவனது எண்ணம் அவனது பார்வையால் விளங்கும்.

19. 'ஆனைக்கும் அடிசறுக்கும்' என்பதன் பொருள் :

a. பெரியவர்களின் செயல்களும் சிலவேளையில் தாழ்வடையும்.

b. பெரியவர்கள் செய்யும் செயல்கள் தீமையில் முடியும்.

c. இளையோர் செய்யும் செயல்கள் வெற்றியில் முடியும்.

d. இளையோர் செய்யும் செயலுக்கும் தோல்வி உண்டு.

20. அவன் தேர்வில் தேர்ச்சி அடையத் தலைகீழாக நின்றான் என்பதன் பொருள் :

a. அவன் தேர்வில் தேர்ச்சி அடைய விடாமுயற்சியுடன் படித்தான்.

b. தேர்வில் தேர்ச்சி அடையத் தொடர்ந்து இரவுபகலாய்ப் படித்தான்.

c. தேர்வில் தேர்ச்சி அடைய முழுமையாக ஆயத்தம் செய்தான்.

d. தேர்வில் தேர்ச்சி அடையப் பெரிதும் முயன்றான்.

21. அவன் தன்னைத் துன்பம் தாக்காதவாறு தக்க சமயத்தில் அணை போட்டுக்கொண்டான் என்ற வாக்கியத்தின் பொருள் :

a. தன்னை முழுமையாகக் கட்டுப்படுத்திக் கொண்டான்.

b. தன்னைத் துன்பம் தாக்காதவாறு இருக்க பிற செயல்களில் ஈடுபடாமல் இருந்தான்.

c. தன்னைத் துன்பம் தாக்காதவாறு முன்யோசனையுடன் செயல்பட்டான்.

d. தன்னைத் துன்பம் தாக்கியபோது தடுத்துக் கொண்டான்.

22. பதவி பெறும் முயற்சியில் இரவுபகலாக இறங்கினான் - என்னும் வாக்கியத்தின் பொருள் :

a. பதவி பெறுவதற்காக நாள் முழுவதும் பாடுபட்டான்.

b. பதவி பெறுவதற்காக தொடர்ந்து பாடுபட்டான்.

c. பதவிபெறும் முயற்சியில் விடாமுயற்சியுடன் தன்னை ஆயத்தப்படுத்தினான்.

d. பதவி பெறுவதற்கு அரும்பாடு பட்டான்.

23. ஏழைகளின் துயர்துடைப்பது நமது முதற்கடமையாகும் - என்பதன் பொருள் :

a. ஏழைகளின் வறுமையைப் போக்குவது நமது தலையாய பணியாகும்.

b. ஏழைகளை வெற்றியடையச் செய்வது முதற்கடமை.

c. ஏழைகளை வாழ்க்கையில் முன்னேறச்செய்வது நமது கடமையாகும்.

d. ஏழைகளின் வாழ்க்கை நலத்திற்கு நாம் பொறுப்பேற்க வேண்டும்.

24. ‘இளமையில் உள்ளம் கெடுவது வேரில் பிடித்த கரையானாகும்’ என்பதன் பொருள் :

a. சிறுவயதில் பழகுகின்ற பழக்கம் வாழ்க்கை முழுவதும் தொடர்ந்து வரும்.

b. இளைஞரின் வளர்ச்சிக்குக் காரணம் முன்பழகிய பழக்கம்.

c. ஒருவரின் வீழ்ச்சிக்கு அடிப்படையாக அமைவது தொடக்ககால வாழ்க்கை.

d. ஒருவரின் மனம் கெட்டால் எளிதில் திருத்தலாம்.

25. “பூவோடு சேர்ந்த நாறும் மணக்கும்” - இப் பழமொழி தரும் கருத்து :

a. நல்லவர்களோடு இருப்பவர்கள் நல்லவர்களாவார்கள்.

b. நல்லவர்களிடையே கெட்டவர்களும் இருப்பார்கள்.

c. நல்லவர்களிடையே போலியானவர்களும் இருப்பார்கள்.

d. தீயவர்களும் நல்லவர்களோடு சேர்ந்தால் நல்லவர்களே.

26. ‘துணிவு வேண்டும்’ என உணர்த்தும் பழமொழி எது?

a. துணை போனாலும் பிணை போகாதே.

b. துணையோடல்லது நெடுவழி போகேல்.

c. அச்சம் அற்றவன் அம்பலம் ஏறுவான்.

d. அடிக்க அடிக்க பந்து எழுப்பும்.

27. "கெடுவான் கேடு நினைப்பான்" எனும் பழமொழி தரும் கருத்தை உணர்த்தும் பிறிதொரு பழமொழி எது ?

a. அடி உதவுவது போல் அண்ணன் தம்பி உதவமாட்டான்.

b. அடாது செய்பவர் படாது படுவர்.

c. அடியாத மாடு படியாது.

d. அதிக ஆசை அதிக நட்டம்.

கோடிட்ட இடத்தில் அமைய வேண்டிய பழமொழியைத் தேர்ந்தெடுத்து அதை விடைத்தாளில் எழுதுக / வட்டமிட்டுக் காட்டுக.

28. விடுதலைப் போரில் பலர் சிறைப்பட்டார்கள். ______________ . இறுதியில் நாடு விடுதலை பெற்றது.

a. ஈட்டி எட்டின மட்டும் குத்தும் ; பணம் பாதாளம் மட்டும் செல்லும்.

b. இட்டுக்கெட்டார் எங்கும் இல்லை.

c. சீப்பை ஒழித்து வைத்துவிட்டால் கல்யாணம் நின்றா போகும் ?

d. ஆனை வரும் பின்னே; மணி ஓசை வரும் முன்னே.

கொடுக்கப்பட்டுள்ள பழமொழி எந்தக் கோடிட்ட இடத்தில் அமைவது பொருத்தமாக இருக்கும்.

29. "சித்திரமும் கைப் பழக்கம் செந்தமிழும் நாப்பழக்கம்"

a. உரைநடையில் வேண்டிய இடங்களில் மட்டுமே பழமொழியைப் பயன்படுத்துதல் நன்று. தேவையற்ற இடங்களில் அவற்றை தவிர்க்க வேண்டும். ______________ .

b. அழகிய தெளிவு நடை அமைவது கடினம் அன்று : ______________ .

c. அவன் முதன் முதலில் வரைந்த படமே மிகுந்த பாராட்டுப் பெற்றது. ______________ .

d. பேச்சாற்றல் மிக்கவர்கள் பிறரைத் தம் வழிக்குக் கொண்டுவருவர். ______________ .

கோடிட்ட இடத்தில் அமையவேண்டிய பொருத்தமான மரபுத்தொடர் எது ?

30. இம்முறையாவது முயன்றுபார். கடமை உனக்குண்டு. பொறுப்போடு செயல்படு : உனக்கு ______________ எத்தனையோ பேர்.

a. இரவு பகலாக

b. இழு பறியாக

c. உலைவைக்க

d. கிள்ளிக்கீரையாக

31. "காலை வாரிவிடுகிறது " - இந்த மரபுத் தொடர் கோடிட்ட இடங்களுள் எதில் அமைவது பொருத்தமாக இருக்கும் ?

a. மறதி நம்மை அடிக்கடி ————————.

b. காலம் பொன் போன்றது. இருந்தாலும் ———————— .

c. காலை எழுந்த உடன் தூக்கம் ———————— .

d. விளையும் பயிர் முளையிலே. இளமைக்காலம் நம்மைக் ———————— .

32. "கந்தல் கூளம்" - இந்த மரபுத் தொடருக்கு இணையாகப் பொருள் தரும் மரபுத் தொடர் எது ?

a. அகடவிகடம்

b. ஏணல் கோணல்

c. கண்ட மட்டும்

d. கணக்குவழக்கில்லாமல்

33. "வீணான பேச்சைக்" குறிக்கும் ஒரு மரபுத் தொடர் எது ?

a. கதை கட்டுதல்

b. கம்பளிப் பேச்சு

c. கதை பண்ணுதல்

d. கயிறு திரித்தல்

34. "ஓட்டைக் கையன்" - என்னும் மரபுத் தொடர் தரும் பொருள் யாது ?

a. நொண்டிக் கையன்

b. இரகசியத்தை வெளிப்படுத்துபவன்

c. பெருஞ் செலவாளி

d. பயனற்றவன்

35. ஒற்றர் படையினர் எதிரிகளின் படைபலத்தை ———————— அவ்வப்போது செய்தி அனுப்பினர்.

a. ஆற அமரப் பார்த்து

b. ஆழம் பார்த்து

c. ஆறப்போட்டு

d. ஆளுக்கேற்ற வேடம் போட்டு

36. வரவுக்கு மேல் செலவு செய்யும் எவரது வாழ்வும் ———— போகும்.

a. கிள்ளுக் கீரையாய்ப்
b. குண்டும் குழியுமாய்ப்
c. குத்து மதிப்பாய்ப்
d. குடிமுழுகிப்

37. திருடனைப் பிடிக்கக் காவலர்கள் எங்கும் ———— .

a. வழிபார்த்தனர்
b. வழிவழியாகச் சென்றனர்
c. அறம் பாடினர்
d. வலை வீசினர்

38. அறிஞர் பெருமக்கள் ———— தரும் செயல்களைச் செய்யார்.

a. தலைதூக்கித்
b. தலைச் சுழி
c. தலைச்சுமை
d. தலை குனிவு

39. சுற்றுலாச் சென்றபோது எல்லாப் பொறுப்புகளையும் குணசீலன் ஏற்றுக்கொண்டதால் அவருக்கு நிறையப் பணம் ———— .

a. கொட்டமடித்தது
b. கையைக் கடித்தது
c. கொப்பும் குலையுமாகியது
d. சிலிர் சிலிர்த்தது

40. தவறு செய்த அரசன் புலவர் உரை கேட்டு அவமானத்தால் ____________

a. முணு முணுத்தான்
b. நகைத்தான்
c. தலையாட்டினான்
d. தலை குனிந்தான்

C. Precis Writing
சுருக்கி எழுதுதல்

கீழே கொடுக்கப்பட்டுள்ள ஒவ்வொரு பகுதியின் பொருத்தமான திரண்ட கருத்து a, b, c, d என நான்கு தெரிவுகளாகக் கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றில் பொருத்தமானதைத் தேர்ந்தெடுக்கவும்.

1. ஒரு மொழி அதனைப் பேசும் மக்களின் மதம், பண்பாடு முதலிய வேறுபாடுகள் காரணமாக வெவ்வேறு வகையான எழுத்துக்களால் எழுதப்படுவதுண்டு. தமிழில் அத்தகைய நிலை இல்லை. சில மொழிகள் தமக்கேயுரிய எழுத்தமைப்பினை உடையனவல்ல. எடுத்துக்காட்டாக, இத்தாலியன் , பிரெஞ்சு, ஸ்பானிஷ், ஆங்கிலம் முதலிய மொழிகள் தமக்கெனத் தனித்தனியே எழுத்தமைப்புகளைப் பெறாமல் ஒரேவகை நெடுங்கணக்கினையே கையாளுகின்றன. தெலுங்கு எழுத்துக்களையே கன்னடம் பயன்படுத்துகிறது. தமிழ் மொழியோ மிகப் பழங்காலந்தொட்டே தனக்கென உரிய ஒரு தனி எழுத்தமைப்பைக் கொண்டுள்ளது.

   a. ஒரு மொழி மதம், பண்பாடு ஆகிய வேறுபாடுகள் காரணமாக வெவ்வேறு வகையாக எழுதப்பட்டாலும் தமிழ் தனி எழுத்தமைப்பு கொண்டு விளங்குகிறது.
   b. உலக மொழிகளுள் சில தமக்கேயுரிய நெடுங்கணக்கின்றி இருக்கத் தமிழ் தனக்கென ஓர் எழுத்தமைப்பைக் கொண்டுள்ளது.
   c. ஒரு மொழி மதம், பண்பாடு முதலிய வேறுபாடுகள் காரணமாக வெவ்வேறாக எழுதப்படத் தமிழ் மட்டும் தனக்கென ஓர் எழுத்தமைப்பைக் கொண்டுள்ளது.
   d. உலக மொழிகளுள் சில தனித்தனியே எழுத்தமைப்புகளைப் பெற்றிருந்தாலும் தெலுங்கும் கன்னடமும் ஒரே நெடுங்கணக்கைப் பயன்படுத்துகின்றன.

2. நம் பூமியில் 0 டிகிரி சென்டிகிரேடுக்கும் குறைந்த வெப்பநிலை நிலவும் பகுதிகள் பல உண்டு. அங்கு நம் பக்கங்களைப் போல் தண்ணீர் மழையாகப் பெய்யாது. அதற்குப் பதிலாக உறைபனி மழையாகப் பெய்யும். இதை வடநாட்டில் ‘உறிம்பாத்’ அல்லது ‘உறிம்வர்ஷா‘ எனக் கூறுவார்கள். ஆங்கிலத்தில் ‘ஸ்னோபால்‘ (Snow Fall) என இதைச் சொல்வார்கள்.

   a. வெப்பநிலை 0டிகிரி சென்டிகிரேடுக்குக் குறையும்போது உறைபனி மழையாகப் பெய்வதை ‘ஸ்னோபால்’ என்பர்.
   b. வடநாட்டில் உறைபனி மழை பெய்வதை ‘உறிம்பாத்’ என்றும், ‘உறிம்வர்ஷா’ என்றும் அழைக்க ஆங்கிலத்தில் ‘ஸ்னோபால்’ என்று சொல்கிறார்கள்.
   c. தண்ணீர் மழையாகப் பெய்யாமல் உறைபனி மழையாகப் பெய்வதை ‘உறிம்வர்ஷா’ என்றும், ‘ஸ்னோபால்’ என்றும் சொல்வார்கள்.
   d. நம் பூமியில் 0 டிகிரி சென்டிகிரேடுக்கும் குறைந்த வெப்பநிலை நிலவும்போது தண்ணீர் மழையாகப் பெய்யாததை ‘உறிம்பாத்’ எனச் சொல்வார்கள்.

3. இன்றைய அகராதிகளே அன்றைய நிகண்டுகள். நிகண்டுகள் பெரும்பாலும் செய்யுள் வடிவிலே அமைந்திருந்தன. அகராதி, நிகண்டு தொடங்கி வேதகிரியார் சூடாமணி

நிகண்டு முடிய 41 நிகண்டு நூல்கள் நமக்குக் கிடைக்கின்றன. பழங்காலத்தில் தமிழ் பயின்றோர் நிகண்டுகளை மனப்பாடம் செய்யும் பழக்கத்தை மேற்கொண்டிருந்தனர். தமிழில் முதன்முதலில் தோன்றிய நிகண்டு திவாகரர் என்னும் சமண முனிவர் எழுதிய திவாகர நிகண்டு ஆகும்.

a. இன்றைய அகராதிகளே அன்றைய நிகண்டுகள். திவாகரர் நிகண்டு முதலாகத் தமிழில் 41 நிகண்டுகள் உள்ளன. பழங்காலத்தில் இவற்றை மனப்பாடம் செய்யும் பழக்கம் இருந்தது.

b. சமண முனிவர் எழுதிய திவாகர நிகண்டு முதலாகத் தமிழில் 41 நிகண்டுகள் உள்ளன. இவை செய்யுள் வடிவில் உள்ளன. தமிழ் பயின்றோர் நிகண்டுகளை மனப்பாடம் செய்தனர்.

c. இன்றைய அகராதிகளே அன்றைய நிகண்டுகள். செய்யுள் வடிவிலே அமைந்திருந்த திவாகர நிகண்டு முதலாகத் தமிழில் 41 நிகண்டுகள் உள்ளன.

d. மனப்பாடம் செய்வதற்கேற்றவாறு நிகண்டுகள் அமைந்திருந்தன. தமிழில் 42 நிகண்டுகள் உள்ளன. முதலாவது நிகண்டு திவாகர நிகண்டு.

4. கிராமங்கள் பொருளாதாரத் துறையில் சிறந்து விளங்கினால்தான் நாட்டின் பொருளாதாரம் உயரும். கிராமப் பொருளாதாரம் சீர்குலைவைப் பெற்றால் நாட்டுப் பொருளாதார நாடியும் தளரும்.

எனவே, மக்கள் சமுதாயம் முன்னேற, கிராமப் பொருளாதாரம் ஓங்க, அவற்றின் வழி நாட்டுப் பொருளாதாரம் மேன்மை அடைய கிராமத்திலுள்ள உழவர் பெருமக்களும் ஏனையோரும் அரசு தரும் அனைத்துத் திட்டங்களிலும் ஆர்வத்துடன் பங்கு கொள்ள வேண்டும். கிராமப் பொருளாதாரத்தை உயர்வடையச் செய்ய இளைஞர்கள் இயன்ற அளவு பாடுபட வேண்டும்.

a. கிராமங்கள் பொருளாதாரத் துறையில் சிறந்து விளங்கினால்தான் நாட்டின் பொருளாதாரம் உயரும். எனவே, கிராமத்திலுள்ள உழவர் பெருமக்கள் அனைவரும் பாடுபட வேண்டும்.

b. கிராமப் பொருளாதாரம் ஓங்கினால்தான் நாட்டின் பொருளாதாரம் மேன்மை அடையும். எனவே உழவர் பெருமக்களும் இளைஞர்களும் இயன்ற அளவு பாடுபட வேண்டும்.

c. கிராமப் பொருளாதாரம் சீர்குலைவைப் பெற்றால் நாட்டுப் பொருளாதார நாடியும் தளரும். எனவே, கிராமத்திலுள்ள இளைஞர்கள் இயன்ற அளவு பாடுபட வேண்டும்.

d. கிராமப் பொருளாதாரம் சிறந்து விளங்கினால்தான் நாட்டின் பொருளாதாரம் மேன்மை அடையும். இதற்கு எல்லோரும் அரசுத் திட்டங்களில் பங்கேற்றுப் பாடுபட வேண்டும்.

5. இந்தியாவில் வழங்கிவரும் மிகப் பழைய மதங்களுள் சமண மதமும் ஒன்று. இதன் கொள்கைகளை வகுத்தவர்கள் தீர்த்தங்கரர்கள் ஆவர். இவர்கள் 24 பேராவர். கி.மு.

ஆறாம் நூற்றாண்டில் வாழ்ந்த வர்த்தமான மகாவீரர் என்ற தீர்த்தங்கரர் சமண மதத்தை நாடெங்கும் பரவச் செய்தார்.

சமணர்கள் தமிழ் இலக்கிய வளர்ச்சிக்குப் பெருந் தொண்டாற்றியுள்ளனர். தமிழிலுள்ள நன்னூல், அகப்பொருள் விளக்கம், யாப்பருங்கலக்காரிகை போன்ற இலக்கண நூல்களையும், நாலடியார், அறநெறிச்சாரம் போன்ற நீதி நூல்களையும், சிலப்பதிகாரம், வளையாபதி, குண்டலகேசி போன்ற பெருங்காப்பியங்களையும் இயற்றியவர்கள் சமணப் புலவர்களேயாவர்.

a. இந்தியாவிலுள்ள பழைய மதங்களுள் சமண மதமும் ஒன்று. வர்த்தமான மகாவீரர் சமண மதத்தை நாடெங்கும் பரப்பினார். சமணர்கள் தமிழில் இலக்கியம் எழுதினர்.

b. தீர்த்தங்கரர்களுள் ஒருவரான வர்த்தமான மகாவீரர் சமண மதத்தைப் பரப்பினார். சமணர்கள் தமிழில் நூல்கள் எழுதினர்.

c. சமண மதத்தின் கொள்கைகளை வகுத்த தீர்த்தங்கரர்களுள் ஒருவரான வர்த்தமான மகாவீரர் அவற்றை நாடெங்கும் பரப்பினார். சமணர்கள் தமிழில் இலக்கணங்கள், நீதி நூல்கள், பெருங்காப்பியங்கள் ஆகியவற்றை இயற்றியுள்ளனர்.

d. இந்தியாவில் வழங்கிவரும் சமண மதத்தின் கொள்கைகளை வகுத்த தீர்த்தங்கரர்களுள் ஒருவர் வர்த்தமான மகாவீரர். சமணர்கள் தமிழிலே இலக்கணங்களையும், நீதி நூல்களையும், பெருங்காப்பியங்களையும் எழுதியுள்ளனர்.

6. கி.பி. ஏழாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் தோன்றிய பக்தி இயக்கம் தமிழிலக்கியத்திற்குப் பல பக்தி இலக்கியங்களைத் தந்துள்ளது. சைவ இலக்கியங்களின் சாரமாகத் திகழ்வது பெரிய புராணமாகும். இதை இயற்றியவர் சேக்கிழார். இவர் இந்நூலுக்கு அளித்த பெயர் திருத்தொண்டர் புராணம் என்பதாகும். இறைவனுக்கும் மக்களுக்கும் தொண்டு செய்த அறுபத்துமூன்று சைவ அடியார்களின் வரலாற்றையும் தொண்டையும் விளக்குவதே பெரிய புராணமாகும்.

a. பக்தி இயக்கக் காலத்தில் தோன்றிய சைவ இலக்கியங்களுள் சேக்கிழாரின் திருத்தொண்டர் புராணம் என்னும் பெரிய புராணம் அறுபத்து மூன்று சைவ அடியார்களைப் பாடுகிறது.

b. கி.பி. ஏழாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இயற்றப்பட்ட பெரிய புராணம் சைவ அடியார்களின் வரலாற்றைப் பாடுகிறது.

c. பெரிய புராணம் என்னும் நூல் இறைவனுக்கும் மக்களுக்கும் தொண்டு செய்த அறுபத்து மூன்று சைவ அடியார்களைப் பற்றிப் பாடுகிறது.

d. சேக்கிழாரின் பெரிய புராணம் அறுபத்து மூன்று சைவ அடியார்களின் தொண்டை விளக்கிப் பாடுகிறது.

7. பகுத்தறிவு என்பது அடிப்படை உண்மைகளையும் வெளிப்படை உண்மைகளையும் மறுதலிப்பதன்று. ஆனால், எண்ணம், செயல் ஆகியவற்றில் உள்ள ஐயுறவு

நிலைகளை அழிப்பதாகும். நூற்றாண்டுக் காலமாகப் பிடித்துள்ள சிலந்திக் கூடுகளை நீக்க வேண்டியுள்ளதால் துணிச்சலுடன் சலிப்பில்லாமல் உழைத்துப் பகுத்தறிவினைத் தலையாய நிலையில் நீங்கள் அரசோச்சச் செய்ய வேண்டும்.

a. எண்ணம், செயல் ஆகியவற்றில் உள்ள ஐயுறவு நிலைகளை அழிக்கும் பகுத்தறிவை அரசோச்சச் செய்ய வேண்டும்.

b. அடிப்படை உண்மைகளையும் வெளிப்படை உண்மைகளையும் மறுதலிக்காத பகுத்தறிவை அரசோச்சச் செய்ய வேண்டும்.

c. நூற்றாண்டுக் காலமாகப் படிந்துள்ள சிலந்திக் கூடுகளை நீக்க வேண்டியுள்ளதால் துணிச்சலுடன் பகுத்தறிவினை அரசோச்ச செய்ய வேண்டும்.

d. பகுத்தறிவினைத் தலையாய நிலையில் அரசோச்சச் செய்ய வேண்டும்.

8. பாரதி கண்ட கனவு நனவாக வேண்டுமென்றால், பாரதியின் தேசியப் பாடல்களைப் பாரத மக்கள் பல்லாண்டு படிக்கவேண்டும். அவர் பாடல்கள் தமிழ்மொழியில் இருந்தாலும், பாடப்பட்ட பொருள் தேசிய ஒருமைப்பாடு ஆதலால் எல்லா இந்திய மொழிகளிலும் இப்பாடல்கள் நல்ல பண்களில் மொழிபெயர்க்கப்பட வேண்டும். இந்திய நாட்டின் சிறு பள்ளிகளிலெல்லாம் இப்பாடல்கள் முழக்கம் பெறுதல் வேண்டும்.

a. பாரதியின் தேசியப் பாடல்கள், தேசிய ஒருமைப்பாடு கொண்டதால் இந்திய நாட்டின் பள்ளிகளெல்லாம் முழக்கம் பெறுதல் வேண்டும்.

b. பாரதியின் தேசியப்பாடல்கள் தமிழ்மொழியில் இருந்தாலும் நல்ல பண்களில் மொழிபெயர்க்கப்பட வேண்டும்

c. பாரதியின் தேசியப் பாடல்களை மக்கள் படிக்கவேண்டும்.

d. பாரதியின் தேசியப் பாடல்கள் பாரத மக்கள் எல்லோராலும் படிக்கப்படுவதோடு எல்லா இந்திய மொழிகளிலும் மொழி பெயர்க்கவும் பட வேண்டும்.

9. நெல் முதன்முதலில் சீனாவில் தோன்றியது என்றும், இந்தியாவில் தோன்றியது என்றும் இருவேறு கருத்துகள் இருக்கின்றன. ஆயினும் பிளேட்டோ அரிஸ்டாடில் போன்ற கிரேக்க அறிஞர்களின் குறிப்பின்படி நெல் இந்தியாவில் தான் முதன்முதலில் சிறந்த முறையில் பயிரிடப்பட்டது என்பது அறியக் கிடக்கின்றது. ஒரு முறையை ஏற்படுத்திப் பயிர் செய்யப்பட்ட நெற்பயிர் இந்தியாவிலிருந்து, மேற்கிலுள்ள நாடுகளான பெர்சியா, எகிப்து ஆகிய நாடுகளுக்கும் பின்னர் மத்தியதரைக்கடல் சார்ந்த ஆப்பிரிக்க நாடுகளின் ஒரு பகுதிக்கும் பரவத் தொடங்கியது என்பது அவர்களது கூற்றுகளால் விளங்குகின்றது.

a. நெல், சீனாவிலும், இந்தியாவிலும் தோன்றியது என்ற கருத்துகள் இருக்கின்றன.

b. பிளேட்டோ, அரிஸ்டாடில் ஆகியோர் கருத்துக்களின்படி நெல் முதன் முதலில் இந்தியாவில் பயிரிடப்பட்டு பின்னர் பெர்சியா, எகிப்து, ஆப்பிரிக்க நாடுகளுக்கும் பரவத்தொடங்கியது என்பது தெரியவருகிறது.

c. நெல் முதன்முதலில் சீனாவிலும் இந்தியாவிலும் தோன்றியது. இந்தியாவிலிருந்து மற்ற நாடுகளுக்கும் பரவத்தொடங்கியது.

d. நெல் பெர்சியாவில் தோன்றி மத்தியதரைக்கடல் சார்ந்த ஆப்பிரிக்க நாடுகளுக்கும் பரவத் தொடங்கியது.

10. உலகில் ஒற்றுமை வேண்டும் என்பதையும், மக்கள் தம் உடைமையைத் தனியுடைமையாய் மதிக்காது பொதுவுடைமையாக மதிக்க வேண்டும் என்பதையும் 'உலக ஒற்றுமை', 'முன்னேறு', 'உலகம் உன்னுடையது', 'புதிய உலகு செய்வோம்' முதலிய தலைப்புக்களில் பாரதிதாசன் அழகாக எடுத்து இயம்பியுள்ளார்.

a. உலகில் ஒற்றுமை ஏற்பட மக்கள் தனியுடைமையைவிட்டுப் பொதுவுடைமையை மதிக்க வேண்டும் எனப் பாரதிதாசன் பல்வேறு தலைப்புக்களில் அழகாக எடுத்துக் கூறியுள்ளார்.

b. உலக ஒற்றுமைக்காக 'உலக ஒற்றுமை' 'புதிய உலகுசெய்வோம்' எனப் பல்வேறு தலைப்புகளில் எடுத்துக் கூறியுள்ளார்.

c. தம் உடைமையைத் தனியுடைமையாய் மதிக்காது பொதுவுடைமையாக மதிக்க வேண்டும் என்பதைப் பாரதிதாசன் எடுத்துக் கூறியுள்ளார்.

11. சிலப்பதிகாரத்தில் புகார்க்காண்டத்தில் இன்பச்சுவையும், மதுரைக் காண்டத்தில் அவலச்சுவையும், வஞ்சிக்காண்டத்தில் வீரச்சுவையும் மிகுந்து நின்றாலும், மொத்தத்தில் சிலம்பு முழுவதும் விஞ்சிநிற்பது அவலச்சுவையே. சிலம்புடன் பிற காப்பியக் கதைகளை ஒப்பு நோக்கும்போது கதைப்பின்னலைப் பொறுத்த அளவில் சிலம்பே அவலம் மிகுந்த காப்பியம் என்பது தெளிவாகும்.

a. சிலப்பதிகாரத்தில் இன்பச்சுவை, அவலச்சுவை, வீரச்சுவை ஆகியவற்றில் அவலச்சுவையே விஞ்சி நிற்கிறது. கதைப்பின்னலைப் பொறுத்த அளவில் அவலம் மிகுந்த காப்பியம் என்பது தெளிவாகும்.

b. சிலப்பதிகார மூன்று காண்டங்களிலும் மூன்று சுவைகளிலும் விஞ்சி நிற்பது அவலச்சுவையாகும்.

c. பிற காப்பியக் கதைகளோடு ஒப்பு நோக்கும்போது சிலம்பே அவலம் மிகுந்த காப்பியம்.

12. வள்ளலார் இரக்கமே வடிவாய்ப் பிறந்தவர். தமது பன்னிரண்டாம் வயதிலேயே தம்மைச் சுற்றிலும் உள்ள மக்கள் படும் வறுமைத் துன்பத்தையும், பலவகை நோய்களால் படும் வேதனைகளையும், பசியால் எழும் கூக்குரல்களையும், எளியவர்களை வலியவரும் மேட்டுக்குடியினரும் வதைப்பதையும் கண்டு கண்டு நொந்து கண்ணீர் விட்டார். அந்தச் சிறுவயதிலும், தமக்கென்று ஓர் ஆசையும் அவருக்கு இருந்ததில்லை.

a. வள்ளலார் பன்னிரண்டாம் வயதிலே வறுமைத் துன்பத்தையும், வேதனைகளையும், மற்றவர்கள் படுகின்ற துன்பத்தையும் கண்டு கண்ணீர் விட்டார். தமக்கென்று ஓர் ஆசையும் கொள்ளவில்லை.

b. வள்ளலார் இரக்கம் உடையவர். எளியவர்கள் துன்பப்படுவதைக் கண்டு கண்ணீர் விட்டார்.

c. பன்னிரண்டு வயதில் கூட தமக்கென்று ஓர் ஆசையும் வள்ளலாருக்கு இருந்ததில்லை.

13. சங்ககாலத்துக்குப் பிறகு தமிழ்நாட்டில் விளங்கிய பெண்புலவர்கள் பலர். அவர்களுள் பல அருமையான நீதி நூல்களை இயற்றியவராகிய ஔவையார் என்பவருடைய பாட்டுகள் இக்காலத்தில் இளம் பிள்ளைகளுக்கும் மகிழ்ச்சியை உண்டாக்குகின்றன. மிகச் சுருக்கமாகவும், அகராதி வரிசையாகவும் இயற்றப்பட்ட ஆத்திசூடி, கொன்றைவேந்தன் என்னும் நூல்கள் மிகச் சிறப்புடையன.

a. சங்ககாலத்துக்குப் பிறகு நீதி நூல்களை ஔவையார் என்னும் பெண்புலவர் இயற்றினார். மகிழ்ச்சியாகவும் , சுருக்கமாகவும், அகராதி வரிசையாகவும் இப்பாட்டுகள் விளங்கின.

b. சங்ககாலப் பெண்பாற் புலவர்களுள் ஔவையார் பல நீதிநூல்களை இயற்றினார். இப்பாட்டுகள் இளம் பிள்ளைகளுக்கு மகிழ்ச்சி தரக்கூடியது. ஆத்திசூடி, கொண்றைவேந்தன் மிக்க சிறப்புடையன.

c. நீதிநூல் இயற்றிய ஔவையார் பாடல்கள் மகிழ்ச்சிதரக் கூடியது. அவருடைய பாடல்கள் மிகச் சுருக்கமாகவும், மகிழ்ச்சி தரக்கூடியதுமாக இருந்தது.

14. கல்வியைத் தாய்மொழியில் பயில்வதால் தெளிவும் திட்பமும் ஏற்படும். பிறிதொரு மொழியில் அறிவுபெற வேண்டின், தாய்மொழிப் பயிற்சியும் குறையும்; பிறமொழிக் கல்வியும் பெருகி வளராது. தாய்மொழியையே கற்க இயலாதிருப்பவர், அயல்மொழியைக் கற்க முயல்வரோ ? ஒரு மொழி கற்பதே அருமையாயிருக்க, இருமொழி பயிலப் பொருளும் முயற்சியும் போதிய காலமும் பெறுவதெப்படி ? எந்த நாட்டிலும், எக்காலத்திலும் , எல்லாரிடையுமே அவரவர் தாய்மொழிக் கல்வியே தழையக் காண்போம்.

a. தாய்மொழியினால் தெளிவும் திட்பமும் ஏற்படும். ஒருமொழி கற்பதே அருமையாயிருக்க இருமொழி பயிலக் காலம் பெறுவது எப்படி, அவரவர் தாய்மொழிக் கல்வி சிறப்படையக் காண்போம்.

b. பிறிதொரு மொழி கற்கவேண்டின் தாய்மொழிப் பயிற்சி வளராது. ஒரு மொழி கற்பதே கடினம். பிறமொழி பயிலுவது எப்படி ?

c. தாய்மொழியினால் திட்பம் ஏற்படும். எனவே எந்தநாட்டிலும், எந்தக்காலத்திலும் தாய்மொழிக்கல்வி சிறப்படையக் காண்போம்.

15. ஒருவர் எத்துணை எளியவனாய் இருப்பினும் தன்மையும் தன் பொருள்களையும் உள்ளும் புறமும் தூய்மையாய் வைத்துக் கொள்வதே நாகர கமாகும். கந்தையானாலும் கசக்கிக் கட்டுவதும் கூழாயினும் குளித்துக் குடிப்பதும் குடிலானாலும் கட்டிக் குடியிருப்பதும் உயர்ந்த நாகரிகமே. அழகியனவும் விலை உயர்ந்தனவுமான உடைகளால் உடம்பைப் பொதிவதும் வகையும் சுவையும் மிக்க

உண்டிகளைப் பன்முறை உண்பதும் மேனிலையும் அகலிடமும் உள்ள மாளிகைகளில் வாழ்வதும் விலை உயர்ந்த ஊர்திகளில் செல்வதும் பிறவும் ஆடம்பர வாழ்க்கையன்றி நாகரிக ஒழுக்கம் ஆகாது.

a. எளிமையுடன் வாழ்ந்து காட்டுவதே நாகரிகம். எளிமையில்லாத பல செயல்களைச் செய்யக்கூடாது. கூழைக் குளித்துக் குடிக்கவேண்டும். கந்தையைக் கசக்கிக்கட்டவேண்டும். இவ்வாறே பிற ஆடம்பர வாழ்க்கை முறைகளையும் தவிர்க்க வேண்டும்.

b. ஒருவன் எத்துணை எளியவனாய் இருப்பினும் ஆடம்பர வாழ்க்கை முறைகள் நாகரிகத்திற்குப் புறம்பானது.

c. ஒருவன் எத்துணை எளியவனாக இருப்பினும் உள்ளும் புறமும் துய்மையுடையவனாக வாழவேண்டும். எளிய வாழ்க்கை முறைகள்தான் நாகரிகத்தில் அடையாளம். ஆடம்பர வாழ்க்கை முறைகள் நாகரிகத்திற்குப் புறம்பானது.

d. ஒருவன் எத்துணை எளியவனாக இருப்பினும் உள்ளும் புறமும் துய்மையுடையவனாக வாழவேண்டும். அதுவே உண்மையான நாகரிகம். பிறவற்றை நாகரிகம் எனக் கொள்ளமுடியாது.

16. உலகத்தில் பல பெரியார்களின் வாழ்க்கை வரலாறுகளைப் பற்றிப் படித்தும் கேட்டும் இருக்கிறோம். அவர்கள் தத்தம் அடியார்கள், சுற்றத்தார்கள், சீடர்கள் ஆகியோர்களால் போற்றப் பெற்றும் பாராட்டப் பெற்றும் உள்ளனர். அவர்களுடைய ஆசிரமங்களிலோ, மடங்களிலோ, காடுகளிலோ கோயில்களிலோ பல வருடங்கள் தங்கியிருந்து உலகத்தாருக்கு தங்கள் சீடர்கள் மூலமாகவும் நூல்கள் வாயிலாகவும் பல்வேறு கருத்துகளைக் கூறி வந்துள்ளனர்.

a. போற்றலும் பாராட்டலும் பெற்ற பெரியார்கள் பல ஆண்டுகளாகத் தங்கள் இருப்பிடங்களிலிருந்து தங்கள் கருத்துகளைச் சீடர்கள் வாயிலாகவும் நூல்கள் வாயிலாகவும் உலகத்திற்குத் தந்துள்ளார்கள்.

b. உலகத்தில் பல பெரியார்கள் வாழ்ந்துள்ளார்கள். அவர்கள் பலகருத்துகளைத் தந்துள்ளார்கள். அவையாவும் அவருடைய சீடர்கள் மூலம் தரப்பட்டன: நூல்கள் வாயிலாகவும் தரப்பட்டன. அப்பெரியார்கள் பல ஆண்டுகள் வாழ்ந்துள்ளனர்.

c. உலகத்தில் பல பெரியார்கள் வாழ்ந்துள்ளனர். அவர்கள் போற்றப்பட்டும் ஆதரிக்கப்பட்டும் வந்தவர்களாவர். அவர்கள் ஆசிரமங்களிலும் மடங்களிலும் கோயில்களிலும் அவர்கள் வாழ்ந்தார்கள். அவர்கள் பல கருத்துகளைத் தந்துள்ளார்கள்.

d. உலகத்தில் பல பெரியார்களின் வாழ்க்கை வரலாறுகளைப் பற்றிப் படித்தும் கேட்டும் இருக்கிறோம். அவர்கள் பல கருத்துகளை உலகத்திற்குத் தந்துள்ளார்கள்.

17. பாவேந்தர் பாரதிதாசன் தமிழாசிரியராகப் புதுவையில் பணிபுரிந்தவர். தமிழ்ச் சமுதாயத்தின் மேம்பாட்டிற்காக உழைத்தவர். சீர்திருத்தக் கொள்கைகளிலே

பற்றுமிகக்'கொண்டவர். தாம் கொண்ட கருத்துகளை எளியாரும் புரிந்து கொள்ளும் வண்ணம் தமிழ்ப்பாக்களால் இயற்றுவதிலே வல்லவர். அக் கவிக்கோமான் அந்நாட்களில் பட்டபாட்டினை இன்று எண்ணிப் பார்க்கும்போது பாரதிதாசன் ஒரு பாவலர் மட்டுமல்லர், வருங்காலத்தை முன்னோக்கி நடத்திச் சென்ற ஒரு தலைவருங்கூட என்பதை அழுத்தம் திருத்தமாகச் சொல்லமுடிகிறது.

a. புதுவையில் தமிழாசிரியராகப் பணிபுரிந்த பாவேந்தர் தமிழ்ச் சமுதாய மேம்பாட்டிற்காக எல்லோருக்கும் புரியுமாறு தமிழ்ப் பாக்களை எழுதியுள்ளார். அவருடைய பாடல்கள் அவரை ஒரு கவிஞராக மட்டுமல்லாமல் தமிழினத் தலைவராகவும் உறுதிப்படுத்துகின்றன.

b. பாவேந்தர் பாரதிதாசன் அவர்கள் தமிழாசிரியராகப் புதுவையிலே பணிபுரிந்தவர். அவருடைய சீர்திருத்தக் கருத்துகள் அவரைத் தமிழ்ச் சமுதாயத்தின் தலைவராகத் தெரிவிக்கின்றன.

c. கவிக்கோமான் பாரதிதாசன் பல பாடல்களைத் தந்துள்ளார்., அவருடைய பாடல்கள் அனைத்தும் தமிழரின் மேம்பாட்டுக்கெனப் பாடப்பெற்றவையாகும். அவர் கொள்கைகளை எப்போதும் இனிய எளிய தமிழில் சொல்ல வல்லவர். அவர் தமிழ்ச் சமுதாயத்தின் கவிஞராக மட்டுமல்லாது தலைவராகவும் திகழ்ந்துவந்தார்.

d. பாவேந்தர் பாரதிதாசன் அவர்கள் தமிழாசிரியராய்ப் புதுவையில் பணிபுரிந்தவர். அவர் தம் பாடல்களால் வருங்காலத்தை நடத்திச் சென்ற பெருந்தலைவர் என்று சொல்லலாம்.

18. அமுதம் சுரக்கும் நெல்லிக் கனி தமிழகத்தில் உண்டு என்பதை அறிந்தான் அதியமான் என்ற சிற்றரசன். அதனை அருந்தி நீடு வாழ ஆசையுற்றான். மந்தியுமறியா மரங்கள் செறிந்த தென்மலையில், பளிங்கரும் அணுகுதற்கரிய விடரொன்றில் நின்றது அந்நெல்லி. அதை அறிந்த காவலன் பல்லாண்டுகளாகப் பெரிதும் முயன்று, விடரை அடைவதற்கு வழியமைத்து, மருந்து தூவி மலை வண்டுகளை விலக்கி, மஞ்சினில் மறைந்திருந்த செழுங்கனியைக் காவலர்கள் வாயிலாகக் கொணர்ந்தான்.

a. அமுதம் சுரக்கும் நெல்லிக்கனி ஒன்றிருப்பதை அதியமான் என்ற சிற்றரசன் அறிந்தான். பெரிதும் முயன்று அதைக்கொண்டுவந்தான். அதைக்கொண்டு வருவதற்கு அவன் பல தொல்லைகளை எதிர்கொண்டான்.

b. தமிழகத்தில் இருந்து அமுதுபோன்ற நெல்லிக்கனியை அதியமான் மலையொன்றிலிருந்து மிகவும் முயன்று கொண்டுவந்தான்.

c. அதியமான் என்னும் சிற்றரசன் நெல்லிக்கனியை மலையிலிருந்து கொண்டுவர எண்ணினான். பல ஆண்டுகளாகப் பெரிதும் முயன்றான். இறுதியில் அதைக் காவலர்கள் வாயிலாகக் கொண்டுவந்தான்.

d. செல்லுவதற்கு அரிய காட்டில் நெல்லி மரம் ஒன்று இருந்தது. அமுதம் போன்ற கனி அதில் கிடைப்பதை அறிந்த சிற்றரசன் அதியமான் தடைகளைக் கடந்து அதைக் கொணர்ந்தான்.

19. மிகப் பழைய காலத்தில் பணம் இல்லை. அக்காலத்து மக்கள் தமக்கு ஒரு பொருள் வேண்டுமானால் தம்மிடம் உள்ள பொருளைப் பிறருக்குக் கொடுத்து அப்பொருளைப் பெற்றனர். எடுத்துக்காட்டாகத் தமக்குத் தயிர் வேண்டுமானால், தம்பால் உள்ள நெல்லையோ கேழ்வரகையோ கொடுத்துத் தயிரைப் பெற்றனர். இதுவே பண்டமாற்று எனப்படும்.

    a. மிகப் பழைய காலத்தில் பண்டமாற்றுமுறை இருந்தது.
    b. தம் பொருளைப் பிறருக்குக் கொடுத்துத் தமக்கு வேண்டிய பொருளைப் பெற்றனர்.
    c. மிகப் பழைய காலத்தில் நெல்லையோ கேழ்வரகையோ கொடுத்துத் தயிரைப் பெற்றனர்.
    d. மிக பழைய காலத்தில் பணம் கொடுத்துப் பொருள் வாங்காமல் , தம்மிடம் உள்ள பொருளைக் கொடுத்துத் தமக்குத் தேவையான பொருளைப் பெறும் பண்டமாற்று முறை இருந்தது.

20. மிக்க வருவாயுடைய ஒருவரைக் கவனிப்போம், அவர் மிகுதியான பணம் செலவிட ஆற்றல் பெற்றவர், அவர் மிகச் சிறப்பாக வாழலாம். விலை உயர்ந்த உடைகளை அணியலாம். எனினும், அவரும் பணம் செலவிடும்போது கருத்தோடு இருத்தல் வேண்டும்.

    a. மிக்க வருவாயுடைய ஒருவர் சிறப்பாக வாழலாம்.
    b. மிக்க வருவாயுடன், விலை உயர்ந்த உடையும் அணிந்து சிறப்பாக வாழும் ஒருவரும் கருத்தோடு பணம் செலவிட வேண்டும்.
    c. மிக்க வருவாயுடைய ஒருவர் மிகுதியான பணம் செலவிட ஆற்றல் பெற்றவர்.
    d. மிக்க வருவாயிடைய ஒருவர் கருத்தோடு பணம் செலவிட வேண்டும்.

21. பாட்டியார் பல ஊர்கள் சுற்றித் திரிபவர். எல்லா ஊர்களிலும் எல்லா வகையான மக்களும் அவருக்குப் பழக்கம் உண்டு. தொழிலாளிகளிடம் பாட்டிக்குத் தனிமதிப்பு உண்டு. ஒரு தச்சன் மேல் அளவற்ற மதிப்புக் கொண்டிருந்தார்.

    a. பல ஊர்களும் சுற்றும் பாட்டியாருக்கு தொழிலாளர்களிடம் மதிப்பு உண்டு.
    b. பல ஊர்களும் சுற்றித் திரியும் பாட்டிக்கு எல்லா வகையான மக்களும் பழக்கம் உண்டு.
    c. பல ஊர்களும் சுற்றி, பலவகை மக்களிடமும் பழக்கம் உள்ள பாட்டி ஒரு தச்சனிடம் தனிமதிப்புக் கொண்டிருந்தார்.
    d. பல ஊர்களும் சுற்றும் பாட்டி ஒரு தச்சனிடம் அன்பு கொண்டிருந்தார்.

22. பொருட்செல்வம் ஈட்டினார், அதோடு நாட்டு மக்களுக்குத் தொண்டாற்றித் தம்மால் இயன்ற உதவிகளைச் செய்ய விரும்பினார். அதன்படி காரைக்குடி நகராண்மைக்

கழகத்தலைவராகப் பொறுப்பேற்றார். அனைவரும் போற்றுமாறு மூன்றாண்டுகள் நற்பணியாற்றினார்.

a. மக்களுக்குத் தொண்டாற்றி அனைவரும் போற்றுமாறு வாழ்ந்தார்.

b. பொருட் செல்வம் ஈட்டி, காரைக்குடி நகராண்மைக் கழகத் தலைவராகப் பொறுப்பேற்று, அனைவரும் போற்றுமாறு மக்களுக்குத் தொண்டாற்றினார்.

c. காரைக்குடி நகராண்மைக் கழகத் தலைவராகப் பொறுப்பேற்று நற்பணி-யாற்றினார்.

d. தம் பொருட்செல்வத்தால் நற்பணிகள் பல புரிந்தார்.

23. கள்ளச் சந்தையில் வியாபாரம் செய்ததாகக் கடைக்காரக் கந்தப்பனைக் கையும் களவுமாகப் பிடித்தார்கள். அவன் வியாபாரம் செய்தது ஒரு படி அரிசி. அதற்கு அரசாங்கம் குறிப்பிட்டிருந்த விலை ஒன்றேகால் ரூபாய்; அவன் விற்ற விலையோ ஒரு ரூபாய் முப்பத்தைந்து காசு ; பத்துக்காசு அதிகமாக வாங்கி விட்டான் அவன்.

a. ஒரு ரூபாய் முப்பத்தைந்து காசுக்கு ஒரு படி அரிசி விற்றான் என்று கந்தப்பன் கைது செய்யப் பட்டான்.

b. அரிசி விற்கும் கந்தப்பன் கள்ளச் சந்தையில் வியாபாரம் செய்ததாகக் கைது செய்யப்பட்டான்.

c. அரசாங்கம் விதித்த விலைக்கு மேல் பத்துக் காசு அதிகமாக வைத்து ஒரு படி அரிசி விற்றதற்காக, கள்ளச் சந்தையில் வியாபாரம் செய்ததாகக் கூறிக் கந்தப்பனைக் கைது செய்தனர்.

d. அரசாங்கம் விதித்த விலைக்கு மேல் அதிகமாக விற்றதால் கந்தப்பன் கள்ளச் சந்தை வியாபாரத்திற்காகக் கைது செய்யப்பட்டான்.

24. பண்டைக்காலப் புலவர்கள் தங்கள் இலக்கிய அறிவைக் காட்டியதோடு மட்டுமல்லாமல் அரசர்கட்கு அறிவுரை கூறும் அமைச்சராகவும், பகையரசரிடம் தூது சென்று பகை தணிக்கும் தூதுவராகவும் இருந்தனர். சில புலவர்கள் அரசர்களோடு உண்மை நட்புக் கொண்டு அவர்கட்கு உறுதுணையாக இருந்தனர்.

a. பழங்காலப் புலவர்கள் தங்களுக்கு வேண்டிய அரசர்களிடம் மட்டும் நட்புக் கொண்டனர்.

b. பழங்காலப் புலவர்கள் பகையரசர்களிடம் சென்று பகையை வளர்க்கும் விதமாகப் பேசினர்.

c. பழங்காலப் புலவர்கள் இலக்கிய அறிவைக் காட்டுவதைமட்டும் குறிக்கோளாய்க் கொண்டிருந்தனர்.

d. பழங்காலப் புலவர்கள் இலக்கியம்படைத்ததோடு அரசர்கள் ஒற்றுமையாக வாழ வழிவகை செய்தனர்.

D. Text Organisation
பாட ஒருங்கமைப்பு

கீழே கொடுக்கப்பட்டுள்ள வாக்கியங்கள் a, b, c, d என எண்ணிட்டு நான்கு உரைச் செய்தி (Text)களாக மாற்றிக் கொடுக்கப்பட்டுள்ளன. இவற்றுள் பொருள்தரும் உரைச் செய்தியைத் தேர்ந்தெடுத்து அதை விடைத்தாளில் எழுதுக / வட்டமிட்டுக் காட்டுக.

1. 1. இருபதாம் நூற்றாண்டுத் தமிழ்க் கவிஞர்களுள் பாரதிதாசனும் ஒருவர்.
   2. இவர் புதுச்சேரியில் தமிழாசிரியராய்ப் பணியாற்றியவர்.
   3. இவர் கவிதைகள், நாடகங்கள் பலவற்றை எழுதியுள்ளார்.
   4. இவர் இயற்பெயர் கனக சுப்புரத்தினம்.
   5. இவருடைய கவிதைகள் இனிமையானவை.

   இவ்வாக்கியங்களைப் பொருள்தரும் உரைச்செய்தியாகக் கீழ்வருமாறு அமைக்கலாம்

   a. 1, 4, 2, 3, 5
   b. 1, 2, 3, 4, 5
   c. 1, 3, 5, 2, 4
   d. 1, 2, 3, 5, 4

2. 1. பலாவின் தாய் நாடு பாரதம்.
   2. பலா வளரும் பிற நாடுகள் இலங்கை, பர்மா, மலேசியா, பிரேசில் முதலியவையாகும்.
   3. மைசூரிலும் ஆந்திராவிலும் பலா இருந்தாலும் முறையாக வளர்க்கப்படுவதில்லை.
   4. அஸ்ஸாமில் பலா மரம் அதிகம்.
   5. பலா பயன் தரும் ஒரு மரம்.

   இவ்வாக்கியங்களைப் பொருள்தரும் உரைச்செய்தியாக கீழ்வருமாறு அமைக்கலாம்.

   a. 5, 1, 2, 3, 4
   b. 5, 2, 1, 3, 4
   c. 1, 2, 3, 4, 5
   d. 5, 1, 4, 3, 2

3. 1. அலுமினியம் மிக இலேசான உலோகம்.
   2. இரும்பின் எடையில் மூன்றில் ஒரு பங்கே எடையுள்ளது.
   3. இது வெப்பத்தை எளிதில் கடத்தும்.
   4. இது ஒரு மின் கடத்தி.

5. ஏனவேதான் தாமிரத்தை அலுமினியம் பதிலீடு செய்து வருகிறது.

இவ்வாக்கியங்களைப் பொருள்தரும் உரைச்செய்தியாகக் கீழ்வருமாறு அமைக்கலாம்.

a. 1, 5, 2, 3, 4
b. 1, 2, 3, 4, 5
c. 1, 5, 4, 3, 2
d. 1, 3, 2, 4, 5

4. 1. பெண்ணுரிமை என்பது என்ன ?
2. ஆணுடன் போரிடுவதா ?
3. ஆணுடன் இணைந்து வாழ்ந்து அன்பை வளர்ப்பதே பெண்ணின் உரிமைக் கடன்.
4. பெண்ணுரிமை போற்றிய பெருமான் என்று போற்றப்பட்டார்.
5. திரு. வி. க. பெண்ணுரிமை போற்றினார்.

இவ்வாக்கியங்களைப் பொருள்தரும் உரைச்செய்தியாகக் கீழ்வருமாறு அமைக்கலாம்.

a. 1, 2, 3, 4, 5
b. 5, 4, 3, 1, 2
c. 5, 4, 1, 2, 3
d. 1, 2, 5, 4, 3

5. 1. அகன்ற வானம் நமக்கு அறிமுகம் ஆகும்போதே மின்னலும் உடன் வருகிறது.
2. மின்னலை உவமை கூறாத கவிஞன் எந்த மொழியிலும் இல்லை.
3. இது ஆதி மனிதனை நடுங்க வைத்தது.
4. மின்னலின் பளீரொளி எவரையும் கதிகலங்கச் செய்யும்.
5. விஞ்ஞான அறிவு வளர வளர மின்னல் ஆற்றலின் தேக்கம் என்று மனிதனுக்குப் புரிந்தது.

இவ்வாக்கியங்களைப் பொருள்தரும் உரைச்செய்தியாகக் கீழ்வருமாறு அமைக்கலாம்

a. 1, 4, 3, 5, 2
b. 1, 2, 4, 3, 5
c. 2, 1, 4, 3, 5
d. 1, 2, 3, 4, 5

6. 1. உலகத்திலுள்ள கண்டங்களில் சிறியது ஆஸ்திரேலியா.
   2. இது ஒரு சுதந்திர நாடாகும்.
   3. கிழக்கே பசிபிக் கடலும், தெற்கிலும் மேற்கிலும் இந்துமாக்கடலும், வடக்கே
   4. உலகத்திலுள்ள மிகப் பெரிய தீவு என்று கூடச் சொல்லலாம்.
   5. மத்திய ஆஸ்திரேலியா முழுவதும் பாலைவனமாக உள்ளது.

   இவ்வாக்கியங்களைப் பொருள்தரும் உரைச்செய்தியாகக் கீழ்வருமாறு அமைக்கலாம்

   a. 1, 4, 3, 5, 2
   b. 1, 2, 3, 4, 5
   c. 1, 2, 4, 3, 5
   d. 1, 3, 5, 4, 2

7. 1. மேல் குமிழின் வழியே நீர்த்த கந்தக அமிலத்தை ஊற்ற வேண்டும்.
   2. துத்தநாக ரவைகளை நடுக்குமிழில் போட வேண்டும்.
   3. நாகத் துண்டுகளுடன் வினைபுரிந்து ஹைட்ரஜனை உண்டாக்குகிறது.
   4. அமிலம் கீழ்க் குமிழை நிரப்பிய பின்னர் நடுக்குமிழை அடைகிறது.
   5. போக்குக் குழாயிலுள்ள திறப்பானைக் கொண்டு ஹைட்ரஜனை வேண்டும்போது பெறலாம்.

   இவ்வாக்கியங்களைப் பொருள்தரும் உரைச்செய்தியாகக் கீழ்வருமாறு அமைக்கலாம்

   a. 2, 1, 3, 4, 5
   b. 1, 2, 4, 3, 5
   c. 1, 2, 3, 4, 5
   d. 2, 1, 4, 3, 5

8. 1. கோத்தர்கள் 1500 ஆண்டு பழங்குடி மக்கள்.
   2. இவர்கள் நீலகிரி மலைப் பகுதிகளில் வாழ்கிறார்கள்.
   3. ஏனைய மலைச் சாதியினரைப் போலன்றி இவர்களுள் பெரும்பாலோர்க்கு எழுதப் படிக்கத் தெரியும்.
   4. இவர்கள் தச்சு வேலையில் நிபுணர்கள்.
   5. கோத்தர்களுக்குத் தெரியாத கலையே கிடையாது.

   இவ்வாக்கியங்களைப் பொருள்தரும் உரைச்செய்தியாகக் கீழ்வருமாறு அமைக்கலாம்

   a. 5, 4, 1, 2, 3
   b. 5, 4, 3, 2, 1
   c. 1, 2, 5, 4, 3
   d. 1, 2, 3, 4, 5

9. 1. சாத்தனார் கடைச் சங்கப் புலவர்களுள் ஒருவர்.
   2. மணிமேகலை என்னும் சீரிய நூலை இயற்றியவர்.
   3. இவரைக் கூலவாணிகன் சாத்தனார் என்றும் கூறுவர்.
   4. இவர் பௌத்த மதத்தைச் சேர்ந்தவர்.
   5. சேரன் செங்குட்டுவனின் இளவலாகிய இளங்கோவடிகளின் நண்பர்.

   இவ்வாக்கியங்களைப் பொருள்தரும் உரைச்செய்தியாகக் கீழ்வருமாறு அமைக்கலாம்

   a. 1, 2, 3, 4, 5
   b. 1, 5, 2, 3, 4
   c. 1, 5, 2, 4, 3
   d. 1, 3, 4, 5, 2

10. 1. அண்ணா சதுக்கம் எதிரே சென்னைப் பல்கலைக்கழகம் இருக்கிறது.
   2. கி.பி. 1857 ஆம் ஆண்டு ஆங்கிலேயரால் சென்னைப் பல்கலைக் கழகம் தொடங்கப்பட்டது.
   3. பல அறிவியல் துறைகளைச் செம்மையாக இயக்கிவரும் இப்பல்கலைக்கழகம் ஆராய்ச்சிப் பிரிவுகளையும் விரிவாக இயக்கி வருகிறது.
   4. கடந்த சில ஆண்டுகளாக அஞ்சல்வழிக் கல்வியைத் தொடங்கி நடத்தி வருகிறது.
   5. திறந்தவெளிப் பல்கலைக் கழகம் தொடங்கி மேலும் பலர் கல்வித் தகுதி பெற வழிசெய்து வருகிறது.

   இவ்வாக்கியங்களைப் பொருள்தரும் உரைச்செய்தியாகக் கீழ்வருமாறு அமைக்கலாம்.

   a. 2, 1, 3, 4, 5
   b. 1, 2, 3, 4, 5
   c. 2, 1, 4, 5, 3
   d. 1, 2, 4, 5, 3

11. 1. எந்த முயற்சியும் விழலுக்கு இறைத்த நீராகி விடும்.
   2. உலக நலம் என்பது சமுதாய நலம்.
   3. காதல் சிறவாவிட்டால் ஞாலத்தில் எத்துறையிலும் எப்பண்பும் சிறவாது.
   4. இல்லற நலம் என்பது கணவன் மனைவியின் காதல் நலம்.
   5. சமுதாய நலம் என்பது இல்லற நலம்.

இவ்வாக்கியங்களைப் பொருள்தரும் உரைச்செய்தியாகக் கீழ்வருமாறு அமைக்கலாம்.

a. 4, 5, 3, 1, 2
b. 2, 5, 4, 3, 1
c. 3, 5, 4, 1, 2
d. 1, 3, 5, 4, 2

12. 1. இல்லறத்தோடு இயைந்து வாழ்.
2. கணவனும் மனைவியும் உயிரும் உடலும் போன்று ஒன்றாதல் வேண்டும்.
3. மணவாழ்க்கையில் அன்பு வேண்டும்.
4. எளிய வாழ்வு , எளிய உணவு, எளிய உடை இவையே வாழ்க்கை வெற்றியின் இரகசியங்கள்.
5. அன்பும் அறமும் இல்லாத மணவாழ்க்கை நரக வாழ்க்கை.

a. 4, 5, 3, 1, 2
b. 5, 3, 4, 1, 2
c. 3, 5, 2, 4, 1
d. 1, 3, 5, 4, 2

13. 1. தொல்காப்பியம் என்னும் பழைய தமிழ் இலக்கணம் நான் என்பதைக் கூறவில்லை.
2. இவற்றுள் யான் என்பது மிகப்பழமை வாய்ந்தது.
3. தமிழில் யான், நான் என்னும் இரண்டும் தன்மை ஒருமைப் பெயர்கள்.
4. பிற்காலத்தில் நான் என்பதும் வழக்காற்றில் வந்துவிட்டது.
5. யான் ஒன்றையே கூறுகின்றது.

a. 5, 3, 1, 4, 2
b. 3, 2, 1, 5, 4
c. 4, 5, 3, 1, 2
d. 1, 5, 4, 2, 3

14. 1. அறம், தொண்டு இரண்டும் ஒட்டிப்பிறந்த இரட்டைவாழைகள்.
2. அறவாழ்க்கையின் அடையாளமே தொண்டுதான்.
3. திரு. வி. க. இரு கண்களெனப் போற்றியவை அறமும் தொண்டும் ஆகும்.
4. தொண்டு உள்ளம் அறச்சிந்தனை சுரக்கும் கேணி.

5. தொண்டு செய்தால் அறமும் துலங்கும்.

   a. 3, 2, 1, 4, 5
   b. 4, 1, 2, 3, 5
   c. 3, 5, 4, 1, 2
   d. 2, 5, 1, 4, 3

15. 1. இந்த இரண்டும் மட்டும் பெற்றவர்களால் ஒருநாடு முன்னேற்றம் அடையமுடியாது.

   2. கடமை ஒழுங்கு ஒன்று வேண்டும்.

   3. வாய்ச்சொல் அளவில் வீரம் மிகுந்தவர்கள்.

   4. தமிழர்கள் உணர்ச்சி அளவில் ஊக்கம் மிகுந்தவர்கள்.

   5. இந்த ஒன்றுமட்டும் இருந்து மற்ற இரண்டும் இல்லாதிருந்தாலும் தமிழ்நாடு தலையெடுத்திருக்கும்.

   a. 4, 3, 1, 2, 5
   b. 3, 4, 1, 2, 5
   c. 5, 2, 3, 1, 4
   d. 5, 4, 3, 2, 1

16. 1. கப்பலைத் துறைமுகத்திற்கு அழைக்கும் வெளிச்சம் என்பதே கலங்கரை விளக்கம்.

   2. கலங்கரை விளக்கம் என்பதன் பொருள் என்ன ?

   3. விளக்கம் என்பது வெளிச்சம்.

   4. கலம் என்பது கப்பல்.

   5. கரை என்பது அழைத்தல்.

   a. 4, 5, 3, 2, 1
   b. 2, 4, 5, 3, 1
   c. 3, 2, 5, 4, 1
   d. 4, 2, 5, 1, 3

17. 1. இச்சொற்களை ஆராயும்போது முன்னாளில் கைத்தறியிலேயே ஆடைகள் நெய்யப்பட்ட முறை நன்றாக விளங்கும்.

   2. ஆடையின் வரலாறு இந்நாட்டுக் கைத்தறியின் சீர்மைக்கு ஒரு சிறந்த சான்றாக அமைந்துள்ளது.

3. ஆடையைக் குறிக்கும் பல அருமையான சொற்கள் இப்பொழுது பழகு தமிழில் இல்லை.
4. அத்தகைய சொற்களில் ஒன்று அறுவை என்பது.
5. ஆடை செய்யும் தொழிலாளரை அறுவையர் என்று குறிக்கின்றனர்.

a. 4, 3, 5, 1, 2
b. 5, 2, 3, 1, 4
c. 2, 4, 1, 5, 3
d. 3, 4, 5, 1, 2

18. 1. காலாட்படை, குதிரைப்படை முதலியன சோழநாட்டைக் காத்து வந்தன.
2. கிராம ஆட்சி அரசியலின் முதுகெலும்பாய் இருந்தது.
3. சோழப் பெருநாடு பல மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டிருந்தது.
4. சோழப்பேரரசனுடைய மக்களும் நெருங்கிய உறவினரும் மண்டலத் தலைவராகப் பணியாற்றினர்.
5. அமைதிகாக்க நிலைப்படைகள் நிறுவப்பட்டன.

a. 1, 4, 5, 3, 2
b. 2, 4, 3, 5, 1
c. 3, 1, 2, 5, 4
d. 2, 3, 4, 5, 1

19. 1. நாடகத்தமிழ் என்பது தமிழ்மொழி ஒன்றிற்கே உரிய சிறந்த செல்வமாகும்.
2. நமது தாய்மொழியாகிய தமிழ்மொழி தொன்றுதொட்டு முத்தமிழ் என வழங்கப்பட்டு வருகிறது.
3. நாடகத்தமிழ் என்று ஒரு பிரிவு தமிழ்மொழியில் இருக்கிறது.
4. இயல், இசை, நாடகம் எனும் மூன்று பிரிவு உடைமையால் முத்தமிழ் எனப் பெயர் பெறலாயிற்று.
5. உலகிலுள்ள மற்றெந்த மொழிகளிலும் நாடகப்பிரிவு என்பது இல்லை.

a. 1, 4, 5, 3, 2
b. 2, 4, 3, 5, 1
c. 4, 3, 2, 5, 1
d. 3, 4, 2, 1, 5

20. 1. அறம் கொழித்தால்தான் அகிலத்தில் அன்பும் அமைதியும் செழிக்கும்.
    2. 'இன்பமும் இனிமையும் தவமும்.
    3. சிந்தனையில் முனைந்தால்தான் உலகம் உய்ய உரியவழி பிறக்கும்.
    4. அருளறமும் பொருளறமும் பெருகும்.
    5. கூடிவாழும் மனித சமுதாயத்தின் கட்டுக்கோப்பு வலிமை பெறும்.

    a. 4, 3, 2, 1, 5
    b. 3, 4, 1, 2, 5
    c. 2, 4, 3, 5, 1
    d. 3, 2, 5, 4, 1

21. 1. நாள்தோறும் தவறாமலும் காலம் தாழ்த்தாமலும் குறித்த நேரத்தில் குறித்த கடமையை ஒழுங்காகச் செய்து முடிக்கும் வழக்கம் அவரிடம் இருந்தது.
    2. இவ்வளவு ஒழுங்காக அவர் தம் முதுமையிலும் வாழ்ந்து காட்டினார்.
    3. அவருடைய இடுப்பில் தொங்கிய கடிகாரம் காலம் காட்டத் தவறினாலும் அவர் கடமையை முடிக்கத் தவறியதில்லை.
    4. இதற்குக் காரணம் என்ன ? அவர் மனம்போன போக்கெல்லாம் போகவில்லை.
    5. அவர் எண்ணி அமைந்த போக்கில் அவருடைய மன இயந்திரம் இயங்கியது.

    a. 1, 3, 2, 4, 5
    b. 1, 4, 5, 2, 3
    c. 5, 2, 3, 4, 1
    d. 5, 4, 3, 2, 1

22. 1. ஆதித்தன் மிகச் சிறந்த வீரர்களுள் ஒருவனாகத் திகழ்ந்து சோழநாட்டு அரசுக் கட்டிலை அணிசெய்து வந்தான்.
    2. ஆதித்தனை அடுத்து அவன் மகன் முதலாம் பராந்தகன் அறியணை ஏறினான்.
    3. பராந்தகன் பாண்டியனைப் பணியவைத்துத் தன் ஆட்சியைத் தெற்கில் கன்னியாகுமரி வரை விரிவுறச் செய்தான்.
    4. அவனை எதிர்த்து நின்று வலிவிழந்த பாண்டியன் இலங்கைக்கு ஓடினான்.
    5. தன்னுடைய மூன்றாம் ஆண்டிற்குள் பராந்தகன் பாண்டிய நாட்டின் மீது படையெடுப்பு ஒன்றை மேற்கொண்டான்.

    a. 2, 1, 3, 4, 5
    b. 2, 1, 4, 5, 3
    c. 1, 2, 3, 4, 5
    d. 1, 2, 5, 3, 4

23. 1. கட்டுரை என்பது கட்டப்படும் உரை ஆகும்.
2. அறிவு வளர்ச்சிக்கு நல்ல பல கட்டுரைகளைப் பிழையின்றி எழுதி வெளியிட வேண்டும்.
3. இந்நாளில் செய்தித்தாள்களிலும் வார, மாத வெளியீடுகளிலும் அறிஞர்களின் கட்டுரைகள் பல வெளிவருகின்றன.
4. பல மலர்களால் கட்டப்படும் மாலை போன்று பல செய்திகளைத் தொகுத்து அழகாகக் கட்டி அமைக்கும் உரை கட்டுரை.
5. நூல்களைப் படிப்பதைவிடக் கட்டுரைகளைப் படிப்பது எளிதாகும்.

a. 3, 5, 1, 2, 4
b. 1, 4, 3, 5, 2
c. 3, 1, 4, 2, 5
d. 1, 2, 3 ,4, 5

24. 1. பொருத்தமான இடங்களில் மட்டும் சில பாடல்கள் இருக்கலாம்.
2. பாடல்களை மிகுதியாகப் புகுத்துவது முறையன்று.
3. ஒரு கதைப் பொருளைத் தக்க நடிகர்கள் வாயிலாகக் கண்டோர் விரும்பும் முறையில் மேடையில் நடித்துக் காட்டுவதே நாடகம் எனப்படும்.
4. நாடகத்தில் நடிப்புக்கு முதலிடம் தருவர்.
5. பேசும் வார்த்தைக்குத் தக்கவாறு நடிக்க வேண்டும்.

a. 3, 2, 1, 4, 5
b. 3, 4, 1, 2, 5
c. 3, 4, 5, 1, 2
d. 3, 1, 2, 4, 5

25. 1. பண்டைத் தமிழ்ச் சமுதாயத்தில் பேய்களைப் பற்றிய கருத்துகள் நிலவின.
2. அச்ச உணர்வால் பேய்கள் தெய்வங்களாக வணங்கப்பட்டன.
3. பேய்கள் பிணத்தைத் தின்று ஆடுவதாகவும் பிணங்கள் எரியும்போது பேய்கள் அங்கிருக்குமெனவும் புறப்பாடல்கள் கூறுகின்றன.
4. பேய் குழந்தைகளைக் கொன்றுவிடும் என்றும் பண்டைமக்கள் பயந்தனர்.
5. அவற்றிற்கெனச் சிறப்பான வழிபாடுகளும் பின்பற்றப்பட்டன.

a. 1, 3, 4, 2, 5
b. 1, 3, 5, 4, 2
c. 1, 3, 2, 4, 5
d. 1, 2, 5, 3, 4

26. 1. கி.பி. எட்டாம் நூற்றாண்டில் சேரநாட்டுப் பகுதிகள் பல படையெடுப்புகளுக்கு உள்ளாயின.

2. ஆறாம் நூற்றாண்டிலிலேயே சேரநாட்டில் கிறித்துவ சமயம் பரவிவிட்டதாக அறிய முடிகிறது.

3. இந்திகோ என்பவரின் நூல் ஆறாம் நூற்றாண்டளவில் கிறித்துவ சமயம் சேர நாட்டில் பரவியிருந்ததைத் தெரிவிக்கிறது.

4. தமிழ் இலக்கியங்கள் வாயிலாக சேரமான் பெருமாள் நாயனார் என்ற பெயர் கொண்ட மன்னர் சிலர் வாழ்ந்து வந்ததாக அறிகிறோம்.

5. சங்ககாலத்துக்குப் பின் சேரநாட்டைப் பற்றிய செய்திகள் விரிவாகக் கிடைக்கவில்லை.

a. 4, 5, 2, 3, 1

b. 5, 4, 3, 2, 1

c. 1, 2, 3, 5, 4

d. 5, 4, 2, 3, 1

27. 1. திருமலைக்குப் பின் அவன் மகன் ஒரு சில மாதங்களே அரசாண்டான். அவனை அடுத்து அவன் மகன் முதலாம் சொக்கநாதன் தன் பதினாறாம் ஆண்டில் அரசுக் கட்டில் ஏறினான்.

2. திருமலை தன் ஆட்சி வரம்பை விரிவாக்கவும் புகழ் தேடியும் திருவாங்கூர் நாட்டின் மீது படையெடுத்தான்; நாட்டின் பரப்பைப் பெருக்கினான்.

3. திருமலையின் ஆட்சி 30 ஆண்டுகளுக்கு மேல் நிலைத்திருந்தது.

4. சொக்கநாதன் தன் தலைநகரை மதுரையிலிருந்து திருச்சிக்கு மாற்றினான்.

5. அவன் இறுதிக்காலத்தில் மைசூர்ப் படைகள் தலைநகர் திருச்சியை முற்றுகையிட்டன.

a. 1, 3, 2, 4, 5

b. 2, 3, 1, 4, 5

c. 3, 2, 1, 4, 5

d. 4, 5, 1, 2, 3

28. 1. நல்ல பெரும் மழை பெய்தது. நன்றாக நான் நனைந்து விட்டேன்.

2. நான் குடையை எடுத்துக்கொண்டு வெளியே சென்றிருக்கலாம்.

3. நல்ல இடியுடன் மின்னலும் வந்தது.

4. மழை வரும் போலிருக்கிறது; குடை எடுத்துச் செல்லுங்கள் என்று சொன்னார்கள்.

a. 2, 1, 4, 3
b. 3, 2, 4, 1
c. 3, 4, 2, 1
d. 3, 4, 1, 2

29. 1. அவளுக்கு ஆடவும் பாடவும், கவர்ச்சியுடன் இருக்கவும் கற்றுக் கொடுப்பர்.
2. மூன்றாண்டுக்காலம் தொடர்ச்சியாகக் கல்வி கற்பாள்.
3. அக்காலத்தில் நாட்டியத்தில் விருப்பம் உள்ள மகளிர் சிறுமியாக இருக்கும் போது பயிற்சியைத் 'தெ ாடங்குவர்.
4. சிறுமி ஐந்தாவது அகவையில் கல்வி கற்க ஆரம்பிப்பாள்.
5. யாழ், குழல், மத்தளம் முதலியன வாசிக்கவும் கற்றக் கொள்வாள்.

a. 5, 1, 4, 2, 3
b. 3, 1, 5, 4, 2
c. 3, 1, 4, 2, 5
d. 4, 1, 2, 3, 5

30. 1. பாம்புக்குக் காது இல்லை.
2. சில பூச்சிகளுக்கு முன்கால்களில்தான் சத்தத்தை உணரும் சக்தி இருக்கிறது.
3. தரையில் ஏற்படும் அதிர்வுகளைக் கொண்டே அது மற்றவர்கள் வருவதைத் தெரிந்து கொள்ளும்.
4. நமக்குத் தலையின்`இருபுறமும் காதுகள் உள்ளன.

a. 4, 2, 1, 3
b. 2, 3, 1, 4
c. 1, 4, 3, 2
d. 3, 2, 4, 1

31. 1. இன்னும் திங்கள் என்பது மாதத்தையும் குறிக்கும்.
2. தமிழில் திங்கள் என்பது சந்திரனைக் குறிக்கும்.
3. இன்று தமிழில் கற்றோர்க்கு மட்டும் விளங்கும் பல சொற்கள் கன்னடத்தில் எல்லோராலும் எளிதில் பொருள் உணரும் சொற்களாக வழங்குகின்றன.

4. சான்றாகத் திங்கள் என்ற சொல்லை எடுத்துக் கொள்வோம்.

   a. 4, 2, 1, 3
   b. 1, 3, 4, 2
   c. 3, 4, 2, 1
   d. 2, 3, 4, 1

32. 1. மதுரை மாநகர் தமிழ்நாட்டின் இரண்டாவது பெரிய நகரமாகும்.
    2. .தமிழ்நாடு தென்னிந்தியாவிலுள்ள மாநிலமாகும்.
    3. கன்னியாகுமரி தமிழ்நாட்டின் தெற்கு முனையாகும்.
    4. சென்னை தமிழ் நாட்டின் தலைநகரம்.
    5. ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் சென்னை தென்னிந்தியாவின் தலைநகராக விளங்கியது.

   a. 5, 2, 3, 4, 1
   b. 2, 4, 5, 1, 3
   c. 3, 2, 5, 4, 1
   d. 1, 4, 3, 2, 5

33. 1. சிலப்பதிகாரம் கண்ணகி, கோவலன், மாதவி ஆகியோரைப் பற்றி கூறுகிறது.
    2. .இளங்கோவடிகள் சேரன் செங்குட்டுவனின் தம்பியாவார்
    3. செய்யுளும் உரைநடையும் கலந்துவரும் இலக்கியம் சிலப்பதிகாரம்.
    4. இவர்தான் சிலப்பதிகாரத்தை இயற்றினார்.
    5. இதில் சேர சோழப் பாண்டிய மன்னர்களின் வரலாற்றுக் குறிப்புகள் உள்ளன.

   a. 5, 1, 4, 3, 2
   b. 3, 5, 4, 1, 2
   c. 4, 1, 3, 5, 2
   d. 2, 4, 3, 1, 5

34. 1. நாம் ஆண்டுதோறும் குழந்தைகள் திருநாளைச் சிறப்பாகக் கொண்டாடுகிறோம்.
    2. "நேரு மாமா" என்று அவரை அன்புடன் குழந்தைகள் அழைத்தனர்.
    3. தன் பிறந்த நாளைக் குழந்தைகள் திருநாளாகக் கொண்டாடுமாறு வேண்டினார்.
    4. நேருவுக்குக் குழந்தைகள் என்றால் அதிக அன்பு.

5. குழந்தைகளை அன்போடு நேசித்தார்.

   a. 3, 5, 1, 2, 4
   b. 5, 2, 3, 1, 4
   c. 4, 5, 2, 3, 1
   d. 2, 1, 5, 4, 3

35. 1. இம்மரம் பல நூற்றாண்டுகள் வரை வாழுமாம்.
    2. தன் அடிமரத்தைச் சுற்றிப் பல விழுதுகளை நிலத்தில் படர விடும்.
    3. பாம்புகளைப் போன்று இவ்விழுதுகள் தொங்கும்.
    4. ஆலமரம் கிளைகளும் இலைகளுமாக பசுமையாகத் தழைத்து வளரும்.

   a. 4, 2, 3, 1
   b. 1, 4, 2, 3
   c. 3, 2, 1, 4
   d. 2, 1, 4, 3

36. 1. குரங்கு தூக்கணாங் குருவியின் கூட்டைப் பிரித்து எறிந்தது.
    2. ஓர் ஆலமரத்தில் தூக்கணாங்குருவியும் குரங்கும் வாழ்ந்தன.
    3. அக்குருவி மழையில் நனைந்த குரங்கிடம் "நீ ஏன் என்னைப்போல் கூடு கட்டிக் கொள்ளக் கூடாது" என்றது.
    4. அக்குருவி அழகான கூட்டை அம் மரத்தில் கட்டி வாழ்ந்தது.
    5. ஒருநாள் மழை பெய்தது.

   a. 1, 5, 2, 4, 3
   b. 2, 4, 5, 3, 1
   c. 3, 5, 2, 1, 4
   d. 5, 2, 1, 4, 3

37. 1. இக்கோயிலின் கோபுரத்தின் நிழல் தரையில் விழாமல், கோபுரத்தின் மீதே விழும்.
    2. இராசராச சோழன் ஒரு கோயிலைத் தஞ்சை மாநகரில் கட்டினான்.
    3. பல வரலாற்றுச் செய்திகளைக் கோயிலின் கல் சுவர்களில் பொறித்து வைத்தான்.
    4. இக்கோயிலுக்குப் "பெரிய கோயில்" என்றும், "பிரகதீஸ்வரர் கோயில்" என்றும் பெயருண்டு.

5. சோழர்கள் கால வரலாற்றுச் செய்திகளை இக்கல்வெட்டுகளின் மூலம் அறிந்து கொள்ளலாம்.

a. 5, 1, 4, 3, 2
b. 2, 5, 1, 4, 3
c. 3, 1, 5, 3, 4
d. 2, 3, 5, 4, 1

38. 1. இதற்கான விழா சிறுவர் பூங்காவில் எளிமையாக நடந்தது.
2. பம்பாயிலுள்ள ஒரு கோவிலுக்கு ஒரு யானைக் குட்டி பரிசாகக் கொடுக்கப்பட்டுள்ளது.
3. அதேபோல் ஆளுநருக்குப் பதிலாக அவருடைய செயலாளர் வந்திருந்தார்.
4. பம்பாயிலிருந்து அமைச்சர் வருவதாக ஏற்பாடு.
5. கடைசி நேரத்தில் அமைச்சரின் செயலாளர் வந்தார்.

a. 5, 3, 2, 4, 1
b. 4, 5, 1, 2, 3
c. 1, 3, 5, 2, 4
d. 2, 1, 4, 5, 3

39. 1. இப்போது மூன்றாவதாக பேராசிரியர் சி.எஸ். சேஷாத்திரி.
2. லண்டனிலுள்ள ராயல் சொசைட்டியில் உறுப்பினராவது என்பது குதிரைக் கொம்பு !
3. முதலில்கணிதமேதைஸ்ரீநிவாசஇராமானுஜம்.
4. கணிதத் துறையை மட்டும் எடுத்துக் கொண்டால், இதுவரை மூன்று இந்தியர்கள் மட்டுமே அங்கு உறுப்பினர்களாகச் சேர்த்துக் கொள்ளப் பட்டிருக்கிறார்கள்.
5. பிறகு ஹரீஷ் சந்திரா.

a. 3, 5, 1, 4, 2
b. 2, 4, 3, 5, 1
c. 4, 3, 2, 1, 5
d. 5, 1, 4, 3, 2

40. 1. புது வீட்டுக்குக் குடிவந்து ஒரு வாரமாயிற்று.
2. பழைய வீட்டைப் பூட்டிச் சாவியை வீட்டுக்காரரிடம் கொடுத்து 'இருண்ட' வாழ்க்கைக்கு ஒரு முற்றுப்புள்ளி வைத்தாகிவிட்டது.
3. ஒவ்வொரு நாளும் புதிய நண்பர்களும் புது அனுபவமுமாய் மகிழும் விதமாய்ப் போனது.

4. எளிமையாகக் கிரகப்பிரவேசம் நடந்தது.

5. எல்லோருக்கும் பிடித்துப் போயிற்று.

a. 5, 3, 1, 2, 4

b. 2, 4, 1, 3, 5

c. 4, 2, 1, 3, 5

d. 1, 2, 4, 5, 3

41. 1. நரைமட்டும் இருந்த நிலை மாறித் திரையும் வந்துற்றது.

2. ஆனால் அன்பு மனத்திற்கு மட்டும் வளர்ச்சி என்பதே இல்லை போல் தெரிகிறது.

3. நான் வளர்ந்து இருபதாண்டு இளைஞன் ஆனேன்.

4. பாட்டியாருக்கு நான் இன்னும் ஆறாண்டுள்ள சிறுவனாகவே இருந்தேன்.

5. பாட்டியாரும் வளர்ந்து அறுபத்தைந்தாண்டுக் கிழவியானார்.

a. 3, 5, 1, 2, 4

b. 5, 3, 2, 1, 4

c. 4, 3, 5, 1, 2

d. 2, 4, 3, 5, 1

42. 1. கணக்கிலும் தமிழ் இலக்கணத்திலும் முதல் மாணவராக விளங்கிய மு.வ.வை அவர் பாராட்டுவார்.

2. இது பற்றி மு.வ. கூறும் ஒரு சுவையான நிகழ்ச்சியைக் காண்போம்.

3. அதே சமயம் மு.வ. தவறு செய்யும்போதெல்லாம் தண்டனையும் இரட்டிப்பாகத் தருவார்.

4. மு.வ. ஆறாம் வகுப்பில் படித்தபோது அவருக்குக் கணக்கு ஆசிரியராக இருந்தவர் திருவேங்கடத்து ஐயங்கார் என்பவர்.

5. அவர் மாணாக்கர்களுக்குத் தமிழ் இலக்கணமும் கற்பித்தார்.

a. 4, 3, 2, 5, 1

b. 2, 3, 1, 5, 4

c. 4, 5, 1, 3, 2

d. 3, 2, 5, 4, 1

43. 1. திருமணத்திற்குரிய நன்னாளைக் குறித்துப் பட்டத்து யானையின் மீது திருமணச் செய்தியை மக்களுக்கு அறிவித்தனர்.

2. இவ்விருவரது பெற்றோரும் ஒரு நன்னாளில் கோவலனுக்குக் கண்ணகியை மணம் செய்து வைக்க எண்ணினார்கள்.

3. மணக்கோலம் காண நிறைந்து நின்ற மாந்தர்கள் கண்ணகியையும் கோவலனையும் வாழ்த்தினார்கள்.

4. திருமணத்திற்காக அமைந்திருந்த நன்னாளில் முரசு அடிக்கவும் முழங்கு கருவிகள் முழங்கவும் மங்கல முழக்கமே எங்கும் நிறைந்திருந்தது.

a. 1, 2, 4, 3
b. 2, 3, 1, 4
c. 4, 1, 2, 3
d. 2, 1, 4, 3

44. 1. இந்தியாவில் மௌரியர் ஆட்சிக் காலத்திலேயே மதுவிலக்குச் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது.

2. மதுவைப் பற்றிய அறிவு எவ்வளவு தொன்மையானதோ அவ்வளவு பழமையானது அதை விலக்க நினைத்த எண்ணமும்.

3. மதுவிலக்கு பற்றிக் கூறும் மிகத் தொன்மையான சட்டம் கி.மு. 2500-இல் தோன்றிய அமுராபிச் சட்டமாகும்.

4. தமிழ்நாட்டில் மதுவிலக்குக் கொள்கையை முதன்முதலில் வலியுறுத்தியவர் திருவள்ளுவரே.

a. 1, 3, 4, 2
b. 2, 1, 3, 4
c. 2, 3, 1, 4
d. 1, 2, 4, 3

45. 1. அரசியல் புரட்சி மட்டுமன்று, சமுதாயப் புரட்சியும் இந்தியாவில் தோன்றியுள்ளது.

2. அதன் விளைவாக ஒடுக்கப்பட்ட மக்கள் விழிப்புணர்வு பெற்றனர். அவர்களே தங்கள் உரிமைகளுக்காகப் போராடினர்.

3. 20-ஆம் நூற்றாண்டில் பெரியாரின் தன்மான இயக்கம் சமுதாயப் புரட்சியை ஏற்படுத்தியது.

4. ஆனால், முழுமையான பயன் விளைந்ததாகக் கூற முடியாது.

a. 1, 3, 4, 2
b. 1, 3, 2, 4
c. 3, 4, 1, 2
d. 1, 2, 3, 4

E. Letter Writing and Composition
கடிதம் எழுதுதல் மற்றும் மொழிப் பயிற்சி

ஒவ்வொரு கேள்வியின் கீழேயும் a, b, c, d என எண்ணிட்டுக் கொடுக்கப்பட்டுள்ள நான்கு விடைகளுள் பொருத்தமானதைத் தேர்ந்தெடுத்து அதை விடைத்தாளில் எழுதுக / வட்டமிட்டுக் காட்டுக.

1. நூல் மதிப்புரை எழுதும்போது நூல் பற்றிய செய்திகளை எவ்வாறு அமைக்கலாம் ?

   a. நூலாசிரியர், நூலின் பெயர், விலை, வெளியீடு.

   b. வெளியீடு, நூலின் பெயர், நூலாசிரியர், விலை.

   c. நூலின் பெயர், நூலாசிரியர், வெளியீடு,விலை.

   d. நூலின் பெயர், நூலாசிரியர், விலை, வெளியீடு.

2. செய்தித் தாள்களுக்குச் செய்தி அனுப்பி அதை எவ்வாறு வெளியிடுமாறு வேண்டலாம் ?

   a. தங்கள் செய்தித் தாளில் இதனை வெளியிடவும்.

   b. தங்கள் செய்தித்தாளில் இதனை வெளியிட்டால் நன்றியுடையேன்.

   c. தங்கள் செய்தித்தாளில் இதனை வெளியிடுக.

   d. தங்கள் செய்தித்தாளில் இதனை வெளியிட்டுப் பெருமைப்படுத்த வேண்டுகிறேன்.

3. தந்தை மகனுக்கு எழுதும் கடிதத்தின் கடைசிப்பகுதி எவ்வாறு இருக்கலாம் ?

   a. உன் அன்புமடல் காண விழைகின்றேன். நன்றி.

   b. உன் அன்பு மடலுக்காகக் காத்திருக்கிறேன்.

   c. உன் நலம் குறித்துப் பதில் கடிதம் எழுது.

   d. உன் நலத்திற்கும் பிற செய்திகளுக்கும் உன் அன்புக் கடிதம் காண விழைகின்றேன்.

4. தந்தையோ தாயோ மகனுக்கோ மகளுக்கோ கடிதம் எழுதி எவ்வாறு முடிக்கலாம் ?

   a. உன் தந்தை / உன் தாய்.

   b. உன் அன்புத் தந்தை / உன் அன்பு அன்னை.

   c. உன் அப்பா / உன் அம்மா.

   d. உன் அன்பார்ந்த தந்தை / உன் அன்பார்ந்த தாய்.

5. விண்ணப்பம் எழுதும்போது எவ்வாறு விளித்தல் நல்லது ?

   a. அன்பார்ந்த ஐயா,

b. உயர்திரு ஐயா,

c. ஐயா,

d. அன்புள்ள ஐயா,

6. கடிதத்தின் கடைசியில் நாளையும் இடத்தையும் எவ்வாறு குறிப்பிடுதல் வேண்டும் ?

a. தஞ்சாவூர்,
22.03.1988

b. தஞ்சாவூர், 22.03.1988

c. 22.03.1988,
தஞ்சாவூர்

d. 22.03.1988, தஞ்சாவூர்.

7. ஒரு கட்டுரையின் முக்கியமான வரிசை,

a. குறிப்புரை, முன்னுரை, முடிவுரை.

b. முன்னுரை, குறிப்புரை, முடிவுரை.

c. முன்னுரை, பொருளுரை, முடிவுரை.

d. முன்னுரை, முடிவுரை, குறிப்புரை

8. செய்யுளின் பொருளுணர் திறனை வளர்த்தல் என்பது.

a. செய்யுளையே திரும்பத் திரும்பப் படிப்பது.

b. செய்யுளின் பொருளை உணர்ந்து தெளிவது.

c. செய்யுளில் வினாக்களை எழுப்பிப் பொருளைத் தெரிந்து கொள்வது.

d. செய்யுள்தரும் பொருளையொட்டி வினாக்களை எழுப்பி உரிய விடையைக் கூறிப் பொருளுணர்தல்.

9. கட்டுரைக்கான கருத்துகளைத் திரட்ட தேவையானது :

a. மேற்கோள் நூல்கள்

b. குறிப்புகள்

c. குறிப்பெழுதும் திறன்

d. கலைச் சொற்கள்

10. ஆசிரியருக்கு விடுப்பு வேண்டி எழுதும் கடிதம் எவ்வாறு அமையும் ?

a. எனக்கு விடுப்பு வேண்டும் ; தரவும்.

b. விடுப்பு உண்டென்றால், நலம்.

c. உடல் நலமின்மையால் பள்ளிக்கு வர இயலவில்லை. எனவே இன்று ஒரு நாள் விடுப்பு தரும்படி பணிவுடன் வேண்டிக் கொள்கிறேன்.

d. விடுப்பில்லை என்றால் பள்ளிவர இயலாது.

11. வரலாற்றுச் சிறப்புள்ள நகரைப் பற்றி கட்டுரை எவ்வாறு அமைக்கலாம்?

a. நகரின் மக்கள், விளைபொருள்கள், அரசர்கள் பற்றிய செய்திகள்.

b. நகரை ஆண்ட அரசர்களின் நினைவுச் சின்னங்களைப் பற்றிய குறிப்புகள் - சிறப்பின் காரணம் - மக்களின் வாழ்க்கை முறை - நகரமைப்பு - இயற்கை வளம்.

c. மற்ற நகரின் சிறப்புடன் ஒப்பிடுதல் - தட்பவெப்ப நிலை - விளையும் பொருள்-மக்கள்.

d. மற்றவர்களுக்கு இந்நகர் கூறும் செய்திகள்.

12. கொடுக்கப்பட்டுள்ள பாடலை விமரிசித்துக் கட்டுரை எவ்வாறு எழுத வேண்டும் ?

a. பாடலின் முழுப்பொருளைச் சொல் சிறப்புடனும், பொருள் சிறப்புடனும், கருத்தில் காணும் ஆழத்துடனும், பாடலிலுள்ள மொழியமைப்புடனும் எழுதுதல்.

b. பாடலின் கருத்தாழத்தை மட்டும் எழுதுதல்.

c. பாடலின் ஆசிரியரைப் பற்றிய குறிப்பே மேலோங்கி இருத்தல்.

d. சொல்லமைப்பையே வெளிக் காட்டுதல்; பொருளமைப்பையன்று.

13. உன் நண்பனுக்கு நீ சென்ற சுற்றுலாப்பயணத்தைப் பற்றி எப்படி கட்டுரை வடிவில் அமைப்பாய் ?

a. சுற்றுலாப்பயணத்தின் சிறப்பும் பெருமையும் பற்றி எழுதுதல்.

b. சுற்றுலாப்பயணத்தின் நோக்கம் - அதனால் பெற்ற இன்பமும் பயனும் - கண்ட காட்சிகள் - கற்றுக் கொண்டவை.

c. பொழுது போக்க - வீண் செலவு என - பயனற்ற பயணம்.

d. நண்பன் இல்லாமல் ஏற்பட்ட அனுபவம் - ஆசிரியர்.

14. உங்கள் தெருவில் மின்விளக்கு போடச் சொல்லிப் மின்பொறியாளருக்கு எவ்வாறு கடிதம் எழுதுவாய் ?

a. உடனடியாக மின்விளக்கு போட வேண்டும் எனக் கூறல்.

b. மின்விளக்கின் அவசியமும் , தெருவில் மக்களின் இன்னலும்.

c. தாங்கள் செய்ய வேண்டிய பணியெனச் சுட்டிக் காட்டல்.

d. தெருவில் மின்விளக்கு போட்டால் மக்கள் பெறும் பயனையும், அதனால் மக்கள் கூறும் நன்றியையும், பணிக்கான பாராட்டலையும் தெரிவித்தல்.

15. உனக்கு வேண்டிய நூல்களைப் பெறுவதற்கு நூல் வெளியீட்டாருக்கு எவ்வாறு கடிதம் எழுதுவாய் ?

   a. உடனடியாக நூல் அனுப்ப வேண்டும் - பின்னர் பணம் அனுப்பப்படும்.

   b. நூல் இருப்பினை அறிதல் - தன் தேவை கூறி அஞ்சல் மூலம் அனுப்ப வேண்டுதல்.

   c. பணம் அனுப்புதல் - நூல் பெறுதல்.

   d. நூலின் சிறப்பையும் பயனையும் கூறல் - அனுப்பக் கோருதல்.

16. நீ விரும்பும் ஒரு தேசத்தலைவரைப் பற்றி ஒரு கட்டுரை எழுதுவதற்குப் பொருத்தமான குறிப்புச் சட்டம் எது ?

   a. தலைவரின் பண்புகள் - ஆற்றிய தொண்டுகள் - அவரின் செயலாற்றும் திறன் - அவரால் மக்கள் அடைகின்ற பயன்கள் - விரும்பும் காரணங்கள்.

   b. தலைவரை விரும்பும் காரணங்கள் - அவர் மக்களிடையே கொண்டுள்ள செல்வாக்கு - பிற செய்திகள்.

   c. மக்கள் தலைவரைப் பற்றிக் கொண்டுள்ள கருத்துக்கள் - மக்கள் பாராட்டு.

   d. தலைவரின் தேவை - மக்களின் பங்கு - தலைவர் பண்புகள்.

17. கல்வியின் சிறப்பும் பயனும் பற்றிய ஒரு கட்டுரையை எப்படி அமைப்பாய் ?

   a. கல்வி எல்லோருக்கும் பொதுவான ஒன்று.

   b. புகழும் பேரும் கல்விக்கு உண்டென அறிவுறுத்தல்.

   c. கல்வியினால் ஏற்படும் சிறப்பையும் பயனையும் கூறுதல் - கல்வி இல்லாததால் விளையும் இன்னல்களைச் சுட்டிக் காட்டல் - கல்வியின் நோக்கம் - சுற்றுப்புறம் அறிதல் - அறிவின் அழியாச் சிறப்பு.

   d. கல்விக்கும் மக்களுக்கும் உள்ள தொடர்பைக் கூறல்.

18. வேலைக்கு மனுப்போடும் பொருட்டு அரசு உயர்நிலை அதிகாரிக்குக் கடிதம் எழுதக் கீழ்வரும் எந்தக் குறிப்பு பொருத்தமுடையதாக இருக்கும் ?

   a. மனுப் படிவத்தை உடனடியாக அனுப்பக் கோருதல் - நன்றி தெரிவித்தல்.

   b. எவ்வளவு விரைவில் மனுப் படிவம் கிடைக்கிறதோ - அவ்வளவிற்கு நன்மை என அறிவுறுத்தல்.

   c. மனுப்படிவத்தை அனுப்புதல் அவரின் கடமையெனக் கூறுதல் - பாராட்டுதல்.

   d. தன் தகுதியைக் கூறிப் பணியில் சேர விருப்பம் தெரிவித்து மனுப்படிவம் வேண்டுதல் - நன்றி தெரிவித்தல்.

19. ஒரு அலுவலக முறையிலான கடிதத்தின் கூறுகள்:

1. பெறுநர் முகவரி
2. அனுப்புநர் முகவரி
3. விளி
4. கடிதப் பொருள்
5. கடிதச் செய்தி
6. தகவல் விபரம்
7. அனுப்புநர் ஒப்பம்

- இந்த ஏழு கூறுகளும் எந்த வரிசைமுறையில் அமையவேண்டும் ?

a. 2, 1, 3, 4, 5, 6, 7
b. 2, 1, 5, 4, 3, 6, 7
c. 1, 2, 3, 4, 6, 5, 7
d. 1, 2, 3, 4, 5, 6, 7

20. கீழ்வருவனவற்றுள் எது அலுவலகப் பணியாளர் ஒருவர் தாம் அவ்வலுவகத்தில் பணியேற்கும்போது எழுதும் முறையான பணியேற்புக் கடிதத்தின் உள்ளடக்கமாக இருக்கும் ?

a. அன்பார்ந்த ஐயா ,

தங்களின் ஆணைப்படி இன்று முற்பகல் இவ்வலுவலகத்தில் பணியில் சேருகிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சென்னை - 40, தங்களின் உண்மையுள்ள,
2-3-88. (ஒ-ம்) ——————.

b. அன்பார்ந்த ஐயா ,

வணக்கம்.

தங்கள் ஆணை ந.க. எண் 123 / 88 இன் படி 1-3- 88 அன்று பிற்பகல் இவ்வலுவலகத்தில் எழுத்தர் பணியில் சேருகிறேன் என்பதைப் பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

சென்னை - 40, உங்கள் மதிப்பிற்குரிய,
2-3-88. (ஒ-ம்) ——————.

c. அன்பார்ந்த ஐயா ,

வணக்கம்.

தங்களின் 1-3-88 நாளிட்ட ஆணை ந.க. எண் 123/88 - இன் படி 5-3-88 அன்று பிற்பகல் இவ்வலுவலகத்தில் எழுத்தர் பணியில் சேருகிறேன் என்பதைப் பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

தங்கள் உண்மையுள்ள,

(ஒ-ம்) ——————.

d. அன்பார்ந்த ஐயா ,

வணக்கம்.

தங்களின், 1-3-88 நாளிட்ட ஆணை ந.க.எண் 124/88 இன்படி 10-3-88 அன்று பிற்பகல் இவ்வலுவலகத்தின் எழுத்தராகப் பணியேற்கிறேன் என்பதைப் பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

சென்னை - 40, தங்கள் உண்மையுள்ள,

10-3-88 (ஒ-ம்) ——————————.

21. உங்கள் ஊரிலுள்ள தெரு ஒன்றைச் சீர்படுத்தக் கோரி ஊராட்சி ஒன்றிய ஆணையாளருக்கு அனுப்பப்படும் விண்ணப்பத்தின் முடிப்புச் செய்தி எவ்வாறு அமையும் ?

a. எனவே, தாங்கள் உடனடியாக இதில் தலையிடுக. இது மிகமிக அவசரமான ஒன்றாகும்.

b. தாங்கள் அருள்கூர்ந்து எங்கள் கோரிக்கையை நிறைவேற்றி இவ்வூர் மக்களுக்கு உதவிடப் பணிவுடன் வேண்டுகிறேன்.

c. நான் குறிப்பிட்டதுபோல தங்களுடைய விரைவான நடவடிக்கையை எதிர்பார்க்கிறோம்.

d. இந்நடவடிக்கை மிகவும் விரைந்து எடுக்கப்படவேண்டியது என்பதால் உங்கள் கவனத்திற்குக் கொண்டு வந்துவிட்டேன்.

22. கட்டுரையின் பொருளமைப்பு வாழ்க்கை வரலாறாயின் அதில் கீழ்க்கண்ட உட் தலைப்புகள் அமையலாம்.

உட்தலைப்புகள்
1. அறிமுகம்
2. பிறப்பும் வளர்ப்பும்
3. இல்லற வாழ்க்கை

4. கல்வி
5. பண்பு நலன்
6. சமுதாயப் பணி
7. முடிப்பு

இந்த உட் தலைப்புகளை எந்த வரிசைமுறையில் அமைப்பது ?

a. 1, 2, 3, 4, 5, 6, 7
b. 1, 2, 4, 3, 6, 5, 7
c. 1, 2, 4, 6, 3, 5, 7
d. 1, 2, 5, 4, 3, 6, 7

23. ஒரு கட்டுரையின் பத்தியமைப்பு எவ்வாறு இருத்தல் வேண்டும் ?

a. ஒரு பக்கத்திற்கு இரண்டு பத்திகள்.
b. ஒரு பக்கத்திற்கு மூன்று அல்லது நான்கு பத்திகள்.
c. ஒரு உள் தலைப்புக்கு ஒரு பத்தி.
d. ஒரு கருத்துக்கு ஒரு பத்தி.

24. நாட்டிலே இப்போது பல்வேறு துறைகளிலேயும் மறுமலர்ச்சி ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது. இலக்கியத்துறையும் புதிய பாதையில் நடைபோடுகிறது. இரண்டாயிரம் ஆண்டுகளைத் தாண்டிவிட்ட நம் இலக்கிய அன்னை இந்த இருபதாம் நூற்றாண்டிலும் புத்துணர்ச்சி பெற்று வருகிறாள். - இப்பகுதி கீழ்க்கண்ட எத்தலைப்பை உடைய கட்டுரைக்குப் பொருத்தமான முன்னுரையாக இருக்கும்.

a. பல்துறை வளர்ச்சி
b. இன்றைய இலக்கியங்கள்
c. இரண்டாயிரமாண்டு இலக்கியங்கள்
d. நம்நாடு

25. 'தைத் திருநாள்' என்னும் தலைப்புடைய கட்டுரைக்கு கீழ்க்கண்டனவற்றில் எது பொருத்தமான முன்னுரையாக அமையும் ?

a. நாம் ஒவ்வொரு நாளும் நமது கடமைகளை மறவாது செய்யவேண்டும். அப்போதுதான் நாடு முன்னேறும். நாம் கடமையாற்றும் ஒவ்வொரு நாளும் திருநாளே.
b. உலகை உய்விக்க உத்தமர்கள் பலர் தோன்றியுள்ளனர். உத்தமர்கள் வரிசையில் இருக்கும் ஒருவர் 1116 ஆம் ஆண்டு தைத் திங்கள் இருப்பத்தைந்தாம் நாளில் தோன்றினார். அவர் பிறந்த அந்த நாளை . . . . .

c. இயற்கை அன்னையின் அருட்பார்வையால் உழைக்கும் மக்கள் வாழ்வும் வளமும் பெறுகின்றனர். உழைப்பவர் உலகில், உழவர்கள் ஏரும் கையுமாய் எருதுகளே துணையாய் வாழ்பவர்கள். அப்பெருமக்கள் ஆண்டிற்கு ஒருநாள் இன்னல் மறந்து இனிதிருக்கும் நாள் ....

d. உலகை உய்விக்கப் பல பெரியார்கள் தோன்றியுள்ளார்கள். புத்தர் தோன்றினார். இயேசு தோன்றினார். வள்ளுவர் தோன்றினார். இவர்களுக்கு விழா எடுக்கிறோம். அவர்கள் பிறந்த நாட்களைக் கொண்டாடுகிறோம். அவ்வாறு கொண்டாடப்படும் ஒரு நாளே . . .

26. புத்தகக் கம்பெனிக்குப் புத்தகங்கள் வாங்குவது தொடர்பாக எழுதும் கடிதச் செய்திக்குக் கீழ்வருவனவற்றுள் எது பொருத்தமாக அமையும் ?

a. புத்தகங்களை உடனடியாக அனுப்பி வைக்கவும்.

b. புத்தகங்கள் அனுப்பாவிடில் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

c. உங்கள் கம்பெனியின் புத்தகங்களைப் பின்வரும் முகவரிக்குப் பதிவுத் தபாலில் அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

d. உங்கள் புத்தகம் எப்போது கிடைக்கும் எனத் தெரிவிக்கவும்.

27. பணவிடை (money order) கிடைக்கத் தாமதமாவதைக் குறிப்பிட்டு அமைய வேண்டிய செய்தி :

a. அன்புடன் நடவடிக்கையை இந்தப் புகாரின் மேல் எடுத்து ஆவன செய்ய வேண்டுகிறேன்.

b. உரிய நடவடிக்கை மேற்கொள்ளாவிடில் பின்வரும் விளைவுகளைச் சந்திக்க நேரிடும் என எச்சரிக்கின்றேன்.

c. பணவிடை இன்னும் வராமல் இருப்பதால் உடனடியாக நடவடிக்கை எடுத்துப் பணத்தை விரைவில் பெற ஆவன செய்யுமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

d. எனக்குப் பணம் உடனடியாகக் கிடைக்கவில்லையாயின் மேல் நடவடிக்கை எடுக்கப்படும்.

28. எழுத்தர் வேலை வேண்டி விண்ணப்பம் அனுப்பும் கடிதத்தின் பொருளுரையின் முடிப்பு எவ்வாறு அமையும் ?

a. எழுத்தர் வேலைக்கு என்னைத் தேர்வு செய்யுமாறு மிகவும் பணிவன்புடன் வேண்டுகிறேன்.

b. எழுத்தர் வேலைக்கு என்னையே தேர்வு செய்யுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

c. மற்றவர்களைக் காட்டிலும் என்னிடம் அதிகத் திறமை இருப்பதால் என்னைத் தேர்வு செய்யவும்.

d. என்னையே எழுத்தர் பதவிக்குத் தகுதியுடையவனாக்க வேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறேன்.

29. பள்ளி இலக்கிய விழாவிற்கு நகரப் பிரமுகரை அழைத்து எழுதும் கடிதத்தின் பொருளுரையின் முடிப்பு:

a. தயவுசெய்து தங்களின் மேலான இசைவினைத் தெரிவிக்குமாறு வேண்டுகிறோம். தாங்கள் எங்கள் அழைப்பை மறுக்கமாட்டீர்கள் என நம்புகிறோம்.

b. தாங்கள் கண்டிப்பாக இவ்விழாவில் கலந்துகொள்வீர்கள் என்று நம்புகிறோம். எனவே, தவறாமல் தங்கள் இசைவினைத் தெரிவிக்கவும்.

c. தாங்கள் இவ்விழாவில் கண்டிப்பாகக் கலந்துகொள்ளத்தான் வேண்டும்.

d. எவ்விதத் தடையும் சொல்லாது உடன் ஒப்புதல் அளிக்கக் கோருகிறேன்.

30. கல்லூரி முதல்வருக்குக் கடிதம் எழுதும்பொழுது அழைக்க வேண்டிய முறை.

a. என் அன்பிற்குரியவரே !

b. ஆருயிர் முதல்வர் அவர்களே !

c. மதிப்பிற்குரிய ஐயா,

d. மாண்புமிகு முதல்வர் அவர்களே !

31. பள்ளித் தலைமையாசிரியருக்கு நடத்தைச் சான்றிதழ் கேட்டுக் கடிதம் எழுதும்பொழுது கடிதத்தை முடிக்க வேண்டிய முறை :

a. தங்கள் அன்புள்ள,

b. தங்கள்,

c. மற்றவை பின்,

d. தங்கள் கீழ்ப்படிதலுள்ள மாணவன்,

32. தந்தைக்குக் கடிதம் எழுதும் பொழுது

a. அனுப்புநர், பெறுநர் முகவரிகள் எழுத வேண்டும்.

b. முதலில் எழுதிய கடித எண் எழுத வேண்டும்.

c. அனுப்புநர், பெறுநர் முகவரிகள், முன்னர் எழுதிய கடித எண் எதுவும் தேவையில்லை.

d. அனுப்புநர் பெறுநர் முகவரிகள், முன்னர் எழுதிய கடித எண் ஆகியவற்றைக் கட்டாயம் எழுத வேண்டும்.

33. தெருவிளக்குகளைக் கவனிக்குமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்குக் கடிதம் எழுதும்போது.

a. தெருவிளக்குகளைக் கவனிக்கிறீர்களா இல்லையா என்று உடனே தெரியப்படுத்துங்கள்.

b. தெருவிளக்குகளைக் கொஞ்சம் கவனித்தால் என்ன ?

c. தெருவிளக்குகளைக் கவனித்து ஆவன செய்வீர்கள் என நம்புகிறோம்.

d. தெருவிளக்குகளைக் கவனித்துக் கூடியவிரைவில் ஆவன செய்ய வேண்டும் எனக் கேட்டுக் கொள்ளுகிறோம்.

34. நண்பனுக்குக் கடிதம் எழுதும்பொழுது, கடிதத்தை முடிக்க வேண்டிய முறை :

a. பணிவன்புடன்,
b. தங்கள் உண்மையுள்ள,
c. அன்புடன் உன் நண்பன்,
d. நன்றியுடன் உங்கள்,

35. அரசு உயர் அலுவலருக்கு வேலை கேட்டு விண்ணப்பக் கடிதம் எழுதும்போது விளிக்கும் சரியான முறை.

a. பேரன்புடையீர்!
b. மதிப்பிற்குரிய ஐயா,
c. மேதகு,
d. மாண்புமிகு,

36. அலுவலகக் கடித அமைப்பில் கீழ்க்கண்டவற்றுள் எது பொருத்தமான வரிசையாகும்?

a. விளி, பார்வை, பொருள், நன்றி.
b. பார்வை, பொருள், விளி, நன்றி.
c. விளி, பொருள், பார்வை, நன்றி.
d. பார்வை, விளி, பொருள், நன்றி.

37. கட்டுரைக்குரிய குற்றங்களில் ஒன்று:

a. சுருங்கச் சொல்லல்
b. விளங்க வைத்தல்
c. கூறியது கூறல்
d. நன்மொழி புணர்தல்

38. கட்டுரையில் அமைய வேண்டிய நடை.

a. எளிய ஆற்றொழுக்கு நடை
b. கலவை நடை

c. கொச்சை நடை

d. பிழைபட்ட நடை

39. தொலைக்காட்சிப் பெட்டி தன் வரலாறு கூறுதல் பற்றிய கட்டுரை

a. வரலாற்றுக் கட்டுரை

b. கற்பனைக் கட்டுரை

c. விளக்கக் கட்டுரை

d. வருணனைக் கட்டுரை

40. தரப்பட்டிருக்கும் இரு கடிதங்களையும் படித்து அவை தொடர்பாகக் கொடுக்கப்பட்டிருக்கும் வினாக்களுக்கு மிகவும் பொருத்தமாக அமைகின்ற விடைகளைத் தேர்ந்தெடுக்க.

கடிதம் - 1
கிராம நிலவள வங்கி (வரையறுக்கப்பட்டது)

மறைவுமுறைக் கடிதம்.

7, தேரடித் தெரு.
நெடுவயல், 627 805
மார்ச்சு 29, 1987.

பெறுநர்

மேலாளர்,
தென்னக வணிக வங்கி,
17, மேற்கு மாசித் தெரு,
தென்காசி, 627 811.

அன்புடையீர்,

இக்கடிதத்தின் அடியில் குறிப்பிடப் பெற்றுள்ளவர் தங்கள் வங்கியின் வாடிக்கையாளர் என அறிந்தோம். அவர் எங்கள் வங்கியில் ரூ 10000/- நிலச் சீர்திருத்தக் கடன் கோரி விண்ணப்பம் அனுப்பியுள்ளார். அவரது வருமான நிலை, சமுதாயத் தகுதிநிலை, நாணயம், தொழில் திறன் ஆகியன பற்றிய விவர அறிக்கையொன்று அனுப்பிட வேண்டுகிறேன்.

தங்களின் கடிதச் செய்திகள் மிகமிகக் கமுக்கமாக வைக்கப்படும் என்று கூறி, தங்கள் செய்யும் இவ்வுதவிக்கு மிகவும் நன்றியுடையவர்களாக இருப்போம் எனத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பெயர் : மு. தங்கராசு எம் ஏ.

அவரது

தங்கள் வங்கி

நடப்புக்கணக்கு எண்

முகவரி : 1, கிழக்குத் தெரு
க.பி. வலசை,
627 816.

தங்கள் உண்மையுள்ள,

(ஒ-ம்) ——————

(வி. இராதா)

கடிதம் - 2

தென்னக நிலவள வங்கி (வரையறுக்கப்பட்டது)

கமுக்கக் கடிதம்

17, மேற்கு மாசித் தெரு,
தென்காசி, 627 807.
ஏப்ரல் 10, 1987.

பெறுநர்

திரு வி. இராதா பி. காம்.,
மேலாளர்,
கிராம நிலவள வங்கி,
நெடுவயல், 627 805.

அன்புடையீர்,

பார்வை:- தங்களின் 29.3.87 நாளிட்ட மறைவுமுறைக் கடிதம்,
எண் 11/நில.க/87-88.

பார்வையில் குறிப்பிட்ட தங்கள் கடிதத்திற்கிணங்க, விவர அறிக்கை ஒன்று எங்கள் வங்கி முகவர் ஒப்புதலுடன், இக்கடித செய்தி கமுக்கமாக வைக்கப்படும் எனும் நம்பிக்கையில், தங்கள் முகவரிக்கு அனுப்பப்படுகிறது: பெற்றமைக்கான பதிலை உடனடியாக அனுப்பக் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

மேலும், எங்கள் வாடிக்கையாளரின் கோரிக்கை ஏற்கப்பட்ட விவரத்தினையும் தெரிவிக்கக் கேட்டுக் கொள்ளப்படுகிறது. இவ்வறிக்கை மேலாளரின் பெயர் முத்திரையில் அனுப்பப்படினும் இதனைப் பார்வையில் குறிப்பிட்ட தங்கள் கடிதத்திற்கு உரிய பதிற்குறிப்பாகவே கொள்ளவேண்டுமன்றி எவ்விதத்திலும் தங்களின் தொழில் நடவடிக்கைக்குப் பிணையமாகக் கருதக்கூடாது என அறிவிக்கலாகிறது.

தங்கள் உண்மையுள்ள,
(ஒ-ம்) ——————
பெயர்: ——————
வங்கிக்காக

இணைப்பு : அறிக்கை

A. இக்கடிதவரைவில் கீழ்கண்டவற்றுள் எதனை ஒரு குறைபாடாகச் சுட்டலாம் ?

a. கடிதம் இரு பத்திகளில் அமைந்திருப்பதை

b. பெறுநர் முகவரியில் பெயர் குறிக்கப்படாமலிருப்பதை

c. வாடிக்கையாளரின் நடப்புக் கணக்கு எண்ணைக் குறித்திருப்பதை

d. கடிதத் தொடக்கத்தில் அமைந்த விளிக்கும் முறையை

e. கடித இறுதியில் உள்ள'இருப்போம்' எனும் பலர்பால் வினை

B. இரண்டாவது கடிதம் யாரால் எழுதப்பட்டிருக்க வேண்டும் ?

a. தென்னக வணிக வங்கியின் தொடர்பாளர்

b. தென்னக வணிக வங்கியின் முகவர்

c. தென்னக வணிக வங்கியின் மேலாளர்

d. இரு கடிதங்களிலும் யார் என அறியத்தக்க குறிப்புகள் இல்லை

e. தென்னக வங்கி சார்பான ஒருவர்

C. இரண்டாவது கடிதத்தின் நோக்கம் எதுவாக இருக்கலாம்?

a. வாடிக்கையாளர் பற்றிய எல்லா விவரங்களையும் தெரிவிப்பது.

b. நிலவள வங்கிக்கு வாடிக்கையாளரின் விண்ணப்பத்தைப் பரிந்துரை செய்வது.

c. வங்கிக்கு வங்கித் தொழில் முறையிலான ஓர் உதவி.

d. நிலவள வங்கியின் செயல்பாடுகளுக்குப் பிணையமாக இருப்பது.

Listening Comprehension
கேட்டுணர்தல் 5

கீழ்வரும் உரைப்பகுதியைப் படிக்கக் கேட்டுப் பின்னர் வினவப்படும் வினாக்களுக்குப் பொருத்தமான விடையைக் கொடுக்கப்பட்டுள்ள நான்கு தெரிவுகளிலிருந்து தேர்ந்தெடுத்து எழுதுக / வட்டமிட்டுக் காட்டுக.

[கேட்டுணர்தல் தேர்விற்காக, வாசித்தல் கால அளவு 5 முதல் 7 நிமிடங்களாக இருக்கலாம். இக்கால அளவுக்கு ஏற்ப வாசிப்புப் பகுதிகளையும் வினாக்களையும் மாற்றிக்கொள்க]

I. 'ஜனகணமன' என்ற பாடல் நமது நாட்டின் தேசிய கீதம் என்பது நீங்கள் எல்லோரும் அறிந்த ஒன்றாகும். இது கவியரசர் தாகூர் இயற்றிய பாடல் என்பதும் உங்களுக்குத் தெரிந்திருக்கும். இதைப் போலவே கவியரசர் தாகூரின் மற்றொரு பாடலான 'அமார் ஸோனார் பங்களா' - எங்கள் தங்க வங்கம் என்ற பாடலைச் சுதந்திர பங்களா நாடு தேசிய கீதமாக்கிக் கொண்டுள்ளது. பங்களா தேஷ் மக்கள் இந்தச் சுதந்திரத்தைப் பெறுவதற்காகச் செய்த தியாகங்கள் அதிகம். இந்தச் சுதந்திரத்தை அடைவதற்காகப் பங்களா தேஷ் மக்கள் அனுபவித்த கஷ்டங்கள் இவ்வளவு அவ்வளவல்ல.

பங்களாதேஷின் சுதந்திரத்திற்கு முன்பு பாகிஸ்தான் கிழக்குப் பாகிஸ்தான், மேற்குப் பாகிஸ்தான் என்று இரு பிரிவுகளாக இருந்தது. 1971-ம் ஆண்டு இறுதியில் பாகிஸ்தானில் பொதுத் தேர்தல் நடந்தது. கிழக்குப் பாகிஸ்தானில் நடந்த தேர்தலில் முஜிபுர் ரஹ்மான் தலைமை தாங்கிய கட்சி அமோக வெற்றி அடைந்தது. அந்தக் கட்சியின் ஆறு குறிக்கோள்களில் முழு மாநில சுயாட்சியும் ஒன்றாகும். அந்தக் குறிக்கோள்களை ஆதரித்துக் கிழக்கு வங்காள மக்கள் வாக்களித்தனர். அதனால் நிறைய இடங்களை முஜிபுர் ரஹ்மானின் கட்சி பெற்றது. அவற்றைப் பாகிஸ்தான் ஜனாதிபதி ஏற்று முஜிபுர் ரஹ்மானைப் பாகிஸ்தான் பிரதமராக நியமனம் செய்திருந்தால் பாகிஸ்தான் ஒரே நாடாக இருந்திருக்க முடியும். ஆனால் பாகிஸ்தான் ராணுவ யதேச்சாதிகாரம் அடக்கு முறையை அமுலாக்கி அட்டூழியங்கள் செய்தது. மதத்தின் பெயரால் அட்டூழியங்கள் நடந்தன. மனித வரலாறு காணாத ஒரு சோக நாடகம் அங்கே நடந்தது. இதன் விளைவாகக் கிழக்கு வங்காள மக்கள் மனங்கொதித்தெழுந்தார்கள். சுதந்திரம் அடைய உறுதி கொண்டார்கள். ராணுவ அதிகாரத்தை முழு மூச்சுடன் எதிர்த்தார்கள்.

கிழக்கு பாகிஸ்தான் மக்களில் பலர் ஒன்று சேர்ந்து முக்தி பாஹினிப் படை ஒன்றை நிறுவினார்கள். முக்திபாஹினிப் படையைச் சேர்ந்தவர்கள் வெகு நாட்களாக ஆட்சியாளர்களுக்கு எதிராகக் கொரில்லாப்போர் தொடுத்தார்கள். பாகிஸ்தான் துருப்புக்களுக்குத் தேவையான பொருள்களைக் கிடைக்காதபடி செய்தும், போக்குவரத்து மார்க்கங்களைத் துண்டித்தும், பாகிஸ்தான் துருப்புக்களுடைய மனத்திடத்தை

நாசமாக்கியும் வந்தார்கள். இந்தச் சமயத்தில் இந்தியாவின் முக்கிய நகரங்களாகிய டில்லி மற்றும் ஆக்ராவில் உள்ள சிவில் விமானத்தளங்களைப் பாகிஸ்தான் போர் விமானங்கள் திடீரென்று தாக்கின. பாதுகாப்பிற்காகப் பாகிஸ்தானை எதிர்த்துப் போரில் இறங்க வேண்டிய நிலை இந்தியாவுக்கு ஏற்பட்டது. இந்தியப் போர்படைகளான தரைப்படையும், கப்பற்படையும் விமானப்படையும் பதினான்கே நாளில் கிழக்கு வங்காளத்தில் இருந்த பாகிஸ்தான் படைகளைச் சரணடையச் செய்து விட்டன. இந்தியாவின் உதவியாலும் முக்தி பாஹினியின் செயலாற்றும் திறனாலும் பங்களாதேஷ் 16.12.1971 இல் சுதந்திர நாடானது.

பங்களாதேஷின் ஒப்பற்ற தலைவரான முஜிபுர் ரஹ்மான் சுதந்திர பங்களாதேஷின் ஜனாதிபதியாக இருந்தார். அழிந்துபட்ட பங்களாதேஷ் அவருடைய மகத்தான தலைமையில் சீர்படவும் முன்னேறவும் தொடங்கியது. தாகூர் பிறந்த சிலாயிதஉற் என்ற கிராமம் பங்களாதேஷில்தான் இருக்கிறது. தாகூரின் சிந்தனைச் செல்வாக்கு பங்களாதேஷ் மக்களிடம் நிரம்ப உள்ளது. பங்களாதேஷ் மக்கள் வேற்றுக் கலாச்சாரத்தை எதிர்த்துப் போராடியுள்ளனர்.

உலகில் உள்ள முஸ்லீம் நாடுகளில் இந்தோனேஷியாவுக்கு அடுத்தபடியாக முஸ்லீம்கள் அதிகம் வசிப்பது பங்களாதேஷில்தான்; மூன்றாவது நாடு இந்தியா. ஏழரைக் கோடி மக்கள் உள்ள பங்களாதேஷின் கலாச்சாரம் வங்காளக் கலாச்சாரமாகும். ஐம்பத்தையாயிரம் சதுரமைல் பரப்புள்ள வங்க நாட்டின் வடக்கிலும் மேற்கிலும் மேற்கு வங்காளமும், அஸ்ஸாமும், திரிபுராவும் அமைந்துள்ளன. விவசாயம் செய்வதற்கு ஏற்ற நிலப்பரப்பு அதிகம் உள்ள நாடு இது. நீர்வளம் நிறைந்திருக்கிறது. கங்கையும், பிரம்மபுத்திராவும், பத்மாவும் இச்சுதந்திர பூமியில் ஓடி வளங்கொழிக்கும் நதிகள். விவசாயம், மீன்பிடித்தல், குறைந்த செலவில் உள்ள போக்குவரத்து முதலியவற்றிற்கு இந்த ஆறுகள் உதவியாக இருக்கின்றன. உலகத்தில் விளையும் சணல் உற்பத்தியில் எண்பது சதவீதம் வங்க தேசத்தில்தான் விளைகிறது.

பங்களாதேஷில் பெரும்பான்மையான கிராம மக்களுக்கு வேலை அளிப்பது விவசாயந்தான். இந்நாட்டு மக்களின் முக்கிய ஆகாரம் அரிசியும் மீனுமே. இந்த இரண்டையும் வங்க மண் மிகுதியாக அளிக்கிறது. பல தொழிற்சாலைகள் இங்கே அமைந்துள்ளன. ஆனால் சாலைப் போக்குவரத்தும் ரெயில் வசதியும் பங்களாதேஷில் போதுமான அளவிற்கு இல்லை. இந்த வசதிகளையும் சமீபத்தில் நடந்த போரில் பாகிஸ்தான் துருப்புகள் உருப்படியில்லாமல் செய்துவிட்டன.

பங்களாதேஷ் பாகிஸ்தானிலிருந்து விடுபட்டுத் தனிநாடானவுடன் உலக நாடுகளின் அங்கீகாரத்தைப் பெறுவதற்காகப் போராடியது. புதிய ஒரு நாடு மற்ற நாடுகளின் அங்கீகாரத்தைப் பெறுவது முக்கியமான ஒன்றாகும். பொருளாதார வளர்ச்சிக்கும், அந்நாட்டின் பாதுகாப்புக்கும் அங்கீகாரம் பல வழிகளில் உதவும். முதலில் பூடான், போலந்து, கிழக்கு ஜெர்மனி, இந்தியா, சோவியத் யூனியன் போன்ற நாடுகள் பங்களாதேஷை அங்கீகரித்தன. அரபு நாடுகள் அங்கீகரிக்க மறுத்தன. பாகிஸ்தானின் அங்கீகாரத்திற்காகவும், ஐ.நா. சபையில் அங்கம் வகிப்பதற்காகவும் பங்களாதேஷ் உலக நாடுகளிடையே தன் நிலையைத் தொடர்ந்து வலியுறுத்தி வந்தது. ஐ.நா.சபையில் இடம்

பெறச் செய்ய இந்தியாவும், சோவியத் யூனியனும் அயராது முயற்சி செய்தன. இறுதியில் உலகநாடுகள் பங்களாதேஷை ஐ.நா. சபையில் அங்கத்தினராக ஏற்றுக் கொண்டன. பாகிஸ்தானும் இந்நாட்டை அங்கீகரித்தது.

பங்களாதேஷில் அடிக்கடி வெள்ளம், புயல் ஏற்பட்டு இயற்கை வளத்தைக் கெடுத்து மக்களைத் துயருக்குள்ளாக்குகின்றன. வெள்ளப் பெருக்கால் நாடு நலிவுற்ற போதெல்லாம் மக்கள் வறுமையால் அல்லல்பட்டார்கள். பாகிஸ்தானின் ஒரு பகுதியாகக் கிழக்குப் பாகிஸ்தான் இருந்தபொழுது அந்த அரசு வெள்ளப் பெருக்கைத் தடுத்து வறுமையைப் போக்க எந்த முயற்சியும் செய்யவில்லை. ஆனால் புதிய பங்களாதேஷ் அதன் புதிய திட்டங்களின் மூலமாக வெள்ளப்பெருக்கால் ஏற்படும் அழிவை நிரந்தரமாக நீக்கி வறுமையைப் போக்க முயற்சி செய்கிறது. பங்களாதேஷ் மக்களின் உறுதியும் உழைப்பும் ஒற்றுமையும் இதற்குத் துணை நிற்கும்.

1. பொதுத்தேர்தலில் நிறைய இடங்களை முஜிபுர் ரஹ்மானின் கட்சி பெற்றதன் காரணம்:
   - a. பங்களாதேஷின் ஒப்பற்ற தலைவராக முஜிபுர் ரஹ்மான் விளங்கினார்.
   - b. கட்சியின் 'முழு மாநில சுயாட்சி' போன்ற ஆறு குறிக்கோள்களை மக்கள் ஆதரித்தனர்.
   - c. அழிந்துபட்ட பங்களாதேஷ் முஜிபுர் ரஹ்மானின் தலைமையில் சீர்படவும் முன்னேறவும் தொடங்கியது.
   - d. பங்களாதேஷ் மக்கள் வேற்றுக் கலாச்சாரத்தை எதிர்த்துப் போராடினர்.

2. பங்களாதேஷுக்கு அடுத்தபடியாக முஸ்லீம்கள் அதிகமாக வசிக்கும் மூன்றாவது நாடு :
   - a. சோவியத் யூனியன்
   - b. பூடான்
   - c. இந்தியா
   - d. இந்தோனேஷியா

3. தாகூரின் சிந்தனைச் செல்வாக்கு பங்களாதேஷ் மக்களிடம் நிரம்ப உள்ளது. ஏனெனில்
   - a. பங்களாதேஷின் கலாச்சாரம் வங்கக் கலாச்சாரமாகும்.
   - b. தாகூர் பிறந்த சிலாயிதஹ் கிராமம் பங்களாதேஷில் இருக்கிறது.
   - c. பங்களாதேஷ் தேசிய கீதமான 'அமார் ஸோனார் பங்களா' என்ற பாடலை இயற்றியவர் தாகூர்.
   - d. பங்களாதேஷ் மக்கள் வங்க மக்களாவர்.

4. பங்களாதேஷை முதன் முதலில் அங்கீகரித்த நாடுகள் :
   a. இந்தியா, போலந்து, பூடான்.
   b. மேற்கு பாகிஸ்தான், இந்தோனேஷியா
   c. அரபு நாடுகள்.
   d. பாகிஸ்தான், இந்தோனேஷியா.

5. கொரில்லாப்போர் என்பது :
   a. ஆட்சியாளர்க்கு எதிராகப் போர் தொடுப்பது.
   b. பாதுகாப்பிற்காகப் போரில் இறங்குவது.
   c. துருப்புகளுக்குத் தேவையான பொருள்களைக் கிடைக்காதபடி செய்தல்; போக்குவரத்து மார்க்கங்களைத் துண்டித்தல்.
   d. போரில் எதிர்த்துப் போரிடுவது.

6. புதிய ஒரு நாடு மற்ற நாடுகளின் அங்கீகாரத்தைப் பெறுவது முக்கியமானதாகும். ஏனெனில்.
   a. ஐ.நா. சபையில் அங்கத்தினராக அது உதவும்.
   b. பாகிஸ்தானின் அங்கீகாரத்திற்கு அது முக்கியமாக உதவும்.
   c. உலக நாடுகளிடையே தன் நிலையை வலியுறுத்த அது உதவும்.
   d. பொருளாதார வளர்ச்சிக்கும் அந்நாட்டின் பாதுகாப்புக்கும் அது பல பல வழிகளில் உதவும்.

7. பாகிஸ்தானில் மதத்தின் பெயரால் அட்டுழியங்கள் நடந்தன. இதன் விளைவாக நடைபெற்றது யாது ?
   a. கிழக்கு வங்காள மக்கள் மனங்கொதித்தெழுந்தார்கள்.
   b. சுதந்திரம் அடைய உறுதி கொண்டார்கள்.
   c. இராணுவ அதிகாரத்தை முழு மூச்சுடன் எதிர்த்தார்கள்.
   d. முக்திபாஹினிப் படை ஒன்றை நிறுவினார்கள்.

8. முக்தி பாஹினிப்படை கீழ்க் குறிக்கப்பட்டனவற்றுள் எதைச் சேர்ந்தது ?
   a. கப்பல் படை
   b. விமானப்படை
   c. கிராம மக்கள் படை
   d. மக்கள் படை

II. இந்த உலகில் நல்லதும் இருக்கிறது; தீயதும் இருக்கிறது. அன்பும் இருக்கிறது ; அன்பில்லாத மனமும் இருக்கிறது. மதம் நல்லதையும் தீயதையும் புரியவைத்து மனிதனை நல்வழிப்படுத்துகிறது. அன்பையும் ஆணவத்தையும் விலக்கி மனிதனுக்கு நல்வழியைக் காட்டுகிறது. மதம் மனிதனுக்கு நல்லொழுக்கத்தைப் போதிக்கிறது.

இந்தியாவில் பல மதங்கள் இருக்கின்றன. கடவுளை வணங்குவதிலும் கடவுள் கொள்கைகளைப் பின்பற்றுவதிலும் ஒவ்வொரு மதத்தினர்க்கும் ஒவ்வொரு வழி இருக்கிறது. அது மனிதனைப் பண்புள்ளவனாக்குகிறது வதுதான்.

உலகில் மக்கள் பின்பற்றிவரும் பல மதங்களுள் இந்து மதமும் ஒன்று. இந்திய மக்களில் நூற்றுக்கு 84 பேர் இந்துக்கள். இம்மதம் எப்பொழுது தோன்றியது என்பதையோ யாரால் தோற்றுவிக்கப்பட்டது என்பதையோ சொல்ல முடியவில்லை. இது மிகவும் பழமையானது என்று மட்டும் தெரிகிறது.

இந்து மதத்தில் பல பிரிவுகள் உண்டு. அவற்றுள் சைவமும் வைணவமும் முக்கியமானவை. இந்து மதத்தின் கொள்கைகளைப்பற்றி எல்லா இந்திய மொழிகளிலும் பல நூல்கள் எழுதப்பட்டுள்ளன. வடமொழியில் வேதங்கள், உபநிடதங்கள், தமிழில் தேவாரம் முதலிய திருமுறைகள், இராமலிங்க சுவாமிகளின் திருவருட்பா ஆகியவை அரிய நூல்கள். இந்தியாவில் காசி முதல் கன்னியாகுமரி வரை சிவனுக்கும் விஷ்ணுவுக்கும் கோயில்கள் உள்ளன. மேலும் கடல் கடந்த நாடுகளில் கூட பண்டைக்காலந்தொட்டே இந்து மதம் பரவியுள்ளது.

இந்து மதத்தின் அடிப்படைக் கொள்கை அன்பு நெறியாகும். உயிர்களிலெல்லாம் கடவுள் கலந்திருக்கிறார். ஆகையால் உயிர்களுக்குக் காட்டும் அன்பே கடவுளுக்குக் காட்டும் அன்பாகும். ஆசை, கோபம், வெறுப்பு இல்லாத நல்வாழ்வு வாழ்ந்து வந்தால் நாம் இறுதியில் இறப்பு, பிறப்பு என்னும் துன்பங்களிலிருந்து விடுதலையடைவோம். கடவுளின் திருவருள் கிடைக்கும்.

சமணமதம்

இந்தியாவில் வழங்கிவரும் மிகப் பழைய மதங்களுள் சமண மதமும் ஒன்று. இதை 'ஜைன மதம்' என்றும் கூறுவர். இம்மதத்தைப் பின்பற்றுபவர்கள் சமணர் அல்லது ஜைனர் எனப்படுவர். இம்மதத்தின் கொள்கைகளை வகுத்தவர்களைத் தீர்த்தங்கரர்கள் என்பர். இவர்கள் 24 பேர். கி.மு. ஆறாம் நூற்றாண்டில் வாழ்ந்த வர்த்தமான மகாவீரர் என்ற கடைசித் தீர்த்தங்கரர் சமணத்தை நாடெங்கும் பரவச் செய்தார்.

சமண மதத்தின் அடிப்படையான கொள்கை, உயிர்களைக் கொல்லக் கூடாது என்பதாகும். இதனால் சமணத்துறவிகள் நடந்து செல்லும்போது, காலில் சிறு பூச்சிகள் கூடச் சிக்கி இறந்துவிடாமலிருக்க மயில் தூவியினால் தரையைப் பெருக்கிக் கொண்டே நடப்பார்கள். நல்லொழுக்கத்திற்கு முதலிடம் கொடுத்து அதை வற்புறுத்துகிறது சமண மதம். இப்போது இந்தியாவிலுள்ள சமணர்களின் எண்ணிக்கை சுமார் 20 லட்சம்.

சமணர்கள் வடமொழி, தமிழ் இலக்கிய வளர்ச்சிக்குப் பெருந் தொண்டாற்றியுள்ளனர். தமிழிலுள்ள நன்னூல், அகப்பொருள் விளக்கம், யாப்பருங்கலக்காரிகை போன்ற இலக்கண நூல்களையும், நாலடியார், அறநெறிச்சாரம் போன்ற நீதி நூல்களையும் சிலப்பதிகாரம், வளையாபதி, குண்டலகேசி போன்ற பெருங்காப்பியங்களையும் இயற்றியவர்கள் சமணப் புலவர்களேயாவர்.

பௌத்தமதம்

பௌத்தமதத்தை நிறுவியவர் புத்தர். உலகில் உள்ள துன்பங்களுக்கெல்லாம் காரணம் என்ன என்பதைக் கண்டுபிடிப்பதில் நாட்டம் செலுத்தினார் புத்தர். காரணம் ஆசைதான் என்று உணர்ந்தார். ஆசையை அறுத்துவிட்டால் துன்பம் சூழாது என்று கண்டுபிடித்து உலகிற்குத் தெரிவித்தார் புத்தர். மனித குலத்தின் வளர்ச்சிக்குத் தேவையானது அன்புதான் என்பதைக் கண்டார் புத்தர். திபெத், பர்மா, மலேசியா, ஜப்பான், சீனா, இந்தோனேஷியா போன்ற நாடுகளில் புத்தமதம் வேரூன்றித் தழைத்துள்ளது. பௌத்தமதம் தோன்றியது நமது நாட்டில்தான். ஆனால் பௌத்தமதம் இந்தியாவில் வேரூன்றவில்லை. பௌத்த மதம் இந்து மதத்தின் வைதீகக் கொடுமைகளை அழிக்க முயன்று ஓரளவு வெற்றியும் பெற்றுக் கடைசியில் இந்து மதத்தோடு ஐக்கியமாகி விட்டது.

பௌத்த மதத்தில் உறீனயானம், மஹாயானம் என இரண்டு பிரிவுகள் உண்டு. ஆரம்ப நாட்களில் வழங்கிவந்த புத்த மதக்கொள்கைகளை வலியுறுத்தும் பிரிவிற்கு உறீனயானம் என்று பெயர். உறீனயான மதத் தத்துவங்களே மணிமேகலை என்னும் தமிழ்க் காப்பியத்தில் விரிவாகக் கூறப்பட்டுள்ளன. உறீனயான மதத்தினர்க்குள்ள பௌத்த மதப் பிரமாண நூல்கள் திரிபிடகம் ஆகும். இம்மதத்தினர் வேறு நூல்களை ஏற்றுக் கொள்ள மாட்டார்கள். இவையனைத்தும் பாலி மொழியில் உள்ளன. மஹாயான பிரிவின் பிரமாண நூல்கள் வட மொழியில் உள்ளன.

கிறித்துவ மதம்

உலகிலுள்ள முக்கிய மதங்களில் கிறிஸ்தவ மதமும் ஒன்று. இயேசு பரப்பிய கொள்கைகளின் அடிப்படையில் இம்மதம் தோன்றியது. கிறிஸ்துவுக்குப் பின் அவருடைய சீடர்கள் பல நாடுகளுக்கும் சென்று கிறிஸ்தவக் கோயில்களை எழுப்பி அவருடைய போதனைகளை விளக்கிக் கூறினார்கள்.

கிறிஸ்தவ மதத்தில் பல பிரிவினர்கள் உண்டு. அவர்களுள் முக்கியமானவர்கள் ரோமன் கத்தோலிக்கர்கள், பிராட்டெஸ்டெண்டுகள் என்ற இரண்டு பிரிவினர்.

கிறிஸ்தவர்கள் அனைவருக்கும் பைபிள் வேத நூலாகும். புதிய ஏற்பாடு, பழைய ஏற்பாடு என இரு பிரிவுகளாகப் பைபிள் உள்ளது. ஆதியில் மனிதனை ஆண்டவன் படைத்ததிலிருந்து கிறிஸ்து பிறக்கும் வரையிலுள்ள வரலாறு பழைய ஏற்பாட்டிலும், கிறிஸ்துவின் போதனைகள் புதிய ஏற்பாட்டிலும் அடங்கியுள்ளன. கடவுளை முழு மனத்தோடும் நம்பிக்கையோடும் விசுவாசிக்க வேண்டும்; நம்மைப் போல் பிறரையும் நேசிக்க வேண்டும் என்பன கிறிஸ்து கற்பித்த முக்கிய கோட்பாடுகளாகும். கடவுள் மனித குலத்தின் தந்தை; மக்கள் எல்லோரும் அவருடைய பிள்ளைகள் என்று கிறிஸ்தவ மதம் போதிக்கிறது.

இஸ்லாம் மதம்

உலகில் உள்ள பெரிய மதங்களுள் இஸ்லாமும் ஒன்றாகும். இஸ்லாம் என்ற அரபுச் சொல்லுக்கு 'அமைதி பெறும் வழி' என்பது பொருள். இம்மதத்தைச் சேர்ந்தவர்களுக்கு முஸ்லீம் என்று பெயர். உலகம் முழுவதிலும் இம்மதம் பரவியுள்ளது. இம்மதத்தை நிலை நிறுத்தியவர் முகமது நபிகள் நாயகம் ஆவார். இவருக்கு முன்னர் பலர் நல்வழியை மக்களுக்கு விளக்கி வந்தனர். இவர்கள் அனைவருக்கும் நபிகள் என்று பெயர். பல ஆயிரக்கணக்கான நபிகள் உலகில் பிறந்துள்ளனர். இறுதியாக வந்தவர் முகம்மது நபி. இவரே இஸ்லாமியரின் திருக்குர்ஆனை அருளிச் செய்தார்.

முஸ்லீம்கள் உருவமில்லாத கடவுளையே வணங்குகின்றனர். எந்த உருவத்தையும் கடவுளாக வணங்குவதில்லை. இவர்கள் கடவுளின் பெயர் அல்லாஹ். இஸ்லாம் மதமும் நமக்குப் பல நற்போதனைகளைக் கூறுகின்றது. நாம் களவு, குடி, பொறாமை ஆகிய குற்றங்களை விலக்க வேண்டும். தொழிலில் நேர்மை தவறக்கூடாது. வட்டி வாங்கக்கூடாது; ஏழை எளியவர்களை ஆதரிக்க வேண்டும்; எல்லோரிடத்திலும் அன்பாய் நடந்துகொள்ள வேண்டும்.

1. மதங்களின் அடிப்படை நோக்கம் :
   a. மனிதனுக்குப் பக்திப் பாடல்களைத் தருவது.
   b. மனிதனைப் பண்புள்ளவனாக்குவது.
   c. கடவுள் கொள்கைகளைப் பின்பற்ற வைப்பது.
   d. மனிதனுக்கு மதநம்பிக்கையை போதிப்பது.

2. உயிர்களுக்குக் காட்டும் அன்பே கடவுளுக்குக் காட்டும் அன்பாகும். ஏனெனில்,
   a. உயிர்களிலெல்லாம் கடவுள் கலந்திருக்கிறார்.
   b. உயிர்களைக் கொல்லக் கூடாது என்பது மதத்தின் அடிப்படைக் கொள்கை.
   c. மனித குலத்தின் வளர்ச்சிக்குத் தேவை அன்புதான்.
   d. தேவாரமும் உபநிடதங்களும் அன்பைப் பற்றிக் கூறுகின்றன.

3. சமணர்கள் தமிழ் இலக்கிய வளர்ச்சிக்குப் பெருந்தொண்டாற்றியுள்ளனர். அவர்கள் எழுதிய நூல்கள்:
   a. யாப்பருங்கலக்காரிகை, திரிபிடகம்
   b. தேவாரம், திருவருட்பா
   c. அகப்பொருள் விளக்கம், சிலப்பதிகாரம்
   d. அறநெறிச்சாரம், மணிமேகலை

4. மதங்களில் மிகவும் பழமையானது :

   a. சமண மதம்
   b. பௌத்த மதம்
   c. கிறிஸ்தவ மதம்
   d. இந்து மதம்

5. ஆசையை அறுத்துவிட்டால நம்மைத் துன்பம் சூழாது என்றவர்.

   a. புத்தர்
   b. வர்த்தமான மகாவீரர்
   c. இயேசு
   d. அல்லாஹ்

6. இஸ்லாம் என்ற சொல்லின் பொருள்:

   a. அன்புநெறி
   b. அமைதி பெறும் வழி
   c. நம்பிக்கை
   d. மதக்கொள்கை

7. எவை கிறிஸ்துவின் போதனைகள் ?

   a. கடவுளை முழு மனத்தோடும் நம்பிக்கையோடும் விசுவாசிக்க வேண்டும். நம்மைப் போல் பிறரையும் நேசிக்க வேண்டும்.
   b. களவு, குடி, பொறாமை ஆகிய குற்றங்கள் விலக்க வேண்டும். எல்லோரிடத்திலும் அன்பாய் நடந்து கொள்ள வேண்டும்.
   c. உலகிலுள்ள துன்பங்களுக்கெல்லாம் காரணம் ஆசை. ஆசையை அறுத்து விட்டால் துன்பம் சூழாது.
   d. உயிர்களைக் கொல்லக் கூடாது. நல்லொழுக்கத்திற்கு முதலிடம் கொடுக்க வேண்டும்.

8. மதங்கள் போதிப்பது

   a. மதக் கொள்கைகள்
   b. புனிதப்பாடல்கள்
   c. அன்புநெறி
   d. வேற்றுமை

III. உலகத்தில் உள்ள கண்டங்கள் அனைத்திலும் சிறியது ஆஸ்திரேலியா. இதை உலகத்தில் உள்ள மிகப் பெரிய தீவு என்றும் சொல்லலாம். இந்தக் கண்டம் முழுவதும் ஒரு சுதந்திர நாடாக இருக்கிறது. இதன் கிழக்கே பசிபிக் சமுத்திரமும், தெற்கிலும் மேற்கிலும் இந்திய சமுத்திரமும், வடக்கே கிழக்கிந்தியத் தீவுகளும் உள்ளன.

ஆஸ்திரேலியாவின் நிலப்பகுதி பல வகையானது. மத்திய ஆஸ்திரேலியா முழுவதும் பாலைவனம். இங்கு மழை மிகவும் குறைவு. வடகிழக்கு ஆஸ்திரேலியாவில் மலைகளும் பீட பூமிகளும் அதிகம். இங்கு நிறைய மழை பெய்கிறது. காடுகள் செழித்து வளர்கின்றன. யூக்கலிப்டஸ் மரங்கள் இங்கு அதிகம். தென் பகுதி முழுவதிலும் விவசாயம் நடைபெறுகின்றது. இங்குக் கோதுமை ஏராளமாகப் பயிராகிறது. கடற்கரையோரப் பகுதிகளில் பழத்தோட்டங்கள் மிகுதியாக உள்ளன. மரி, டார்லிங் என்னும் இரு முக்கிய ஆறுகளும் பல சிற்றாறுகளும் ஓடித் தெற்கில் கடலில் கலக்கின்றன. செழிப்பான இப்பகுதியில்தான் மக்கள் நெருங்கி வாழ்கின்றனர்.

ஆஸ்திரேலியாவின் முக்கிய விளைபொருள்கள் கோதுமை, சோளம், ஓட்ஸ், பார்லி, உருளைக்கிழங்கு, கரும்பு முதலியன. ஆப்பிளும், திராட்சையும் ஏராளமாக உற்பத்தியாகின்றன. நாட்டின் முக்கியத் தொழில் ஆடு வளர்த்தல், இந்நாட்டில் சுமார் 13 கோடி ஆடுகள் உள்ளன. வேறு எந்த நாட்டிலும் இத்தனை ஆடுகள் இல்லை. இங்குள்ள ஆடுகளின் உரோமம் உலகிலேயே மிகவும் சிறந்ததாகும்.

இந்தக் கண்டத்தில் வாழும் விலங்குகளில் சில மிகவும் விந்தையானவை. உலகில் வேறு எங்கும் இவற்றைக் காண முடியாது. இவை கங்காரு, வாலபி என்பன. இவை பாலூட்டிகள். இவ்விலங்குகளின் வயிற்றின் வெளிப்புறத்தில் பை போன்ற உறுப்பு ஒன்று உண்டு. குட்டிகள் பிறந்தவுடனே, இந்தப் பைக்குள் சென்று தங்கும். அங்கேயே பாலுண்டு வளரும். பிளாட்டிமஸ் என்று மற்றுமொரு விலங்கு உண்டு. இதன் வாய் வாத்தின் அலகு போலவே இருக்கும். இது முட்டையிட்டுக் குஞ்சு பொரிக்கும். ஆனால் குட்டிகளுக்குப் பால் கொடுக்கும். ஆஸ்திரேலியாவில் நெருப்புக் கோழியைப் போலவே ஒரு பறவை வாழ்கின்றது. இதன் பெயர் ஈமு. இதன் மொத்த உயரம் சுமார் 6 அடி. இதற்கு ஒவ்வொரு காலிலும் மூன்று விரல்களே உள்ளன. இப்பறவை பறக்காது. இது ஆஸ்திரேலியாவின் தேசியப்பறவை. ஆதியில் இந்த நாட்டில் ஆடு மாடுகளோ, முயல்களோ இல்லை. ஐரோப்பியர்கள் தாம் இவற்றை இங்கு முதன்முதல் கொண்டு வந்தனர். இன்று முயல்கள் மிக அதிகமாக உள்ளன. பயிர்களையே அழிக்கும் அளவுக்கு இவை பெருகியிருக்கின்றன.

நாட்டில் பலவிதமான எந்திரத் தொழிற்சாலைகள் உள்ளன. தங்கம், செம்பு, வெள்ளீயம், காரீயம், இரும்பு முதலிய தாதுப் பொருள்களும், நிலக்கரியும் அதிக அளவில் கிடைக்கின்றன. ஆட்டு ரோமம், இறைச்சி, தோல், கோதுமை, பார்லி, பழங்கள் ஆகியவை இந்நாட்டின் முக்கிய ஏற்றுமதிப் பொருள்கள். நூல், தேயிலை, பெட்ரோலியம், இரும்புச் சாமான்கள் முதலியவை இறக்குமதியாகின்றன.

ஆஸ்திரேலியாவில் ஆறு மாநிலங்கள் உண்டு. இவற்றுக்குப் பொதுவாக மத்திய அரசாங்கம் ஒன்று இருக்கிறது. தலைநகரம் கான்பர்ரா. மற்ற முக்கிய நகரங்கள்: சிட்னி, மெல்போர்ன், பிரிஸ்பேன், அடிலேடு, பெர்த் ஆகியவை.

ஆஸ்திரேலியாவில் பரம்பரையாக வாழ்ந்து வந்தவர்கள் ஆதிக்குடிகளாவர். இவர்கள் தொகை இன்று மிகவும் குறைந்துவிட்டது. ஆஸ்திரேலியாக் கண்டத்தை ஐரோப்பியர் 17 ஆம் நூற்றாண்டில்தான் கண்டு பிடித்தனர். இப்போது ஆஸ்திரேலியா முழுவதும் ஐரோப்பியர்களே குடியேறியுள்ளனர். மக்கள் பேசும் மொழி ஆங்கிலம். மதம் கிறித்தவம். ஆஸ்திரேலியாவின் பரப்பு 29,71,081 சதுர மைல்; மக்கள் தொகை 1,03,98,170. இக்கண்டம் பரப்பில் இந்தியாவைவிட 21/2 மடங்கு பெரியது. ஆனால் இதன் மக்கள் தொகை இந்தியாவின் மக்கள் தொகையில் 40இல் ஒரு பங்குதான் உள்ளது.

1. ஆஸ்திரேலியாவின் தேசியப் பறவை.
   a. வாலபி
   b. கங்காரு
   c. பிளாட்டிமஸ்
   d. ஈமு

2. ஆஸ்திரேலியாவில் பல எந்திரத் தொழிற்சாலைகள் உள்ளன. ஏனெனில்
   a. தாதுப் பொருள்களும், நிலக்கரியும் அதிக அளவில் கிடைக்கின்றன.
   b. இரும்புச் சாமான்கள் இறக்குமதியாகின்றன.
   c. காடுகள் செழித்து வளர்கின்றன.
   d. நிறைய மழை பெய்கிறது.

3. பிளாட்டிமஸ் விலங்குகளில் விந்தையானது. ஏனெனில்,
   a. இதனை உலகில் வேறெங்கும் காண முடியாது.
   b. இதன் ஒவ்வொரு காலிலும் மூன்று விரல்களே உள்ளன.
   c. இது முட்டையிட்டுக் குஞ்சு பொரிக்கும். ஆனால் குட்டிகளுக்குப் பால் கொடுக்கும்.
   d. இதன் வயிற்றின் வெளிப்புறத்தில் பை போன்ற உறுப்பு உண்டு. குட்டிகள் பிறந்தவுடனே இந்தப் பைக்குள் பாலுண்டு வளரும்.

4. ஆஸ்திரேலியாவின் மழை மிகவும் குறைவான பிரதேசம்:
   a. மத்திய ஆஸ்திரேலியா
   b. வடகிழக்கு ஆஸ்திரேலியா

c. ஆஸ்திரேலியாவின் தென்பகுதி
d. ஆஸ்திரேலியாவின் கடற்கரையோரப் பகுதி

5. இந்நாட்டின் முக்கியமான ஏற்றுமதிப் பொருள்கள் :
a. நூல், தேயிலை, பெட்ரோலியம்
b. தங்கம், செம்பு, வெள்ளீயம்
c. தோல், கோதுமை, பார்லி
d. யூக்கலிப்டஸ் மரங்கள்

6. வடகிழக்கு ஆஸ்திரேலியாவில் நிறைய மழை பெய்கிறது. அதனால்
a. யூக்கலிப்டஸ் மரங்கள் இங்கு அதிகம்
b. காடுகள் செழித்து வளர்கின்றன
c. கடற்கரையோரப் பகுதிகளில் பழத்தோட்டங்கள் மிகுதியாக உள்ளன
d. நாட்டின் முக்கியத் தொழில் ஆடு வளர்த்தல்

7. டார்லிங் என்பது
a. பறவை
b. விலங்கு
c. தோட்டம்
d. ஆறு

8. ஆஸ்திரேலிய மக்கள் பேசும் மொழி
a. ஆஸ்திரேலி
b. ஈமு
c. கான்பர்ரா
d. ஆங்கிலம்

IV. ஆதிகாலந்தொட்டே தமிழர் ஆட்சி மரபு மன்னராட்சி அடிப்படையில் அமைந்தது. இடைக்கால சேர, சோழ, பாண்டியர் ஆட்சியும் அதற்கு ஓர் விலக்கன்று. ஆனால், இவ்வரசர்களின் ஆதிக்கமும் ஆளும் சக்தியும் அவர்கள் பேரரசுகளை ஏற்படுத்திக்கொண்ட காலத்தில் மிக அதிகமாயின. சோழ மன்னர்கள் ஏறத்தாழ இரண்டரை நூற்றாண்டுக் காலத்திற்கும், பாண்டியர்கள் அரை நூற்றாண்டுக் காலத்திற்கும், இந்நிலையில் இருந்தனர். அரசர்கள் எதேச்சாதிகாரிகளாகவே இருந்தனர். ஆனால் அவர்கள் அவைக் களங்களிலிருந்த அமைச்சர்கள் முதலாயினோர் அவர்களது

ஆட்சியின் வன்மையைக் குறைத்தனர். பேரரசின் தலைநகரிலிருந்து ஒன்றிய ஆட்சி ஒன்று நடத்தப்பட்டதாயினும், தமிழ் நாட்டுக் கிராமங்களில் தல சுயாட்சி என்று கூறப்படும் ஆட்சி மரபிற்குச் சற்று ஒத்ததான ஒருவகைக் கிராம ஆட்சி நடைபெற்றது. கிராமங்களில் நிர்வாகம் நடத்திய குழுக்கள் ஊர், சபா என்று பெயர் பெற்றன. சபாக்கள் அந்தணர்கள் பெரும்பாலும் வசித்து வந்த கிராமங்களை நிர்வகித்த குழுக்கள். ஊர்கள் பொதுக் கிராம நிர்வாகக் குழுக்கள். இவை மன்னனுக்குப் பதிலாகக் கிராம நிர்வாகத்தை மேற்கொண்டு நடத்தின. கிராமத்துக் குடிமக்கள் தரவேண்டிய வரிகளை வசூலித்தன. கிராமத்து உள் நிர்வாகத்தை முற்றிலும் மேற்கொண்டன.

தலைநகர ஆட்சியில் மன்னரே நீதி நிர்வாகத்தை மேற்கொண்டு பெரும்பாலும் படையையும் தலைமைதாங்கி நடத்தினார். அவர் அவையில் அமைச்சர்களேயன்றி ஒற்றர்களும், புரோகிதர்களும், குலகுருக்களும் அவைக்களப் புலவோர் என்னும் பலதரத்தாரும் இருந்தனர். ஆட்சி நிர்வாகத்தை நடத்திய அதிகாரிகளுக்குக் காசாகத் தந்த சம்பளங்களை விட நிலமானியமாகக் கொடுத்தவையே அதிகம்.

சோழர் பேரரசு பல மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டிருந்தது; இராஜேந்திர சோழர் காலத்தில் மதுரை அரசப் பிரதிநிதி வாழும் தலைநகரமாயிற்று. மண்டலங்கள் வளநாடுகளாகவும், நாடுகளாகவும் பிரிக்கப்பட்டன. கூற்றங்களும் கோட்டங்களும் இவற்றின் பாகுபாடுகளாம். ஆட்சியின் அடிப்படை கிராமத்தில் இருந்தது.

கிராம ஆட்சி சபா, ஊர் முதலிய குழுக்களால் நடத்தப் பெற்றது. அக்குழுக்கள் வாரியங்கள் எனப்பட்ட பல உட்குழுக்களைக் கொண்டு ஆட்சி அதிகாரத்தைச் செலுத்தின. அக்குழுக்களின் உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்பதற்குப் பல விதிகள் இருந்தன. சபாக்களில் பிராம்மணர்களே உறுப்பினராயினர். பொதுப்பணிகள், சாலை அமைத்தல், பாசன ஏற்பாடு செய்தல் முதலிய பொறுப்புகள் கிராமக்குழுவினரிடம் இருந்தன. அரசர் தலைநகரத்தில் செலுத்திய ஆட்சி வெளிநாட்டு விவகாரங்கள், தற்காப்பு, கலாச்சார அமைப்புகள், அமைதி நாட்டல் முதலியவற்றைப் பற்றிய அதிகார வரம்பில் செயல்பட்டது.

நீதி நிர்வாகத் துறையில், கிராமத்திலிருந்த நியாயத்தார் தாங்கள் அறிந்த வகையில் நியாயம் வழங்கினர். மௌரியர், வர்த்தனர் என்போர் ஆட்சியில் கடுந்தண்டம் வழங்கப்பட்டது போலத் தமிழர் ஆட்சியில் வழங்கப்படவில்லை. சிறு குற்றங்களுக்கும் தலையை வாங்கிவிடும் அந்தக் கொடிய பழக்கத்தைப் பெரிய குற்றங்களுக்கும் கோவிலுக்கு ஒரு காணிக்கை செலுத்தி தண்டம் இறுக்கும் பழக்கத்தோடு ஒப்பிட்டுப் பார்த்தல் பயனுடையதாகும். இவ்வாட்சி முறைகளில் பெரும்பாலானவை விசயநகரப் பேரரசு நிறுவப்பட்டபின் மாறிப் போயின.

பல்லவர் காலத்திலிருந்தே மக்களுடைய மனத்தில் சமய உணர்ச்சி மலிந்தது. இராமாநுசர் காலத்திலிருந்து சைவ, வைணவப் பாகுபாடுகளும் வேற்றுமை உணர்ச்சிகளும் மேலும் மேலும் வளர்ந்தன. காஞ்சியில் சைவ, வைணவங்களைப் போல

பௌத்த, சைன மதங்களும் செழித்திருந்தன. ஆனால் அக்காரணத்தால் அவை ஒன்றோடொன்று நட்பாயிருந்தன என்று கூறிவிட முடியாது. ஆயினும், ஒவ்வொரு கிராமத்திலும் கோயில்கள் கட்டப்பட்டு வழிபாடு மிகுந்தது. 'கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டா' என்னும் பழமொழியும் பிறந்தது. தமிழ்நாட்டிலேயே மிகப் பெரிய கோயில் என்று பெயர்பெற்ற தஞ்சைப் பெருவுடையார் கோயிலிலிருந்து சிறு கிராமக்கோயில்கள் வரை பல கட்டப்பட்டன. நாகப்பட்டினத்துப் புத்தவிகாரம் போன்ற கோயில்களும் பல எழும்பின. ஆனால், சமயம் என்ற முறையில் சமணமும் பௌத்தமும் பலவீனப்பட்டுவிட்டபோதிலும் அவர்கள் தமிழ் இலக்கிய வளர்ச்சிக்குப் பெரிதும் உதவினர். கல்வியும் நாட்டில் பரந்திருந்தது. எண்ணாயிரம் என்னும் ஊரில் வடமொழியிலும் தமிழிலும் உயர்கல்வி கற்பிக்கப்பட்டது; திருப்புவனி என்னுமிடத்தில் இருந்த பள்ளியில் ஒரு மருத்துவச்சாலையும் அமைக்கப்பட்டிருந்தது. திருவொற்றியூரிலும் ஒன்று இருந்தது. இவற்றிற்குத் தேவையான நிவந்தங்களும் மானியங்களும் அரசர்களால் கொடுக்கப்பட்டன.

1. இப்பகுதியிலிருந்து பெறப்படும் திரண்ட கருத்து யாது ?

   a. ஆதிகாலந்தொட்டே தமிழர் ஆட்சிமரபு மன்னராட்சி அடிப்படையில் அமைந்தது. தலைநகரிலிருந்து ஆட்சி ஒன்று நடத்தப்பட்டதாயினும் கிராமங்கள்தோறும் ஒரு வகையான கிராம ஆட்சி நடைபெற்றது. இடைக்காலச் சோழர் ஆட்சியில் சபா, ஊர் என்ற குழுக்களால் நடத்தப்பெற்ற இவ்வாட்சிக்கு எல்லா அரசு அதிகாரங்களும் இருந்தன. கிராமங்கள் தோறும் கோயில்கள் கட்டப்பட்டதோடு கல்வியும் பரவலாக இருந்தது.

   b. ஆதிகாலந்தொட்டே இடைக்கால சேர, சோழ, பாண்டியர் ஆட்சி மரபு மன்னராட்சி அடிப்படையில் அமைந்தது. இவர்கள் காலத்தில் கிராம நிர்வாகக் குழுக்கள் கிராமங்களில் ஆட்சி செலுத்தின.

   c. ஆதிகாலந்தொட்டே தமிழர் ஆட்சி மரபு மன்னராட்சி அடிப்படையில் அமைந்தது. தலைநகர ஆட்சியில் மன்னரே நீதி நிர்வாகத்தை மேற்கொண்டு நடத்தியபோதிலும் கிராமங்களிலும் தலசுயாட்சி நடைபெற்றது. இவ்வாட்சியில் கிராம நிர்வாகக் குழுக்கள், கோயில்கள் கட்டின; கல்வியை வளர்த்தன.

   d. ஆதிகாலந்தொட்டே தமிழர் ஆட்சி மரபு மன்னராட்சி அடிப்படையில் அமைந்திருந்தது. இக்காலத்தில் கிராமத்தில் நிர்வாகக் குழுக்கள் ஆட்சி நடத்தி வந்தன. இவை கிராமங்களில் கோயில்கள் கட்டின; கல்வியை வளர்த்தன.

2. அரசர்கள் எதேச்சாதிகாரிகளாகவே இருந்தனர். இருப்பினும் அவர்களை வெற்றிப்படுத்தியவர்கள் யார் ?

   a. புரோகிதர்கள்

   b. அமைச்சர்கள்

c. ஒற்றர்கள்

d. கிராம ஆட்சி சபையினர்

3. இராசேந்திர சோழர் காலத்தில் அரசப்பிரதிநிதி வாழ்ந்த தலைநகர் :

a. மதுரை

b. காஞ்சி

c. தஞ்சை

d. நாகப்பட்டினம்

4. சோழர் காலத்தில் மருத்துவச்சாலைகள் இருந்த இரு ஊர்கள் :

a. மதுரை, காஞ்சி

b. தஞ்சை, நாகப்பட்டினம்

c. எண்ணாயிரம், காஞ்சி

d. திருப்புவனி, திருவொற்றியூர்

5. சமயம் என்ற முறையில் சமணமும் பௌத்தமும் வீழ்ந்தபோதும் அம்மதத்தினர் எந்தத் துறையில் சிறப்பான பணியைச் செய்தனர்?

a. கல்வி

b. மருத்துவம்

c. இலக்கியம்

d. அரசியல்

6. மண்டலங்களின் உட்பிரிவுகள் யாவை ?

a. கூற்றம்

b. வளநாடு, நாடு

c. சபா, ஊர்

d. தோட்டம்

7. சபா என்பதன் பொருள்

a. கிராம ஆட்சியின் ஒரு குழு

b. வாரியம்

c. கிராமக்குழு

d. கலாச்சார அமைப்பு

8. வாரியம் என்பது :

   a. மண்டலங்களின் உட்பிரிவு
   b. நிர்வாகத்துறை
   c. பொதுப்பணித்துறை
   d. சபா , ஊர் முதலிய குழுக்களின் உட்குழு

V. இராமலிங்க அடிகள் வாழ்க்கைக்கும் காந்தி அடிகள் வாழ்க்கைக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. இந்த நாட்டில் இல்லாத கருத்துக்காக நாம் எந்த நாட்டிலும், எந்த மொழியிடத்தும் கடன் வாங்காத அளவுக்கு இங்கே கருத்துக் குவியல் உண்டு.

ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பு, மொழிக்கு இலக்கணம் வகுத்து, இல்லறம் எப்படி இருக்கவேண்டும், துறவறம் என்றால் எப்படி இருக்க வேண்டும் என்பதற்கு எல்லாம் நம்மிடத்திலே கருத்துக் குவியல் நிரம்ப உண்டு.

வங்கிகளுக்கெல்லாம் தலைமை வங்கியான 'ரிசர்வ்' வங்கியில் பணம் நிரம்பி இருப்பதைப் போல நம்மிடத்தில் கருத்துக் குவியல் நிரம்ப உண்டு. ரிசர்வ் வங்கி முன்னால் நின்றுகொண்டு 'ஆகா இவ்வளவு பணம் இருக்கிறது' என்று வயிற்றைத் தடவினால் பசி நீங்காது. 'பாக்கெட்'டில் இருக்கும் பணத்தின் அளவுக்குத்தான் பசி நீங்கும்.

நம்மிடம் ஏராளமான கருத்துகள் இருந்தும் நாம் ஏன் இந்த நிலைக்கு வந்தோம்? அதைத்தான் நாம் ஆராய்ச்சி செய்யவேண்டும் அதைச் செய்வதால்தான் என்னை அழுக்கானவனாகவும் அருவருக்கத்தக்கவனாகவும் சிலர் நினைக்கிறார்கள். விரலில் போட்டுக் கொள்கிற மோதிரம் காணாமல் போய்விட்டால், சேற்றிலே விழுந்துவிட்டால் தேடி எடுக்கும்போது சேறு ஒட்டிக்கொள்ளும். அதனால் சேறு என்று ஒதுக்கிவிடமுடியாது. யாராவது அவர்களைப் பார்த்துச் சேற்றிலே இருப்பவன் என்று சொன்னால் அவர்கள் எண்ணத்திலே இருக்கிற சேற்றுக்கு நான் பரிதாபப்படவேண்டும். அந்தச் சேற்றை நீக்குவது எப்படி என்பதில் நாமெல்லோரும் கவனம் செலுத்த வேண்டும்.

இராமலிங்க அடிகளைப் போல சிலர் தலையில் துணி போட்டுக் கொள்வதால் அவரைப் போல புறத்தோற்றத்தைப் பெற்றுக்கொள்வதாகக் கருதுகிறார்கள். புறத்தோற்றத்திலே காட்டுகிற அக்கறையை மனதில் - உள்ளத்தில் - செயலில் நாம் கொண்டு வருகிறோமா என்றால் உபச்சாரத்திற்காக சரி என்று சொல்லச் சொன்னால் சொல்கிறேன். உண்மையில் அது இல்லை. போன ஆண்டு கொடுத்த 'ரயில் டிக்கட்',, அளவிலும் நிறத்திலும் ஒரே மாதிரியாக இருந்தாலும் அதை வைத்துக்கொண்டு இந்த ஆண்டு போக ஒப்புக்கொள்ள மாட்டார்கள். அதைப்போல நாம் காலத்தை வைத்துக் கருத்துகளைக் கணக்கிட வேண்டும்.

நாம் கருத்துகள் அற்றுத் தவிக்கவில்லை. இருப்பதில் எதைப் பயன்படுத்துவது என்று தெரியாமல் தவிக்கிறோம். நம்முடைய எண்ணங்கள் விரிவடைந்து இருக்கின்றன ஆனால்

நல்லதற்கா - கெட்டதற்கா என்று நான் சொல்லவில்லை. அளவு - வகை- வேகம் மூன்றும் அதிகமாக இருந்தும் எதை எதை எதற்காகப் பயன்படுத்த வேண்டுமென்று அறிந்து கொள்ளவில்லை.

ஆனால் நம்மிடத்து நிரம்பத் தரப்பட்டிருக்கிறது. எண்ணி எண்ணி, எழுதி எழுதி எல்லாம் அடுக்கி வைக்கப்ட்டிருக்கிறது. எதை ஏற்றுக்கொள்வது என்று புரியாமல் இன்று இருக்கிறோம்.

காந்தியாரால் லாபம் அடையாதவர்களில் நானும் ஒருவன். ஆனால் என் நண்பரோ காந்தியாரால் அரசியல் ஏற்றம் பெற்றவராவார். ஆனாலும் நான் காந்தியின் வழிகளில் நம்பிக்கை கொண்டிருக்கிறேன்; வாழ்ந்தும் வருகிறேன் அவை ஏழைகளின் ஏற்றத்திற்குரிய இராமலிங்க அடிகளை நான் மதச் சார்பாளராகப் பார்க்கவில்லை. அவர் ஏழைகளுக்கு எளிய தமிழில் சொன்னார். மத போதனையிலிருந்து மாறுபட்டு, இந்நாட்டு மக்கள் ஏற்றம் பெற நான் அறிந்தவற்றைக் கூறுகிறேன்.

1. நம் நாட்டில் வளமாக இருப்பது எது ?
   a. இராமலிங்க அடிகளுடைய கருத்துகளும் காந்தியடிகளின் கருத்துகளும்
   b. இல்லறமும் துறவறமும்
   c. மொழியின் பயன்பாடு
   d. மொழியில் உள்ள கருத்துகள்

2. பசி எப்போது நீங்குமெனக் கூறப்படுகிறது ?
   a. கருத்துகளைத் தெரிந்து கொண்டால்
   b. ரிசர்வ் வங்கியில் பணமிருந்தால்
   c. வயிற்றைத் தடவினால்
   d. கையிலிருக்கும் பணத்தால்

3. 'ஏராளமான' என்பதைக் குறிக்கும் சொல் எது ?
   a. விரிவடைந்து
   b. குவியல்
   c. ரிசர்வ் வங்கி
   d. ஈராயிரம்

4. 'மோதிரத்தைத் தேடி எடுப்பது' - எதை விளக்குகிறது ?
   a. நல்ல கருத்துகளை எடுத்துக் கொள்வதை
   b. பணத்தின் மதிப்பை அறிய வேண்டுவதை

c. சேற்றைப் பார்த்து அருவருப்புக் கொள்ளக்கூடாது என்பதை
d. எண்ணங்களை மாற்றிக்கொள்ள வேண்டும் என்பதை

5. உரைப் பகுதியில் கூறப்படும் அறிவுரை யாது ?
   a. தேவையான அளவு பணத்தைச் செலவு செய்தல் வேண்டும்
   b. நாம் கருத்துகளை நிரம்பப் பெறவேண்டும்
   c. காலத்திற்கு ஏற்றவாறு கருத்துகளைக் கணக்கிட வேண்டும்
   d. காந்தியடிகளைப் பின்பற்ற வேண்டும்

6. நாம் தவிப்பது ஏன் ?
   a. கருத்துகளைப் பயன்படுத்த தெரியாததால்
   b. காந்தியடிகளையும் இராமலிங்க அடிகளையும் புரிந்து கொள்ளாததால்.
   c. எண்ணங்கள் விரிவடைந்திருப்பதால்
   d. ரயில் டிக்கெட் கிடைக்காததால்

7. எண்ணங்கள் விரிவடைந்ததால் ஏற்பட்ட நிலை யாது ?
   a. நன்மை பெற்றிருக்கிறோம்
   b. தீங்கு நேர்ந்திருக்கிறது
   c. நன்மை கிடைத்திருக்கிறதா தீமை நேர்ந்திருக்கிறதா என்று கூறமுடியவில்லை
   d. எண்ணி எண்ணி மகிழும் சூழ்நிலை உருவாகியிருக்கிறது

8. 'ரயில் டிக்கெட்' - எடுத்துக்காட்டு எதற்காகச் சொல்லப்படுகிறது ?
   a. ரயிலில் முறையாகப் பயணம் செய்ய வேண்டும் என வலியுறுத்துவதற்காக
   b. கருத்துகள் வேகமாக வளர்ந்துவருகின்றன என்பதை விளக்க
   c. ஒரே மாதிரியான கருத்துகள் காணப்படுகின்றன என்பதைக் குறிக்க
   d. காலத்திற்கு ஏற்றவாறு கருத்துகளைப் பயன்படுத்தவேண்டும் என்பதைக் கூற

9. காந்தியடிகளுக்கும் இராமலிங்க அடிகளுக்கும் உரிய ஒற்றுமையாக ஆசிரியர் குறிப்பிடுவது எதை ?
   a. இருவரும் சிறந்த கருத்துகளைத் தந்துள்ளதை
   b. இருவரும் ஏராளமான கருத்துகளைத் தந்துள்ளதை
   c. இருவரும் எளியவர்களுக்காகப் பாடுபட்டதை
   d. இருவரும் புகழ்பெற்று விளங்கியதை

10. எண்ணங்கள் விரிவடைந்துள்ள தன்மை யாது ?

   a. அளவு - வகை - வேகம்

   b. அளவு - முறை - பயன்

   c. எழுத்து - பயன் - சிந்தனை

   d. நன்மையும் தீமையும் உள்ள நிலை

VI. உலகில் பெரும்பாலான நாடுகளில் மிகச் சிறந்த நாகரிகங்கள் தோன்றின. ஒரு காலத்தில் சிறந்திருந்த எகிப்திய பாபிலோனிய, கிரேக்க நாகரிகங்கள் வரலாற்று ஏடுகளோடு நின்று விட்டன. மற்றும் கீழை நாடுகளைச் சார்ந்த ஜப்பான், மேனாடாய் ஆகியன இன்று கேள்வி கேட்பாரற்றுப் போயின. ஆனால் சீனாவையும் இந்தியாவையும் தவிர மற்ற நாடுகளில் தோன்றிய நாகரிகங்கள் அனைத்தும் மாண்டு மடிந்து போயின. என்றாலும் சீனாவைக் குறித்து நாம் ஒன்றும் சொல்வதற்கில்லை. ஆனால் இந்திய மண்ணில் தோன்றிய பழங்கால நாகரிகம் அன்று முதல் இன்றுவரை சிதைந்து விடாமல் வனப்பிழந்து வலிமை குன்றாமல் பலமுற்று உரம் பெற்றுப் பொதுவாக மனித சமுதாயத்திற்கு நம்பிக்கையும் எழுச்சியும் ஊட்டிவருகிறது.

ஐரோப்பிய உலகம் பண்டையப் பெருமைகளை இழந்துவிட கிரேக்கம் மற்றும் ரோம் நாட்டார்களின் புத்தகங்களிலிருந்து தன் பாடங்களைக் கற்றுக் கொள்ள முயலுகிறது. அப்பாடங்களைக் கற்றுக் கொள்வதால் கிரேக்க ரோமானியர்கள் செய்த தவறுகளைத் தாங்கள் உதறித் தள்ளிவிடாலாமென ஐரோப்பியர்கள் நினைத்துக் கொள்கிறார்கள். அது அவர்களுடைய இரங்கற்குரிய நிலையாகும். இவை அனைத்திற்கும் மத்தியில் இந்தியா அசையாமல் நிற்கிறது. இதுதான் நாம் பெற்ற 'பரம்பரைப் பெருமையாகும்'.

என்றும் குன்றாத நம் சிறந்த நாகரிகத்திற்குக் காரணம், பொதுவாக நாம் சகிப்புத் தன்மையோடு மற்றவர்களுடன் வாழக் கற்றுக்கொண்டதும் கால மாறுபாடுகளுக்கு ஏற்றாற் போல் எதையும் ஏற்றுக்கொள்ள முற்பட்டதுமாகும். 'வாழ்க்கையில் எல்லாத் துறைகளிலும் நாமும் வாழ்வோம்; எதிரிகளாய் இருப்பவர்களையும் அன்புகொண்டு வாழ விடுவோம்' என்பதுவுமே நமது தத்துவங்களாக இருந்து வந்திருக்கின்றன.

நம்மை நாகரிகம் அற்றவர்கள் என்றும் அஞ்ஞானிகள் என்றும் மந்தகுணம் படைத்தவர்கள் என்றும் எந்த மாறுதலையும் ஏற்றுக்கொள்ள முடியாதவர்கள் என்றும் அந்நியர்கள் குறைகூறி வந்ததுண்டு. அது உண்மையில் நமது குணத்தின் மீது வீசப்பட்ட குற்றமாகும். நாம் பட்டறிவில் ஆராய்ந்து உண்மை என்று கண்டதை ஏற்றுக்கொள்ளத் தயங்கியதில்லை. பலர் வலிய வந்து இந்தியாவிற்கு அறிவுரைகள் கூறினர். ஆனால் இந்தியா வேற்றுமையிலும் ஒற்றுமையாய் உறுதியாய் மாண்புற நிற்கிறது. இந்த நாட்டின் சிறப்பு இதுதான். இதுவே நமது வாழ்க்கையில் நம்பிக்கையாகும்.

1. வரலாற்று ஏடுகளோடு நின்றுவிட்ட நாகரிகத்தைக் கொண்ட நாடுகளில் ஒன்று எது ?
   a. இந்தியா
   b. சீனா
   c. பாபிலோன்
   d. எந்தநாடும் இல்லை

2. ஜப்பானைப் போன்றே கேட்பாரற்றுக் கிடக்கும் இன்னொரு நாடு எது ?
   a. சீனா
   b. கிரேக்கம்
   c. மேனாடாய்
   d. இத்தாலி

3. சீன நாட்டின் நாகரிகம் எந்நிலையில் இருக்கிறது ?
   a. கிரேக்கம் போன்று அழிந்துவிட்டது.
   b. ஜப்பான் போன்று கேட்பாரற்றுக் கிடக்கிறது.
   c. வன்மை குன்றிக் கிடக்கிறது.
   d. எதுவும் சொல்ல முடியாத நிலையில் இருக்கிறது.

4. கிரேக்கப் புத்தகங்களிலிருந்து பாடங்களைக் கற்றுக்கொள்வது யார் ?
   a. இந்தியர்
   b. சீனர்
   c. சப்பானியர்
   d. ஐரோப்பியர்

5. இந்தியாவின் பாரம்பரியப் பெருமை யாது ?
   a. பழம் நாகரிகக் கூறுகளை உதறித் தள்ளிவிட நினைப்பது.
   b. தவறு இல்லாத நாகரிகத்தைக் கொண்டிருப்பது.
   c. பல பாடங்களைக் கற்றுக்கொள்ள நினைப்பது.
   d. கிரேக்க , பாபிலோனிய நாகரிகக் கூறுகளைக் கொண்டிருப்பது.

6. இந்தியாவின் சிறந்த நாகரிகத்திற்கான காரணம் எது ?
   a. சகிப்புத் தன்மை
   b. மாறுபாடுகளை விரும்பாமை

c. எல்லாத் துறைகளையும் அறிந்தமை

d. தவறு செய்யாமை

7. ஐரோப்பியருடைய இரங்கற்குரிய நிலை யாது ?

a. பாடங்களைக் கற்றுக் கொள்வது

b. தவறுகளை உணருவது

c. தவறுகளை மறைக்க எண்ணுவது

d. இந்தியா போல் பரம்பரைப்பெருமை இல்லாமலிருப்பது.

8. இந்தியாவின் மீது பிற நாட்டார் எவ்வாறு குற்றம் சுமத்தினர் ?

a. நாகரிகமற்றவர்கள் என்றார்கள்.

b. வாழ்க்கை வசதியில்லாதவர்கள் என்று கூறினார்கள்.

c. சிறப்பில்லாத நாடு என்றார்கள்.

d. வனப்பிழந்த நாடு என்றார்கள்.

9. மேற்காட்டிய உரைப்பகுதி உணர்த்தும் கருத்து யாது ?

a. இந்தியாவே சிறந்த நாடு.

b. இந்தியா அழியாத நாகரிகப் பெருமையைக் கொண்ட நாடு.

c. எல்லாத் துறைகளிலும் இந்தியா முன்னேறிய நாடு.

d. உலகநாடுகளோடு இந்தியா போட்டியிடும் நாடு.

10. இந்தியா உறுதியாய் நிற்கக்காரணம்.

a. நமது குறையை ஒப்புக்கொண்டதால்.

b. வேற்றுமையில் ஒற்றுமை பேணுவதால்.

c. பலர் உதவியை ஏற்றுக் கொள்வதால்.

d. சிலரின் ஒத்துழைப்பால்.

VII. நீர் நிறைந்த ஏரியைப் பறவைகள் நாடி வருவதைப் போன்று பண்டைத் தமிழகத்தில் தமிழின் சுவையை அறிந்த மன்னர்களைத் தேடி, அறிஞர்கள் செல்வது இயல்பாக இருந்தது. தம்மை நாடிவந்த புலவர்களைத் தார் வேந்தரும் அக மகிழ்ந்து வரவேற்றனர். புலவர்களால் பாடப்படுவதை அவர்கள் பெறற்கரும் பேறாகக் கருதினர். அரியாசனத்திற்கு நிகரான சரியாசனம் தந்து, பற்பல பரிசில்களை அளித்து அச்சான்றோர்களைப் பெருமைப்படுத்தினர்; அவர்களின் அறிவுரையைச் செவிமடுத்துக்

கேட்டனர்; அதன் விளைவாக, அறம் திறம்பாத ஆட்சி நடத்தினர். இதனால் நாட்டில் அறிவிற்கும் அறிவுடையோருக்கும் பெருமதிப்பு ஏற்பட்டது. "கற்கை நன்றே கற்கை நன்றே, பிச்சைப் புகினும் கற்கை நன்றே" என்ற முறையில் கல்வியின்பால் ஆர்வம் நிறைந்து வளர்ந்தது.

1. பண்டைத் தமிழகத்தில் அறிஞர்கள் யாரை நாடிச் சென்றார்கள் ?
    a. மன்னர்கள்
    b. மக்கள்
    c. புலவர்கள்
    d. மாணவர்கள்

2. தார்வேந்தர் அகமிகழ்ந்து வரவேற்பது ..
    a. பெரியோர்களை
    b. புலவர்களை
    c. மக்களை
    d. வேந்தர்களை

3. தார்வேந்தர்கள் புலவர்களிடமிருந்து கேட்டது.
    a. அறிவுரை
    b. தெளிவுரை
    c. பதவுரை
    d. விளக்கவுரை

4. புலவர்களின் கூற்றினால் மன்னர்கள் நாட்டில்
    a. அறத்தை நிலைநாட்டினர்.
    b. மக்களிடம் அறத்தை வலியுறுத்தினர்.
    c. அறம் திறம்பாத ஆட்சி நடத்தினர்.
    d. பகையின்றி வாழக் கற்றுக் கொண்டனர்.

5. நாட்டில் அறிவிற்கும் அறிவுடையோருக்கும் ஏற்பட்டது
    a. நன்மதிப்பு
    b. பெருமதிப்பு

c. வரவேற்பு

d. பெருஞ்சிறப்பு

6. 'தார் வேந்தர்' எனும் சொல்லின் பொருள்

a. உலகு ஆழ்பவன்

b. மாலையணிந்த அரசன்

c. முடிசூடா மன்னன்

d. இளவரசன்

7. "கற்கை நன்றே கற்கை நன்றே; பிச்சைப் புகினும் கற்கை நன்றே" - என்னும் கூற்று வலியுறுத்துவது

a. நன்மை

b. கல்வி

c. பிச்சை எடுப்பது

d. அறம்

8. அரியாசனத்திற்கு நிகரான பெருமை -

a. பரிசில்கள்

b. அறிவுரை

c. புலவர்களால் பாடப்பெறுவது

d. கல்வி

VIII. அகத்தை நல்ல எண்ணங்களால் தூய்மை செய்வது போலப் புறத்தை நீராலும் காற்றாலும் ஞாயிற்றொளியாலும் தூய்மை செய்தல் வேண்டும். நீரும் காற்றும் ஒளியும் மனிதனை வளர்க்கும் இயற்கைத் தெய்வங்கள் என்று சொல்வேன். ஊற்று நீரில் நாடோறுங் காலையில் தலைமுழுகல் வேண்டும். மூழ்குதற்குத் தண்ணீரே சால்புடைத்து. நரம்புகட்குத் திண்மையும் உரமும் ஊட்டும் நீர்மை தண்ணீருக்குண்டு. நறுந்தண்ணீர் கிடையாவிடத்து வெந்நீர் மூழ்குவது நலம். வெந்நீரையும் தண்ணீரையும் கலந்து மூழ்கல் நலன் பயப்பதாகாது. நோயாளர், மெலியர், ஒரு சில மூளை உழைப்பாளர் முதலியோர் வெந்நீரில் மூழ்கல் நலமென்று சில மருத்துவ அறிஞர் கூறுகின்றனர். தண்ணீரினும் வெந்நீர் அவுக்கை விரைவில் போக்கும். ஆனால், தண்ணீரைப் போல வெந்நீர் நரம்புகளுக்குத் திண்மை வழங்காது.

1. அகத்தைத் தூய்மை செய்வது

a. இறைவன் அருள்

b. வழிபாடு

c. பிறருக்கு நன்மை செய்தல்

d. நல்ல எண்ணங்கள்

2. நீரும் காற்றும் ஒளியும் மனிதனை வளர்க்கும்

a. தெய்வங்கள்

b. பிரபஞ்சங்கள்

c. இயற்கைத் தெய்வங்கள்

d. இயற்கை அண்டங்கள்

3. நாடோறுங் காலையில் தலைமுழுகச் சிறந்தது.

a. வெந்நீர்

b. மழைநீர்

c. ஊற்று நீர்

d. ஆற்று நீர்

4. நரம்புக்குத் திண்மையும் உரமும் ஊட்டும் தன்மை எதற்கு உண்டு?

a. காற்று

b. தண்ணீர்

c. நிலம்

d. வெந்நீர்

5. வெந்நீரையும் தண்ணீரையும் கலந்து மூழ்குதல்

a. நலம்பயக்கும்

b. நலன் பயப்பதாகாது

c. தூய்மை பயக்கும்

d. தெளிவு பயக்கும்

6. நோயாளர், மெலியர், ஒரு சில மூளை உழைப்பாளர் மூழ்குவதற்குச் சிறந்தது

a. வெந்நீர்

b. குளிர்ந்த தண்ணீர்

c. தண்ணீர்

d. வெந்நீர், தண்ணீர் கலந்த நீர்

7. ‘திண்மை’ என்பதன் பொருள் யாது ?
   a. உரம்
   b. சிறப்பு
   c. பெருமை
   d. மகிழ்ச்சி

8. ‘நீர்மை’ என்பதன் பொருள்
   a. நீரிலுள்ள மை
   b. சூடு
   c. மென்மை
   d. இயல்பு

IX. அண்ணல் காந்தியடிகள் உயிர்ச்சேதம் கண்டு உள்ளம் கலங்கினார். ஜாலியன்வாலாபாக்கில் பெருக்கெடுத்தோடிய இரத்த ஆறு அவரைத் தீவிர சிந்தனையில் ஆழ்த்தியது. கத்தியில்லாமல், இரத்தமில்லாமல், அன்பு நெறியின் மூலமே சுதந்திரத்தை அடையவேண்டும் என்று உறுதி பூண்டார். உண்மை, இன்னா செய்யாமை போன்ற அறங்களை நாட்டு மக்களுக்கு எடுத்துரைத்தார். சத்தியாக்கிரகம் என்னும் கொள்கையைத் தெளிவுபடுத்தினார். அதன்விளைவாக, ஒத்துழையாமை இயக்கம் பிறந்தது. இப்புதிய போராட்ட முறையால் நாட்டில் அமைதியான பெரும்புரட்சி உருவாயிற்று. நாட்டுமக்கள் அரசாங்கத்தோடு ஒத்துழைக்க மறுத்தனர்; வழக்கறிஞர்கள் நீதிமன்றத்தை விட்டு வெளியேறினர்; மாணவர்கள் கல்வி நிலையங்களைத் துறந்தனர். ஆங்கில அரசு செயலிழந்து செய்வதறியாது திகைத்தது. இதை எப்படி சமாளிப்பது என யோசித்தது. ஆனாலும் இந்த இயக்கம் இந்திய மண்ணில் வலுப்பெறத் தொடங்கியது.

1. காந்தியடிகள் உள்ளம் கலங்கியது
   a. மக்களிடமுள்ள வறுமை
   b. வேலையில்லாத் திண்டாட்டம்
   c. பெண்களின் கொடுமை
   d. உயிர்ச்சேதம் கண்டு

2. அன்புநெறியின் மூலம் காந்தி வேண்டுவது
   a. உண்மை
   b. விடுதலை

c. சத்தியாக்கிரகம்

d. ஒத்துழையாமை

3. காந்தி தெளிவுபடுத்திய கொள்கை

a. அறப்போராட்டம்

b. சத்தியாக்கிரகம்

c. சுதந்திரம்

d. தீவிர சிந்தனை

4. சத்தியாக்கிரத்தால் பிறந்தது

a. சுதந்திரம்

b. வழக்குகளில் வெற்றி

c. மக்களின் சமவாழ்வு

d. ஒத்துழையாமை இயக்கம்

5. காந்தி நாட்டில் ஏற்படுத்திய புரட்சி

a. வெள்ளையனே வெளியேறு

b. அமைதியான பெரும்புரட்சி

c. நீதிமன்றங்களில் இந்தியர்கள்

d. இந்தியர்களை ஒன்று சேர்த்தல்

6. காந்தியின் போராட்டத்தால் ஆங்கில அரசு

a. ஓடிவிட்டது.

b. வளர்ந்துவந்தது.

c. செயலிழந்து போனது.

d. செய்வது அறியாதிருந்தது.

X. மனிதன் பலவகை உணர்ச்சிகளுக்கு ஆட்படுபவன். நம்பிக்கைக்குக் கட்டுப்படுபவன். பாசங்களுக்குக் கட்டுப்படுபவன். அளவும் தரமும் மாறுமே தவிர அடிப்படையில் இவை யாவருக்கும் பொருந்தும். இவை அனைத்தையும் தழுவி அணுகி நின்றாலும் அவனது சிந்தனை இவை எதற்கும் அடிமைப்பட்டுவிடாமல் இவ்வுணர்ச்சிகள் அனைத்திற்கும் மேலெழுந்து நின்று அமைதியோடும், தெளிவோடும் தன்னல எதிர்பார்ப்போடும் பிரச்சினைகளையும் ஆயும் பகுத்தறியும் தன்மையைத்தான் அறிவியல் பார்வை என்று குறிப்பிடுகின்றேன்.

அறிவியல் அறிவு வேறு; அறிவியல் பார்வை வேறு. அறிவியல் துறையினர் அனைவருமே அறிவியல் அணுகுமுறை கொண்டவர்கள் அல்லர். சமயம் பக்தி ஆகிய துறைகளில் ஈடுபாடு கொண்டோர் நம்பிக்கையின் அடிப்படையில் இயங்க வேண்டியிருப்பதாலேயே அவர்கள் அனைவரும் அறிவியல் அணுகுமுறை இல்லாதவரும் ஆவர். அறிவியல் பார்வை என்பது ஒன்றை நம்புவதையோ நம்பாததையோ பொறுத்தது மட்டும் அன்று, அது ஒரு தனிமனிதன் தனது அன்றாட வாழ்க்கையின் ஈடுபாடுகளில் செய்யும் முடிவுகளில் ஆய்ந்து பகுத்து அறியும் திறன் வாய்ந்த தனது சிந்தனைக்கு எவ்வளவு இடம் அளிக்கிறான் அதன்முடிவுக்கு எவ்வளவு மதிப்பு கொடுக்கிறான் என்பதைப் பொறுத்ததாகும்.

இவ்வுலகில் நல்லவர்கள் நலிவதும் அல்லவர்கள் வாழ்வதும் நாம் ஆங்காங்கு காணும் நிகழ்ச்சி. இப்படிப்பட்ட ஒரு நிலை இயற்கை முறைகளுக்கு முரணாக இருக்கிறதே; இது ஏன் என்ற கேள்வியை வள்ளுவர் எழுப்புகிறார்; தாம் எழுப்பிய கேள்விக்குத் தாமே விடை தேடுகிறார். வள்ளுவர் ஒப்புக்கொண்ட தத்துவ அமைப்பிற்குள் இதற்கு ஒரு விடை எளிதாகக் கொடுத்திருக்கலாம். அவர் இறைவன் என்ற ஒரு ஆற்றலை நம்புகிறார். முற்பிறவியை நம்புகிறார். எனவே இப்பிறவியில் நல்லவனாக இருப்பினும் அவன் நலிவது அவனது முற்பிறவியின் பயன் என்று மிக எளிதாகக் கூறலாம். ஆனால் வள்ளுவர் அவ்வாறு கூறவில்லை. சிந்தித்துச் சிந்தித்துப் பார்த்துவிட்டு முடிவாக 'இது ஆராயப்பட வேண்டிய செய்தி' என்று முடிக்கின்றார். கடவுள், சமயம், பிறவிகள், விதி ஆகிய இந்தப் பெரிய கட்டுக் கோப்புகட்கும் அடங்காத சில சிக்கல்கள் மனிதன் வாழ்க்கையில் இருக்கின்றன.

அவற்றை நாம் அறிந்து கொள்ள மேலும் ஆராய வேண்டும். அறிவியல் பார்வைக்கு இஃது ஒரு சிறந்த எடுத்துக்காட்டு. ஆயிரத்து முன்னூற்று முப்பது அருங்குறட்களில் வள்ளுவரின் அணுகுமுறையை அழகாக எடுத்துக்காட்டும் சிறப்பான வரிகள் இவை.

தேசப்பற்று மொழிப்பற்று, இனப்பற்று, சமயப்பற்று ஆகிய உணர்ச்சிகள் உயர்தரமானவை. எனினும் அவ்வுணர்ச்சிகளின் திரையால் முற்றும் மறைக்கப்படாது அத்திரைகளை ஊடுருவி அவற்றிற்கு அப்பாலும் உண்மைகள் இருப்பின் அவற்றையும் காணும் பார்வைதான் 'அறிவியல் பார்வை'.

மனித சமுதாயத்தின் வளர்ச்சியின் வேர்கள் பழமையில் ஆழ்ந்து பதிந்து நிற்கின்றன. ஒரு சமுதாயத்தின் நிகழ்காலமும் எதிர்காலமும் ஒரு மரத்தின் வளரும் தளிரும் மலரும் கனியும் போன்றவை. அதன் பழமை வேர் போன்றது. வலியும் வாழ்வும் வேரின்றி அமைவதில்லை. எனவேதான் பழமை எந்தச் சமுதாயத்திலும் ஒரு மாபெரும் ஆற்றலாக விளங்குகிறது.

நம் முன்னோர்கள் வாழ்ந்த முறை, வகுத்த பாதை ஆகியன நம் வாழ்விற்கு வழிகாட்டியாக இருப்பதில் தடையில்லை. ஆனால் அவை வழிமறைக்கத் தொடங்கும்போதுதான் சிக்கல் பிறக்கிறது. 'பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவல கால வகையினானே' என்று பண்டு தொட்டுப் பாடி வந்திருக்கிறோம் என்றாலும் பழையன

அவ்வளவு விரைவாகக் கழிவதில்லை. இந்தச் சூழ்நிலை மற்ற சமுதாயங்களைவிட நம் சமுதாயத்தில் வலுப்பெற்றிருக்கிறது. இதற்கு நமது அணுகுமுறை பார்வைதான் காரணமாக அமைகிறது.

1. அறிவியல் பார்வை என்பது
   a. பகுத்து அறியும் தன்மை
   b. அறிவியல் கலையார்வம்
   c. உணர்ச்சி வயப்படாமல் இருப்பது
   d. பாசங்களுக்கு அப்பாற்பட்டது

2. அறிவியல் அணுகுமுறை கொண்டவர்கள்
   a. அறிவியல் துறையினர் அனைவரும்
   b. அறிவியல் துறையினர் சிலர் மட்டும்
   c. அறிவியல் துறையில் பலர்
   d. நம்பிக்கை அடிப்படையில் சிந்திப்பவர்கள்

3. இயற்கை முறைகளுக்கு முரணாக இருப்பது ....
   a. கடவுளை நம்புவதும் நம்பாமல் இருப்பதுவும்
   b. அறிவியல் பார்வை கொள்வது
   c. நல்லவர்கள் நலிவதும் அல்லவர்கள் வாழ்வதும்
   d. அறிவியல் பார்வை கொள்ளாமல் இருப்பது

4. நல்லவன் நலிவதற்கு திருவள்ளுவர் கூறும் காரணம் .....
   a. இப்பிறவியின் பயன்
   b. முற்பிறவியின் பயன்
   c. கடவுள்
   d. பகுத்தறிவின்மை

5. 'நினைக்கபபடும்' என்பதன் பொருள் ....
   a. போற்றப்படும்
   b. ஆராயப்படும்
   c. தெரிவிக்கப்படும்
   d. சொல்லப்படும்

6. மனித சமுதாயத்தின் வேர்கள் ....

   a. புதுமை
   b. பழமை
   c. பகுத்தறிவு
   d. அறிவியல் நோக்கு

7. காலவகையினாலே வழுவற்றது

   a. பழையன கழிதலும் புதியன புகுதலும்
   b. பழையன புகுதலும் புதியன கழிதலும்
   c. புதியன புகுதலும் பழையன கழிதலும்
   d. பழமையைப் போற்றுவது

8. முக்கியமான துறைகளில் புதியன புகமுடியாததற்குக் காரணம் ....

   a. பழமையில் விடாப்பிடியாக இருப்பது
   b. புதுமையை ஒதுக்குவது
   c. பழையன கழிதலும் புதியன புகுதலும் எனப்படுவது
   d. எதிர்காலத்தை நினைப்பது

9. மேற்காணும் பகுதியில் கூறப்பட்டுள்ள திருவள்ளுவரின் கருத்து ....

   a. புதுமைக்கு ஓர் எடுத்துக்காட்டு
   b. அறிவியல் பார்வைக்கு ஓர் எடுத்துக்காட்டு
   c. பழமையை போற்றத் தூண்டுவது
   d. புதுமையை ஒதுக்கத் தூண்டுவது

10. சிக்கல் பிறப்பது ....

   a. பழையன வாழ்விற்குத் தடையாகும்போது
   b. வாழ்விற்கு வழிகாட்டியாக இருக்கும்போது
   c. முற்பிறவியின் பயனால்
   d. நல்லவராகவே இருப்பதால்

XI. தூத்துக்குடிக்கும், இலங்கைக்கும் இடையில் கப்பல் வாணிகம் பெயரளவில் நடந்து வந்தது. 'பிரிட்டிஷ் இந்தியா ஸ்டீம் நாவிகேஷன்' என்னும் கம்பெனியின் கப்பல்களே இவ்விரு நாடுகளுக்குமிடையில் பொருள்களை ஏற்றுமதி இறக்குமதி செய்து வந்தன. இக் கம்பெனி ஆங்கிலேயர்களால் நடத்தப்பட்டு வந்தது. அக்காலத்தில் இந்தியர்களால்

நடத்தப்படும் கப்பல் கம்பெனி ஒன்றுமில்லை. எனவே கப்பல் வாணிகத்தில் வெள்ளையர்களே முழு உரிமை கொண்டிருந்தார்கள். அதோடு அவர்கள் வைத்ததே சட்டமாகவும் இருந்தது. இந்தியர் வாணிகம் தலையெடுக்காதபடி பல நடைமுறைகளையும் கையாண்டனர். நம் நாட்டு ஏற்றுமதிப் பொருள்களுக்குக் கட்டணங்களை மிகுதிப்படுத்தினர். பிறவிடங்களில் குறிப்பிட்ட பொருள்களுக்கு நல்ல இலாபம் கிடைக்கும் சமயத்தில் கப்பலில் அப்பொருள்களை ஏற்றிச் செல்லவும் மறுத்தனர்.

இந்நிலையில் சிதம்பரனார் ஆங்கிலக் கப்பல் கம்பெனியின் கொட்டத்தை அடக்க எண்ணித் தூத்துக்குடி இந்திய வணிகரின் ஆதரவோடு 1906 - ஆம் ஆண்டு 'சுதேசி கப்பல் கம்பெனி' ஒன்றைத் தொடங்கினார். உறுப்பினர்களாக பதின்மூன்று பேரும், சட்ட ஆலோசகராக நால்வரும் நியமிக்கப்பட்டனர். சுதேசி கப்பல் கம்பெனியில் பலர் பங்குதாரர்களாய்ச் சேர்ந்தனர். இயன்ற அளவு பொருளுதவி செய்யவும் முன் வந்தனர். எனினும், இப்பொருள் கப்பல்கள் வாங்கப் போதுமானதாக இல்லை. ஆதலால் பம்பாயில் இருந்த 'ஷாலையன்' என்ற கம்பெனியிடம் கப்பல் ஒன்றைக் குத்தகைக்கு வாங்கித் தூத்துக்குடிக்கும் இலங்கைக்குமாக வாணிகத்தைத் தொடங்கினர்.

சிதம்பரனார் தோற்றுவித்த சுதேசி கப்பல் கம்பெனி வணிக நோக்கத்தையும் பொருள் சேர்க்கும் எண்ணத்தையும் மாத்திரம் கருதி இயங்கவில்லை. "சொந்த நாட்டுத் தொழில்கள் வளர வேண்டும். சுதேசி இயக்கம் மக்கள் மனத்தில் வேரூன்ற வேண்டும்" என்ற உயர்ந்த குறிக்கோள்களோடு இயங்கி வந்தது.

1. ஆங்கிலேயர்களால் நடத்தப்பட்டு வந்த கப்பல் கம்பெனி எது ?
   a. சுதேசி கப்பல் கம்பெனி
   b. ஷாலையன் கம்பெனி
   c. பிரிட்டிஷ் இந்தியா ஸ்டீம் நாவிகேஷன்
   d. தூத்துக்குடி கப்பல் கம்பெனி

2. இந்தியர் வணிகம் தலையெடுக்காமலிருக்க ஆங்கிலேயர் செய்தது என்ன ?
   a. ஆங்கிலேயர்களே வாணிகத்தில் முழு உரிமை பெற்றிருந்தனர்.
   b. இந்திய வணிகர்களையும் தங்கள் கப்பல் கம்பெனியில் உறுப்பினர்களாகச் சேர்த்துக் கொண்டனர்.
   c. இந்தியர்களால் நடத்தப்பட்ட கப்பல் கம்பெனி ஒன்றுமில்லை.
   d. கட்டணங்களை மிகுதிப்படுத்தியதோடு உரிய நேரத்தில் ஏற்றுமதி செய்யவில்லை.

3. இவ்வுரைப் பகுதியில் பயன்படுத்தப்படும் ஆங்கிலேயரைக் குறிக்கும் பிறிதொரு சொல்
   a. வணிகர்

b. நாவிகேட்டர்

c. சுதேசி

d. வெள்ளையர்

4. சுதேசிக் கப்பல் கம்பெனியின் மேலாண்மைக் குழுவில் இடம் பெற்றோர் எண்ணிக்கை

a. 17

b. 13

c. 4

d. 17க்கும் மேற்பட்டோர்

5. சுதேசிக் கப்பல் கம்பெனியின் குறிக்கோள் என்ன ?

a. ஆங்கிலக் கப்பல் கம்பெனியின் கொட்டத்தை அடக்குதல்.

b. விடுதலை உணர்வைத் தோற்றுவித்தல்

c. நாட்டின் பொருளாதாரத்தை வளர்த்தல்

d. இலங்கையோடு தொடர்பு கொள்ளுதல்

6. கப்பல் எந்தக் கம்பெனியிடம் குத்தகைக்கு வாங்கப்பட்டது.

a. ஷாலையன்

b. சுதேசிகப்பல் கம்பெனி

c. தூத்துக்குடிக் கம்பெனி

d. கிழக்கிந்தியக் கம்பெனி

XII. 1947-ல் பாரத நாடு விடுதலை பெறுவதற்கு முன்பே எல்லாரும் சமம் என்று பாடி முடித்தார் பாரதியார். பாரதி கண்ட கனவு இன்றுவரை கனவாகவே இருக்கிறது. அவர் கண்ட கனவு நனவுத் திருவாக வேண்டுமேல் பாரதியின் தேசிய பாடல்களைப் பாரத மக்கள் பல்லாண்டு படிக்க வேண்டும். அவர் பாடல்கள் தமிழ் மொழியில் இருந்தாலும் பாடப்பட்ட பொருள் தேசிய ஒருமைப்பாடு, ஆதலால் எல்லா இந்திய மொழிகளிலும் இப்பாடல்கள் நல்ல பண்களில் மொழி பெயர்க்கப்பட வேண்டும். இந்திய நாட்டின் சிறு பள்ளிகளிலெல்லாம் இப்பாடல்கள் முழக்கம் பெறல் வேண்டும்.

தேசிய ஒருமைப்பாட்டினை விடுதலையுரிமை பெறுவதற்காக மட்டும் பாரதியார் பாடிடவில்லை. விடுதலைக்குப் பின்னும் மக்கள் சரிநிகர் சமானமாக ஒத்த மதிப்பு பெறவேண்டும் என்பது தான் அவர் குறிக்கோள்.

இந்தியா ஒரு நாள் உரிமை பெறுதல் உறுதி என்று முன்னறிவால் தெளிந்த பாரதியார் தம் கவிதைகளில் உரிமை பெற்ற இந்தியாவும் இந்திய மக்களும் வாழவேண்டிய வளங்களைப் பல செய்யுள்களில் புலப்படுத்தியுள்ளார்.

இமயம் முதல் குமரி வரை பாரதம் நிலத் தோற்றத்தில் ஒன்றாக இருந்தாலும் மக்கள் உள்ளத்தில் ஒற்றுமை வேண்டுமன்றோ ? விடுதலை அடைவதற்கு முன்னரே ஆனந்த சுதந்திரம் அடைந்து விட்டோம் என்று சுதந்திர பள்ளு பாடிய தேசிய பாவலர் பாரதியார் சுதந்திரம் பெற்றபின் நாட்டில் என்ன எண்ணங்கள் பரவ வேண்டும் என்று தொகுத்துச் சொல்லியுள்ளார்.

சுதந்திரம் பெற்றதற்குப் புறச்சான்றுகள் என்ன ? எல்லாரும் சமம்; எல்லாரும் ஒன்று; பொய்யான ஏமாற்றத்திற்கு இடம் கொடாமை; நல்லவரையும் பெரியவரையும் மதித்தல்; நயவஞ்சகம் இல்லாமை; உழவுக்கும் தொழிலுக்கும் மதிப்பு; உழைக்காதவரை மதியாமை; நாமிருக்கும் நாடு நமது என்ற பற்று ; இந்நாடு இனி நமக்கே உரிமை என்ற அறிவு - இந்தப் பண்புகள் எல்லாம் சுதந்திரத்தின் பயன்கள் (அடையாளங்கள்) ஆகும். சுதந்திரத்திற்கு பின்னும் நாடு, ஒருமைப்பாடு என்னும் உணர்வு வளர்வதற்குரிய அடிப்படை நெறிகளை பாரதியார் கவிதைகளில் காண்கிறோம்.

1. கனவு என்ற சொல் எப்பொருளில் பயன்படுத்தப்பட்டுள்ளது ?
   a. சமம்
   b. விருப்பம்
   c. விடுதலை
   d. பாட்டு

2. பாரதியார் பாடல்கள் ஏன் பல மொழிகளில் மொழிபெயர்க்கப்பட வேண்டும் ?
   a. பாரதியாரின் புகழைப் பரப்ப
   b. பாரத மக்கள் அனைவரும் படிக்க
   c. எல்லாரும் பாரதியாரைப்பற்றி அறிய
   d. இந்திய ஒருமைபாட்டை உருவாக்க

3. 'குறிக்கோள்' என்பதின் பொருள் என்ன ?
   a. மதிப்பு
   b. கொள்கை
   c. விடுதலை
   d. உரிமை

4. இந்திய ஒருமைப்பாட்டைப் பற்றிப் பாரதியார் பாடியதின் நோக்கம் யாது ?
   a. விடுதலை உரிமை பெற வேண்டும்
   b. இந்திய மக்களுக்கு நல்வழி காட்ட வேண்டும்
   c. இந்திய மக்கள் சமமாக வாழ வேண்டும்
   d. மாணவர்களுக்கு நல்வழி காட்ட வேண்டும்

5. ‘பாடல்’ என்ற பொருளைத் தரும் சொல் எது ?
   a. மொழி
   b. பொருள்
   c. செய்யுள்
   d. பள்ளு

6. சுதந்திரம் பெற்றதற்கான ஒரு புறச்சான்று எது ?
   a. நாட்டுப் பற்று
   b. பாரதியார் எண்ணங்கள்
   c. ஏமாற்றம்
   d. உழைக்காதவரை மதித்தல்

7. ‘ஆனந்த சுதந்திரம் அடைந்து விட்டோம்’ என்று பாரதியார் எப்பொழுது பாடினார்?
   a. 1947 -ல்
   b. பாரதியார் கனவு கண்டபின்
   c. விடுதலை அடையும் முன்னர்
   d. விடுதலை அடைந்த பின்னர்

8. உரைப்பகுதி வலியுறுத்தும் கருத்து யாது ?
   a. விடுதலை உயர்வு
   b. அடிமைத்தனத்தின் தாழ்வு
   c. ஒருமைப்பாட்டு உணர்வு நெறி
   d. பாரதியின் பெருமை

XIII. இன்சொல் பேசுவது என்பது, தொடக்கத்தில் நம் மனநிலையைப் பொருத்தது. ஒருவரைச் சந்திக்கும்போது என்ன உணர்வு நிலை நமக்கு இருந்தது என்பதையும், அவரைக் கண்டதால் என்ன உணர்வு உண்டாயிற்று என்பதையும் பொறுத்தது. எனவே, விருந்தினரிடம் நாம் இன்சொல் பேச வேண்டும் என்றால், விருந்தினரை உபசரிக்க வேண்டும் என்ற பொதுவான விருப்பம் நமக்கு அடிப்படையாக இருக்க வேண்டும். இதைத்தான் ஔவையார், "அறஞ்செய விரும்பு " என்று சொல்லி வைத்தார். இது இருந்தால் விருந்தினரைக் காணும்போது நம் உணர்வு, அதற்கு முன் எப்படியிருந்தாலும், உடனே மாறி, அவரை இன்முகத்துடன் வரவேற்போம்; இன்சொல் பேசி மகிழ்விப்போம். அதற்காகவே கோபம் கொள்ளாமை, எளிமை, பணிவு முதலிய நல்ல பண்புகளை வலிந்து மேற்கொள்ளத் தொடங்குவோம்.

மனத்திலிருந்து வரும் இன்சொல்லும், நம் விருப்பத்தையும் அன்பையும் கூறாமல் கூறும், கனிந்த பார்வையும் விருந்தோம்பலில் மிகவும் முக்கியமானவை. இவை இல்லாமல், எவ்வளவு ஆடம்பரமாக வரவேற்பு வளைவுகள் வைத்து, தோரணம் கட்டி, மேளதாளம் முழக்கி, விருந்து உணவு படைத்தாலும், விருந்தினரின் மனம் நிறைவடையாது.

விருந்தினர் சமுதாயத்தின் பிரதிநிதி. அவரை உபசரிக்கும்போது அவர் பேச்சை முக மலர்ச்சியுடன் முழுவதும் கேட்டு, தான் சுருக்கமாகப் பேசவேண்டும். அப்படியன்றித் தற்பெருமை பேசக்கூடாது. ஆணவப் பேச்சுக் கூடாது. இந்தப் பணிவு என்ற பண்பு இருந்தால் இன்சொல் பேசுவது எளிதாகும். அகந்தை உடையவன் இன்சொல் பேசுவது இயலாத ஒன்று.

1. விருந்தோம்பலில் மிக முக்கியமானது
   - a. விருந்தினரிடம் பேசுதல்
   - b. இன்முகத்துடன் எதிர் கொள்ளல்
   - c. இனிய சொற்களைப் பேசுதல்
   - d. ஆடம்பரமாக வரவேற்றல்

2. இன்சொல் பேசுவது எதைப் பொறுத்தது ?
   - a. விருந்தினர் உறவைப் பொறுத்தது
   - b. விருந்தினை எதிர்கொள்வோரின் மனநிலையைப் பொறுத்தது
   - c. விருந்தினரின் பண்பையே பொறுத்தது
   - d. விருந்தினரின் தோற்றத்தைப் பொறுத்தது

3. விருந்தினரைக் காணும்போது இன்சொல் கூறும் உணர்வு நமக்கு வர என்ன செய்ய வேண்டும்?

   a. விருந்தினரை இன்முகத்துடன் வரவேற்க வேண்டும்.

   b. வரவேற்பு வளைவு வைத்து விருந்தினரை வரவேற்க வேண்டும்.

   c. விருந்தினரை உபசரிக்க நமக்கு விருப்பம் இருக்க வேண்டும்.

   d. நல்ல பண்புகளை மேற்கொள்ள வேண்டும்.

4. விருந்தினர் சமுதாயத்தின் பிரதிநிதி; ஆதலால் நாம் நடந்துகொள்ள வேண்டிய முறை யாது ?

   a. தற்பெருமை பேசாதிருத்தல்

   b. கருத்துக்களை வலியுறுத்தல்

   c. ஆடம்பரமாக வரவேற்றல்

   d. சுவைமிக்க விருந்து அளித்தல்

5. ஔவையார் " அறஞ்செய விரும்பு" என்று கூறினார் ; ஏனென்றால்,

   a. விருப்பமே உணர்வுக்கும் செயலுக்கும் அடிப்படை

   b. அறங்களுள் சிறந்தது விருந்தோம்பல்

   c. அறங்களுள் சிறந்தது இன்சொல் கூறுதல்

   d. அறங்களுள் சிறந்தது விருந்தினரை இன்முகத்துடன் வரவேற்றல்

6. இப்பகுதியின் திரண்ட கருத்து

   a. விருந்தினரை ஆடம்பரமாக வரவேற்று உபசரிக்க வேண்டும்.

   b. விருந்தோம்பலில் இன்சொல் கூறுதல் முக்கியமானது.

   c. விருந்தினரிடம் சுருக்கமாகப் பேச வேண்டும்.

   d. அகந்தையுடன் இன்சொல் பேச இயலாது.

7. பிரதிநிதி என்பதன் பொருள்

   a, தலைவர்

   b. சார்பாளர்

   c. சாட்சி

   d. ஆலோசனை கூறுபவர்

8. விருந்தினரிடம் பேசக் கூடாதது

a. இன்சொல்
b. ஒழுக்கம்
c. பழமொழி
d. தற்பெருமை

XIV. 'திரைகடல் ஓடியும் திரவியம் தேடு' என்பது தமிழ் நாட்டில் வழங்கும் ஒரு பழமொழி. கடல் கடந்து செல்வதற்கு இன்று இருப்பன போல நீராவிக் கலங்களோ, நெய்யாவிக் கலங்களோ அந்நாளில் இல்லை. காற்றின் இயல்பறிந்து அதனை ஏவல் கொள்ளத் தெரிந்தவர் மட்டுமே நீலக் கடலின் நெடுந்திரை பிளந்து கலம் செலுத்திட முடியும். கிரேக்கரும் உரோமர்களும் காற்றின் இயல்பறிந்து அதனைப் பயன்படுத்திக் கப்பல் விடக் கற்றுக் கொள்வதற்கு முன்னரே தமிழர்கள் அந்தக் கலையில் தனிச்சிறப்புப் பெற்றிருந்தனர்.

